

எனக்காகவே நீ

# எனக்காகவே நீ

## 1

பூரண நிலவின் தண்ணொளியில், சிலுசிலுத்த தென்றல் காற்றினால், பரந்து விரிந்த கடல்பரப்பில் எழுந்த எண்ணிலடங்காத சின்னஞ்சிறு அலைகள் வெள்ளிப் பாளங்களாக மின்னுவதைப் பார்க்கப் பார்க்கப் பரவசமாக இருந்தது திவ்யாவுக்கு.

'ஆகா! என்ன அழகு! ''என்று ரசனையோடு அவள் இயம்ப, ''ஆமாமாம்!'' 'என்று அதை அப்படியே ஆமோதித்தான் அவள் அருகே அமர்ந்திருந்த மனோரஞ்சன்.

''தனக்குத்தான் சந்திரன் என்று வானம் பெருமைப்பட்டுக் கொண்டு இருந்திருக்கும், இல்லையா? ஆனால் கடலில் இத்தனை லட்சம்... கோடிக் கணக்காய் வெண்ணிலவுகள் மிதப்பதைப் பார்க்கும் போது ... ரஞ்சன், இதைப் பார்க்கவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இல்லையா?'' என்று கேட்டாள் அவள்.

''ஆமாமாம்'' நிச்சயம் கொடுத்து வைத்திருக்க வேண்டும்தான் என்று அவளது பக்கவாட்டுத் தோற்றத்தில் ஓரக்கண் பார்வையைப் பதித்து ஒத்துப் பாடினான் அவன்.

''இயற்கையாகப் பார்த்து, மனம் உவந்து அளிக்கும் இந்த அழகை ரசித்து அனுபவியாமல் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கிறவர்களை நினைத்தால் கோபம்தான் வருகிறது...''

அவள் பேசுகையிலேயே, ''அப்படி ரசிக்க வென்று எந்தக் கழுதையாவது வந்து நின்றால் உதைதான் கிடைக்கும்'' என்று அவன் முணுமுணுத்தான்.

''என்ன சொன்னீர்கள்? சரியாகக் கேட்கவில்...'' என்று திரும்பிய திவ்யா, மனோரஞ்சனின் பார்வை கடலை விடுத்து அவளிடம் பதிந்திருப்பதைக் கண்டதும் கலீரென்று நகைத்து விட்டு ''உதைவிழும்.'' என்று சுட்டுவிரலால் 'பத்திரம்' காட்டினாள்.

''முதலில் உனக்கு உதை விழாமல் பார்த்துக் கொள். மணி என்ன தெரியுமா? பதினொன்று. இப்போதே கிளம்பினால் கூட உன் வீடு போய்ச்சேர மணி பதினொன்றரை ஆகிவிடும். இவ்...வளவு நேரம் எங்கே சுற்றினாய் என்று உன் பெரியப்பா பெல்ட்டால்... உன்னை விளாசப் போகிறார்.''

''மாட்டவே மாட்டார். என் பெரியப்பா எவ்வளவு நல்லவர் தெரியுமா?'' என்றாள் திவ்யா பெருமையாக.

''அல்லது உன் பெரியம்மா. அவர்கள் கரண்டிக் காம்பைக் காய வைத்து சூடு இழுக்கப் போகிறார்கள், பார்.'' என்று மிரட்டினான் மனோரஞ்சன்.

''சீச்சீ.'' என்றாள் திவ்யா. ''விளையாட்டுக்குக் கூட என் பெரியப்பா, பெரியம்மா பற்றி இப்படி சொல்லாதீர்கள் ரஞ்சன். அவர்கள் இரண்டு பேருக்குமே நான் என்றால் உயிர். பிரியம் மட்டுமில்லாமல் என்னிடம் முழு நம்பிக்கையும் உண்டு. திவ்யா மனமறிந்து தப்பு செய்ய மாட்டாள் என்பார்கள். பிரபா கூட எப்போதும் குறைப்படுவாள். ''அப்பா, அம்மா இரண்டு பேருக்கும் உன்னிடம்தான் உயிர். என்னைக் கண்டாலே கரித்துக் கொட்டுகிறார்களே, மெய்யாகவே என்னைப் பெற்றார்களா அல்லது குப்பைத் தொட்டியிலிருந்து எடுத்து வளர்க்கிறார்களா?'' என்று பொருமுவாள். இதைப் பெரியப்பா, பெரியம்மாவிடமே கேட்டுவிட்டு அதற்கு வேறு வாங்கிக்கட்டிக் கொள்ளுவாள்... எனக்குக் கூடச் சில சமயங்களில் ஒருமாதிரி இருக்கும். என்னைக் 'கண்ணா' என்று கொஞ்சுகிறவர்கள், அவளை இந்தக் கழுதை எங்கே போயிற்று?' என்று கேட்பார்களா...



''போதும் போதும்'' என்று கெஞ்சாக் குறையாக திவ்யாவின் உணர்ச்சிவசப்பட்ட பேச்சை இடைமறித்தான் மனோரஞ்சன். ''உன் பெரியப்பாவும் பெரியம்மாவும் மிகவும் நல்லவர்கள்தான், திவ்யா. ஆனால் அதற்காக அவர்களது புராணத்தை நான் எத்தனை தடவை கேட்டுக் கொண்டிருக்க முடியும் சொல்லு? சொல்ல உனக்கு அலுக்காமல் இருக்கலாம். ஆனால் கேட்கிற எனக்குக் கொஞ்சம் போ...ரடித்துப் போய்விட்டதே...'' என்று வேடிக்கை போலப் பேசியவன், அவள் அதை விளையாட்டாக எண்ணவில்லை என்பதை உணர்ந்து பேச்சை மாற்றினான்.

''சந்தேகப்படத் தோன்றாத அளவு உன்னிடம் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கலாம், திவ்யா. ஆனால் நீ ஓர் இளம் பெண். அழகானவள். எவனாவது பேட்டை ரவுடியிடம் மாட்டிக் கொள்ள நேர்ந்தால் என்ன ஆகும்? அந்த பயம் கூடவா கிடையாது?''

''ரவுடியிடம் நா...ன் மாட்டிக் கொள்வதா? கர்ணனுக்கு கவச குண்டலம் போல உனக்கு இந்தக் கைப் பையா என்று கேட்பீர்களே, உள்ளே என்ன இருக்கிறது தெரியுமா? கத்தி. இரண்டு. என்னிடம் யாராவது வாலாட்டினால் வாலை ஒட்ட நறுக்கிவிடுவேன் என்பது என் வீட்டாருக்கு நன்றாகத் தெரியும். எவ்வளவு நேரமானாலும் நான் பத்திரமாக வீடு சேர்ந்துவிடுவேன் என்கிற தைரியத்தால்தான் என்னிடம் வீட்டுச் சாவி ஒன்றைக் கொடுத்து இருக்கிறார்கள் தெரியுமா?''

''ம்ம்...'' என்று யோசித்தான் மனோரஞ்சன். ''அப்படியானால் நீ எந்த நேரம் வீடு திரும்பினாலும் அது வீட்டில் யாருக்கும் தெரியப்போவதும் இல்லை; தெரிந்தாலும் யாரும் கோபம் கொள்ளப் போவதும் இல்லை... அப்படித்தானே?

''ம்''

''நல்லதாய்ப் போயிற்று.. வழியில்தான் என் ஃப்ளாட். முதலில் அங்கே போய் கொஞ்ச நேரம் தங்கிவிட்டு அப்...ப்புறமாய் விடி காலையில் உன் வீட்டுக்குப் போய்க் கொள்ளலாம்''.

''ம்கூம்? அன்றைக்கு ஒரு கராத்தே 'டெமான்ஸ்ட்ரேஷன்' பார்த்தேனா? எனக்கும் கையும் காலும் துறுதுறு என்கிறது. ஆனால் இந்தத் தொந்தியும் தொப்பையுமாய் இரண்டு தட்டு ஒருவெட்டு தாங்கமாட்டீர்களே என்பதால் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்க வேண்டியிருக்கிறது. ஊம்'' என்று பெருமூச்சு விட்டாள் பெண்.

''ஆக, நாகரீகம் எல்லாம் இந்தச் சுரிதாரிலும், வீட்டைவிட்டு வெளியே வந்து வேலை பார்ப்பதில் மட்டும் தானா? ஸ்டார் டீ.வி. தொடர்களை எல்லாம் பார்க்கிறாயே, எதுவும் மண்டைக்குள் புகவே இல்லையா? என்று உள்ளூர எரிச்சலுடனேயே, அதை மறைக்க முயன்றபடியே கேட்டான் மனோரஞ்சன்.

''நீங்கள்தான் சரியாக எதையும் பாராமல் கேட்டு விட்டீர்கள். பெரியப்பா, பெரியம்மா இருவருக்கும் என்னிடம் நம்பிக்கை உண்டு என்றேனே. அது உங்கள் மண்டைக்குள் நுழைந்தாற் போலவா நீங்கள் பேசுகிறீர்கள்? உங்கள் ஸ்டார் டிவி. நாயகிகள் போல நான் நடப்பவள் என்றால் அந்த நம்பிக்கை எப்படி வரும்?'' என்று திவ்யா



வாதிக்க, ''தோற்றேன். தொலைந்தேன்'' என்று சரணாகதியாகக் கைகளை உயரத்தூக்கினான் அவன்.

அவள் இளகி முறுவலிக்கவும், ''ஐந்தே நாட்களில் திருமண உறுதி நடக்கப் போகிறது. அடுத்த மாதம் கல்யாணமே கட்டிக்கொள்ளப் போகிறோம். இப்படி அப்படி ஆசைப்படுவதில் தப்பேதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. உன் பெரியப்பா பெரியம்மாவின் நம்பிக்கையைக் காக்க வென்று ஒரு சின்ன 'கிஸ்' கூடக் கூடாதென்றால் அது நியாயமாகவும் எனக்குத் தோன்றவில்லை.'' என்று குறைப்பட்டான் தொடர்ந்து.

ஒருகணம் யோசித்துவிட்டு, '' உங்கள் ஆசை, நியாயம் எல்லாம் எனக்கு அவ்வளவாகப் புலப்படவில்லை, ரஞ்சன். ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம்; என் பெரியப்பா பெரியம்மாவுக்காக நான் உயிரைக் கூட விட்டுவிடுவேன்.'' என்றாள் திவ்யா தெளிவாக.

மனோரஞ்சன் மேலே பேசாமல் ஒரு பெருமூச்சு விடவும் அவளுக்குக் கொஞ்சம் கஷ்டமாகிவிட்டது. அவன் இந்தக் கால இளைஞன். அவளைக் காதலிப்பதாகச் சொல்லிக் கல்யாணத்துக்குப் பெரியவர்களிடம் ஒப்புதல் வாங்கியவனும் கூட. அவன் மனதில் என்னென்னவோ ஆசைகள் இருப்பது இயல்புதான். அதன் பிரதிபலிப்பை அவளிடமும் அவன் எதிர்பார்ப்பதும் தப்பில்லைதான். அவளைக் காட்டிலும் அவளுடைய பெரிய தந்தை, தாயை அவள் பெரிதாக நினைப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை என்பதும் அவள் அறிந்ததே. ஆனால் அவர்களுடைய அருமை அவனுக்கு என்ன தெரியும்?

தெரிய வைக்க அவள் முயன்றபோது அதை அறிந்து கொள்ளும் ஆர்வம் அவனுக்கு ஏற்படவில்லை. 'கொக்குக்கு ஒன்றே மதி'என்பது போல அவனது கவனம் முழுமையும்

வருங்கால மனைவியிடம் இருந்ததே தவிர, அவளுடைய மற்ற உறவினரைப் பற்றிய அக்கரை அவனுக்குத் தோன்றுவதாக இல்லை. எனவே அவர்களது முக்கியத்துவம் பற்றி அவனுக்குப் புலப்படுவதாகவும் இல்லை.

போகட்டும்... திருமணம் ஆனபின் அவளுடைய வளர்ப்புப் பெற்றோரின் பெருமையை அவன் மனதில் அழுத்தமாகப் பதிய வைத்துக் கொள்ளலாம் என்று, அந்த முயற்சியை அப்போதைக்குக் கைவிட்டு அவனை உற்சாகப்படுத்த முனைந்தாள் திவ்யா.

''என்ன மனோ, நீங்கள்? அதற்குள் முகத்தை இப்படித் தூக்கிக் கொள்கிறீர்களே. எங்கோ ஓர் அனாதை இல்லத்தில் வளர்ந்திருக்க வேண்டியவள் நான். எனக்கு ஒரு நல்ல குடும்பச் சூழலையும், பெற்றோரின் பாசத்தையும் பாதுகாப்பையும் தந்த அவர்களிடம் எனக்கு நன்றி உணர்ச்சி இருக்க வேண்டாமா? அதைச் சொல்வதற்குள் 'உம்' மென்றாகிவிட்டீர்களே? இருந்திருந்து அவர்களோடு நான் வசிக்கப்போவது எண்ணி இன்னமும் நாற்பதே நாட்கள். அப்புறம் வாழ்க்கை முழுவதற்கும் நாம் இருவரும்தானே. உங்களுக்கு நான்... எனக்கு...மா...மாகனம் பொருந்திய திருவளர்...ம்ம்... தொப்பை வளர்ச்செல்வன் நீங்களேதானே?'' என்று கொஞ்சலும் குறும்புமாக அவள் பேசவும் மனோரஞ்சனின் முகம் மலர்ந்தது.

எழுந்து வயிற்றை எக்கி உள்ளே இழுத்து நின்று,''என்னையா தொப்பை என்கிறாய்? பார். அகன்ற தோளும், ஒட்டிய வயிறும் உயரமுமாய் என்ன'ஷேப்'பாக இருக்கிறேன். அசல் அர்ஜுனன்தான் தெரியுமா? ஆண் சிங்கமாக்கும்!'' என்றான் அவன்.

சிரித்தவாறே தானும் எழுந்து மணலைத் தட்டிக் கொண்டாள் திவ்யா.''மனோ, ஒட்டப்பந்தயம்



வருகிறீர்களா? பைக்கை நீங்கள் முந்திப் போய்த் தொட்டால் ஒரு கிஸ்... என்கையில் தரலாம். ஓகே? என்றாள்.

''பெரிய்ய 'கிஸ்'. கையில்!... சரிசரி. ஏதோ ஆலையில்லாத ஊரில் கிடைத்த இலுப்பைப்பூ! வைத்துக் கொள்ளலாம். ரெடியா? ஒன்...டூ...த்ரி!''

ஆண் உடலின் பலத்தையும், அவளைவிட அதிகமான பத்து சென்டிமீட்டர் உயரத்தையும் நம்பிப் பந்தயத்திற்கு ஒப்பினான் அவன். ஆனால் புள்ளிமானாய் அவள் பாய்ந்தோடிச் சென்று அவனது காவசாகியை அடைந்து முழுவதாக ஒருநிமிடம் முடிந்த பிறகுதான் அவனால் பைக்கை அடைய முடிந்தது.

மூச்சிரைக்க நின்றவனைப் பார்த்து, ''பெரிய சிங்கம்!'' அவள் நகைக்க, அவன் அடிக்கப் போவது போலக் கையை ஓங்கி மிரட்ட, இருவரும் சிரித்தபடியே கிளம்பினர். முன்னே நின்று காரைச் சுற்றிக் கொண்டு பைக் சென்றபோது முதுகில் பூச்சி ஊர்வதுபோல திவ்யா உணர்ந்தாள். உடனேயே ஏதாவது, 'செமிகிராக்' வெறித்துப் பார்த்துக் கொண்டு இருக்கும் என்று அலட்சியமாகத் தோளைக் குலுக்கியவள் அத்தோடு அதை மறந்தாள். மனோரஞ்சனுக்குக் கையாட்டிவிட்டு, கேட்டைத்திறந்து உள்ளே வந்து மறுபடியும் பூட்டிவிட்டு, வீட்டுக் கதவை திறந்துக் கொண்டு எதிலுமே முடிந்த அளவு ஓசை எழுப்பாமல் கவனத்துடன் உள்ளே சென்றாள் திவ்யா.

ஹாலில் ஒரு சின்னவிளக்கு போடப்பட்டிருப்பதையும், அந்த ஒளிவிடும் இடத்தில் பேப்பர் வெயிட்டின் கீழ் ஒரு கடிதம் இருப்பதையும் கண்டு, கடிதத்தை எடுத்துப் பார்த்தாள்.

கடிதம் அவளுக்குத்தான்...ப்ளாஸ்கில் சூடாகப் பால் இருப்பதாகவும், அதைக் கட்டாயம் குடித்துவிட்டுத்தான் படுக்கவேண்டும் என்றும் பெரியம்மாவின் கட்டளையைப் படித்ததும் அவளது விழிகளில் நீர்த்திரையிட்டது.

அவள் பிறந்தபோது இறந்துவிட்ட அவளுடைய அன்னையின் ஆவி அப்படியே இந்தப் பெரியன்னையின் உடலில் குடியேறிவிட்டதா? மற்றபடி இரத்தத் தொடர்பே இல்லாத ஒருவரிடம் இந்த அன்பு எப்படி சாத்தியம்? பெரியப்பா என்றாலும் உடன்பிறந்த தம்பி மகள் என்பதால் பாசமிருப்பது இயல்பு.

தேவ கட்டளைபோலச் சொட்டுவிடாமல் பாலைக் குடித்துவிட்டு, பல்துலக்கி, உடம்பு கழுவிப் படுக்க வந்தபோது திவ்யாவின் மனம் பஞ்சுபோலக் கனமற்று சுகமாகப் பறந்துகொண்டிருந்தது.

அந்த அறையில் கிடந்த மற்றோர் கட்டிலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த பிரபாவின் தூக்கம் கலைந்துவிடாமல் மெல்ல ஓசையற்று நடந்துவந்து படுத்த திவ்யாவுக்குத் தூக்கம் வரமறுத்தது.

நெஞ்சுமுட்ட முட்ட எத்தனையோ எண்ணங்கள். எண்ண எண்ண எல்லாமே இனித்தன. பெரியப்பா குடும்பத்தினரின் அன்பு நிறைந்த நிகழ் காலம் இனித்தது.

அடுத்து நடக்க இருந்த, பெரியப்பா மகள் பிரபாவின் திருமணம், அதை அடுத்து ஒருமாத இடைவெளியில் நடக்க இருந்த அவளது திருமணம், நகை தொகை என்று தொல்லை செய்யாமல் அவளை மணக்க முன்வந்த மனோரஞ்சனின் காதல், அவனோடு தொடங்க இருக்கும் வாழ்வு... எதிர்காலம் இன்னமும் மதுரமாய்ச் சுவைத்தது.

எழுந்து நின்று 'திதிதை''திதிதை' என்று ஆட வேண்டும்போல உடம்பு பரபரத்தது. ஆனால் பிரபாவின் துயிலைக் கெடுப்பது தவறு என்று அசையாமல் படுத்து கற்பனையில் திவ்யா களித்துக் கொண்டு இருந்தபோது அந்தச் சத்தம் கேட்டது. அது ஒரு விம்மல் சத்தம்!



# 2

சிலகணங்கள் திவ்யாவுக்கு அவளது காதுகளையே நம்ப முடியவில்லை.

இந்த வீட்டில் எப்படி அழுகைச் சத்தம் கேட்க முடியும்?

ஒருவேளை சன்னல் அருகே வெளியே, பூனை நாய் எதையாவது தின்றுவிட்டு விழுங்க முடியாமல் விக்கியிருக்குமா?

அசையாமல் படுத்தபடி கவனித்தாள்.

மீண்டும் அதே சத்தம். சந்தேகமே இல்லை. இது வாயைப் பொத்தியிருந்த கையை மீறி வந்த விம்மல் ஒலியேதான். கூடவே லேசாக மூக்கை உறிஞ்சும் ஓசை வேறு.

இந்தச் சத்தங்கள் எல்லாம் பத்தடி தொலைவில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த... அல்லது தூங்கிக் கொண்டு இருப்பதாகத் திவ்யா எண்ணிக் கொண்டிருந்த பிரபாவின் கட்டிலில் இருந்து வருவதையும் உடனேயே உணர்ந்தாள் திவ்யா.

ஆனால் உணர்ந்ததை நம்புவதுதான் அவளுக்குக் கடினமாக இருந்தது. ஏழே நாட்களில் ஆவலும் ஆனந்தமுமாக திருமணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த பிரபா ஏன் அழவேண்டும்?

ஆனால் பிரபாவின் அழுகை வெகுவாக பலப்படவும் எழுந்து அவள் அருகே சென்று கட்டிலில் அமர்ந்து, ''என்ன பிரபா?'' என்று பரிவுடன் விசாரித்தாள் திவ்யா.

சற்று நேரம் ஓசையற்ற விசிப்புதான் அவளது பதிலாக இருந்தது. அவளது அழுகை அமரும் வரையும் பொறுத்திருந்து மீண்டும் திவ்யா கேட்டபோது, ''நான்...நான் செத்துப் போகப் போகிறேன்.'' என்று பதில் உரைத்து தன் சித்தப்பா மகளை அதிரவைத்தாள் பிரபா.

சிலவினாடி யோசித்துவிட்டு; ம்...கண்டுபிடித்துவிட்டேன் என்னை முட்டாளாக்குகிறயாக்கும்! ஆனால் என்ன தான் விளையாட்டுக்கு என்றாலும் இந்த அளவுக்கா பேசுவது? மக்கு.'' என்று அவளைக் கடிந்துக் கொண்டாள் திவ்யா.

''விளையாட்டெல்லாம் ஒன்றும் இல்லை. நிஜமாகவேதான் சொல்லுகிறேன்...''என்றவள் மீண்டும் சற்று விசும்பிவிட்டு, ''எனக்கு வேறே வழியே இல்லை, திவ். நான் உயிரோடு இருந்தால் அவமானம் தாங்காமல் அம்மா அப்பா இரண்டு பேரும் இறந்து போவார்கள். அதைவிட நான் ஒருத்தி செத்துத் தொலைவதில் ஒரு நஷ்டமும் இல்லை. ஏதோ கொஞ்ச காலம் மகளைப் பறிகொடுத்துவிட்டோமே என்று வருத்தப்படுவார்கள். ஆனால்...அதைக் கூட உன்னைப் பார்த்து மறந்து போவார்கள். சும்மாவே அவர்கள் இருவருக்குமே உன்னைத்தான் பிடிக்கும். ஏதோ அவள் போனாலும் நல்லவேளையாக இவள் தங்கினாளே என்று... நிம்மதியாகி விடுவார்கள்...'' என்று மேலும் கண்ணீர் வடித்தாள் பெரியவளான பிரபா.

''என்னடா இது, ஒரே பேத்தலாயிருக்கிறதே...'' என்றவள் கையை நீட்டி படுக்கைப் பக்கத்து விளக்கைப் போட்டாள்.



விளக்கின் ஒளியில், ஒன்றுவிட்ட சகோதரியின் முகம் கன்றியிருப்பதையும், வெகுநேரம் அழுததின் அறிகுறியாகக் கண்கள் கலங்கிச் சிவந்து இருப்பதையும் கண்ட திவ்யாவுக்கு உள்ளூர வயிற்றைக் கலக்கியது.

''ப்...பிரபா, என்ன இது? என்னவிஷயம்? மாப்பிள்ளை வீட்டிலிருந்து ஏதாவது தகராறா? ...ப்ளீஸ், சொல்லிவிட்டுத்தான் அழேன்.'' என்று அழுதவளைப் பற்றி உலுக்கினாள்.

''முதலில் விளக்கை அணை. அம்மா அப்பாவுக்குத் தெரிந்தால் அவர்கள் வேறு உயிரைவிட்டுவிடுவார்கள். அதைவிட அவர்கள் அறியாமல் நான் மட்டும் சாவது மேல்...''

எழுந்து சென்று அறைக் கதவை உட்புறமாகத் தாளிட்டுவிட்டு வந்தாள் திவ்யா.'' பிரபா, ப்ளீஸ், என்னவென்று சொல்லு. சும்மா சாவு சாவு என்று பேத்தாதே. எதுவானாலும் சமாளிக்கலாம். என்ன விஷயம்?'' என்றாள் திடமான குரலில்.

''ஒன்றுமே சமாளிக்க முடியாது...'' என்று மீண்டும் ஒரு மூச்சு அழுதாள் பிரபா.

''ஒருவாரத்தில் திருமணத்தை வைத்துக் கொண்டு இப்படி முசு முசென்று அழுது முகத்தைப் பாழ்படுத்தாதே பிரபா.'' என்று கண்டிப்புடன் பேசினாள் திவ்யா.

''திருமணமாவது மண்ணாங்கட்டியாவது? அதெல்லாம் ஒன்றும் நடக்கப் போவது இல்லை. திருமணம் நின்றுவிடப் போகிறது. அதன் காரணம் வெளியாகும் போது எல்லோரும் என்முகத்திலும் அப்பா அம்மா மேலும் காறித்துப்பி

அவமானப்படுத்தப் போகிறார்கள். அப்படி அவமானப்பட்டு மூவரும் சாவதைவிட இப்போதே நான்மட்டுமாகப் ப்ளக்கில் கையை வைத்து விபத்துப்போல காட்டி இறப்பது நல்லது...''

''நம்புவார்களா? விபத்துக்கும் வேண்டுமென்று செய்வதற்கும் வித்தியாசம் இராதா? அப்போது மட்டும் ஊர் பேசாதா? அந்தப் பேச்சு மட்டும் பெரியப்பா பெரியம்மாவுக்கு இனிப்பாகவா இருக்கும்? அப்போதும் ஊர்வம்பு தாங்காமல் ஏதாவது விபரீத முடிவுக்கு வரமாட்டார்கள் என்று என்ன நிச்சயம்?'' என்று வாதாடினாள் திவ்யா.

பிரபாவின் உடலில் சட்டெனத் தென்பட்ட விறைப்பு, திவ்யாவின் வார்த்தைகள் அவள் மனதை எட்டியிருப்பதைக் காட்டின.

எனவே, அதே வழியிலேயே தொடர்ந்தாள், உனக்குக் கல்யாணத்தில் இஷ்டமில்லாதபோது கட்டாயப்படுத்திக் கட்டிக் கொடுக்கப் பார்த்தார்கள் என்று பெரியப்பா பெரியம்மா பேரில் பழிசொல்லுவார்கள். போலீஸ் வரும் உன்பெற்றோரை அழைத்துப் போய் ஆயிரம் விதமாய் விசாரிப்பார்கள். இந்த அசிங்கமெல்லாம் பெரியம்மா தாங்குவார்களா?''

முகம் வெளிற, ''பின்னே என்னதான் செய்வது, திவ்யா?'' என்று கலவரத்துடன் கேட்டாள் பிரபா.

''நீ விஷயத்தைச் சொல்லு. அதன் பிறகு என்ன செய்வது என்று தீர்மானிப்போம்.''

உதடு துடிக்க, ''ஒரு கடிதம்'' என்றாள் பிரபா அவமானக் கன்றலுடன்.



''என்ன கடிதம்?''

''அது...அது... என்று மீண்டும் கண்ணீருகுத்தாள் பிரபா.

அதட்டியும், கெஞ்சியும், மிரட்டியும், உந்தியும் ஒருவாறு பிரபாவிடமிருந்து திவ்யா கிரகித்த விஷயம் இதுதான். படிப்பில் அவ்வளவாக நாட்டம் இல்லாத பிரபாவுக்குக் கலைகளில் ஆர்வம் அதிகம். அப்போது ஓர் ஓவியனோடு நெருங்கிப் பழகினாள். காதலிப்பதாகக் கூட எண்ணினாள். தன் காதலையெல்லாம் கொட்டி அந்த ஓவியனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அப்புறமாய் அது காதல் அல்ல என்பதை உணர்ந்து பிரிந்துவிட்டாள். ஆனால் அந்தக் கடிதம் ஓவியனிடம் நின்றுவிட்டது. அதைப்பற்றி அப்போது அவள் பெரிதாக எண்ணவில்லை. ஆனால் பிரபாவின் திருமணம் பற்றி அறிந்த ஓவியன் இப்போது கடிதத்துக்கு விலையாக இரண்டு லட்சம் ரூபாய் விலை கேட்கிறானாம். பணம் தராவிட்டால் கடிதத்தை மாப்பிள்ளை வீட்டாரிடம் அம்பலப்படுத்தப் போவதாக மிரட்டுகிறானாம்.

''இரண்டு லட்சமா?! அடேயப்பா! அவ்வளவு பணத்துக்கு நாம் எங்கே போவது? நம் நிலமை அவனுக்குத் தெரியாதா பிரபா?'' என்று வியப்பும் கவலையுமாக வினவினாள் திவ்யா.

''அது...அது...'' மீண்டும் சகோதரியின் முகத்தில் அவமானக் கன்றலைக் கண்டு, ''பிரபா, எதையும் மறைக்காமல் நீ சொன்னால்தான் என்னமாவது செய்யமுடியுமா என்று யோசிக்கவாவது முடியும். நீ இப்படி அரையும் குறையுமாய் மென்று விழுங்கினால் யாருக்கு லாபம், சொல்லு?

''நான் கொஞ்சம் பணக்காரப் பெண்மாதிரிதான் அப்போது காட்டிக் கொண்டேன்.''

''ஏன்?!''

''பணக்காரி என்றால் அமுதனுக்கு என்னிடம் அதிக ஈடுபாடு வரும் என்று நினைத்து...''

''அமுதன்! அந்த ஆள் கொஞ்சம்...படங்கள் கூட.... பிரபா, இருந்திருந்து நீ அந்த ஆளையா காதலிக்க வேண்டும்...'' என்றாள் திவ்யா வருத்தத்துடன்.

முதல் தடவையாகச் சற்று ஆத்திரத்துடன் பேசினாள் மற்றவள். ''பிறகு என்ன செய்வதாம்? நினைவிருக்கிறதா, நீ அப்போது ராங்க் வாங்கிப் பாஸ் செய்தாய். அப்பாவும் அம்மாவும் தங்கம் வைரம் என்று உன்னைத் தலைமேல் வைத்துக் கொண்டாடினார்கள். என்னை யாராவது விரும்பமாட்டார்களா என்றுதான்.... படிப்பு நன்றாக வராவிட்டாலும் ஏதேனும் கலையாவது கை வராதா என்றும் முயற்சித்தேன். ஆனால்...'' என்றவளுக்கு மீண்டும் கண்களில் அருவி இறங்கியது.

ஐயோ வென்றிருந்தது திவ்யாவுக்கு. பெரியப்பா பெரியம்மா அன்பு காட்டுகிறார்கள் என்று ஆனந்தப்பட்டால் அதுவே இவளை இவ்வளவு தூரத்துக்குப் பாதித்துவிட்டதே!

''போகிறது, விடு பிரபா.'' என்று அவளை ஆதரவாய்த் தட்டிக் கொடுத்தாள். ''பாவம், தாயில்லாப் பெண். தந்தை இருந்தும் இல்லாத அனாதை என்று உன் பெற்றோர் பரிவு காட்டினால் அதைப் போய்த் தப்பாக நினைத்து விட்டாயே! என்னவோ, கடவுள் அருளால் அவனிடமிருந்து எப்படியோ தப்பினாயே. அதுவே பெரியது.'' என்றாள் இதமாக.



அவளுக்கு ஆறுதல் அடையப் பிரியமில்லையோ என்னவோ? ''எப்படியோ என்ன, ஒருதரம் அவன் வரச்சொன்ன நேரத்துக்கு ஒருமணி நேரம் முன்னதாக-அன்று லெக்சரர் வராமல் வகுப்பு இல்லாது போனதால், ஒரு மணி நேரம் முன்னதாகவே அவனது அறைக்குப் போனேன். அங்கே... அங்கே வேறு ஒரு பெண்ணைக் கட்டிப் பிடித்து விளையாடிக் கொண்டு இருந்தான். திரும்பி வந்தவள் பிறகு அவனைப் பார்க்கவே இல்லை. அவனும் சந்திக்க முயற்சி செய்யாததால் தொல்லை விட்டது என்று இருந்தேன். இப்போதானால்... திவ்யா, என்னால் முடியாது திவ்யா. கண்ணனை நான் உயிருக்குயிராய் நேசிக்கிறேன் திவ்யா. இந்தக் கல்யாணம் நின்று போய் அவரைப் பிரிய நேருமானால் என்னால் தாங்கவே முடியாது. அதைவிட விஷத்தைக் குடித்துச் சாவதே மேல்.''

கண்ணன், பிரபாவுடைய வருங்காலக் கணவன். பெற்றோர் பார்த்து முடித்த திருமணம். பெண் பார்க்க வந்தபோது முதல் பார்வையிலேயே ஒருவருக்கொருவர் பிடித்துப்போயிற்று. அன்றிலிருந்து கண்ணன்.. கண்ணன் என்று பிதற்றிக் கொண்டு இருக்கிறவள் இடையில் இப்படி ஒருமடத்தனம் செய்து வைத்திருப்பாள் என்று யாரும் ஊகிக்கக் கூட இல்லையே. கலை ஓவியக் கண்காட்சி என்று சென்றதுண்டுதான். ஆனால் இந்த வழி திரும்பியிருப்பாள் என்று யாருக்கும் தோன்றவே இல்லையே! ஆனால் இனி இதையெல்லாம் எண்ணி மறுகுவதால் எந்தப் பிரயோசனமும் இல்லை.

''அந்த அமுதனிடம் நம்மிடம் அவ்வளவு பணம் கிடையாது என்று சொல்லிப் பார்த்தாயா?''

''ம். சத்தியமே செய்தேன். ஐம்பது பவுன் நகை போடுவதாகக் கேள்விப்பட்டேனே, அதை அப்படியே கொண்டு வந்து கொடு' என்கிறான். அது என்னால் எப்படி முடியும் திவ்யா? முதலாவது நகைகள் லாக்கரில் இருக்கிறது. அப்பாதான் எடுக்க முடியும். அத்தோடு உன்னைப் போல்- அதுதான் உன் மனோரஞ்சன் போல ஒன்றும் வேண்டாம் என்றால் வேறு விதம். இங்கே இவ்வளவு செய்வதாகப் பேசிவிட்டு வெறுங்கையோடு போக முடியுமா? எந்தப் பக்கம் போனாலும் பயங்கரமாக உதைக்கிறதே. அதனால்தான் செத்துவிடுவது மேல் என்ற முடிவு செய்தேன்.'' என்று மீண்டும் அழத் தொடங்கினாள் பிரபா.

இவள் என்ன, தண்ணீர் குழாயையே கண்களில் வைத்திருக்கிறாளா ஒரேயடியாக வடிக்கிறாளே என்று ஒருதரம் எரிச்சலாய் எண்ணிவிட்டு அப்படி நினைத்ததற்காகத் தன்னையே கடிந்து கொண்டாள் திவ்யா. தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும். இவள் நிலையில் தான் இருந்தால் பைத்தியம் பிடித்துவிட்டிருக்கலாம்.

இந்தத் துன்பத்துக்கு அவளும் ஒருவகையில் காரணம் என்பதுதான் திவ்யாவுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. பிரபாவின் பெற்றோர் அவளை விடத் தன்னை உயர்வாகப் பாராட்டியது தானே பிரபாவின் மடத்தனத்தை ஊக்கியதே.

ஏதோ தோன்ற, ''அதென்ன ஒரே ஒரு கடிதம் பிரபா? கடிதப் போக்குவரத்து என்றால், ஒரு நாலைந்து கடிதங்களாவது இருக்குமில்லையா? அத்தோடு அவன் எழுதிய கடிதம் கூட உன்னிடம் இருக்கலாம்.'' என்று அவள் கூற அதை மறுத்தாள் பிரபா.



''அப்படிக் கிடையாது, திவ்யா, உள்ளூர்தானே... போனில்தான் பேசுவது. ஒருநாள் அவன்தான் விளையாட்டாக, என் மனதை அப்படியே கடிதமாக எழுதித் தரச் சொன்னான். அவனது ஓவியங்களைப் போல அந்தக் கடிதத்தையும் பொன் வண்ணச் சட்டமிட்டுப் பார்த்து ரசிக்கப் போவதாக... என்னென்னவோ சொல்லி எழுதச் சொன்னான். பணக்காரப் பெண், நிறையக் கறக்கலாம் என்று எண்ணிச் செய்தான் என்று இப்போது புரிகிறது. ஆனால் கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் போலக் காலம் கடந்து வந்த ஞானோதயம்... திவ்யா, நான் இப்போது என்ன செய்யட்டும்? என்னால் தாங்க முடியவில்லையே!'' என்று அரற்றினாள் பிரபா.

திவ்யாவுக்கும்தான் அப்போது ஒன்றும் புரியவில்லை. இந்த இக்கட்டு தீர என்ன செய்ய முடியும்? ஒரே ஒரு சின்னக் காகிதம்! அது 'அவளது உலகத்தையே தலை கீழாக்கி விடும் போல இருக்கிறதே!' அதில் எழுதப்பட்டுள்ள எழுத்துகளாலும்; அதை வைத்திருக்கும் மனிதனாலும் வெடி குண்டாக அல்லவா உருவாகி விட்டது!

இவ்வளவு முக்கியமான காகிதத்தை அந்த வில்லன் சட்டைப் பையிலா வைத்துக் கொண்டு திரிவான், யாராவது பிக்பாக்கெட் காரனிடம் பணத்தைக் கொடுத்துக் கடிதத்தைத் திருடி வரச்சொல்வதற்கு? மனம் நினைத்ததை வாய் உரக்கவே முணுமுணுத்ததோ?

கரையேறுவதற்குத் துரும்பையும் பற்றிக் கொள்ள வேண்டியதான நிலையில் இருந்த பிரபாவின் கண்கள் மலர்ந்தன. ''ஆமாம் ஆமாம். நீ கெட்டிக்காரியேதான், திவ்யா. இவ்வளவு நேரம் இது என் மூளைக்குத் தட்டுப்படவே இல்லையே!'' என்றாள் பரபரப்புடன்.

ஒன்றும் புரியாமல் ஒரு கணம் விழித்தாள் திவ்யா. "எ... எது? என்னது தட்டுப்படவில்லை?" என்று விசாரித்தாள். இப்படி ஒரு வழி இருப்பதுதான் என்று எழுந்து அமர்ந்தாள் பிரபா.

"என்ன, வழிப்பா?" என்றாள் திவ்யா அப்போதும் புரியாமல்.

"அதுதான். இப்போது நீ சொன்ன வழி!"

என்ன வழி சொன்னோம் என்று திவ்யா யோசிக்கையில் பொறுமையற்றுப் பிரபாதானே சொன்னாள். "அது தாம்ப்பா, யாராவது திருடனை ஏற்பாடு செய்து கடிதத்தைத் திருடிக் கொண்டு வரலாம் என்றாயே. அற்புதமான ஐடியா இல்லை?"

அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் தலையில் அடித்துக் கொண்டாள் திவ்யா. "என்ன உளறுகிறாய், பிரபா? திருடனை ஏற்பாடு செய்வது எல்லாம் சுலபமான காரியமா? முதலில் அப்படி ஒரு திருடனை எங்கிருந்து பிடிப்பாய் சொல்லு?" என்றாள் எரிச்சலும் பரிவுமாய். ஆனால் கிடைத்து விட்டதாகத் தோன்றிய ஒரே ஒரு வழியை எந்த வழியிலும் இழந்துவிட மற்றவள் தயாராக இல்லை. "திருடனை ஏற்பாடு செய்ய முடியாது என்றால் நாமே திருடிவிட வேண்டியதுதான்." என்றாள் பிடிவாதக் குரலில்.

## 3

"என்ன மடத்தனம்!"

மனதில் நினைத்த போதும் அதை வாய் விட்டுச் சொல்லாமல் நாவை அடக்கினாள் திவ்யா.



உயிரைக் கூட விடத் துணிந்து விட்ட அளவில், தவிப்பின் எல்லையில் இருந்தாள் பிரபா. மூழ்குகிறவனுக்குக் கையில் பட்டதைப் பற்றித் தண்ணீருக்கு மேலே வந்து விடத்தான் தோன்றும். ஆனால் அது தூக்கிவிடுமா அல்லது இன்னமும் ஆழத் தள்ளி விடுமா என்று யோசிக்கத் தோன்றாத நிலை.

எனவே கனிவான குரலில் பேசினாள் பிரபா. "எதையும் சற்று நிதானமாய் யோசித்துப் பேசும்மா. பார், திருடுவது என்ன, அப்படி எளிதான காரியமா? பிடிபட்டு விட்டால் உள்ள நிலைமை இன்னமும் மோசமாகி விடாதா?"

"இதைவிட மோசமான நிலைமை என்று ஒன்றுமே கிடையாது... என் சாவு தவிர." என்றாள் அடுத்தவள் அழுத்தம் திருத்தமாக.

"சும்மா சாவு சாவு என்று சொல்லாதே. கொஞ்சம் யோசி, அப்படி யாராவது திருடுவதற்கு வாகாக அந்தக் கடிதத்தை அலட்சியமாகச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டா திரிவான் அந்த அமுதன்? அதுவும் அவனளவில் அந்தக் கடிதத்தின் மதிப்பு இரண்டு லட்சம் ரூபாய் என்கையில்?"

"மாட்டான்தான். அந்தக் கடிதம் அவன் சட்டைப் பையில் இல்லை என்பது எனக்குத் தெரியும். அது எங்கே இருக்கிறது என்றும் எனக்குத் தெரியும்" என்றாள் பிரபா.

"அது அமுதனின் ஃப்ளாட்டில், அவனது படுக்கை அறையில் உள்ள இரும்பு பீரோவில் இருக்கிறது. அதைத் திருடுவது எளிது" என்றாள் தொடர்ந்து.

"யாராவது வந்து அதை எளிதாகத் திருடிக் கொண்டு போகட்டும் என்று ஃப்ளாட், படுக்கை அறை, இரும்பு பீரோ

எல்லாவற்றையும் அந்த ஓவியன் திறந்தே போட்டு வைத்திருப்பானாக்கும்!'' என்று சற்று ஏளனமாகக் கேட்டு விட்டு, ''சாரி பிரபா.. உன் தவிப்பு எனக்குப் புரிகிறது. ஆனால் நடப்பையும் யோசிக்க வேண்டும் இல்லையா? அதைவிட அந்த அமுதனிடம் நான் போய்ப் பேசிப் பார்க்கிறேன். உண்மை நிலை அறிந்தால் பணம் பெயராது என்பதை உணர்ந்து கடிதத்தை அவன் திருப்பித் தந்து விடலாமே.. வைத்திருந்து பயனில்லை. என் கையில் கிடைத்தது லாபம் என்று ஓர் ஐந்தோ.. பத்தாயிரமோ வாங்கிக் கொண்டு கடிதத்தைக் கொடுத்து விடக் கூடும் இல்லையா? பத்து.. பதினைந்து வரை என் சேமிப்பிலிருந்து எடுக்க முடியும்.

ஆனால் பிரபா அதை ஒத்துக் கொள்வதாக இல்லை. ''ஐம்பது பவுன் நகைக்குக் குறிவைக்கிறவன் உன் ஐந்து பத்துக்கு மசிவது சாத்தியமே இல்லை'', என்று அடித்துப் பேசினாள். ''அத்தோடு உன்னை வேறு...'' என்று தொடங்கியவள் வினாடி தாமதித்து, ''நீ போய் உனக்கும் விஷயம் தெரியும் என்று அறிந்தால், உன் பங்குக்கு இன்னும் கொஞ்சம் கொடு என்று ரேட்டை அதிகப்படுத்துவானே தவிர விட்டுக் கொடுக்கிறவன் அல்ல அவன். திவ்யா, நிச்சயமாகச் சொல்லுகிறேன், இந்தக் கடிதத்தைத் திருடி விடுவது ஒன்று மட்டும் தான் நமக்கு மீதியிருக்கும் வழி''.

நமக்கு என்று அவளையும் சேர்த்துப் பிரபா பேசியதை அப்போது பெரிதாக எண்ணவில்லை. சொல்லப் போனால் அப்போதையப் பெரும் சிக்கலில் இருந்து விடுபடுவது எப்படி என்று அதே யோசனையாக இருந்ததால் திவ்யா அந்த 'நமக்கு'வைக் கவனிக்கக் கூட இல்லை. அவளது கவனம் முழுவதும் ''அத்தோடு...'' என்று மேலே பிரபா பேசிய பேச்சிலே இருந்தது.



''அத்தோடு நீ நினைக்கிற மாதிரி அது கஷ்டமான காரியமும் இல்லை, திவ்யா. நீ சொன்னது மாதிரி, எல்லோரையும் போல அமுதனும் தன் வீட்டைப் பூட்டிக் கொண்டுதான் இருப்பான். பூட்டிக் கொண்டு தான் வெளியே போவான். ஆனால்.. ஆனால் அவன் ஃப்ளாட்டில் உள்ளே செல்வது எளிது. ஏனென்றால்.. ஏனென்றால் அவன் ஃப்ளாட்டின் சாவி ஒன்று என்னிடம் இருக்கிறது'' என்றாள் பிரபா இறங்கிய குரலில்.

தன் காதுகளையே நம்ப மாட்டாதவள் போல அவளை வெறித்து நோக்கினாள் திவ்யா. பெரியம்மாளின் வயிற்றில் வளர்ந்து பிறந்த பெண்ணால் எப்படி....

''அப்படிப் பார்க்காதே, திவ்யா'' என்றாள் பிரபா அவசரமாக. ''நீ நினைக்கிற மாதிரி ஒன்றும் இல்லை. அம்மாவின் வயிற்றில் பிறந்து இந்த வீட்டில் வளர்ந்து விட்டு நான் அந்த மாதிரித் தப்பு செய்வேன் என்றா நினைத்தாய்?''

''பின்னே அவன் வீட்டுச் சாவி உன்னிடம் வரக் காரணம்?'' என்று அதட்டலாகவே கேட்டாள் திவ்யா.

''நீ என்ன..!'' என்று ஆத்திரமாகத் தொடங்கிய பிரபா உடனே தணிந்து, ''படம் வரைவதற்காக'', திவ்யா. எனக்கு ஓவியக்கலையைக் கற்றுத் தருவதாகச் சொன்னான். அவனது ஃப்ளாட்டில் வைத்துப் போதிப்பதாக ஏற்பாடு. அவன் இல்லாத நேரங்களில் வந்தால் கூட உள்ளே போய், திரைச்சீலை, வண்ணங்கள் எல்லாம் தயாராக எடுத்து வைத்துக் காத்துக் கொண்டு இருக்க வசதியாக என்று தான்... நீ இன்னமும் என்னை நம்பவில்லை இல்லையா? நான் வரைவதைச் சீர்ப்படுத்த என்று ஒட்டி உரசி அவன் நின்ற போது எனக்குக் கொஞ்சம் ஒரு மாதிரி இருந்தது உண்மைதான். காதல், கீதல் என்று அவன் பேசிய போது சலனப்பட்டதும் மெய்தான். அந்த மாதிரி நேரத்தில் தான் அந்தக் கடிதம் எழுதி விட்டேன். ... ஏதோ, சிலசமயம்

ஏதாவது ரெக்கார்டைப் போட்டுக் கொண்டு ஆடியதுண்டு.. மற்றபடி பெரிய தப்பு ஏதும் நான் செய்ததில்லை, என்னை நம்பு, திவ்யா... அத்தோடு அதற்குள்ளாகத்தான் அவனை வேறு பெண்ணோடு பார்த்து விட்டேனே..'' என்று வெகுவாக சமாதானம் சொன்னாள்.

சற்று நேரம் பேசாதிருந்து விட்டு, ''ஃப்ளாட்டுக்குள் போனாலும் மற்றது அறைக்கதவு, பீரோவெல்லாம் கூடத் திறந்தால் தானே கடிதம் கிடைக்கும்?'' என்றாள் திவ்யா.

''வெளிக்கதவைத் தவிர மற்ற கதவுகளை அமுதன் பூட்டுவது இல்லை, திவ்யா. அப்புறம் அந்த பீரோவும் பெரிய காரியமல்ல. வெறும் காயலான் கடைச் சரக்கு. திறப்பது எளிது. நானே ஒருதரம் திறந்திருக்கிறேன்... திவ்யா, திரும்பவும் அப்படிப் பார்க்காதேப்பா. என்னைப் படம் வரைந்திருப்பதாகச் சொன்னான். அவன் வழக்கம் போல அசிங்கமாக வரைந்து விட்டானோ என்று அவனுக்குத் தெரியாமல் எடுத்துப் பார்த்தேன். முகம் என் மாதிரியே இல்லை. அதனால் பேசாமல் வைத்து விட்டு வந்து விட்டேன்'' என்று பெரியப்பா மகள் அவசர அவசரமாக விளக்குவதைக் கேட்டுப் பெருமூச்சு விட்டாள் திவ்யா.

அந்த வீட்டில் பேச்சோ, சிரிப்போ, பாட்டோ ஏதாவது கடமுடத்துக் கொண்டே இருப்பது திவ்யாதான். சில சமயங்களில் பெரியப்பா கூடக் கேலியாக, வெண்கலக் கடை யானை வீட்டில் இருப்பது தெருக்கோடியிலேயே தெரிந்து விட்டதே என்பார். ஆனால் அதற்காகப் பெண் பிள்ளை சிரித்தால் போச்சு. புகையிலை விரித்தால் போச்சு என்றெல்லாம் பழமொழி கூறி அடக்குவது கிடையாது. கூடச் சேர்ந்து சிரித்து உற்சாகப்படுத்துவார்கள். பிரபாதான் சத்தமே கேளாது. இவள் இன்னும் கொஞ்சம் சிரிக்கலாமே என்று அவ்வப்போது திவ்யா நினைக்கிற அளவுக்கு 'உம்'மென்று இருப்பாள். 'இம்' என்றால் அழுதும் விடுவாள்.



எப்போதேனும், 'உன்னை விட இரண்டு வயது சின்னவள், அவளைப் பார்த்துப் படியேன்' என்று மகளை ரங்கநாதன் தம்பதியினர் கண்டிக்கும் போது, கோப நடையுடன் அல்லது கண்ணீருடன் அவள் செல்வது உண்டு. அதற்காகத் திவ்யாவிடம் வெறுப்பு காட்டியதில்லை அவள். சும்மா ஓரிரண்டு நாட்கள் ஒதுங்கிப் போவாள். ஆனால் திவ்யா எப்போதும் போல இழுத்துப் பிடித்து உற்சாகமாய்க் கதை பேசும் போது பழையபடி சாதாரணமாகி விடுவாள்.

ஆனால் அவளது அடிமனதில் இப்படி ஓர் ஆற்றாமை இருந்து தானும் பெரிதாகச் சாதித்துக் காட்ட வேண்டும் என்று தூண்டி விட்டு என்னென்னவோ செய்ய வைத்து விட்டதே.

என்னவோ, கடவுள் அருள் தான் அந்த லெக்சரரை லீவு போட வைத்து, அந்த அமுதன் இன்னொரு பெண்ணோடு சரசமாடிக் கொண்டிருந்த வேளையில் பிரபாவை அங்கே கொண்டு சேர்த்திருக்க வேண்டும்! அப்போது காத்த கடவுள் இப்போதும் காப்பாற்றுவாரா?

காப்பாற்றித்தான் ஆக வேண்டும். இல்லாவிட்டால் வாழுகிற காலம் முழுவதும் திவ்யாவுக்கு நிம்மதி இராது. நம்மால் வந்தது, நம்மால் வந்தது என்று அவளது மனமே அவளை அரித்துத் தீர்த்து விடும்.

''சரி..சரி.. போனது போகட்டும். இனி நடக்க வேண்டியதைப் பற்றி யோசிக்கலாம். பிரபா, எனக்கென்னவோ உன்திட்டம் சரிவராது என்று தான் தோன்றுகிறது. பிடிபட்டு விட்டோம் என்று வை. அப்புறம் பெரியப்பா பெரியம்மா தாங்குவார்களா? ஏன், என்ன என்று எல்லாமே சொல்லும்படி ஆகிவிடுமே.. அதனால்...''

''பிடிபட்டால் தானே?'' கொஞ்சம் கவனத்துடன் நடந்து கொண்டால் அதற்கு வாய்ப்பே கிடையாது'' என்று அவசரமாக மறுத்தாள் பிரபா.

''கொஞ்சம் அமைதியாக யோசித்துப் பேசு பிரபா. அவனுடைய வீடு ஒரு ஃப்ளாட் என்றாய். அர்த்தம் என்ன? நிச்சயமாய் பல ஃப்ளாட்கள் அடங்கிய கட்டிடம் அது. அவன் பகுதியில் நுழைவதை ஒருவர் கூடவா கவனிக்க மாட்டார்கள்? ஒருவருக்குச் சந்தேகம் தட்டினால் போதுமே?''

''பகலில் அது சாத்தியம் தான்'' என்று ஒத்துக் கொண்டாள் பிரபா. அதனால் இரவில் போய்க் கடிதத்தை எடுத்து வருவது தான் மேல்''

''அய்யோ கடவுளே! கொஞ்சம் யோசியேன் பிரபா. இரவானால் எல்லோரையும் போல அவனும் வீட்டில் தானே இருப்பான்? அவன் இருக்கும் போது அவன் வீட்டில் எப்படித் திருட முடியும்?''

''நீயும் தான் என்னைக் கொஞ்சம் பேச விடேன் திவ்யா. அப்பா, அம்மா மாதிரி நீயும் எனக்கு மூளையே இல்லை, உனக்குத் தான் எல்லாம் தெரியும் என்று தான் நினைக்கிறாய்.. அப்படித்தானே?'' என்றாள் பிரபா கசப்புடன்.

வாயடைத்துப் போயிற்று திவ்யாவுக்கு. சில கணங்கள் பேசாதிருந்து விட்டு, ''சாரி, பிரபா. இந்த இக்கட்டிலிருந்து எப்படி மீளப் போகிறோமோ என்ற கலக்கத்தில் என் மூளை தான் சரியாக வேலை செய்யவில்லை என்று நினைக்கிறேன். ரொம்ப சாரிம்மா. இப்போது உன் திட்டத்தைச் சொல்லு நான் குறுக்கே பேசாமல் கேட்கிறேன்'' என்றாள் தணிந்து.

பிரபா சொன்னாள்.

''அமுதனின் ஃப்ளாட் ஆடம்பர வகையைச் சேர்ந்தது. அந்தக் கட்டிடத்தில் மொத்தம் நாலே வீடுகள் தான். அவரவர் அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டு போகிற மாதிரி ஆட்கள். இன்னார் இன்னார் என்று அடையாளம் கூடத் தெரியுமோ, என்னவோ? அதிலும் அமுதனின்



நடவடிக்கைகள் அவனை முற்றிலும் தனியனாக்கி விட்டிருந்தன.

மாடலுக்காகவும் மற்ற விதமாகவும் கண்ட நேரங்களிலும் அவன் வீட்டுக்குப் பெண்கள் வந்து போவது வழமையே.

படம் வரைவதும் மற்ற கேளிக்கைகளில் ஈடுபடுவதுமாகப் பகல் பொழுதை வீட்டில் கழிக்கும் அமுதன் பிற்பகலில் தான் வெளியே கிளம்புவான். பத்திரிகை அலுவலகங்கள், விளம்பர ஏஜென்சிகள், காலரிகள் என்று படம், பணம் விஷயம் எல்லாம் பார்த்து முடித்து விட்டால் 'கிளப்'புக்குப் போய் விடுவான். இரவு பனிரண்டு மணிக்கு முன்னால் வீடு திரும்புவது இல்லை. குடி, சீட்டாட்டம் என்று பொழுது போக்கி விட்டு வருவான்.

அதனால் தான் சொல்கிறேன் திவ்யா. எப்படியும் குடும்பத்து மனிதர்கள் பத்து பத்தரைக்குத் தூங்கப் போய் விடுவார்கள். பதினொன்றுக்கு மேல் எப்படியும் ஆள் அரவமே இராது. அந்த நேரத்தில் போனால், எளிதாகக் கடிதத்தை எடுத்துக் கொண்டு அமுதன் திரும்பி விடுமுன் நீ நம் வீட்டுக்கே வந்து சேர்ந்து விடலாம்'' என்று முடித்தாள் பிரபா.

பெரியப்பா மகளின் திட்டத்தில் ஏதும் குறையிருக்கிறதா என்பதை மட்டும் ஆராய்ந்தபடி கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்த திவ்யாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''நானா?'' என்றாள் வியப்பும் திகைப்புமாக.

''ஆமாம். பின்னே?'' என்றாள் மற்றவள்.

மறுக்கும்விதமாகத் திவ்யா வாயைத் திறக்கையில் முந்திக் கொண்டு பிரபா பேசினாள். ''திவு, திவு நம் வீட்டில் நீதானே கெட்டிக்காரி? ஏற்கனவே மக்குத்தனமாய் நான்

இழுத்து வைத்திருக்கும் இன்னல் போதாதா? இன்னுமா? இப்போது மட்டும் நான் அங்கே போனேன் என்று வைத்துக் கொள், ஒரு கரப்பான்பூச்சியைப் பார்த்து அலறிக் குதித்து கூட்டம் சேர்த்து காரியத்தையே கெடுத்து வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சும்மாவே எனக்கு இருட்டு பயம் வேறு உண்டு. அத்தோடு இன்னொன்றை யோசித்துப் பார்த்தாயா? கல்யாணம் இன்னும் ஒரே வாரத்தில் என்பதால் அம்மா இப்போது என்னைப் பக்கத்துக் கடை வரை கூடச் செல்ல விடுவதில்லையே. இரவில் எழுந்து செல்லும் போது கண்டு விட்டார்கள் என்றால் எல்லாம் தொலைந்தது. ஆனால் திவும்மா, உன் விஷயம் அப்படியில்லை. அப்பா அம்மா இரண்டு பேருக்குமே உன்னிடம் அபார நம்பிக்கை. நீ இரவில் பன்னிரண்டு மணிக்கு மேல் வந்தால் கூட உன்னிடம் அவர்கள் குற்றம் காணப் போவது இல்லை. திட்டவும் மாட்டார்கள். என் விஷயம் அப்படியா? கண் குத்திப் பாம்பு மாதிரி காவல் காப்பார்கள்; இல்லாவிட்டால் மக்குத்தனமாக எதையாவது செய்து விட்டு வந்து நிற்பாள் என்று...''

அவள் சொல்வது மெய்தான். ஒருதரம் பணத்தைப் பறிகொடுத்து விட்டு வந்தாள். ஒருதரம் புதுச்சேலையைக் கிழித்துக் கொண்டு வந்தாள். ஒருதரம் — அதுதான் ரங்கநாதன் தம்பதிக்கு மகள் மேல் நம்பிக்கையை அடியோடு அழித்தது. மகளுக்கும் தம்பி மகளுக்குமாக இருவருக்கும் ஒரே மாதிரி புது சைக்கிள் வாங்கிக் கொடுத்தால், அன்று மாலையே அதை உடைத்துக் கொண்டு வந்ததோடு, இவள் சைக்கிள் மோதியதில் காயம் என்று அந்தப் பையனுக்கு வேறு ஐநூறு ரூபாய் அழ வேண்டியதாயிற்று. அதனால் பள்ளிக்கூடம், கல்லூரி தவிரப் புதியதாக எங்கும் அவளை அனுப்ப மிகவும் தயங்குவார்கள்.

ஆனால் அதற்காக முன்னே பின்னே ஒன்றும் தெரியாத இடத்தில் இவள் போய் மாட்டிக் கொள்வதா?



ஆனால் முற்றிலும் புதியவளான திவ்யா போவதுதான் நல்லது என்றாள் மற்றவள். ''திவ்யா, முன்பே நான் அடிக்கடி போய் வந்திருக்கிறேன். அப்போதே அடையாளம் தெரியாத யாரிடமாவது, இந்தப் பெண் வந்தால் கவனித்துக் கொள்ளுங்கள் என்று அமுதன் சொல்லி வைத்திருக்கலாம் அல்லவா?...''

அங்கே யாருமே அடுத்தவரைக் கண்டு கொள்வதே இல்லை என்றவள் இப்போது முரணாகப் பேசுவதை திவ்யா உணராமல் இல்லை. ஆனால் இவள் அங்கே போக அஞ்சுகிறாள் என்பதையும் கண்டு கொண்டதால் பாவம் என்று தான் தோன்றியது. சும்மாவே சட்டெனக் கலங்கிப் போகிறவள் அவள். அவளது ஒரு சிறு மூடத்தனத்திற்காக அவள் அனுபவிக்கும் தண்டனை மிகவும் அதிகமாகத்தான் தோன்றியது திவ்யாவுக்கு.

ஒரு 'பிள்ாக் மெயில'ரிடமிருந்து தடயத்தைக் கைப்பற்றுவது தவறு என்று 'அவள் எண்ணவில்லைதான். ஆனால் அதைத் திருடுவது என்பதுதான் உள்ளூர வதைத்தது.

ஆனால் ஒன்று மட்டும் தெளிவாய்த் தெரிந்தது. அந்தக் கடிதத்தை யாராவது சென்று எடுத்து வருவது என்று செல்வதானால் அதைத் திவ்யாதான் செய்தாக வேண்டும். சும்மாவே உதறலெடுத்துப் போயிருந்த பிரபாவை அதற்காக ஓர் அடி எடுத்து வை என்றாலும், அதை விடத் தூக்க மாத்திரையிடம் தஞ்சமடைந்து விடுவாள். அல்லது செல்லும் வழியில் ஒரு தண்ணீர் லாரி முன் கூட விழுந்து விடலாம். அதனால்.... ஆனாலும்...

தனக்குள்ளே திவ்யா யோசித்துக் கொண்டிருந்த சில நிமிடங்களும் பிரபாவுக்குத் தாங்க மாட்டாத சித்திரவதையாக இருந்தது போலும். இன்னொரு விதமாய் திவ்யாவை வற்புறுத்தலானாள்.

''திவ்யா, நீ எத்தனையோ தடவை அப்பாவும் அம்மாவும் உன்னை வேற்றுமை பாராட்டாமல் சொந்த மகள் போல வளர்ப்பதைப் பாராட்டி என்னிடம் பேசியிருக்கிறாய். எத்தனை பிறவி எடுத்து நன்றிக் கடன் தீர்க்கப் போகிறேனோ என்பாயே! இப்போது அதற்குரிய வாய்ப்பு கிட்டும் போது செய்யாமல் ஒதுங்கிக் கொள்ளுவாயா? எனக்காக என்று ஒன்றும் செய்ய வேண்டாம், திவ்யா. அம்மா அப்பாவுக்காக.... ப்ளீஸ்... இப்போது நீ மறுத்தால் அப்பவும் நன்றி சொல்ல அம்மா, அப்பா யாரும் இருக்கப் போவதில்லை...'' என்று மீண்டும் கண்ணீர் சொரிந்தாள்.

திவ்யா முடிவு செய்து விட்டாள். செஞ்சோற்றுக் கடன் தீர்க்க ஓர் அரிய வாய்ப்பு. நினைவு தெரிந்த நாளிலிருந்து அன்பைப் பொழிந்து வரும் வளர்ப்புப் பெற்றோருக்கு அவளால் ஆன கைமாறு!

செஞ்சோற்றுக் கடன் தீர்க்க முடிவு செய்த திவ்யா முக்கியமான ஒரு விஷயத்தை அடியோடு மறந்து போனாள்! அவளுக்கு ரொம்ப காலத்துக்கு முன்பாக, ரொம்ப, ரொம்பவும் முற்காலமான இதிகாசக் காலத்தில் செஞ்சோற்றுக் கடன் தீர்க்க முனைந்த இருவருமே — அது ராமாயணக் கும்ப கர்ணனாகட்டும்; அல்லது மகாபாரதக் கர்ணனாகட்டும், அவர்களில் யாருமே மீண்டு வந்து வாழவில்லை; மாண்டுதான் போனார்கள் என்பது அப்போது அவளுக்குச் சற்றும் நினைவு வரவில்லை.

## 4

திவ்யா கடிதம் திருடிவரச் சம்மதித்ததுமே பிரபாவின் முகம் பூவாய் மலர்ந்து விட்டது. 'திவூ' என்று ஒன்றுவிட்ட தங்கையைச் செல்லமாக அழைத்து இறுக அணைத்துத் தன்



மகிழ்ச்சியை தெரியப்படுத்தினாள். நினைவு வந்தாற் போலத் தலையணைக்கு அடியில் இருந்த தூக்க மாத்திரை பாட்டிலை எடுத்து, திவ்யாவின் கையில் கொடுத்து, ''இனி இதற்கு அவசியம் ஏற்படாது'' என்றாள் குதூகலக் குரலில்.

இன்னமும் காரியம் என்று உருப்படியாக எதுவும் நடந்து விடவில்லை; கடிதம் இன்னமும் அந்த வில்லனிடம் தான் இருக்கிறது என்ற ஞாபகமே இவளுக்கு இல்லையே என்று நினைத்தாள் திவ்யா. ஆனால் நினைவுபடுத்தாமல் மாத்திரை பாட்டிலைக் கையில் வாங்கிக் கொண்டாள்.

''அதை அப்பாவின் அலமாரியில் வைத்து விடு திவ்யா. இதைத் தின்பதா? பீளக்கில் கைவைப்பதா? என்று யோசித்துக் கொண்டிருந்தேன். யோசிக்கும் போது எவ்வளவு கஷ்டமாக இருந்தது தெரியுமா? நல்லவேளையாக அந்தத் துன்பத்திலிருந்து நீ என்னைக் காப்பாற்றி விட்டாய், திவுக்குட்டி?''.

திவுக்குட்டி! பெரியப்பா அவ்வப்போது அவளைச் செல்லமாக அழைக்கும் பெயர்! திவ்யா நன்றாகவே உருகிப் போனாள். பிரபாவின் எண்ணம் போல அந்தக் கடிதத்தை எப்படியாவது எடுத்து வந்து அவளது கையில் கொடுத்தே ஆக வேண்டும்!

ஹாலில், குக்கூப் பறவை இரண்டு தடவை கூவி அடங்கவும் இருவருமே திடுக்கிட்டுப் போயினர். மணி இரண்டு!

''அய்யோ! இவ்வளவு நேரமாகி விட்டதா? அதனால் தான் எனக்கு அப்படித் தூக்கம் வந்திருக்கிறது!'' என்று கொட்டாவி விட்டபடி படுக்கையில் சரிந்து படுத்தாள் பிரபா.

''ஊகூம்.. தூங்கி விடாதே பிரபா.. அங்கே, அந்த அமுதன் வீட்டில் போய் கடிதம் எடுப்பது பற்றிக் கொஞ்சம் விவரமாக...''

''ப்ளீ..ஸ் திவ்யா, எனக்குப் பயங்கரத் தூக்கம் வந்து விட்டது. இப்போது நான் எதைச் சொன்னாலும் சரியாக இராது. நா..ளைக்குப் பகலில்...'' என்றவளிடம் அதற்கு மேல் சத்தமில்லை.

யோசனையோடு தன் கட்டிலில் சென்று படுத்தாள் திவ்யா. பிரபா கூறுவது போல இது எளிதாக நிறைவேற்றக்கூடிய காரியம் தானோ? அப்படி இல்லையென்றால் இவளால் இப்படி நிச்சிந்தையாக உறங்க முடியுமா?

ஒன்றுவிட்ட சகோதரியின் தூக்கமே ஒரு தைரியம் தர, அவளும் துயிலில் ஆழ்ந்தாள். காலையில் சற்றுத் தாமதமாக எழுந்து பார்க்கையில் பிரபா இன்னமும் உறங்கிக் கொண்டிருப்பதைக் காண அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இரவு நடந்ததெல்லாம் பொய்யோ, கனவோ என்று கூடத் தோன்றியது. அவசரமாகத் திரும்பிப் பார்த்த போது, அலமாரி மேல் வைத்த தூக்க மாத்திரை பாட்டில் கண்ணில் பட்டு எல்லாமே மெய்தான் என்று உணர்த்தியது. அவசரமாக அதை எடுத்துச் சென்று பெரிய தந்தையின் அலமாரியில் வைத்து விட்டு வந்து தன் காலை வேலைகளைக் கவனிக்கலானாள்.

பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு, பெரியன்னையை நாடிச் சென்றாள்.

திலகம் அதற்குள்ளாகக் காலைப் பலகாரம் செய்யும் வேலைகளை முடித்து விட்டு, திவ்யாவும், கணவரும் கையோடு எடுத்துச் செல்லும் மதியச் சாப்பாட்டு வேலையைத் தொடங்கியிருந்தாள்.



திவ்யாவைக் கண்டதும், ''ராணியம்மாளுக்கு இப்போதுதான் தூக்கம் கலைந்ததா? காபி குடிக்கிறாயா? பெரிய மகாராணியை இன்னமும் படுக்கை விட மாட்டேன்கிறதாக்கும். எண்ணி ஆறே நாட்கள். புகுந்த வீட்டிலும் இப்படித் தூங்கி, 'வளர்ந்த லட்சணம்' என்று என் மானத்தை வாங்கப் போகிறாள்'' என்று குறைபட்டபடி காபியைக் கலந்து கொடுத்தாள்.

காபியை அருந்தியபடி பெரியன்னையை ஆர்வமாக நோக்கினாள் திவ்யா. பொலிவான முகம். வட்டக் குங்குமம் - குங்குமம் தான். ஒட்டுகிற பொட்டு பெரியம்மா வைத்து அவள் பார்த்ததில்லை. நெற்றியில் குங்குமம் இட வேண்டும் என்பதற்காகத்தான் பொட்டு வைப்பதே. அதை ஏதோ பொட்டு தான் வைக்க வேண்டும் என்று மாற்றினால் எப்படி? என்பாள்.

சமையலறை வேலையால் ஏற்பட்ட சிறுவேர்வையில் பொட்டு நனைய நின்றவளைப் பார்க்கையில் திவ்யாவுக்கு நெஞ்சில் ஏதோ செய்தது. இந்தத் தாயைப் போய் இல்லாமல் போய் விடுவாள் என்றாளே பிரபா. என்னதான் திவ்யாவை இணங்க வைப்பதற்காகச் சொன்ன பேச்சு என்றாலும் அப்படி ஒரு வார்த்தை சொல்ல அவளுக்கு எப்படி மனம் வந்தது?

காபித் தம்ளரை 'ஸிங்க்'கில் போட்டுவிட்டுப் பெரியன்னையை அணுகி அவளை இறுக அணைத்துக் கொண்டாள் திவ்யா.

அவ்வப்போது திவ்யா இந்த வேலை செய்வதுண்டு. 'என் செல்லப் பெரியம்மா!' என்று இறுக அணைத்து, பெரியன்னை தேய்த்துக் குளிக்கும் கஸ்தூரிமஞ்சள், வெட்டிவேர், சந்தனத்தூள் கலந்த பயற்ற மாவை வாசம் பிடிப்பாள்.

அதேபோல விளையாட்டாக எண்ணி, "அய்யோ விடுடி. அப்படியே சாறு பிழிந்து விடுவாய் போல இருக்கிறதே!" என்று சிரித்தாள் திலகம்.

முகம் தெளிய, 'ஊகூம், என்ன பிரயோஜனம்? மனிதச் சாறு அவ்வளவாய் ருசிப்படாதே!' என்று கூடச் சேர்ந்து கொண்டாள் பெண்.

'சரியான ராட்சசிதான். இந்தா, உருளைக்கிழங்கு உப்பு காரம் சரிதானா என்று பார்" என்று ஒரு துண்டு எடுத்து வளர்ப்பு மகளிடம் கொடுத்தாள் திலகம்.

ருசி பார்த்து, 'பிரமாதம்' என்று அபிப்பிராயம் சொல்லி விட்டு, "என்ன பெரியம்மா, இன்றைக்குச் சீக்கிரமே முடித்து விட்டீர்கள்?" என்று இன்னொரு துண்டு உருளைக்கிழங்கை எடுத்து வாயில் திணித்தபடி வினவினாள் திவ்யா.

"ஆமாம், பிரபாவின் திருமணச் சட்டையை இன்னமும் டெய்லர் தரவில்லையே. உன் நிச்சயப் பட்டுச் சட்டையும் அவனிடம் தான் இருக்கிறது. சும்மா உறுதி பண்ணத்தான் வருகிறார்கள் என்றாலும் நீயும் நன்றாகத்தான் உடுக்க வேண்டும். இரண்டையும் எந்த அளவில் வைத்திருக்கிறான் என்று பார்த்து விரட்ட வேண்டும். ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போங்கள் என்றால் உன் பெரியப்பாவுக்கு நேரமே இல்லையாம். இன்றைக்கு அவர்கள் ஆபீசில் எம்டிக்குப் பத்திரிகை கொடுக்கப் போகிறாராம். அதற்காக அவர் ஓட வேண்டும். உனக்கும் ஆபீசில் ஏதோ வேலை என்றாயே..."

வேலைதான். ஒரு 'புராஜக்ட் ரிப்போர்ட்' முடிக்க வேண்டும். திருமணத்துக்கு முன் முடித்துத் தந்தாயென்றால் எனக்கு வசதி' என்று மனோரஞ்சன் சொன்னதால் விழுந்து விழுந்து முழுமூச்சாய் அந்த வேலையில் ஈடுபட்டிருந்தாள் திவ்யா.



"பரவாயில்லை பெரியம்மா.. நான் போய்ச் சொல்லி விட்டுப் போகி... இல்லை, பெரியம்மா. இன்று லீவே போட்டு விடுகிறேன். நாளை அதிகப்படி நேரம் வேலை செய்து சரி செய்து விடலாம். அதனால் இன்று வீட்டிலிருந்து உங்களுக்கு உதவி செய்யப் போகிறேன்..."

"செய்யடி, கண்ணு.. இந்த வீட்டில் எனக்கு உன்னை விட்டால் யார் உதவி?" என்று கொழுந்தன் மகளை அணைத்துக் கொண்டாள் அந்த அம்மாள்.

தொண்டையில் அடைத்ததை விழுங்கினாள் திவ்யா. லேசாகக் கனைத்துத் தொண்டையைச் சீர் செய்து கொண்டு, "வேலை முடிந்து விட்டதில்லையா பெரியம்மா? பெரியப்பா டிபன் சாப்பிடும் போது மதியத்துக்கு எடுத்து வைத்துக் கொள்ளலாம், வாருங்கள்" என்று இழுத்து வந்தாள். ஹாலில் சோபாவில் உட்கார வைத்து, காலடியில் அமர்ந்து பெரிய தாயின் மடியில் முகம் சாய்த்துக் கேட்டாள். "என்னை இங்கே எடுத்து வந்ததை ஒருதரம் சொல்லுங்கள், பெரியம்மா. எனக்கு மீண்டும் கேட்க வேண்டும் போல் ஆ...சையாக இருக்கிறது" என்றாள் கொஞ்சலாக.

முதலில் சற்றே தயங்கிய திலகம் மகள் வற்புறுத்தலில் சொல்லத் தொடங்கினாள்.

அப்போது பெரியவர் — திவ்யா, பிரபாவுடைய தாத்தா உயிரோடு இருந்த காலம். பிரபா பிறந்திருந்தாள். திவ்யாவுடைய தந்தை ராமநாதன் அப்போதே கொஞ்சம் இஷ்டம் போல ஆடுகிற டைப். திடுமென ஒருநாள் காலேஜில் கூடப்படித்த பெண்ணாம் - ஓர் அரிஜனப் பெண்ணை மணந்து கொண்டு வந்து நின்றான்.

"ரொம்பவும் அழகுதான் உன் அம்மா. ஆனால் உன் தாத்தா அவர்களை வீட்டுக்குள் விடவே இல்லை. ரோஷமாய் மனைவியுடன் வெளியேறிப் போய் விட்டார் ராமு.

இருவருமே படிப்பை முடித்திராத நிலையில் வயிற்றுப் பாடு எப்படி நடக்கும். உன் பெரியப்பா ஏதாவது உதவத்தான் முயன்றார். ஆனால் உன் தாத்தாவின் கண்டிப்புக்கும் கணக்குக்கும் மீறி அவராலும் பெரிதாகப் பணம் என்று உதவ முடியவில்லை. பொருளாக எதையும் கொடுத்தால் உன் அம்மா வாங்க மாட்டாள். தன்மானம் அதிகம். கருவுற்ற பெண்ணுக்கு வேண்டிய கவனிப்புகள் கிடைக்கவில்லை. நீ பிறந்து உன் முகத்தைப் பார்த்து விட்டுத்தான் போனாள் என்றார்கள்....''

திவ்யாவின் தலையை மெல்ல வருடியபடி இருந்தவள் ஒரு சிறு மவுனத்தின் பின் மீண்டும் தொடர்ந்தாள். ''நீ தொட்டிலில் துணிச் சுருளுக்குள் கிடந்தாய். உன் அம்மாவே குழந்தையாகி விட்டது போல.. என்னால் உன்னை விட்டு வர முடியவில்லை. பெரியப்பா உன் அப்பாவை அழைத்து வந்தார். ஏனோ மாமாவும் எதுவும் சொல்லவில்லை.. அப்புறமென்ன. நீ இங்கேயே வளர்ந்தாய்.. அவ்வளவுதான் கதை!'' என்று சிரித்தாள் பெரியவள்.

''அப்பா? முதலிலிருந்தே அப்பாவுக்கு எனனிடம் பிரியமே இருக்கவில்லை. அப்படித்தானே, பெரியம்மா?''

''.... அப்படிச் சொல்வதற்கில்லைம்மா.. முதலில்... உன் அம்மாவை மிகவும் நேசித்ததால் அவளை இழந்த அதிர்ச்சிதான் பெரிதாகத் தோன்றியிருக்கிறது. பிறகு... நாங்கள் உன்னைப் பிரியமாகப் பார்த்துக் கொள்வோம் என்ற நம்பிக்கை வந்து விட்டதால்... உன் தாத்தா கூட உன்னை ஒதுக்கவில்லையே, அதனால் தான் தனியாளாக என்ன செய்ய முடியும்; இதுவே மேல் என்று ஒதுங்கியிருக்கலாம்...'' வளர்த்த பெண்ணின் உள்ளூர இருந்த ஏக்கம் புரிந்து அதைக் குறைக்க முயன்றாள் திலகம்.



புரிந்து கொண்டு, ''ம்ம்... எல்லாம் சும்மா. எனக்காகச் சொல்லுகிறீர்கள். அம்மாவை அப்படி நேசித்திருந்தால் இத்தனை கல்யாணம் செய்ய முடியுமா?'' என்று மறுத்தாள் திவ்யா.

''ஏன், ஷாஜஹான் பண்ணவில்லையா? மும்தாஜுக்காகத் தாஜ்மஹாலை கட்டியவர். அவருக்குப் பத்துப் பதினைந்து மனைவியராமே. சரித்திரப் பாடம் எல்லாம் மறந்து விட்டதாக்கும்?'' என்று விஷயத்தைக் கேலியாக ஒதுக்க முயன்றாள் பெரியன்னை.

''என்னவோ, எனக்கு இது புரியவில்லை. ஆனால் மகள் என்று வரவும் இல்லையே. என்னதான் 'ஸ்டேட்ஸ்' இழுத்துப் பிடித்து விட்டது என்றாலும், இங்கே ஒரு மகள் இருக்கிறாள் என்ற நினைப்பு கொஞ்சம் — இவ்வளவூண்டு இருந்தால் கூட ஒருதரமேனும் வந்து பார்க்க வைக்காதா? ... ம்ம்.. இதற்கு உங்கள் சமாதானம் என்ன என்று நானே சொல்லட்டுமா? அமெரிக்காவுக்குப் போய் அங்கேயே செட்டில் ஆகி விட்டதால் அந்த நாகரீகம் படிந்து விட்டது. இத்தனை ஆண்டுகளில் ஐந்துமுறை மனைவி மாற்றியவர், அவர்களில் மூன்று பேர் மூலம் பிறந்த குழந்தைகளைக் கூட அவரவர் தாயாரோடு அனுப்பி விட்டவருக்கு, இந்த மகள் மட்டும் என்ன தனி? அத்தோடு அமெரிக்காவில் பதினாறு வயது ஆனதுமே பிள்ளைகள் தங்கள் பொறுப்பைத் தானே கவனித்துக் கொள்ள வேண்டிய தனி மனிதர்கள், அப்படிக் கவனித்துக் கொள்ளுகிறவர்களும் கூட. அதாவது சிறகு முளைத்ததும் கூட்டை விட்டுப் பறந்து விடுகிற பறவைக் குஞ்சு போல, அப்படிப் பறக்கா விட்டால் தாய்ப் பறவையே கொத்தி விரட்டுவது போலப் பழகி விட்ட பழக்கம். இங்கே இருப்பவளைப் பற்றிக் கவலைப்படத் தோன்றாததில் தப்பில்லை. சரிதானா?'' சிறு கசப்பு இழையோட ஏளனமாகக் கேட்டாள் திவ்யா.

திலகம் பேசாதிருக்கவும் சட்டெனச் சிரித்தாள். "ஒரு தந்தை இப்படி இருக்க முடியுமா என்று நினைத்தேனே தவிர அதற்காக எனக்கு எந்தவித வருத்தமும் இல்லை பெரியம்மா. பெரியப்பாவும் நீங்களுமாய்ப் பெற்றவர்களுக்கும் மேலாகப் பாசம் காட்டும் போது எனக்க வேறு என்ன வேண்டுமாம்?" என்று பெரியன்னையின் மடியில் முகம் புதைத்துக் கைகளை நீட்டி இடுப்பைக் கட்டிக் கொண்டாள் அவள்.

"என்ன இது? காலையிலேயே எங்கோ கிளம்பப் போவதாகச் சொன்னாய். இங்கே பார்த்தால் அம்மாவும் மகளுமாய் போஸ் கொடுத்துக் குலாவிக் கொண்டு இருக்கிறீர்களே!" என்று வந்த ரங்கநாதனிடம், "திவுக்குட்டி லீவு போட்டுவிட்டு வெளிவேலை செய்வதாகச் சொல்லி விட்டாள். வீட்டிலிருந்து மண்டபத்துக்குக் கொண்டு போக வேண்டிய சாமான்கள் லிஸ்ட் போட வேண்டியதுதான் எனக்கு இனி மீந்திருக்கும் வேலை" என்றாள் திலகம் பெருமையாக.

"நல்லவேளை.. பெரிய கவலை விட்டது எனக்கு. இந்த லோ ப்ரஷரோடு நீ வெயிலில் அலையும்படி இருக்கிறதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால்.. ஏன் திவுக்கண்ணா, உன்னைக் காணாமல் கண் பூத்துப் போய் உன் மனோரஞ்சன் இங்கே வந்து விட மாட்டாரே?" என்று பெண்ணிடம் கேலி பேசினார் ரங்கநாதன்.

"வரட்டுமே.. வந்தால் அவரிடம் இரண்டு கல்யாண வேலையைப் பார்க்கச் சொல்லி விடலாம்" என்று திவ்யா சிரிக்க, "ஷ்... மாப்பிள்ளை! கொஞ்சம் மரியாதை கொடுத்துப் பேசுங்கள்.." என்று திலகம் எச்சரித்தாள்.

அதற்கும் நகைத்து விட்டு, பெரியப்பாவுக்குக் காலைப் பலகாரம் எடுத்து வைக்க உள்ளே சென்றாள் திவ்யா. எல்லாமே தயார் நிலையில் இருந்ததால் அப்படி அப்படியே



சாப்பாட்டு மேசை மேல் எடுத்து வைத்து விட்டு சற்று சீக்கிரமாகவே திரும்பி வந்த போது, சற்றுத் தணிவான குரலில் தான் என்றாலும் திலகத்தின் பேச்சு அவளுக்குத் தெளிவாகவே கேட்டது.

"... சொன்னார்களோ என்னவோ? சின்னவளுக்கு இன்று அவளைப் பெற்றவர் நினைவு வந்து விட்டது. அதுதான் அவளுக்கு ஆறுதலாக, நீங்கள் கிண்டல் செய்தீர்களே, அதுபோலப் 'போஸ்' கொடுத்து உட்கார்ந்திருந்தேன். ஆமாம், நீங்கள் உங்கள் தம்பிக்கு ஏதேனும் எழுதினீர்களா, அல்லது வேலை மும்முரத்தில் நான் சொன்னதை மறந்தே விட்டீர்களா?"

"அப்பாடியோவ்! புருஷன் மேல் எவ்வளவு நம்பிக்கையடா! எல்லாம் நீ சொல்லுமுன்பே நான் எழுதிவிட்டேன். ஆனால் இப்படி அழகும் அறிவுமாய் பெண்ணைப் பார்த்து மகிழவும் கொடுத்து வைக்க வேண்டும் இல்லையா? திருமணம் பற்றி எழுதி மாப்பிள்ளை பிடித்திருக்கிறதா வந்து பார் என்று கேட்டு எழுதினேன். நேற்று பதில் வந்தது. என்ன தெரியுமா? திருமணம் என்பது அவளது சொந்த விஷயமாம். மாப்பிள்ளையும் அப்படித் தானாம். இதில் அவன் பார்த்துச் சொல்ல ஒன்றும் இல்லையாம். அவசியம் இல்லாததற்கு வீணாக அலைவானேன் என்று இருக்கிறதாம். திருமண சமயத்தில் வாழ்த்து கார்டு அ ுப்புவானாம். அதுபோதுமாம். கழுதை!" என்றார் அவர் எரிச்சலோடு!

"ஷ்... மெள்ள.. சின்னக்குட்டி காதில் விழுந்து விடப் போகிறது. அப்புறம் வீணாக வருத்தப்படப் போகிறாள். இந்தக் கடிதம் வந்ததே சொல்லாமல் இருந்து விடலாம்"

பெற்ற தந்தையின் விட்டேற்றியான போக்கு அவளை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. நினைவறிந்து கண்களால்

கூடப் பார்த்தறியாத உருவம் தானே! ஆனால் பெரிய தந்தை, தாயின் பரிவு நெஞ்சை நெகிழ வைத்தது. இவர்கள் வருத்தப் படும்படி விடக் கூடாது என்ற உறுதியையும் தந்தது.

அது யாரவன், அந்த அமுதன், பெயரைப் பார். நரகத்துக்குச் சொர்க்கம் என்று பெயர் வைத்தாற் போல இந்த ஆலகால விஷத்துக்கு அமுதன் என்ற பெயரா? இவனது விஷப்பல்லைக் கட்டாயமாகப் பிடுங்கியே ஆக வேண்டும்! அவனது நச்சுக்காற்று எந்தவிதத்திலும் இவர்களைத் தாக்கும்படி விட்டு விடக் கூடாது.

''என்னம்மா.. எடுத்து வைத்தாயா? ஓ, ரெடியா? பார் திவு, சிக்கனம் பார்த்து வெயிலில் அலைந்து திரிய வேண்டாம். கொஞ்ச தூரம் என்றாலும் ஆட்டோவிலேயே போய் வந்து விடு'' என்று கூறித் தன் உணவை முடித்துக் கொண்டு கிளம்பினார் ரங்கநாதன்.

செல்லுமுன், கதவருகில் ஒதுங்கி நின்ற மகளைக் கண்டதும் அருகில் சென்று அவளது தலையை வருடி, ''என்னடா இங்கே ஓரமாய் நிற்கிறாய்? ஏதானும் வேண்டுமா? இதோ இதில் இரண்டாயிரம் ரூபாய் இருக்கிறது. சின்னகுட்டியும் நீயுமாகப் போய் ஆளுக்கு ஆயிரம் ரூபாய்க்கு ஏதாவது வாங்கிக் கொள்ளுங்கள்...'' என்று பணத்தைக் கொடுத்து விட்டுச் சென்றார் அவர்.

பிரபா ஓசையற்றுக் கண்ணீர் வடிக்கவும் பெரியம்மா அறியாமல் அவளை அறைக்குள் இழுத்துச் சென்று, ''ஏன்? இப்போது என்ன அழுகை? அதுதான் நான் போய் திரு... வந்து அந்தக் கடிதத்தை எடுத்து வருவதாகச் சொன்னேன் இல்லையா? அதற்கு மேல் என்ன வடிப்பு? பெரியம்மா பார்த்து என்ன என்று கேட்டால் என்ன பதில் சொல்வாய்? அத்தோடு நீ கண்ணீர் வடித்தால் அவர்களுக்கு வேதனையாய் இராதா?' என்று படபடத்தாள் திவ்யா.



''அதில்லை திவ்யா. ராத்திரி அவ்வளவு கலங்கி இருந்த வேளையில் நீ எடுத்து வருவதாகச் சொன்னதும் எல்லாம் சரியாகி விட்ட மாதிரி இருந்தது. இப்போது யோசித்துப் பார்த்தால் உன்னால் முடியுமோ, முடியாவிட்டால் என்ன ஆகும் என்று கவலையாக இருக்கிறது'' என்று தன் பயத்தைச் சொன்னாள் பிரபா.

திவ்யாவுக்கும் உள்ளூர அந்த அச்சம் லேசாக நெருடிக் கொண்டேதான் இருந்தது. ஆனால் தன்னை விட அதிகமாக அஞ்சுகிற ஒருத்தியைக் கண்டதும் அவளைப் பாதுகாக்கும் உணர்வு தலைதூக்க மகா வீரமாய் ''பைத்தியம், பைத்தியம். சாவி கையில் இருக்கிறது, ஆள் இருக்க மாட்டான். பச்சைக் குழந்தை கூட இதை இலகுவாகச் செய்து முடித்து விடும். வீரதீர சூரி என்னாலா முடியாது?'' என்று சண்டப் பிரசண்டம் பேச பிரபாவும் முகமலர்ந்தாள்.

பெரிய தாயாருக்கு உதவியாகச் செய்யக்கூடிய வேலைகளைச் செய்து விட்டு, கையோடு பெரியப்பா கொடுத்த பணத்தில் பிரபாவுக்கும் தனக்குமாக இரண்டு கோரா சில்க், சேலைகளுக்கு உரிய சட்டைத்துணி, ஃபால்ஸ், பாவாடைத் துணியோடு வாங்கி வந்து பெரியம்மாவிடம் காட்டி ரசித்து விட்டு, திலகம் மதிய ஓய்வெடுக்கச் சென்ற பின் பிரபாவிடம் இரவு வேலைக்காக ஒரு கேள்வி கேட்டாள். அதற்கு பிரபா அளித்த பதில் அவளுக்கு ஆத்திரத்தோடு அருவெருப்பையும் உண்டாக்கியது.

## 5

திலகத்தின் மனம் குளிரும் விதமாக டெயிலர் இரண்டு சட்டைகளையுமே தைத்து வைத்திருந்தார். அதைப் பெற்றுக்

கொண்டு வழக்கமாகத் துணி வாங்குகிற கடைக்குச் சென்று பார்த்த போது, அங்கேயும் அவள் விரும்பியவிதமாக கோரா சில்க்கில் மஸ்டார்ட் கலரில் இரண்டு சேலைகள் கிடைக்கவே திவ்யாவுக்கு மனதில் ஒருவிதத் தெம்பு.. ஒரு திடம் உண்டாயிற்று. இதைப் போலவே இரவு செய்யப் போகிற காரியமும் நிச்சயமாய் முழு வெற்றியாகத் தான் முடியும்!

மதியம் இரண்டு மணியானால் திலகத்துக்குக் கட்டாயமாய்ச் சற்று நேரம் உறங்கியாக வேண்டும். இல்லாவிட்டால் தலை நோவு வந்து பெரிதும் கஷ்டப்படுவாள். எனவே ஏதேனும் வேலை பாதியில் இருந்தால் கூட அப்படி அப்படியே எடுத்து வைத்து விட்டுப் படுக்கப் போய் விடுவாள்.

அந்தவேளையில் ஒன்றுவிட்ட சகோதரிகள் இருவரும் மீண்டும் கூடிப் பேசலாயினர்.

அமுதனின் வீடு இருக்கும் இடம், அங்கே செல்ல வேண்டிய வழிமுறைகள், எல்லாம் விவரித்தாள் பிரபா. ''பெரிய காம்பவுண்டு, திவ்யா. உள்ளே போனால் முதலில் ஒரு கட்டிடம். இதே மாதிரி நாலு ஃப்ளாட் தான். அடுத்த கட்டிடத்தில் உள்ளே போனால் வலது பக்கம் உள்ள ஃப்ளாட் அவனுடையது. அதனுள் செல்ல இந்தச் சாவி. உள்ளே போனால் ஹாலில் படம் வரைய வேண்டிய சாமான்கள், ஸ்டாண்ட், ஸ்கிரீன், பெயிண்ட், பிரஷ் என்று அங்கங்கே கிடக்கும். வரைந்தது, பாதி வரைந்தது என்று ஃப்ரேமில் மாட்டி இருக்கும். ஹாலில் மூன்று கதவுகள் தெரியும். இரண்டு படுக்கை அறை. இடது கோடியில் சமையல் அறை. வலது கோடி அறையில் தான் நான் சொன்ன பீரோ இருக்கும். அதைத் திறக்க இந்தச் சாவிக் கொத்தில் இந்த மூன்றையும் வைத்துக் கொள். மூன்றில் ஒன்றை வைத்துத்தான் முன்னால் திறந்தேன். எது என்று நிச்சயமாகத் தெரியாததால் மூன்றையுமே நீ கொண்டு செல்வது நல்லது. மேல்தட்டில் தான் முக்கியமான டாக்குமெண்ட்கள் எல்லாம் இருக்கும். அதில் தான் இந்தக் கடிதமும் இருக்கும் என்று நினைக்கிறேன்... அங்கே தான் இருந்தாக வேண்டும். ஏனென்றால் பூட்டி வைக்கிற மாதிரி அங்கே வேறு எதுவும் கிடையாது. கடிதத்தை எடுத்துக் கொண்டு பழையபடி பூட்டிக் கொண்டு வந்து விடு'' என்றாள் பிரபா.



நாள் முழுவதும் இதையே யோசித்துக் கொண்டு இருந்திருப்பாள் போல என்று நினைத்தாள் திவ்யா. இதை யோசிக்கத்தான் துணிக்கடைக்குக் கூட வர மறுத்திருக்கிறாள்... அல்லது வெளியே எங்கேனும் அந்த அமுதனைச் சந்திக்க நேர்ந்து விடுமோ என்ற பயத்தினாலும் இருக்கலாம்; பாவம்.

''எல்லாம் எளிதுதான். ஆனால் யாராவது இடையில் பாராமல், தடுத்து நிறுத்தாமல் இருக்க் வேண்டும்...''

''அந்தப் பயம் அவசியம் இல்லை, திவ்யா.. முன்னேயே சொன்னேனே, எல்லாம் ஒரு மாதிரி குடும்பத்து ஆட்கள். பத்து பத்தரைக்கே ஊர் அடங்கி விடும். நீ பதினொன்றுக்கு மேலே தானே போகப் போகிறாய்... ஆனால் அப்படியே யாராவது — தூக்கம் வராமல் விழித்துக் கிடந்த எவராவது பார்த்தால் கூடத் தடுத்து நிறுத்த மாட்டார்கள். ஏனென்றால் அமுதன் இடத்துக்குப் பெண்கள் அவ்வப்போது வந்து போவது சகஜம். அத்தோடு முன்னொரு தடவை இந்த மாதிரி யாரோ கேட்கப் போய், 'என் வீட்டில் யாரை வேண்டுமானாலும் வரவழைப்பேன், என்ன வேண்டுமானாலும் செய்வேன். உன் வீட்டில் வந்து உன் பெண்ணிடம் கை நீட்டினேன் என்றால் கேள்' என்று அமுதன் தரக் குறைவாய்ப் பேசிச் சண்டை போட்டார். அதன் பிறகு அவன் அறை விஷயமாய் யாரும் எதையும் கண்டு கொள்வதே கிடையாது'' என்று பிரபா விளக்கவும் தோளைக் குலுக்கினாள் திவ்யா.

''இப்படிப்பட்ட ஒருவனின் வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்க வேண்டியிருக்கிறதே என்று அருவெருப்பாய் இருந்தாலும், இப்போதைக்கு அமுதனின் இந்தத் தரக் குறைவான குணம் நமக்கு நன்மைதான் ....'' என்றவள் சட்டென ஒன்று தோன்ற, ''பிரபா, முக்கியமான விஷயம் நீ இன்னமும் சொல்ல வில்லையே... அந்த பீரோவில் உன் கடிதம் மட்டும் தானா கிடைக்கும்? நீ சொல்வதைப் பார்த்தால் இந்த மாதிரியே கூட அவன் இன்னும் எத்தனை பேரிடம் கடிதம் வாங்கி வைத்திருக்கிறானோ? உன் கடிதம் என்பதற்கு அடையாளம் ஏதாவது.. உன் கையெழுத்தை வைத்துக் கண்டுபிடிப்பது எல்லாம் எளிதாய் இராது; அதனால் ஏதாவது அடையாளம் சொல். என்ன மாதிரிப் பேப்பர்.. அதை விட எப்படித் தொடங்கி எப்படி முடித்தாய் என்று சொன்னாயானால் வசதியாக இருக்கும்'' என்றாள் திவ்யா.

முகம் கன்றிச் சிவக்க உதட்டைக் கடித்துக் கொண்டு மவுனமானாள் பிரபா.

சில கணங்கள் பொறுத்துப் பார்த்து விட்டு மீண்டும் கேட்டாள் திவ்யா. ''ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்த்து உன் கையெழுத்துத் தானா என்று அலசி ஆராய நேரம் நிறையத் தேவைப்படும், பிரபா. எல்லாக் கடிதங்களையும் ஒட்டுமொத்தமாக எடுத்து வருவதும் சரி அல்ல...''

''அது... அது... வந்து, காதல் தேவன் அமுதனுக்கு ஆ..ஆயிரம் கோடி முத்தங்களுடன் ஆசைக் காதலி.. என்று. திவ்யா, அது.. அப்போது இருந்த பைத்தியத்தில் சும்மா ஏதோ பெரிய காதல் காவியம் வரைகிற மாதிரி கிறுக்கித் தள்ளி விட்டேன்... பா'' என்றாள் பிரபா அவமானத்துடன்.

''அதற்கு இப்படியா?'' என்றாள் திவ்யா வெறுப்புடன். ''என்னதான் பைத்தியம் பிடித்திருந்தாலும் அதற்கும் ஓர் அளவு வேண்டாம்? தொடக்கமே இப்படி என்றால்



இன்னமும் இடையில் என்னென்ன பேத்தித் தொலைத்திருக்கிறாயோ...'' என்று சீற்றத்துடன் தொடங்கியவள் பிரபாவின் முகத்தைப் பார்த்ததும் தன்னை அடக்கிக் கொண்டாள்.

தானாகவே வருந்துகிறவளைத் திட்டுவது செத்த பாம்பை அடிப்பது போல. அத்தோடு இனித் திட்டுவதால் பயனும் இல்லையே.

''இந்தக் கடிதம் அந்த 'பிளாக் மெயிலர்' கையில் இருப்பது எவ்வளவு ஆபத்து என்பது இப்போது நன்றாகத் தெரிகிறது, பிரபா.

எனக்கு என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை என்று அந்தக் கடிதத்தைக் கைப்பற்ற முழு முயற்சி செய்வேன். கவலைப்படாதே'' என்று பிரபாவைத் தேற்றினாள்.

சும்மா ஒரு பெண் இரவு பத்து மணிக்கு மேல் வீட்டை விட்டு வெளியே செல்வது இயல்பாயிராது என்பதால் ஒரு சினேகிதியோடு சினிமாவுக்குப் போகப் போவதாகச் சொல்லி ஆறு மணிக்கே கிளம்பி விடுவது மேல் என்று முடிவு செய்தாள் திவ்யா.

இப்படிப் பெரியம்மாவிடம் பொய் சொன்னதே இல்லை என்று எண்ணியபடியே சினிமா விஷயம் தெரிவித்து விட்டு, ''அப்படியே பீச் வரை போய் அங்கே கொஞ்ச நேரம் இருந்து விட்டு வருவேன், பெரியம்மா. வர லேட்டாகும்'' என்று உரைத்தாள்.

எப்போதும் அப்படியா என்பதோடு விட்டு விடும் திலகம் என்றும் இல்லாதவிதமாய் முதல் முட்டுக்கட்டை போட்டாள். ''பவுர்ணமி தான் நேற்றே முடிந்து விட்டதே. இன்று எதற்கம்மா, கடற்கரை? உன் வெள்ளி முகடு, பளபளப்பு எல்லாம் நேற்று தானே?'' என்று கேட்கவும் திவ்யா சில கணங்கள் திணறிப் போனாள்.

''அது.. வந்து.. இன்று கூட நன்றாகத்தான் இருக்கும், பெரியம்மா. கடற்கரையில் சிலுசிலு காற்றில் அமர்ந்தபடி...''

''பார்க்க நன்றாய்த்தான் இருக்கும். ஆனால் அதற்காக இவ்வளவு நேரமா, கண்ணா? நேற்று நீ வந்து சேர மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகிவிட்டதே''

''வாட்! அதுவரை விழித்திருந்தீர்களா? எனக்காகக் காத்திருக்கக் கூடாது; கரெக்டாகப் பத்து மணிக்குத் தூங்கி விட வேண்டும் என்று நான் சொன்னது எல்லாம் மறந்து விட்டதா? விழித்திருந்ததால் தான் இன்று உங்களுக்கு அசதியாக இருந்ததா?''.

''அசதியும் இல்லை, ஒன்றும் இல்லை. நான் விழித்திருப்பது தெரிந்தால் வருத்தப்படுவாயே என்று சொல்வதில்லையே தவிர நீ வந்து சேரும் வரை என்னால் எப்படி நிம்மதியாகத் தூங்க முடியும்? நாடு இருக்கிற இருப்பில்...''

''யார் என்னை என்ன செய்ய முடியும்? பெரியம்மா, நான் ஒன்றும் இயற்கை அழகில் மெய் மறந்து அஜாக்கிரதையாக இருந்து விட மாட்டேன். இரவு காவல் போலீஸ் கண்ணில் படும்படி தான் உட்கார்ந்திருப்பேன். ஆசையாக இருந்தால் கூடக் கடலில் கால் நனைக்க என்று கூடக் கடல் பக்கம் போக மாட்டேன் தெரியுமா? எப்போதும் ஒரு கத்துக் கத்தினால் போலீஸ்காரருக்குக் கேட்கும் அளவு தூரத்தில் தான் இருப்பேன். காவல் இருக்கும் போலீஸ்காரர்களிடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டுத்தான், அவர்கள் முன்னிலையில் தான் ஆட்டோ பிடிப்பேன்.. இப்போதுதான் மனோரஞ்சன் கொண்டு வந்து விட்டு விடுகிறாரே.. பெரியம்மா, இன்று கூட அவருக்காகத்தான் பீச் வரை போகிறேன். ஆபீசுக்குப் போகவில்லையா, பார்த்துப் பேசவில்லையே என்றார். அதனால் தான் கொஞ்ச நேரம்



பீச்சில.. மற்றபடி நான் தப்பு தண்டா செய்ய மாட்டேன் என்று உங்களுக்குத் தெரியும் இல்லையா? அந்த நம்பிக்கை இல்லை என்றால் சொல்லி விடுங்கள். நான் எந்த இடத்துக்கும் போகவில்லை'' என்று உட்கார்ந்து விட்டாள்.

''என்னம்மா இது. உன்னிடம் எனக்கு நம்பிக்கை இல்லை என்றால் என்னிடமே நம்பிக்கை இல்லை என்பது போலத்தான். ஆனாலும் வெளியே போகிற பிள்ளைகள் நேரத்துக்கு வந்து சேரவில்லை என்றால் கவலை தான். உள்ளூர உதைப்புதான். நேரமாகும் என்றால் நீ சொல்லி விட்டுத்தான் போகிறாய். இல்லை என்று சொல்லவில்லை. ஆனாலும் அகாலம் ஆகி விட்டால் கொஞ்சம் உதறுகிறது... இப்போது உனக்குப் புரியாது சின்னக்குட்டி. பிற்பாடு உனக்கும் பிள்ளைகுட்டி என்று பிறந்த பிறகு புரிபடும் என்று நினைக்கிறேன்.

தாயின் பேச்சை இடைமறித்தாள் பிரபா. ''திவுக்குட்டிக்கானால் எல்லாம் தெரியும் என்று பெரிதாக அளப்பீர்கள், இப்போது உட்கார வைத்து உபதேசம் புரிகிறீர்களே? அங்கே தியேட்டரில் அவள் தோழி காத்துக் கொண்டு இருப்பாளே, மறந்து விட்டதா? அவளை முதலில் அனுப்பி வையுங்கள்..'' என்றாள் முடிந்த அளவு நிதானமான குரலில்.

''ஆச்சரியமாய் இருக்கிறதே! அவளை என்றால் எங்கே வேண்டுமானாலும் போக விடுவீர்கள், எனக்கு மட்டும் சிறை வாசமா என்பாய், நீயே இப்போது அனுப்பச் சொல்கிறாயே!'' என்று வியந்தாள் தாயார்.

முகம் வெளிறிவிட்டது பிரபாவுக்கு.

அவள் பேந்த விழிக்கையில், உதவிக்கு வந்து ''முன்னைவிடப் பிரபா எவ்வளவோ மாறி விட்டாளே, பெரியம்மா. நீங்கள் கவனிக்கவில்லை? கல்யாணம்

என்றதுமே பெரிய மனுசியாகி விட்டாளே. எதையும் அறிவுப்பூர்வமாக யோசிப்பதும், செயல்படுவதும்.. கிட்டத்தட்ட'' என்று கூறிக் குறும்பாகக் கண்ணடித்து, ''என்னைப் போல'' என்று சிரித்தாள் திவ்யா.

கூடச் சேர்ந்து சிரித்து விட்டு, ''சரியான வம்பியடி நீ. ஆனால் பிரபா சொன்னதும் சரிதான். சீக்கிரம் கிளம்பு'' என்று அனுமதி கொடுத்தாள் திலகம். ''பாவம், அந்தப் பெண் வேறு தியேட்டரில் காத்துக் கிடக்கப் போகிறாள்!''

''உன் சிபாரிசுக்கு நன்றி, பிரபா'' என்று அவள் கையைப் பற்றி அழுத்தி, நன்றி கூறுவது போலத் தைரியம் கொடுத்து விட்டுக் கிளம்பினாள் திவ்யா.

பொழுதைக் கழிப்பதற்காக, மெய்யாகவே ஒரு சினிமாவில் போய் உட்கார்ந்து திட்டத்தில் எங்கேனும் ஓட்டை இருக்கிறதா என்று யோசித்தாள்.

பிரபா சொன்னதெல்லாம் உண்மைதான் என்றால் அந்தப் பகுதியில் ஓட்டை இருக்க வழியில்லை.

இந்தப் பக்கம்.. மனோரஞ்சன் ஏதேனும் ஆபீஸ் வரவில்லையே, பார்க்க வந்தேன் என்று வீட்டுக்கு வந்து நின்று விடக் கூடாதே என்று அவளிடமும் தோழியோடு சினிமா போகிற கதையைச் சொல்லி, வந்து விட வேண்டாம் என்று தடுத்தாயிற்று. அப்புறம்.. வீட்டில் அவன் முன்னிலையில் பீச் விஷயம் பேச்சில் வராமல் பார்த்துக் கொண்டால் விஷயம் முடிந்தது.

மெய்யாகவே அப்படித்தான் திவ்யா நம்பினாள்.

பத்தரைக்கு அடங்கி விடுகிறவர்களுக்கு நன்றாக முடங்கிக் கொள்ள மேலும் அரைமணி நேரம் அவகாசம் கொடுத்து, அவர்களை எழுப்பி விடாமல் சற்றுத் தொலைவிலேயே ஆட்டோவை நிறுத்தி இறங்கிச் சென்ற



போது அந்த அமுதன் வாழ்பகுதி அப்படி ஒன்றும் அடியோடு முடங்கி விடவில்லை.

பிரபா சொன்ன பெரிய கேட்டில் ஒரு வாட்ச்மேன் நிற்க, அவனோடு யாரோ ஒரு மனிதன் பேசிக் கொண்டிருந்தான்.

நின்று தயங்குவதை விட நேராக உள்ளே செல்வது நல்லது என்று எதிர்பார்த்த திவ்யா மீண்டும் திகைத்தாள்.

காம்பவுண்டு தாண்டி உள்ளே போனால் இரண்டாவது கட்டிடம் என்றாள் பிரபா. உள்ளே இருபுறமும் அதேபோலக் கட்டிடங்கள் வரிசையாக இருந்தன. இதில் எந்தப் பக்கம் உள்ள கட்டிடம் அந்த அமுதன் உடமை?

வலதுபக்கம் உள்ள ஃப்ளாட் என்றாளே, கட்டிடமும் வலப்புறமே இருக்கலாம் என்று எண்ணிச் சென்றாள். இரண்டாவது கட்டிடத்தில் வலப்புறம் இருந்த ஃப்ளாட்டை அணுகினால் அதனுள் யாரோ பெரியவர் மகனை அர்ச்சித்துக் கொண்டிருந்தார். அவர் படிக்கும் போது குறைந்தது பனிரண்டு மணி வரை படிப்பாராம். இந்தத் தறுதலை பதினோரு மணிக்கே புத்தகத்தை மூடி விட்டதாம்.

ஓசைப்படாமல் திரும்பி வந்து பார்த்தவள் குழம்பினாள். நாலுவரிசையில் கட்டடங்கள் கட்டப்பட்டிருந்தன. இவற்றில் எந்த வரிசையின் இரண்டாவது கட்டிடம்? ஏனெனில் அடுத்த இரண்டு வரிசையின் முன்பும் கேட் ஒன்று இருந்தது. சொல்லுவதை இந்தப் பிரபா ஒழுங்காகச் சொல்லியிருக்கக் கூடாதா? அல்லது பொதுவாகப் புழங்கும் வழி இந்த இரண்டில் ஒன்று மட்டும் தானா?

ஒவ்வொரு கட்டிடமாக அவள் சென்று திரும்புவதை யாராவது கவனித்தால் தப்பாகிப் போகும் என்று உணர்ந்து நேராக வாட்ச்மேனிடம் சென்றாள் திவ்யா.

''இங்கே அமுதன் என்று ஓர் ஓவியர். அவர் வீடு எது?''

கேள்வியைக் கேட்குமுன் மனம், உடம்பு இரண்டையுமே பெரிதும் திடப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது அவளுக்கு.

இந்த நள்ளிரவு நேரத்தில் தனியனாக வசிக்கும் 'ஒரு மாதிரி'ப்பட்ட ஒருவனின் வீடு தேடி வருகிற பெண்களைப் பற்றி அவனும் அவனோடு பேசிக் கொண்டு இருந்தவனும் என்ன அனுமானிக்கக் கூடும் என்பது அவளுக்குத் தெரிந்துதான் இருந்தது. ஆனால் யாரோ முன்பின் அறியாத இருவரின் மதிப்பீடுகளில் அசிங்கப்பட்டுத் திரும்பிச் சென்று விடுகிற நிலையில் அவள் இல்லையே!

எதிர்பார்த்தது போலவே காவலாளியின் முகம் மாறியது. "அவர் வரப் பனிரண்டு மணியாகுமே" என்றான் பதிலாக.

இந்த விவரம் யார் கேட்டார்கள் என்று உள்ளூரக் கடுத்தாள் திவ்யா. இது தெரியும் என்று காட்டிக் கொள்வதும் தவறு. சற்று யோசித்து, "இன்று சீக்கிரம் வருவதாகச் சொன்னாரே. எதற்கும் இருக்கட்டும் என்று வீட்டுச் சாவி கூடத் தந்தாரே" என்று இயல்பான குரலில் கூற அவள் பாடுபட வேண்டியிருந்தது.

"ஓகோ!" என்று, அந்த "ஓகோ"வில் தன் எண்ணத்தைக் காட்டி விட்டு, "அவரோட வீடு அந்த 'பிளாக்'கில்.. அந்த கேட்லேருந்து நேராப் போனா இரண்டாவது.. சார், உங்க வீட்டுக்கு எதிர்வீடு தான். கொஞ்சம் கூட்டிப் போய் விட்டு விடுங்களேன்..." என்று சிகரட்டைப் புகைத்தபடி அருகே நின்ற உயரமான மனிதனை வேண்டினான் காவல்காரன்.

பின் தொடருமாறு கையால் சைகை காட்டி விட்டு, வாட்ச்மேனிடம் ஒரு தலையசைப்பில் விடைபெற்று நடந்தான் அவன்.



நான் என்ன வேலைக்காரியா இந்த ஒற்றை விரல் அசைவில் பின்னே ஓடுவதற்கு என்று எகிறக் கூடியவள் தான். ஆனால் அடுத்து செய்ய வேண்டிய பணி. வீடு புகுந்து திருட வேண்டிய நேரம் இதோ என்று நெருங்கி விட்ட கலக்கத்தில் அதைக் கவனியாமல் அவனைப் பின்தொடர்ந்தாள்.

அவனது நீளக் கால்களுக்கு இயல்பான பெரிய எட்டுகள், அவளுக்காக என்று அவன் தன் வேகத்தைக் குறைத்துக் கொள்ளாததால் அவள் ஓட்டமும் நடையுமாகத் தான் செல்ல வேண்டியிருந்தது.

அவள் வருகிறாளா என்று அவன் திரும்பிப் பார்க்கவும் இல்லை. வந்தாலும் வராவிட்டாலும் உன் பாடு என்பது போல ஓர் அலட்சிய நடையுடன் சென்றவன் முன் போர்டிகோ தாண்டி, சிறு நடைபாதையைத் தாண்டியதும், வலப்புறமாய்க் கை காட்டி விட்டுத் தன் வீட்டுப்பக்கம் ஒதுங்கினான்.

"தாங்க்ஸ்" என்று முகத்தைப் பாராமலே முணுமுணுத்து விட்டுக் கைப்பையைத் திறந்து சாவியை எடுத்தவள், சாவித் துவாரத்தில் சாவியை நுழைக்க முடியாமல் கை உதறவும் ஒரு தரம் சாவியைக் கீழே போட்டு மீண்டும் எடுத்துச் சிரமத்துடன் சரியாகப் பொருத்தினாள்.

அப்போது, "இன்றைக்குக் கடற்கரையில் யாரும் கிடைக்கவில்லையா?" என்று ஒரு குரல் ஒலிக்கவும் பதைத்துப் போய்த் திரும்பிப் பார்த்தாள்.

## 6

அவன் தான்.

அவளுக்கு வழிகாட்டி வந்த எதிர்வீட்டுக்காரன் தான்..

அவன் வீட்டுக்குள் போகாமல் அவளையா வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தான்?

அவளது தடுமாற்றத்தில் எதையேனும் ஊகித்து விட்டானா? கடிதத்தை எடுத்துப் போக முடியாமல் ஏதேனும் செய்து விடுவானா?

பதட்டத்துடன் யோசிக்கும் போது அவன் ஏதோ பேசியது நினைவு வந்தது. ஏதோ கடற்கரையில் ஆள்...

அவனது பேச்சின் பொருள் உறைக்கவும் ஆத்திரத்துடன் நிமிர்ந்து, "என்ன உளறுகிறீர்கள்?" என்று கோபமாகக் கேட்டாள்.

"உண்மை உளறலாகப் படுகிறதா? அல்லது உளறல் என்று அலறி விட்டால் உண்மை ஒன்றுமில்லாமல் ஆகி விடுமா?" என்றான் அவன் ஏளனமாக.

அதே குரலில், "உங்கள் உண்மை என்னவென்று நீங்கள் சொல்லாததாலும், அதை உங்கள் மனதிற்குள் புகுந்து தேடிக் கண்டு கொள்ளும் ஆற்றல் எனக்கு இல்லாததாலும் இன்னமும் உங்கள் பேச்சு உளறலாகத்தான் எனக்குப் படுகிறது" என்று திருப்பினாள் திவ்யா.

"என்றாகிலும் ஒருநாள் என்றால் மனதில் நிற்கும். அன்றாடம் நடப்பது பெரிதாகத் தெரியாதது இயல்புதான்" என்று மீண்டும் குத்தலாகவே பேசியவன் நிமிர்ந்து, நேற்று இரவு நானும் கடற்கரைக்கு வந்திருந்தேன். உன்னை அங்கே ஒருவனோடு பார்த்தேன் நள்ளிரவில்.. என்றான் கடுமையான குரலில்.

"ஓ!" என்று திகைத்தாள் அவள். உடனேயே நிமிர்ந்து, "அவர் என்னைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்" என்று அறிவித்தாள்.

"ஓகோ" என்றான் அவன் முன்னிலும் அதிகமான எகத்தாளத்துடன் "அவன் திருமணம் செய்து கொள்ளப் போகிறவன் என்றால் இவன்?" என்றான் ஒரு கோணல் சிரிப்புடன்.



"இவன்" என்று வேகத்துடன் தொடங்கிய திவ்யா மேலே பேச மாட்டாமல் வாயடைத்து நின்றாள். இவனைப் பற்றி என்ன விளக்கம் கொடுக்க முடியும்? உண்மையைச் சொல்வது என்றால் திருட வந்ததையும் ஒப்புக் கொண்டாக வேண்டுமே!

சற்றுத் திணறியவள் கோபத்திடம் சரண் புகுந்து, "இது என் சொந்த விஷயம். இதைப் பற்றி உங்களுக்கு என்ன?" என்று சினம் காட்டி நழுவினாள்.

பெரிதாகத் தோளைக் குலுக்கினான் எதிர் வீட்டுக்காரன். "எனக்கென்ன, ஒன்றுமே இல்லை. ஆனால் பா... வம் அந்த மணக்கப் போகிற அடிமடையன்" என்றவன் அவளது பதிலுக்குக் காத்திராமல் தன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று விட்டான்.

சற்று நேரம் மூச்சு விடக் கூட முடியாமல் திண்டாடினாள் திவ்யா.

என்ன அநியாயம்! என்ன மாதிரி அர்த்தத்தில் பேசி விட்டான் அவன்! இருந்திருந்து அவளைப் போய் இவ்வளவு மட்டமாக ஒருவர் எடை போடுவதா?

யாரோ ஒருவன். முகம் அறியாத அன்னியன். அவன் என்ன நினைத்தால் அவளுக்கென்ன வந்தது?

பலவாறு எண்ணித் தன்னைச் சமனப்படுத்திக் கொள்ளச் சற்று நேரம் ஆயிற்று. பொன்னான பல நிமிடங்கள்!

ஒருவழியாக கதவைத் திறந்து உள்ளே சென்று, கதவை உட்புறமாக மீண்டும் பூட்டிச் சாவியை எடுத்துப் பத்திரமாகப் பைக்குள் வைத்துக் கொண்டாள். அவளது பிரபாவின் கெட்ட நேரமாய் இருந்து, யாராவது திருடன் திறந்து கிடக்கும்

கதவென்று உள்ளே புகுந்து விட்டால் பேராபத்தாகி விடுமே! என்னதான் கேட்டில் காவலுக்கு ஆள் இருந்தாலும் பக்கவாட்டில் காம்பவுண்டுச் சுவர் ஏறித் திருடனால் வர முடியாதா, என்ன?

அடுத்து விளக்கைப் போடுவதா இல்லையா என்று ஒரு குழப்பம் வந்தது.

முன்னே பின்னே செத்திருந்தால் அல்லவா சுடுகாடு தெரியும்? திருடர்கள் என்ன செய்யக் கூடும் என்று யோசித்துப் பார்த்தாள். சில திரைப்படங்களில் சின்ன 'டார்ச்'சை ரகசியத் தேடலுக்குப் பயன்படுத்துவதைக் கண்டிருந்தாள். அவளது கைப்பையில் ஒரு சிறு பென்சில் 'டார்ச்' கூட உண்டுதான்.

ஆனால் அதைப் பயன்படுத்துவதில் தொல்லைகள் இருந்தன. முதலாவதாக, உரிமைஉள்ளவள் போலச் சாவி கொண்டு கதவைத் திறந்து உள்ளே சென்றவள் விளக்கைப் போடாமல் என்ன செய்கிறாள் என்று எதிர்வீட்டுக்காரனுக்குச் சந்தேகம் வந்தால் ஆபத்து. சும்மாவே இவ்வளவு பேசுகிறவன் ஊர் கூட்டி விடலாம்.

அடுத்து, அந்தச் சின்ன பென்சில் டார்ச் ஒளியில் தடுமாற அவளுக்கும் பயமாக இருந்தது. எங்கேயாவது கால், கை தட்டி விழுந்து எக்கச்சக்கமாக அடிபட்டு விட்டால் அது பேராபத்தாகி விடும்.

எனவே துணிந்து விளக்கு ஸ்விட்சைத் தேடிப் போட்டாள். வெளிச்சம் வந்ததும் கொஞ்சம் தைரியமும் வந்தது.

சுற்றுமுற்றும் பார்க்கையில் விளக்கைப் போட்டது நல்லதே என்று உணர்ந்தாள்.



ஹாலைத்தான் அமுதன் படம் வரையும் ஸ்டுடியோவாகப் பயன்படுத்துவான் போலும். பெயின்ட், ப்ரேம், ஸ்டான்ட், சின்ன மோடா, நாற்காலி எல்லாம் கண்ட கண்ட இடத்தில் கண்டபடி கிடந்தன. வேண்டாத தட்டுமுட்டுச் சாமான்களைப் போட்டு வைத்திருக்கும் இடம் போலப் பொருட்களை ஒழுங்கற்று வாரி இறைத்திருந்தான் அமுதன். முழு வெளிச்சம் இல்லை என்றால் திவ்யா பத்துமுறை தடுக்கி விழுந்திருப்பாள். தூசி, சிகரெட் துண்டுகள், கழுவாத காபி கப்புகள்.. பிரபா சொன்னதை விடப் பத்துமடங்கு மோசம். இந்த மாதிரி இடத்துக்கு அவள் எப்படித்தான் வந்து போனாளோ!

மனதுக்குள் அருவருத்தபடி, வலது கோடியில் இருந்த படுக்கை அறைக் கதவைத் திறந்தாள் திவ்யா.

அங்கும் சிகரட் துண்டுகளும், லேசான புகை வாசனையும் இருந்த போதும் ஹாலுக்கு இந்த அறை எவ்வளவோ மேல் என்று நினைத்தாள் திவ்யா.

ஹாலைப் போலவே விளக்கைப் போடப் போனவள் சற்றே யோசித்து, முதலில் சன்னல் திரைகளை இழுத்து விட்டு விட்டுப் பிறகு ஸ்விட்சைப் போட்டாள்.

பீரோ மூன்றாவது சாவியில் தான் திறந்தது.

அவசரமாக, மேல்தட்டுக் காகிதங்களைப் பார்வை இட்டாள். ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்க்கப் பார்க்க, அவற்றில் பிரபாவின் கடிதம் இல்லை என்று காணக் காண திவ்யாவின் கலக்கம் ஏறிக் கொண்டே வந்தது. அந்தக் கடிதம் இங்கே இல்லை என்றால் என்ன செய்வது? பிரபா சர்வ நிச்சயமாகச் சொன்னாளே?

ஓடிச் சென்று மற்ற அறைகளை அவசரமாகப் பார்வை இட்ட போது அவள் சொன்னது போலவே பூட்டித் திறக்க என்று அங்கே எதுவும் தென்படவில்லை தான்.

கடிதம் அந்த வீட்டில் இருப்பதானால் அந்த பீரோவில் தான் இருக்கக் கூடும் என்ற முடிவுக்கு வந்து மீண்டும் பீரோவை ஆராய்ந்தாள் திவ்யா. ஊகம். இந்தக் காகிதங்களில் இல்லை. பின்னே?

பிரபாவின் 'கடிதத்தைக் கொண்டு பணம் பண்ணலாம் என்ற ஐடியா வந்ததும் அதைத் தனியே எடுத்து வைத்திருக்கக் கூடும் என்று தோன்றவே பீரோவின் மற்ற தட்டுகளிலும் தேடத் தொடங்கினாள். அவள் ஊகம் சரியே என்பது போல, பணத்தை அல்லது முக்கியமானவற்றைப் பீரோவில் சேலைக்கடியில் வைப்பது போல பீரோவின் உள்ளே திணிக்கப்பட்டிருந்த சலவைச் சட்டைகளுக்கு அடியில் அந்தக் கடிதம் கிடைத்தது.

அவசரமாகப் பிரித்து, தலைப்பில் 'காதல் தேவ'னையும் அடியில் 'ஆசைக் காதலி'யையும் பிரபாவின் கையெழுத்தில் பார்த்து அப்பாடா என்று மூச்சு விட்ட போது, "யாரடி நீ? என் வீட்டில் திருட வர உனக்கு எவ்வளவு தைரியம்" என்ற குரல் அவளைத் துள்ளிக் குதிக்க வைத்தது.

பதறித் திரும்பினால் அங்கே குறுந்தாடியும், கழுத்தோரம் பூவேலை செய்த சந்தன வண்ண குர்த்தா, அதே கலர் பைஜாமாவில் - சரியான கலைஞன் தோற்றத்தில் அந்த அமுதன் - அவனாகத்தான் இருக்க வேண்டும். என் வீடு என்றானே. நின்று கொண்டிருந்தான்.

மனம் போன போக்கில் வாழ்ந்ததன் அறிகுறியாக உடம்பில் அங்கங்கே சதை சரிந்திருந்தது. கண் சிவந்து இமை தடித்திருந்தது. குடியும் காரணமாக இருக்க வேண்டும்.

இவனிடம் பேசினால் பயன் இருக்குமா? வேறு வழி இருப்பதாகவும் தெரியவில்லையே!

முடிந்த அளவு அமைதியாகக் காட்டிக் கொண்டு,



"மிஸ்டர் அமுதன்", என்று அழைத்தபடி அவள் ஓர் எட்டு முன்னே எடுத்து வைத்த போது அவன் கிரீச்சிட்டான். 'அசையாதே, அப்படியே நில். ஓர் அடி முன்னே எடுத்து வைத்தால் குத்தி விடுவேன்" என்று அவன் கத்திய பிறகு தான் அவன் கையில் இருந்த கத்தியைத் திவ்யா கவனித்தாள்.

பழம் வெட்டும் கத்தி. சமையல் அறையில் தேடிய போது அதைப் பார்த்த நினைவு வந்தது அவளுக்கு.

அப்படியானால் இந்த அமுதன் வெளிக் கதவைத் திறந்து, உள்ளே வந்து, அவளைக் கண்டு, சமையல் அறைக்குப் போய் கத்தியை எடுத்து வரும் வரை அவன் வந்ததையே அறியாமல் இவள் கடிதத்தைத் தேடி எடுத்துப் படித்துக் கொண்டு இருந்திருக்கிறாள்!

திருடத்தான் வந்தாளே, கதவில் ஒரு கண் இருக்க வேண்டாமா? மற்ற அரவங்களைக் கவனிக்கக் காது கூர்மையாக இருக்க வேண்டாமா? ஒன்றும் கவனியாமல்... இதுதான் பரம்பரைத் திருடர்களுக்கும் புதுத் திருடனுக்கும் உள்ள வித்தியாசம் போலும்!

எந்தவிதத் தடங்கலும் வராது என்று பிரபா கூறியிருந்த போதும் யாராவது சந்தேகப்பட்டால், குறுக்கே வந்தால் என்னென்ன செய்ய வேண்டும் என்று யோசித்து வைத்திருந்த திவ்யா அமுதனே வந்து சேரக்கூடும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. அதிலும் அவன் கத்தியோடல்லவா வந்து நிற்கிறான்!

இவன் ஏன் இவ்வளவு சீக்கிரம் வந்து தொலைந்தான் என்று கையைத் திருப்பிப் பார்த்தாள். பதினொன்று ஐம்பத்தைந்து. அவன் கொஞ்சம் சீக்கிரம் தான் திரும்பியிருந்தான். ஆனால் ஐந்து நிமிடங்கள், பொன்னான ஐந்தே நிமிடங்கள்! பிரபா சரியாக விளக்கிச் சொல்லாததால் தப்பான வீடு வரை சென்று அவள் திரும்பி வரும் வரை

செலவான ஐந்து நிமிடங்கள்! வழிகாட்ட வந்தவனோடு வாதாடி, அதன்பின் தன்னை அமைதிப்படுத்திக் கொள்ளவென்று அவள் வீணாக்கிய சில நிமிடங்கள்! முதலிலேயே பீரோவை நன்றாகத் தேடாமல், மற்ற அறைகளில் தேடிக் கழித்த பயனற்ற நிமிடங்கள்! இவற்றில் எந்த ஓர் ஐந்து நிமிடங்கள் கிடைத்திருந்தாலும் கடிதத்தோடு அவள் பறந்திருப்பாளே!இப்போது..

அவள் மணிக்கட்டைப் பார்த்ததைக் கவனித்த அமுதன், "என்னாடி பொண்ணு, அடுத்த இடம் திருடப் போக வேண்டிய நேரம் ஆகி விட்டதா? பாவம்!" என்றான் ஏளனமாக. "முதலில என் வீட்டில் நீ என்ன திருடி இருக்கிறாய் என்று பார்க்கலாம். உன் கைப்பையை மெல்லக் கட்டிலில் வை.. ஜாக்கிரதை. பையை வேகமாக வீசிக் கத்தியைத் தட்டி விட்டு விடலாம் என்று சினிமாத்தனமாக முயற்சி செய்யாதே. நான் கவனமாகத்தான் இருப்பேன். ம்.. சீக்கிரம்"

திவ்யா தயங்கினாள். இந்தப் பையினுள் இருக்கும் கத்திகளை அல்லவா அவள் தன் பெரும் துணையாக நம்பியிருந்தாள். 'சாம்ச'னின் தாடி மாதிரி இந்தக் கத்திகளை இழந்தால் அவளுக்குப் பலம் ஏது? "நான் உங்கள் வீட்டில் பணம் திருட வரவில்லை, மிஸ்டர் அமுதன்?" என்று அவள் கூறியதை அவன் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

மரியாதையாகக் கைப்பையைக் கட்டிலில் வைக்கிறாயா அல்லது சத்தம் போட்டு ஊரைக் கூட்டி உன்னைப் போலீசில் ஒப்படைக்கட்டுமா?"

வேறு வழியில்லாமல் பையைக் கட்டிலில் வைத்தாள் திவ்யா. "இன்னும் கொஞ்சம் உள்ளே தள்ளி.." என்று அவன் புறமாக நகர்த்தி வைக்கச் சொன்ன போது அவள் அதையும் செய்ய வேண்டியிருந்தது.



ஆனால் அப்போது அவள் கையிலிருந்த காகிதத்தைக் கண்டு, "அதென்னது பேப்பர்? கொடு" என்று வலது கையில் கத்தியைத் தயாராக வைத்துக் கொண்டு இடது கையை நீட்டினான் அவன்.

அதை அப்படியே வாயில் போட்டு மென்று விழுங்கி விடலாமா என்று ஒரு கணம் யோசித்தாள் திவ்யா. ஆனால் அதனால் அவனது ஆத்திரம் அதிகமாகி அவன் ஊர் கூட்டி விட்டால்? எப்படியாவது இவனிடம் நல்லதனமாகப் பேசிக் கடிதத்தை வாங்குவது தான் சரி.

அமுதனை நிமிர்ந்து நோக்கி, உதட்டால் முறுவலித்து, "இது.. இது பிரபாவின் கடிதம், மிஸ்டர் அமுதன். நான்.. நான் அதற்காகத் தான் வந்தேன்" என்றாள்.

"நீ... அவள் சொல்வாளே யாரோ சித்தப்பா மகள், கெட்டிக்காரி என்று.. அவளா?"

"ஆ...மாம், மிஸ்டர் அமுதன், இதுபற்றி நான் உங்களிடம் சற்றுப் பேச வேண்டும்"

"ம்ம்..." என்று அவளையே ஏற இறங்கப் பார்த்தான் அமுதன். முதலில் அந்தக் கடிதத்தை எடுத்த இடத்தில் வைத்து பீரோவை மூடு. பிறகு உன் கெட்டிக்காரத்தனத்தைப் பார்க்கலாம்"

பேசுவதற்குத் தயாராக இருப்பது போலத்தான் இருக்கிறான். இவன் மனம் கோணாமல் நடந்து இதமாகப் பேசிக் கடிதத்தைப் பெற வேண்டும் என்று எண்ணியபடி, அவன் சொன்னபடி கடிதத்தை மீண்டும் பழைய இடத்தில் வைத்து மூடினாள்.

"பரவாயில்லையே.. கெட்டிக்காரியாகத் தான் தோன்றுகிறாய். இப்போது கொஞ்சம் இந்தப் பக்கம் வருகிறாயா? பேசலாம்.."

அவள் இரண்டெட்டு முன்னே வந்து நிற்கவும், ''கடிதத்திற்கு வந்தேன் என்றாயே, பணம் கொண்டு வந்திருக்கிறாயா? இரண்டு லட்சம்'' என்று கேட்டான் அமுதன்.

''அதுபற்றித்தான் பேச வேண்டும், மிஸ்டர் அமுதன். பாருங்கள், பிரபா காட்டிக் கொண்ட மாதிரி நாங்கள் பணக்காரர்கள் அல்ல. கொஞ்சம் வசதியுள்ள நடுத்தரக் குடும்பம் தான். அதனால்..''

''பணம் கொண்டு வந்தாயா இல்லையா?''

''இ..ல்லை. ஆனால்..''

''பின்னே அதைப் பற்றி மறந்து விட்டு வேறு ஒரு பேரம் பேசலாம். இப்போது வாட்ச்மேனை அழைத்து உன்னைப் போலீசில் ஒப்படைக்கட்டுமா அல்லது மிச்சமிருக்கும் இரவை என்னோடு சந்தோஷமாகக் கழித்து விட்டு ஓசைப்படாமல் வீடு போய்ச் சேர்கிறாயா? எது வசதி?'' என்றான் விழிகள் பளபளக்க அமுதன்.

தலை சுழலப் பேந்த விழித்தாள் திவ்யா.

## 7

சில கணங்கள் அமுதனின் வார்த்தைகளைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாதது போலச் செயலற்று நின்றாள் திவ்யா.

இது எப்படி சாத்தியம்? அவளுடைய ஒன்று விட்ட சகோதரியிடம் காதல் நாடகம் ஆடியவன். இன்று முதல் தடவையாகப் பார்க்கிற பெண்ணிடம் என்ன பேச்சு பேசுகிறான்!



இவன் மனிதனா அல்லது மிருகமா? மிருகமே தான். எந்தப் பெட்டையைப் பார்த்தாலும் ஓடுகிற நாய்ப் பிறவி.

அருவருப்புடன் நோக்கிய போதுதான் அவன் கையில் கத்தி பளபளப்பதையும், எந்தவித ஆயுதமுமற்று சகாயமற்ற நிலையில் தான் நிற்பதும் அவளுக்குப் புரிந்தது.

கடவுளே! இப்போது என்ன செய்வது?

பெரியம்மா பயப்பட்ட போது பைத்தியக்காரத்தனம் என்று நினைத்தாளே! இப்போது பார்த்தால் அவளல்லவா பெரியன்னையை விடப் பெரிய பைத்தியக்காரியாக இருந்திருக்கிறாள்!

இத்தனை நாள் எந்தவித ஆபத்தும் இல்லாமல் கடந்தது தன் சொந்தக் கெட்டிக் காரத்தனத்தினால் மட்டும் என்று புத்தியின்றி எண்ணி வந்த முட்டாளாய்.. மடச்சியாய்...

ஆனால் கழிவிரக்கம் இப்போது கை கொடுக்கப் போவதில்லை. முகத்தில் கோபம் காட்டி, ''என்ன உளறுகிறீர்கள்?'' என்று அதட்டினாள் திவ்யா.

'உளறுவதா? நானா? குடித்திருப்பதை வைத்துச் சொல்லுகிறாயா? குடித்தால் நான் ஸ்டெடி.. உனக்கு மீந்திருக்கும் வழி ஒன்றுதான். அனாவசியமாக ஏன் போலீசில் போய் மாட்டிக் கொள்ளப் போகிறாய்? அங்கே உன்னைச் சாறு பிழிந்து விடுவார்கள். அதைவிட, இங்கே பார். நல்ல இலவம் பஞ்சு மெத்தை. நல்லபடியாக நடந்து கொண்டாயானால் கடிதத்தின் ரேட்டைக் கூடக் குறைத்தாலும் குறைப்பேன்.. என்ன?'' என்று அவளை நெருங்கினான் அமுதன்.

சினம் மிஞ்சிவிட, ''என்னடா, என்னை யாரென்று நினைத்தாய்?'' என்று கட்டிலில் கிடந்த கைப்பையை எடுக்கப் பாய்ந்தாள் திவ்யா.

அவனும் எடுப்பதற்காகத் தாவினான்.

கைப்பையைத் திவ்யா எட்டுமுன் அமுதன் இடையில் புகுந்து விட்டான் என்றாலும் அவன் கையில் இருந்த கத்தியும்

எங்கோ பறந்து போய்ச் சுவரில் 'ஙங்'கென்ற சத்தத்துடன் கீழே விழுந்தது.

ஆனால் திவ்யாவை அவன் பற்றி விட்டான்.

அவனிடமிருந்து விடுபட எவ்வளவோ போராடினாள் திவ்யா. வெளிப்படையாக உதவி கோரிக் கத்தி ஊர் கூட்டவும் அவளால் முடியவில்லை. எப்படியாவது சத்தமின்றியே போராடி இவனிடமிருந்து தப்பிப் போய் விட வேண்டும். ஆனால் கடிதம்? இல்லை. இப்போது அதைப் பற்றி எண்ணுவதற்கில்லை. அதை விடப் பெரிய விஷயம் ஆபத்தில் இருக்கிறது.

கண்களின் சிவப்பும், மூச்சுக் காற்றின் நாற்றமும் அமுதன் நன்றாகக் குடித்திருப்பதைக் காட்டின. ஆனால் குடிகாரனுக்கு யானைப்பலம் என்பது போலச் சிலருக்குக் குடி பெரும் பலம் தருமாமே. அவன் அந்த வகையாய் இருந்தான்.

சரி.. இனி மான அவமானம் பார்த்துப் பயன் இல்லை. உதவி கோரிக் கத்த வேண்டியது தான் என்று திவ்யா முடிவெடுத்த சமயம் திடுமென அமுதனின் பிடி தளர்ந்தது. ஒரு கணம் தள்ளாடியவன் மறுகணம் திவ்யாவின் காலடியில் நினைவிழந்து விழுந்தான்!

அமுதனின் பின்னே நின்ற நெடியவனைப் பிரமிப்புடன் பார்த்தாள் திவ்யா.. எதிர் வீட்டுக்காரன்!

கல்லாய் இருந்தது அவன் முகம்.

''நீங்கள்.. நீங்கள் எப்படி உள்ளே வந்தீர்கள்...?'' என்றாள் அவள் திகைப்புடனேயே.

''உள்ளே விளக்கு எரியக் கண்டதும் அவசியப்பட்டால் வெளி உதவி வர வசதியாகக் கதவை அமுதன் தாளிடாமல் இருந்தார் என்று நினைக்கிறேன்'' என்றான் அவன் உணர்ச்சியற்ற குலில். ''ஆனால் அதைப் பற்றிப் பேசிக் கொண்டு நிற்பதை விட நீ உடனே கிளம்புவது மேல் என்று நினைக்கிறேன்''



''இதோ'' என்று கைப்பைக்காகத் திரும்பியவள் சட்டென ஞாபகம் வர, நின்று ''வந்து.. ரொம்பத் தாங்க்ஸ்'' என்றாள் சிறு குரலில்.

''ச்சு'' என்று தலையசைத்தவன் ''ஆனால்.. பிரியம் இல்லாதவள் முதலில் ஏன் வரவேண்டும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை'' என்றான் குரலில் வெறுப்புடனேயே.

கீழே கிடந்த அமுதனை மிதித்து விடாமல் கவனத்துடன் சென்று கைப்பையை எடுத்த திவ்யா, அவன் பேச்சினால் ஏன் வந்தோம் என்பது நினைவு வர, பீரோவை அணுகி அதைத் திறக்க முற்பட்டாள்.

''ஊகூம்.. நிறுத்து'' என்றான் எதிர்வீட்டுக்காரன். ''உன்னிடம் தவறாக நடக்க முயன்றான் என்பதால் அடித்து வீழ்த்தினேன். அவ்வளவுதான். ஆனால் அதற்காக அவனது உடைமைகளை எடுத்துச் செல்ல அனுமதிப்பேன் என்று எதிர்பார்க்க வேண்டாம்'' என்றான் கண்டிப்புடன்.

''அவருடைய பொருள் எதையும் நான் திருடப் போவதில்லை, மிஸ்டர்.. மிஸ்டர்..'' என்று அவள் தடுமாற, 'சதானந்தன்' என்றான் அவன்.

''மிஸ்டர் சதானந்தன். இந்த பீரோவில் ஒரு கடிதம்.. என்.. என்னைச் சேர்ந்தது இருக்கிறது. அதைத்தான்.. அது இல்லாமல் நான் போக முடியாது, மிஸ்டர் சதானந்தன். அந்தக் கடிதத்தை வைத்துக் கொண்டு அமுதன் 'பிளாக் மெயில்' செய்கிறார். இரண்டு லட்சம் ரூபாய் தராவிட்டால் மாப்பிள்ளை வீட்டுக்காரரிடம் கடிதத்தைக் கொடுத்து விடுவதாகச் சொல்லி மிரட்டுகிறார். அவ்வளவு பணத்துக்கு நாங்கள் எங்கே போவது? அதனால் தான்.. அதை எடுக்கத்தான் இப்படி வந்தேன். ப்ளீஸ்.. மிஸ்டர் சதானந்தன்?'' என்று கெஞ்சினாள் திவ்யா.

''கடிதம் உன்னுடையது என்பதற்கு என்ன ஆதாரம்?''

''கடிதத்தின் தொடக்கத்தில் 'காதல் தேவ'னுக்கு என்று தொடங்கி, 'ஆயிரம் கோடி முத்தங்களுடன் ஆசைக் காதலி' என்று முடித்திருக்கும்...'' என்று சொல்லி விட்டு முகம் கன்றினாள் திவ்யா. இந்தக் கண்ணராவியை இவனிடம் போய்ச் சொல்லும்படி இருக்கிறதே!

ஒன்றும் பேசாமல் முன்னே சென்று, தானே பீரோவைத் திறந்து அவள் காட்டிய கடிதத்தை எடுத்து, தொடக்கம் முடிவு சரிபார்த்தான் சதானந்தன். ஓர் ஏளன உதட்டுவளைவுடன் அவளிடம் கடிதத்தைக் கொடுத்தான்.

முகம் வாட அவள் அதை வாங்கிக் கைப்பையுள் வைத்தாள்.

இருவருமாக முன் ஹாலுக்கு வந்தனர்.

சற்றுத் தயங்கி, ''மிஸ்டர் அமுதனுக்கு..'' என்று இழுத்தாள் திவ்யா.

''ஒன்றும் இராது. அந்த நேரம் நினைவிழப்பதற்காகப் பிடரியில் ஒரு தட்டு தட்டினேன். அவ்வளவுதான். ஒரு மணி நேரத்தில் தானாகவே தெளிந்து விடும்'' என்று கூறிக் கையை நீட்டினான் அவன். ''சாவிகள்.. அமுதனின் பீரோ, வீட்டுச் சாவிகள்''

கைப்பையைத் துழாவி அந்தச் சாவிகளை எடுத்துச் சதானந்தனிடம் கொடுத்தாள் திவ்யா.

இருவருமாக அமுதனின் வீட்டை விட்டு வெளியேறியதும் வீட்டை பூட்டி, எல்லாச் சாவிகளையும் சன்னல் வழியே உள்ளே எறிந்தான் அவன்.

'வா' என்று பணித்து, அவளோடு கூடத் தானும் நடந்தான். வெளியே நின்றிருந்த ஒரு வெள்ளை நிறக் காரைத் திறந்து, ''ஏறிக் கொள்'' என்றான்.

''பரவாயில்லை; நான் ஆட்டோ பிடித்து..'' என்று அவள் தயங்கிய போது, ''ஒழுங்காக வீடு போய்ச் சேர விருப்பம் இல்லையா? உன் சட்டை தோள்பட்டையில் கிழிந்திருப்பது தெரியவில்லை. இன்னமும் வழியில்



யாராவது ரவுடிகளிடம் மாட்டிக் கொண்டு தான் ஆக வேண்டுமா?'' என்று அவன் கேட்கவும் திவ்யா அதற்கு மேல் பேசாமல் காரில் ஏறி உட்கார்ந்து விட்டாள்.

அந்த 'எக்ஸ்டன்ஷ'னில் இருந்து மெயின் ரோடுக்கு வரும் வரையில் அவன் எதுவும் பேசவில்லை.

அதன்பின், ''உன் விலாசம்?'' என்றான் சுருக்கமாக.

மெல்லிய குரலில் தன் முகவரியைச் சொன்ன திவ்யா திடுக்கிட்டாள்.

ஏனெனில் காரைச் சாலையின் ஓரமாய் ஒதுக்கி நிறுத்திக் கொண்டிருந்தான் சதானந்தன.

''ஏ.. என்ன?''

''அங்கே நீ யார்? வீட்டுக்காரருக்கு என்ன உறவு?'' என்று விசாரித்தான் அவன்.

''தம்பி மகள்.. பெயர்..'' என்று அவள் கூறுமுன் ''திவ்யா'' என்று அவன் முடிக்க மேலும் திகைத்துப் போனாள் திவ்யா.

''என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும், மிஸ்டர் சதானந்தன்?''

''அது இப்போது முக்கியம் அல்ல'' என்று கூறி விட்டுச் சதானந்தன் அடுத்து செய்த காரியம் அவளை மேலும் திகைக்க வைத்தது. கார் சீட்டில் இருவருக்கும் இடையில் கிடந்த அவளது கைப்பையை எடுத்துத் திறந்தான்.

''மிஸ்டர்.. அது என் பை..'' என்று ஆட்சேபிக்கத் தொடங்கியவள், பையினுள் இருந்த கடிதத்தை - இவ்வளவு பாடுபட்டுக் கைப்பற்றிய கடிதத்தை வெளியே எடுக்கவும் கலவரமுற்று, ''அதை எடுக்கக் கூடாது. அது என் கடிதம்'' என்று கடிதத்தைப் பிடுங்க முயன்றாள்.

'அதுதான் பிரச்சினையே'' என்றவன் இடது கையால் இலகுவாக அவளை ஒதுக்கிக் கடிதத்தைப் பிரிக்கலானான்.

''ஏ..எது பிரச்சினை?'' என்றாள் அவள் ஒன்றும் விளங்காமல்.

''இது உன் கடிதம் என்பதுதான்'' என்றவன், காரின் உள்விளக்கைப் போட்டுக் கொண்டு கடிதத்தைப் படிக்கத் தொடங்கினான்.

''அடுத்தவர் கடிதத்தைப் படிப்பது தப்பு'' என்றாள் திவ்யா செய்கையற்ற சினத்துடன்.

''கத்தியால் ஒருவரை வெட்டுவது கூடத் தப்புதான். ஆனால் அதையே டாக்டர் செய்யும் போது?'' வாய் தன் பாட்டில் பதிலளிக்க அவனது கண்கள் கடிதத்தின் மீது வேகத்துடன் பாய்ந்தன.

இவனை என்ன செய்யலாம்? கைப்பையில் இருந்த கத்தியை எடுத்து ஒரு குத்து குத்தலாமா என்று யோசித்தாள் திவ்யா. ஆனால் ஒரு பேராபத்திலிருந்து காத்ததோடு இல்லாமல் வீடு கொண்டு சேர்க்கவும் முன் வந்தவனை அப்படி நடத்தவும் அவளுக்கு மனம் வரவில்லை. பொறுத்திருந்து பார்க்க முடிவு செய்து பேசாதிருந்தாள்.

வாய் பேசாமல் இருந்தாலும் அடுத்து என்ன என்று திவ்யாவின் பார்வை அவன் மீதே இருந்தது.

கடிதத்தைப் படிக்கப் படிக்க அவன் முகத்தில் அருவருப்பு மிகுவதைக் காண அவளுக்குக் கஷ்டமாயிருந்தது. இந்தப் பிரபா என்ன கண்ணராவி எல்லாம் கொட்டி வைத்திருக்கிறாளோ!

ஏனோ சதானந்தன் தன்னைத் தவறாக எண்ணுவதைத் திவ்யாவால் தாங்க முடியாமல் போய்விட, 'அது.. இந்தக் கடிதம் நான் எழுதியது அல்ல...'' என்று உண்மையைச் சொல்லி விட்டாள்.

அவன், உதட்டோரம் ஏளனமாக வளைய, ''வேறு யார் எழுதியதைத் திருட இந்த இரவில் ஆபத்தைப் பொருட்படுத்தாமல் வந்தாயாம்?'' என்று கேட்டுத் தன் நம்பாமையை வெளிப்படுத்தினான்.

''அது...'' என்று தொடங்கி விட்ட திவ்யா உடனே பேச்சை நிறுத்தினாள். எவனோ ஓர் அன்னியனிடம் அவளுடைய உடன்பிறவாச் சகோதரியைக் காட்டிக் கொடுக்கத் துணிந்து விட்டாளே! இவ்வளவு சொன்னதே மிக அதிகம்! தலைநிமிர்ந்து, ''அதைப் பற்றி உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை'' என்றாள் மிடுக்காக.



''நல்லது. செய்த பிழைக்கு மேல் பொய் வேறு கூறி உன்னை மேலும் இறக்கிக் கொள்வது எனக்கும் பிடிக்கவில்லை தான்'' என்று கூறிக் கடிதத்தை மடித்தவன் அதை அவளது கைப்பையில் வையாது, அவனது சட்டைப் பைக்குள் பத்திரப்படுத்தவும் திவ்யாவுக்குத் திக்கென்றது.

என்ன இது? வலைக்கு தப்பிப் புலி வாயிலா? வாணலிக்குத் தப்பி அடுப்பு நெருப்பிலா?

தன் கலவரத்தை மறைத்து, ''மிஸ்டர் சதானந்தன், அது என் கடிதம். அதை என் பையில் வைக்க வேண்டும்'' என்றாள் திவ்யா, ஞாபகப்படுத்துவது போல.

''இது உன்கடிதம் என்கிற வரையில் சரிதான்''

அமைதியான பேச்சு, பாவனையைக் கைவிட்டு, ''மிஸ்டர் மரியாதையாகக் கடிதத்தைக் கொடுங்கள். இல்லாவிட்டால்...'' என்ற மிரட்டலோடு கைப்பையை எடுத்தாள்.

''இல்லாவிட்டால் இந்தப் பைக்குள் இருக்கும் கத்தியை எடுத்து என்னைக் குத்திக் கிழித்து விடுவாயாக்கும்? ஏன், இதை விடப் பெரிதாகத் தீபாவளிப் பட்டாசு வெடிக்கும் துப்பாக்கி ஏதும் கிடைக்கவில்லையா?''

ஆத்திரத்துடன் திவ்யா அவசரமாகக் கைப்பையைத் திறக்க முற்பட்ட போது மின்னல் விரைவுடன் அவனது கை அவள் கை மீது படிந்து பையைத் திறக்க முடியாமல் அழுத்தியது.

மிரண்டு போனாள் திவ்யா.

சலனமற்று அவள் விழிகளை நேராகப் பார்த்து, ''இந்தக் கடிதம் உன் கைக்கு வர வேண்டுமானால்.. ஒரு நிபந்தனை'' என்றான் சதானந்தன்.

அடுத்த 'பிளாக் மெயில'ரா? இந்தப் பிரபா இப்படி ஒரு கடிதம் எழுதி எல்லோருக்கும் துன்பத்தை இழுத்து வைத்திருக்க வேண்டாம்!

''முதலில் கையை விடு'' என்று வெறுப்புடன் கையை உருவி விடுவித்துக் கொண்டு, சலிப்புடன் கேட்டாள். ''என்ன? உனக்கு என்ன வேண்டும்? அவன் இரண்டு லட்சம் கேட்டான். உனக்கு ஒரு லட்சமா? ஆனால் மிஸ்டர், எங்களிடம் அவ்வளவு பணம் கிடையாது. அதை உன் மண்டைக்குள் ஏற்றிக் கொண்டு அதன்பிறகு உன் நிபந்தனையைச் சொல்லு''

அவளது மரியாதைப் பன்மை வினாடிக்குள் ஒருமையாக மாறிய விதம் சதானந்தனுக்கு வேடிக்கையாக இருந்தது போலும். ''இந்தக் கடிதத்தின் விலையாக நீ பணம் ஏதும் எனக்குத் தரவேண்டாம்'' என்று உதட்டைப் பிதுக்கினான்.

உடனேயே முகம் மாறி, ''இந்தக் கடிதத்தை நீ திரும்பப் பெற வேண்டுமானால் உன் திருமணத்தை நிறுத்த வேண்டும்'' என்றான் தெளிவாக.

அவனது தாழ்ந்த குரலும் தெளிவான உச்சரிப்பும் திவ்யாவின் நெஞ்சுக்குள் குளிர்பரப்பிச் சில்லிட வைத்தன.

## 8

சற்று நேரம் காரினுள் அமைதி நிலவியது.

அதன்பின், ''நீ இன்னமும் எனக்குப் பதில் சொல்லவில்லை'' என்றான் சதானந்தன்.

''என்ன கேள்வி? என்ன பதில்? இப்படி ஒரு மடத்தனமான நிபந்தனைக்கு என்னவென்று பதில்



சொல்வது? நான் யாரைக் கல்யாணம் செய்து கொண்டால் உங்களுக்கு என்ன? முடியாது. உங்கள் நிபந்தனையை நிச்சயமாய் ஒத்துக் கொள்ள முடியாது'' என்று வெடித்தாள் திவ்யா.

''அப்படியானால் கடிதம் உன் பைக்குள் வர வேண்டிய அவசியம் இல்லை! அது வேறு யார் கைக்குப் போனாலும் பரவாயில்லையா?

இந்த மிரட்டலில் திவ்யா தொய்ந்து போனாள். இதற்கு மேல் விறைத்துக் கொண்டு நிற்க முடியாமல் அவன் காலில் விழவும் தயாரானாள். ''பாருங்கள் மிஸ்டர் சதானந்தன். என் அலுவலக மானேஜர் தான் என்னை மணக்க இருப்பவர். திருமணத்தை மறுத்து விட்டு நான் அங்கே தொடர்ந்து வேலை செய்ய முடியாது.. அத்தோடு என்னால் என் பெரியப்பா, பெரியம்மாவுக்குப் பதில் சொல்ல முடியாதே.. என் அம்மா இறந்ததிலிருந்து என்மேல் பரிதாபப்பட்டு வளர்க்கிறவர்கள் அவர்கள். அவர்களுக்குச் செலவு வைக்காமல் இந்த.. இந்த மாதிரி நகை, தொகை என்று கேளாத இடம் வேறு கிடைப்பது கஷ்டம், மிஸ்டர் சதானந்தன்.. கிடைக்கவே கிடைக்காது. பிரியமுள்ள புருஷன் பெரிய வரம் என்பார்கள், பெரியம்மா. என்னை விரும்பி மணக்கக் கேட்டவர் மனோரஞ்சன். எனக்கு ஒரு நல்ல வாழ்வு அமைவதைக் கெடுத்து விடாதீர்கள், ப்ளீஸ்...''

எந்தக் கெஞ்சலுக்கும் இளகாத கல்லாக இருந்தான் அவன். சொல்லப் போனால் அவன் பார்வையில் ஏளனம் அதிகமாயிற்று என்றே சொல்லலாம். லேசாகத் தோளைக் குலுக்கி, ''இந்த மாதிரிக் கண்ணீர்க்கதைகளை உண்மை என்று நம்பி ஏமாறுகிற முட்டாள் நானல்ல. என் நிபந்தனை இதுதான். முடிவு செய்து கொள்''

பாவி! கொஞ்சம் கூட இரக்கமற்ற ராட்சசன்! இவள் யாரைத் திருமணம் செய்தால் இவனுக்கென்ன? கொஞ்சமும் ஒருவருக்கொருவர் சம்பந்தமே கிடையாது. அப்படியிருக்க

அவள் வாழ்வைக் கெடுத்தாக வேண்டும் என்று இவனுக்கு என்ன வைராக்கியம்? ஒருவேளை கல்யாணத்தில் தோல்வியுற்ற கிறுக்கனா?

இருக்கும் என்று தோன்றியது திவ்யாவுக்கு. இப்படி காரணமற்ற நிபந்தனை இடுகிறவன் 'கிராக்' ஆகத்தான் இருக்க வேண்டும். இவன் போக்குக்குச் சரியாக இப்போதைக்குச் சரியென்று தலையாட்டிக் கடிதத்தை வாங்கிக் கொண்டு...

அவளது யோசனையின் ஊடே இடைவெட்டியது சதானந்தனின் குரல்... ''ஒன்று முதலிலேயே சொல்லி விடுகிறேன். இப்போதைக்கு என் நிபந்தனைப்படி நடப்பதாக ஒத்துக் கொண்டு கடிதம் கைவந்தபின் பேச்சு மாறிவிடக் கூடாதில்லையா? அதனால் உன் திருமணப் பேச்சு முறிந்து, நீங்கள் பிரிந்து விட்டீர்கள் என்பது உறுதியாகும் வரை கடிதம் என்னிடம் தான் இருக்கும்''

மறைக்க முயற்சி கூடப் பண்ணாத வெறுப்பை முகத்தில் முழுமையாகக் காட்டி அவனை வெறித்தாள் திவ்யா.

அவன் லேசாகத் தோளைக் குலுக்கவும், ''உங்களை எப்படி நம்புவது?'' என்று கேட்டாள்.

மீண்டும் தோளைக் குலுக்கினான் அவன். ''நம்பித்தான் ஆக வேண்டும். உனக்கு வேறு வழியில்லை''.

அந்தக் குரல் உசுப்பி விட, ''சின மிகுதியில், நீ.. நீங்கள் .. ஒரு... ஒரு...'' என்றவளுக்கு தொண்டை இறுகி வாய் திக்கியது.

அப்போதும் அவன் அசைந்தானில்லை. ''நான் என்ன என்பதை நன்றாக யோசித்துப் பிறகு சொல்லிக் கொள்ளலாம். இப்போதைக்கு எனக்குத் தேவைப்படும் பதிலை மட்டும் சொன்னால் போதும்.

வேறு வழியின்றி வெகு சிரமப்பட்டு, ''சரி'' என்ற ஒரு வார்த்தையை வெளிக் கொணர்ந்தாள் திவ்யா.

அப்போதைக்கு அந்த ஒரு வார்த்தையே போதும் போல சதானந்தன் காரை எடுத்தான்.



அவன் காரை ஓட்டுவதில் முழுக்கவனம் செலுத்த வேண்டியிருக்கும் சமயம் பார்த்து அவன் மேல் பாய்ந்து, பிறாண்டி, சட்டைப்பையில் வைத்த கடிதத்தை எடுத்து விடலாமா, அவன் பாராத சமயம் ரகசியமாய்க் கத்தியை எடுத்துக் காட்டி மிரட்டி கடிதத்தைப் பிடுங்கலாமா.. என்று ஒவ்வொன்றாக யோசித்து அத்தனையும் பயனில்லை என்று ஓய்ந்தாள் திவ்யா.

முதலாவதாக அவனது முழுக்கவனமும் தேவைப்படுகிற அளவு அந்த நள்ளிரவில் சாலையில் போக்குவரத்து நெரிசல் இல்லை. அத்தோடு அவளிடம் அவன் ஒரு கண் வைத்தபடியே காரை ஓட்டுவது நன்றாகவே தெரிந்தது. அமுதனைத் தட்டி வீழ்த்திய விதத்தில் அவன் போர்க்கலை பயின்றவன் என்று புரிந்தது வேறு அவளை மேலும் தயங்க வைத்தது. அதை விட முக்கியமாய், வேகமாகச் செல்லும் கார், அவளது தாக்குதலின் பல்னாகத் தடுமாறி விபத்துக்குள்ளாகி விட்டால் அவளுக்கும் அல்லவா அடிபடும். அப்புறம் பெரியப்பா பெரியம்மா அறியாமல் வீடு போய்ச் சேர்வது எப்படி முடியும்?

பலதும் எண்ணி அவள் பேசாமலே உட்கார்ந்திருந்தாள்.

அவளது ! வீட்டுக்குச் சற்று தொலைவில் காரை நிறுத்தினான் சதானந்தன்.

கையை நீட்டி, அவள்புறத்துக் கதவைத் திறந்தான் சதானந்தன். ''பெரிய உதவி'' என்று உள்ளூரப் புகைந்தபடி அவள் இறங்க முற்படுகையில், ''நினைவு இருக்கட்டும். உன் திருமண நிச்சயம் இப்போதைக்கு நின்றால் மட்டும் போதாது. மனோரஞ்சனுடன் உன் தொடர்பே அடியோடு முறிந்தாக வேண்டும். அந்த உறுதி எனக்கு வரும் வரை கடிதம் என்னிடம் இருக்கும். இந்தக் கடிதத்தின் வலிமை எழுதிய உனக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்.. இல்லாவிட்டால் இந்த நள்ளிரவு நேரத்தில் அதைத் திருட வந்திருக்க மாட்டாய். இது ஒரு வெடிகுண்டு- இதை வெடிக்கச் செய்வதும் அன்றி

பிசுபிசுத்துப் போகச் செய்வதும் உன் கையில் தான் இருக்கிறது. உனக்குக் கெட்ட பெயர் வராமல் - உன் பெயர் கெட்டுப் போவது நியாயமே என்றாலும் கூட, அப்படி இல்லாமலே ஒதுங்கி விடுவாயென்றால் போனால் போகிறது என்று விட்டு விட நானும் தயார். ஆனால் மனோரஞ்சனைக் காப்பாற்ற வேறு வழியில்லை என்றால் உன் உண்மை சொரூபத்தை வெளியிட நான் சற்றும் தயங்க மாட்டேன். ஜாக்கிரதை'' என்று எச்சரித்தான் அவன்.

உள்ளூரக் குமுறிக் கொண்டிருந்த ஆத்திரம் மீற, ''மனோரஞ்சனை நீங்கள் என்ன காப்பாற்றுவது? அவர் என்ன, தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளத் தெரியாத முட்டாளா? என்றாள் அவள் வெடுக்கென.

ஒரு சிறு ஏளனச் சிரிப்பு சிரித்தான் அவன். ''உலகத்தில் வேறு பெண்களே இல்லாதது போல இருந்திருந்து, உன்னை மணக்க நினைத்தவன் முட்டாளில்லாமல் வேறு யார்?'' என்று எகத்தாளமாகக் கேட்டவன் முகம் சட்டெனக் கடுத்தது. ''ஆனால் என் நண்பனுடைய குடும்பத்தில் இன்னொரு பெண் பேய் புகுந்து இன்னுமொரு சீரழிவு ஏற்பட நான் விடமாட்டேன்'' என்றான் உறுதியான குரலில்.

இன்னுமொரு சீரழிவு என்றால்... திவ்யாவுக்குச் சதானந்தனின் பேச்சு புரியவில்லை. மனோரஞ்சன் வாழ்வில் வேறு பெண்கள் கிடையாது என்று அவளுக்குத் தெரியும். பெண்களை நிமிர்ந்தும் பாராத நான் உன்னைப் பார்த்த முதல் பார்வையிலேயே சுருண்டு விழுந்து விட்டேன் என்று அவன் பலமுறை கூறியிருக்கிறான். இவன் ஏதோ குழப்பியடிக்கிறான் என்று நினைத்தாள் அவள்.

''நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை. ஆனால்.. ஆனால்.. யோசித்துப் பாருங்கள். இதற்கெல்லாம் ஒரு விளக்கம் - தப்பே இல்லாத நியாயமான விளக்கம் இருக்க முடியாதா? இந்தக்கடிதமே நான் எழுதியதாக இல்லாமல் இருக்கலாம்...



''இதை நம்புவதற்கில்லை'' என்றான் அவன் தெளிவாக. ''வேறு ஒருவரின் கடிதத்திற்காக இந்த இரவில் தன்னந்தனியாக, ஒரு கயவனின் வீட்டிற்கு நீ செல்வது சாத்தியமில்லை. அத்தோடு அந்தக் கடிதத்தின் வாசகங்களை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த இயலாது''

பாவி பிரபா! அந்த முட்டாள் அப்படி என்னதான் அந்தக் கடிதத்தில் எழுதித் தொலைத்தாள்? என்னதான் அவன் சொல்லச் சொல்ல எழுதினாலும் கொஞ்சம் கூடவா யோசிக்கக் கூடாது? அவளுடைய முட்டாள்தனத்தால் திவ்யாவின் சொர்க்கம் அல்லவா பறிபோகிறது? கைப்பிடிக்குள் கிட்டியிருந்த சுகமான எதிர்காலம்!

இந்த இழப்பைத் தடுக்க எந்த வழியும் காணாமல் திவ்யாவின் நெஞ்சுக்குள் புயல் வீசியது. அவள் தப்பே செய்யாத போது இப்படி ஒரு தண்டனை கிடைப்பது எவ்வளவு அநியாயம்! ஊகூம்..

ஒன்று தோன்றவும், ''நீங்கள்.. அதாவது, நான் இந்த விஷயம் பற்றி உங்களுக்கு எப்படித் தகவல் தெரிவிப்பது? நீங்கள் அதே ஃப்ளாட்டில் தான் இருப்பீர்களா? அதாவது.. இதுதான் உங்கள் வீடா?..'' என்று சுற்றி வளைத்து விசாரித்தாள் திவ்யா.

மீண்டும் ஏளனமாய்ச் சிரித்தான் அவன். ''ஏன்? மிஸ்டர் அமுதனிடம் செய்ததை என்னிடமும் முயற்சிக்கலாம் என்ற எண்ணமா? பாவம் உனக்கு ஏமாற்றம் அளிக்க வேண்டியிருப்பதை நினைத்தால் வருத்தமாகத் தான் இருக்கிறது. ஆனால் நாளை நான் டெல்லி போகிறேன். அங்கிருந்து பம்பாய். ஆனால் அங்கெல்லாம் போகிற போது நீ திருடுவதற்கு வசதியாகக் கடிதத்தை இங்கே வைத்து விட்டுப் போகப் போவதாக இல்லை. அத்தோடு என் வீட்டுப் பூட்டை இவ்வளவு எளிதாகத் திறக்கவும் முடியாது. அதனால் நான் சொன்னபடி செய்வது தவிர உனக்கு வேறு வழியே கிடையாது. சாரி'' என்று அவன் சொன்ன சாரிக்குச் சம்பந்தமே இல்லாமல் கேலியாகச் சிரித்தான்.

நெஞ்சுக்குள் இருந்த தவிப்பில், அப்படி ஓர் எண்ணம் திவ்யாவின் மனதில் மின்னலாகத் தோன்றி மறைந்தது உண்மையே என்பதால், அதை ஊகித்து அவன் மட்டம் தட்டிய விதத்தில் அவள் முகம் சூடேறிக் கன்றிச் சிவந்து போயிற்று.

நல்லவேளை! இந்த இருட்டில் இதை அவனால் பார்க்க முடியாது என்று கொஞ்சம் நிம்மதி அடைந்தாள்.

நம்பிக்கை இல்லாவிட்டாலும் கடைசியாக இன்னும் ஒரு முயற்சியாக, "மிஸ்டர் சதானந்தன், கொஞ்சம் யோசியுங்கள். எல்லோரும் எல்லாவற்றையும் அறிய முடியாது. வெளிப்படையாகச் சில விஷயங்களைச் சொல்ல முடியாமல் இருக்கலாம். அதற்காகவே ஒருவரைக் குற்றவாளியாக்கி விட முடியாது. நான் தப்பு செய்யாதவளாகக் கூட இருக்கலாம் என்று ஒரு தரம் யோசித்துப் பாருங்கள். சந்தேகத்தின் பலனைக் குற்றம் சாட்டப்பட்டவருக்குத் தர வேண்டும் என்று நம் சட்டமே கூறுகிறது..." என்று அவள் பேசப் பேச அவன் கல் போல அமர்ந்திருக்கவும் அவள் பேச்சுத் தானாக நின்றது... "ப்ளீஸ், மிஸ்டர் சதானந்தன்" என்ற கெஞ்சலோடு.

அவளாகப் பேச்சை நிறுத்தும் வரை குறுக்கிடாமல் கேட்டிருந்தவன், அவள் ஓய்ந்ததும் திரும்பினான். "நீ என்ன படித்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியாது. ஆனால் வக்கீலுக்குப் படித்திருந்தால் நிறைய சம்பாதிப்பாய்" என்று பாராட்டுவது போல மட்டம் தட்டினான். "ஆனால் ஒன்று, பெண்ணே. நீ என்னதான் திறமையாய் வாதாடினாலும், காலிலேயே விழுந்து கண்ணீர் விட்டுக் கெஞ்சினாலும் கூட என் முடிவில் மாற்றம் எதுவும் இல்லை. எனவே அதற்கானவற்றைச் செய்வதில் கவனத்தைச் செலுத்துவது உனக்கு நல்லது. இப்போது இறங்கிக் கொள்கிறாயா?

அந்தக் காரே சுடுவது போல அவசரமாக இறங்கிக் கதவைப் பட்டென்று சாத்தினாள் திவ்யா. "செய்கிறேன் எனக்கு வேறு வகை இல்லாததால் செய்கிறேன். ஆனால்



ஒன்று. வீட்டில், வெளியில், அலுவலகத்தில், எல்லா இடங்களிலும் எங்கள் திருமணம் அறியப்பட்ட விஷயம். இப்போது திடுமென அதை மறுப்பது நன்றாயிராது. மனோரஞ்சனிடம் சொல்வதும் கொஞ்சம் கஷ்.. ரொம்ப கஷ்டம்... அதனால் கொஞ்சம் பொறுத்து... மெல்ல.. மெல்ல..."

அவன் 'பக்'கெனச் சிரித்தான். எகத்தாளமாய்த்தான். "அந்தமாதிரி நளினங்கள் எதுவும் உனக்கு இருப்பது சாத்தியமில்லை பெண்ணே... அதனால் அப்படி ஏதும் இருப்பதாகக் காட்டிக் கொள்வதில் நேரத்தை வீணாக்க வேண்டாம்.. வருகிறேன்" என்று அவளது பதிலுக்குக் காத்திராமலே காரைக் கிளப்பிக் கொண்டு போய் விட்டான்.

காரின் சிவப்பு விளக்குகள் அடுத்த திருப்பத்தில் மறையும் வரை அதை வெறித்தாள் திவ்யா.

வராதே.. போ.. அப்படியே போய்த் தொலைந்து விடு. நாளை டில்லி, உடனே பம்பாயா? அப்படியானால் விமானத்தில் தானே போவாய்? எத்தனை விமானங்கள் விபத்துக்குள்ளாகி பயணிகள் அத்தனை பேரும் மடிந்து போகிறார்கள்?

இவன் போகிற விமானமும் நடுவானத்தில் வெடித்துச் சிதறிப் பயணிகள் அத்தனை பேரும்.. சேச்சே.. எல்லோரும் வேண்டாம். இவன் மட்டும் செத்து ஒழிந்தால் போதும்.. செத்துத் தான் ஆக வேண்டும் என்று இல்லை.. விபத்தில் ஒரு ...அம்னீஷியா வந்தால் கூடப் போதும்.. அல்லது விமானத்தில் 'லக்கேஜ்' பகுதியில் தீப்பிடித்து இந்தக் கடிதம் சாம்பலானால் கூடப் போதும்!

ஆனால் இந்தக் காலத்தில், இந்த மாதிரி அதிசயங்கள் ஏதும் நிகழக் கூடுமா என்ன? அதுவும் அவளுக்கு உதவுவதற்காக! ஊகூ...ம்

அதிசயத்தில் நம்பிக்கை வைப்பதை விடுத்து, வீட்டில் அவளது வரவுக்கான ஆவலும் பயமுமாய்க் காத்திருக்கும் பிரபாவிடம் என்ன சொல்வது என்று யோசித்தபடியே வீட்டுப்படி ஏறினாள் திவ்யா.

ஆனால் உண்மைதவிர வேறு என்ன சொல்வது? மாற்றி, மறைத்து என்ன சொன்னாலும் தான் என்ன பிரயோசனம்? ஒன்று பிரபாவின் திருமணம். அல்லது திவ்யாவுடையது. இரண்டில் ஒன்றுதான் நடக்கும். அடுத்தவர் வாழ்வு இருண்டு தான் போகும்.

தப்பு செய்த பிரபாவின் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருப்பதற்காக, திவ்யா அவளது வளமான எதிர்காலத்தைப் பலி கொடுப்பது எப்படி நியாயமாகும்? கொஞ்சம் கூட நியாயமில்லாத ஒரு காரியத்தைச் செய்து தன் வாழ்வை ஏன் இருட்டாக்கிக் கொள்ள வேண்டும் என்று திவ்யாவுக்குத் தோன்றியது.

நியாய அநியாயம் பாராமல் இரண்டு பேரும் நன்றாயிருக்கலாம் என்றாலோ அதற்கு இடம் இல்லாமல் சதானந்தனின் நிபந்தனை வெகு தெளிவாயிருந்தது. படுபாதகன்! யார் எப்படிப் போனால் இவனுக்கு என்ன வந்தது? என்னவோ, இந்த உலகத்தையே உய்விக்க வந்தவன் போலக் குதிக்கிறானே. என்ன, இவனுக்கு மனைவியாகப் போகிறவளே இந்தக் கடிதம் எழுதினாற் போலல்லவா அலட்டுகிறான்?

இரண்டு பேருமே நன்றாகயிருக்க வேண்டுமானால் கடவுளாகப் பார்த்து உதவி செய்தால் தான் உண்டு. ஆனால் தனக்குத்தானே உதவி செய்யாதவர்களுக்குக் கடவுள் உதவுவது 'இல்லை' என்ற ஆங்கிலப் பழமொழி வேறு



அநியாயத்துக்கு இப்போது பார்த்து நினைவு வந்து தொலைத்தது.

எவ்வளவு மெல்ல நடந்து சென்ற போதும் கடைசியாக அவர்களது அறைக்குள் போகத்தான் வேண்டியிருந்தது. அங்கே நகத்தைக் கடித்துத் துப்பிக் கொண்டிருந்த பிரபாவைத் திவ்யா எதிர்கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

திவ்யாவைக் கண்டதும் ஓடோடி வந்து அவளை உள்ளே இழுத்துக் கதவைச் சாத்தி விட்டுக் கடிதத்துக்காகக் கைநீட்டினாள் அவள். "நான் சொன்ன இடத்தில் இருந்ததல்லவா? கொடு, கொடு அதைக் கொளுத்தி விடலாம்" என்று பரபரத்தாள்.

"கடிதம் இப்போது அமுதனிடம் இல்லை, பிரபா. ஆனால்..."

"முகம் வெளிற, ஆனால்.. என்ன? தொலைத்து விட்டாயா! அய்யோ, யார் கையில் கிடைத்து என்ன ஆகப் போகிறதோ தெரியவில்லையே! எவ்வளவு முக்கியமான கடிதம்! கவனம் வேண்டாமா? அதைப் போய்த் தொலைத்து விட்டு வந்து நிற்கிறாய், உன்னைப் போய்க் கெட்டிக்காரி என்று கொஞ்சுகிறார்களே.. ஐயோ! ஐயோ!" என்று கோபமும் பயமுமாக அரற்றத் தொடங்கினாள் பிரபா.

"ஆமாம், இப்போது சொல்வாயே! அமுதன் வீடு எது என்று ஒழுங்காகச் சொல்லியிருந்தால் எப்போதோ கடிதத்தோடு வந்திருப்பேன். வீட்டைத் தேடி, வீட்டில் கடிதத்தை ஒருவாறு தேடி எடுத்தால் அந்த அமுதனே வந்து நின்றான். அவனிடம் படாதபாடு பட்டு ஒருவழியாகத் தப்பி வந்தால், என்னையே குறை சொல்கிறாயே" என்று தன் எரிச்சலைத் திவ்யாவும் மறைக்காமல் காட்டி விட்டாள்.

ஆனால், ''அமுதன்.. வந்து விட்டாரா? அய்யோ! எல்லாம் தொலைந்தது!'' என்ற பிரபாவின் முகம் பேயறைந்தாற் போல மாற, கால்கள் தள்ளாடித் தொப்பெனக் கீழே அமரவும், உடனே இரங்கி, ''ஏய், பிரபா, நான் முதலிலேயே என்ன சொன்னேன்? 'கண்டேன் சீதையை' மாதிரி, கடிதம் அமுதனிடம் இல்லை என்று சொன்னேனே. முதலில் அதை மண்டைக்குள் ஏற்றிக் கொண்டு மேலே பேசு'' என்று பிரபாவின் கன்னத்தில் பலமாக இரண்டு தட்டுத் தட்டிச் சொன்னாள் திவ்யா.

கன்னத்து வலியாலோ, திவ்யாவின் பேச்சாலோ உடன் நிதானத்துக்கு வந்தாள் பிரபா. ''பின்னே, கடிதம் எங்கே?'' என்று லேசாக விசித்தாள்.

வீட்டினுள் வரும் போது நினைத்த நியாய, அநியாயங்கள் மறந்து விட, நடந்ததை எல்லாம் பெரியப்பா மகளிடம் விவரித்தாள் திவ்யா.

அவள் சொல்லி முடித்தபின் சற்று நேரம் அறைக்குள் அமைதிநிலவியது.

பிறகு ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, ''நீ நேற்று அப்பா அலமாரியில் கொண்டு போய் வைத்தாயே, அந்தத் தூக்க மாத்திரை பாட்டிலைத் திரும்பவும் எடுத்து வந்து என்னிடம் தந்து விடு, திவ்யா. நான் சாவது ஒன்றுதான் இப்போதையச் சிக்கல் தீர ஒரே வழி'' என்று கூறிக் கைகளில் முகம் புதைத்து விசும்பி அழுதாள் பிரபா.

உள்ளூர நம்பிக்கை இல்லாத போதும், ''அப்படிப் பேசாதே பிரபா. யோசித்துப் பார்த்தால் ஏதாவது வழி தென்படாமல் போகாது..'' என்றாள் திவ்யா தேறுதலாக.



'யோசிப்பதற்குத்தான் அந்த ஆள் இடமே தரவில்லையே. நம் இருவரில் யாராவது ஒருவரால் தான் வாழ முடியும் என்று கூறிவிட்டாரே. ஒரு நல்ல வாழ்வு தயாராக இருக்கும் போது அதை விட உனக்கு மனம் வராதுதான். நான் சாவதற்குத் தயார் திவ்யா. என்னைப் போல ஒரு மடச்சி உயிரோடு இருப்பதும் சரியில்லை தான்'' ஆனால் அப்புறமும் அந்தக் கடிதத்தை வெளியிட்டு விட்டால் அப்பா, அம்மாவும் செத்து விடுவார்களோ என்று தான் கவலையாக இருக்கிறது'' என்று பிரபா விம்மவும், திவ்யாவுக்கு வயிறு கலங்கியது. மனதும் தான்.

அவன்... அந்த மனிதன் செய்யக்கூடியவன் தான் ஆனால் இங்கே வந்து இந்தக் கண்ணீரை ஒருதரம் பார்த்து விட்டால் பிறகேனும் இளகமாட்டானா?

மாட்டான். இந்த மாதிரிக் கண்ணீர்க் கதைகளுக்கு இளகுகிறவன் நானல்ல எனறு அழுத்தமாய்ச் சொன்னானே, கல் நெஞ்சன்!

அறியாத்தனத்தால் செய்த ஒரு சிறு பிழைக்காகப் பிரபா அழிவதே அநியாயம் தான். அதற்கு மேல் குற்றமே செய்யாத பெரியப்பா பெரியம்மாவும் அழியக்கூடும் என்றால் எண்ணிப் பார்க்கக் கூடத் திவ்யாவுக்குத் தாங்க முடியவில்லை.

பிரபா தொடர்ந்தாள். ''எனக்காக இல்லை திவ்யா. அப்பா அம்மாவுக்காக, உனக்காக உயிரை கூட விடத் தயங்காத அவர்களுக்காகவேனும் கொஞ்சம் இப்படி யோசித்துப் பாரேன். நீ கெட்டிக்காரி. அழகி. படிப்பும் இருக்கிறது. இவைகளுக்காக, இந்த மனோரஞ்சனை விடவும் சிறந்தவர்கள் கூட உன்னை நாடி வரக்கூடும்.. நிச்சயமாக வருவார்கள்..''

''என்ன பேச்சு இது பிரபா.. அப்படிப் பார்த்தால் கண்ணனைப் போல் வேறு யாரும் கிடைக்கவே மாட்டார்களாக்கும்?''

''மாட்டார்கள், திவ்யா. அப்படியே கிடைத்தாலும் இனி என்னால் கண்ணனைத் தவிர யாரையும் மனதால் கூடக் கணவராக ஏற்க முடியாது. எனக்கு அவர் இல்லை என்றால் உலக வாழ்வு என்பதும் அடியோடு இல்லைதான்'' என்று பிரபா உறுதியோடு கூறவும் திவ்யா சற்றே திகைத்தாள்.

இந்த மாதிரி தன்னால் நினைக்க முடியுமா? மனோரஞ்சன் இல்லை என்று ஆனால் வேதனைதான். ரொம்பவும் வருத்தமாகத்தான் இருக்கும். அப்படி ஆகிவிடுமோ என்கிற நினைவிலேயே நெஞ்சு பதறத்தான் செய்கிறது. ஆனால் உயிரையே விட்டு விடுவது என்றால்... ஊகூம். வழக்கம் போலப் பிரபா அதிகப்படியாக உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகிறாள். மற்றபடி ஒருவருக்காக உயிரையே விடுவார்களா, என்ன?

''இன்னொன்றும் யோசித்துப் பார், திவ்யா. உன்னுடைய அந்த ஆளுக்கு என் திருமணம் நடந்தாலும் நடக்காவிட்டாலும் அதுபற்றி ஒன்றும் இல்லை. மனோரஞ்சனை விட்டு நீ விலக வேண்டும். அதுமட்டும் தான் அவரது லட்சியம். அது நடக்கவில்லை என்றால் கடிதம் வெளியாகி விடும். அதன் விளைவாக நான், அம்மா, அப்பா மூவரும் அவமானப்பட்டுச் சாவது நிச்சயம்!''

பிரபா சொல்வது சரிதானோ? இரண்டில் ஒரு எதிர்காலம் என்று திவ்யா எண்ணியதே தவறுதானோ?

ஆமாம். அந்த சதானந்தன் திவ்யாவின் வாழ்வைப் பாழடிக்கத்தான் உறுதி கொண்டிருக்கிறான்...

அல்ல.. அந்தக் கடிதம் எழுதிய பெண், அவனுடைய நண்பனுடைய குடும்பத்துள் வரக்கூடாது என்பதுதான் அவனது லட்சியம். மற்றபடி யார் எப்படிப் போனாலும் அவனுக்கு ஒன்றும் இல்லை...



கடிதம் எழுதியது திவ்யா அல்ல என்பதை நிரூபித்து விட்டால் போதும். இருவருமே நல்லபடியாக வாழலாம்.

வழிகண்டு விட்ட மலர்ச்சியோடு ஒன்றுவிட்ட சகோதரியிடம் திரும்பினாள் திவ்யா.

ஆனால்...

## 9

திவ்யாவின் முகமலர்ச்சியைப் பிரபா எதிரொலிக்கவில்லை. மாறாக ஒருவித எச்சரிக்கை உணர்ச்சி அவளது முகத்தில் பரவியதைக் காணவும் திவ்யாவுக்கு உள்ளூர உறுத்தியது.

அதை ஒதுக்கித் தன் திட்டத்தை அவள் கூறிய போது, பிரபா அதற்கு ஒத்துக் கொள்ள மறுத்தாள். அதுவும் சாதாரணமாக அல்ல. ''முடியாது.. முடியாது.. அதை விட நான் தூக்க மாத்திரையையே விழுங்கி விடுகிறேன்'' என்று கிறீச்சிட்டாள்.

அவளுடைய பெற்றோர் விழித்து விடுவார்களோ என்று அஞ்சி அவளது வாயைப் பொத்தி அமைதிப்படுத்தினாள் திவ்யா.

குரலைத் தணித்துக் கொண்ட போதும், திவ்யாவின் பேச்சை அவள் சற்றும் ஏற்பதாக இல்லை. ''யாரோ முகமறியாதவனிடம் போய், இந்த மாதிரிக் கடிதம் எழுதியதாக ஒப்புக் கொள்வதா? முடியவே முடியாது. அந்த சதானந்தன் யார், என்னவென்று ஒன்றுமே தெரியாது. இந்த மனோரஞ்சனைப் போலவே, கண்ணன் குடும்பத்துக்குக் கூட அவன் அறிமுகமானவனாக இருக்கலாமே. அப்படி இருந்து விட்டால் அப்புறம் என் கதி?''

''உன் கதி, உன் கதி என்கிறாயே. என்னைப் பற்றி உனக்குக் கவலை ஒன்றுமே இல்லையா, பிரபா?''

வருத்தத்துடன் திவ்யா கேட்டுவிடச் சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது.

பின்னர், வாடிய முகத்துடன், ''அதுதான் நான் செத்துப் போகிறேன்; நீ நன்றாயிரு என்றுதானே சொன்னேன். அதற்கு மேல் என்ன சொல்ல வேண்டுமாம்?'' என்று குறையோடு உரைத்தாள் பிரபா.

''ச்சு.. அந்தப் பேச்சை விடு... பிரபா, ஒன்று செய்யலாம்.. இப்போதைக்கு உன் கல்யாணத்துக்கு எந்தவிதத் தடையும் நேர்ந்து விடக் கூடாது. அதுதானே மிகவும் முக்கியம்!'' என்று கேட்டாள். மற்றவள் தலையாட்டவும், ''ஒன்று செய்யலாம். நான் எப்படியாவது இந்தத் திருமண உறுதிப்பாட்டைத் தள்ளிப் போட முயற்சி செய்கிறேன். இப்போதைக்கு அந்த விழாவை நிறுத்தி விட்டால் அந்தச் சதானந்தன் ஓரளவேனும் சமாதானமாகி விடுவான். அதற்குள் உன் திருமணம் நடந்து விடட்டும். அப்புறமாக மிஸ்டர் கண்ணனிடம், எந்த மாதிரி சூழ்நிலையில் நீ எப்படி இந்தக் கடிதம் எழுத நேர்ந்தது என்பதை விளக்கி விட்டால் அப்புறம் அந்தக் கடிதம் பற்றிப் பயப்படத் தேவை இராது. நானும் சதானந்தனிடம் கடிதம் என்னது இல்லை என்று தெளிவுபடுத்தி விடலாம். கடித விஷயம் புரிபட்டு விட்டால் அதற்கு மேல் எங்கள் திருமணத்தை அவன் தடை செய்ய மாட்டான். ஆக இரண்டு பேரின் எதிர்காலமுமே பிழைக்கும். என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டாள்.

''அது...'' என்று பிரபா இழுக்கவும், ''இரண்டு பேரும் வாழ வேண்டுமானால் இது ஒன்றுதான் வழி, பிரபா. இதற்கும் மாட்டேன் என்றாயானால் எப்படி?'' என்று திவ்யா சிடுசிடுக்கவே ஒருவாறு தலையாட்டினாள் மற்றவள்.

''ஆனால் அதற்குள் அந்த சதானந்தன் கடிதத்தை வெளியிட்டு விட்டால்?'' என்று நடுங்கவும் செய்தாள்.



''இல்லை. அப்படி நடக்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன். கொஞ்சம் பொறுக்கும்படி முதலில் அவருக்கு ஒரு கடிதம் எழுதி விடுகிறேன்... அமுதன் ஃப்ளாட்டுக்கு எதிர் ஃப்ளாட் என்றால் என்ன நம்பர், பிரபா? பதினாறு தானே?''

கடிதம் எழுதியதோடு திவ்யா நிறுத்தி விடவில்லை. டெலிஃபோன் டைரக்டரியில் அவன் நம்பரைத் தேடிக் கண்டுபிடித்து, தினமும் இரண்டு முறை 'ரிங்' செய்து பார்த்தாள்.

மணி ஒலிக்க ஒலிக்க, அங்கே யாரும் டெலிஃபோனை எடுக்கவில்லை என்பதைச் சற்று நிம்மதியாகவும் கூடவே கவலையாகவும் உணர்ந்தாள்.

அடுத்த முயற்சியாகத் தன் பெரியப்பா பெரியம்மாவிடம் பேசிப் பார்த்தாள். ''பிரபா திருமணத்தை இவ்வளவு அருகில் வைத்துக் கொண்டு இந்த விழா வேறு இப்போதே நடத்தியாக வேண்டுமா, பெரியப்பா? சும்மாவே பெரியம்மாவுக்கு உடம்பு அவ்வளவு சரியில்லை. கொஞ்சம் தள்ளி.. திருமணம் முடிந்து ஏழெட்டு நாள் கழித்து வைத்துக் கொள்ளலாமே'' என்று கூறிப் பிரபாவிடம் ஒரு பார்வையைச் செலுத்தினாள்.

''திருமணமாகி ஏழெட்டு நாட்களில் நீ சமாளித்து விடுவாயல்லவா?'' என்று வினவிய பார்வையைக் கவனியாதது போலத் தந்தையிடம் திரும்பி, ''எனக்கும் கொஞ்சம் அப்படித்தான் தோன்றுகிறது... அப்பா'' என்று ஒத்துப் பாடினாள் பிரபா.

''என்ன உளறுகிறீர்கள்'' என்று அவர் உறுமவும் இருவருமே நடுங்கி விட்டனர். ''இத்தனை ஆண்டு சேமிப்பும் ஒருத்திக்கே சரியாகி விடும் போல இருக்கிறதே என்று

கவலைப்பட்ட போது கடவுளாகப் பார்த்து ஒரு வழி கொடுத்தால், அபசகுனம் மாதிரி ஆரம்பத்திலேயே அஸ்து பாடுகிறீர்களா? வேலையைப் பற்றி எங்களுக்கு நீங்கள் சொல்லுகிறீர்களா? இனி ஒரு வார்த்தை இப்படிப் பேசினால்.. ஜாக்கிரதை'' என்று அதட்டவும் இருவருமே 'கப்சிப்'பாகி ஒதுங்கினார்கள்.

கவலையாகப் பார்த்த பிரபாவிடம், ''நான் ரஞ்சன் மூலம் ஏற்பாடு செய்கிறேன்'' என்று நம்பிக்கையோடு சொல்லி விட்டுப் போன திவ்யாவுக்கு ஏன் போனோம் என்றாயிற்று.

போகாமல் இருந்திருந்தால் இந்தப் பேச்சை மனோரஞ்சனிடம் எடுக்க முடிந்திராது. பேச்சை எடுக்க முடிந்திரா விட்டால் மனோரஞ்சனின் இன்னொரு முகம் பற்றி அவள் அறிய நேராமல் நிம்மதியாக இருந்திருப்பாளே!

ஆனால் இதெல்லாம் முன்கூட்டியே தெரியாததாலேயே மனோரஞ்சனிடம் மாலையில் வேலை முடிந்து எல்லோரும் சென்ற பிறகு தனியே சென்று, ''உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்'' என்று பேச்சைத் தொடங்கினாள் அவள்.

''ஒன்றுதானா? ஓராயிரம் கேட்கத் தாசானுதாசன் தயாராக இருக்கிறேனே!'' என்று வசனம் பேசியவனுக்கு விஷயம் அறிந்ததும் முகமே மாறி விட்டது.

அவளை ஒரு மாதிரி வெறித்துப் பார்த்தவன், ''மகள் கல்யாண வேலை இருப்பதால் இந்த நிச்சயதார்த்தத்துக்கு வேலை செய்ய முடியாதாமா? திமிரா? உன்னை வளர்த்தார்கள் என்பதற்காக அவர்களுக்கு எந்த அளவுக்கு இடம் கொடுப்பது என்று இல்லை? அல்லது... சொல்லு.. எனக்கு இப்போது உண்மை தெரிந்தாக வேண்டும். உன் அழகுக்காக வேறே எவனும் என்னை விட வசதியானவன் வந்து கேட்கிறானா? அதற்காக என்னைக் கழட்டி விட



ஏற்பாடு நடக்கிறதா?'' என்று முகத்தைச் சுளித்து உதட்டை நெளித்து பெரும் குரலில் அவன் கேட்கவும் திவ்யா திகைத்துப் போனாள்.

இவன் மனோரஞ்சன்தானா? வினாடிக்குள் என்ன பேச்சுப் பேசுகிறான்? எப்படி அவனால் இப்படித் தரக்குறைவாக நினைக்க முடிந்தது? இவனோடு வாழ்நாளெல்லாம் கழிப்பது சாத்தியம்தானா?

சேச்சே.. இப்படி நினைப்பது தவறு. திடீரென்று நிச்சயத்தைத் தள்ளி வைக்கச் சொன்னதும் அவளை இழந்து விடுவோமோ என்ற கவலையில் நிலைகுலைந்து, யோசியாமல், வாயில் வந்ததைப் பொருள் உணராமலே பேசி விட்டான். அவ்வளவுதான்.

அவளிடம் எவ்வளவு அன்பு வைத்திருந்தால் இப்படி நிலைகுலைந்து போயிருப்பான்? அதை நினைத்துப் பெருமைப்படாமல் அவளும் என்னென்னவோ எண்ணி விட்டாளே. நல்லவேளை! அவனைப் போல் வாய்விட்டு உளறி விடவில்லை.

''என்ன மனோ, இப்படிப் பேசுகிறீர்கள்? பெரியம்மா, பாவம் உடம்பு சரியில்லாதவர்கள், வேலை வேலை என்று அலைவதில் எதையாவது இழுத்து வைத்துக் கொள்வார்களோ என்று நானாகத்தான் இப்படி யோசித்தேன். சும்மா ஒரு யோசனை. அதற்குள் உங்களுக்கு இவ்வளவு கோபம் வந்து விட்டதே...?''

''என்னது? உன் யோசனையா? மூளையில்லை உனக்கு? ஊரிலிருந்து அண்ணன் குடும்பமே நாளை வந்து விடுவார்கள். அவன் வேறு யார் யாரையோ அழைத்திருப்பதாகச் சொன்னான்...''

அதற்குள் திவ்யாவுக்கு இன்னொரு யோசனை வந்தது. அவன் பேச்சில் குறுக்கிட்டு, ''ரஞ்சன், உங்கள் குடும்பத்துக்கு

என்னைப் பிடிக்க வேண்டாமா? அவர்கள் முதல் முதலாக விசேஷத்தன்று பார்த்து பிடிக்காமல் போய் விட்டால் ரசாபாசம் ஆகிவிடாதா? அதனால்...'' என்று இழுத்த போது மனோரஞ்சன் குறுக்கிட்டுப் பேசினான்.

''என்னது? பிடிக்காமல் போவதா? அப்படி யார் சொல்வது? அண்ணன் வாயையே திறக்கப் போவதில்லை. திறந்தாலும் அதை யாரும் மதிக்கப் போவதில்லை. அண்ணி சரியான பட்டிக்காடு. அவள் தலையை உயர்த்தி உன்னைப் பார்த்தால் அதுவே அதிசயம்''

திவ்யாவுக்கு ஒரே ஆச்சரியமாகிப் போயிற்று. ''அண்ணி பட்டிக்காடா? உங்கள் அண்ணன் யு.எஸ். போய் படித்தவர் என்றீர்களே!'' என்றாள் வியப்புடன்.

''ஆமாம்.. படித்தான் தான். கூடப்படித்த ஒருத்தியை மணந்து கொண்டு வரவும் செய்தான். அவள் ஆடிய ஆட்டம்! சிகரெட், குடி, நைட்கிளப்! நாகரீகமாம். கடைசியில் இந்தப் பட்டிக்காட்டுக் கணவனோடு கஷ்டப்பட்டதற்காக ஒரு பெரும் தொகையைப் பிடுங்கிக் கொண்டு மணவிலக்கு கொடுத்தாள். அவள் கேட்ட தொகையைக் கொடுத்ததில் குடும்பத் தொழிலே அழிந்து விட்டது. ஆனாலும் வீட்டில் எல்லோருமே ஒழுங்காக மூச்சு விட்டோம் எனலாம். அப்பா நேரே கிராமத்துக்குப் போய், ஒரு தூரத்து உறவுப் பெண்ணைப் பார்த்து அண்ணனுக்கு மறுபடியும் மணமுடித்து வைத்தார். இந்த அண்ணி, அண்ணனுக்கு இரண்டடி பின்னே தான் நடந்து வருவாள். ஆனால் வீட்டில் பழைய காட்டுக் கூச்சல் மாறி அமைதி நிலவியதே திருப்தியாய் அப்பா போய்ச் சேர்ந்தார். அண்ணன்... அவன் முகத்திலும் பழைய தவிப்பு மாறிவிட்டது. ஆனால் அதிகம் பேசுவதில்லை. முக்கியமாக எதிலும் அபிப்ராயம் சொல்வதில்லை...''

இன்னுமொரு பெண் பேய் புகுந்து சீரழிக்க விட



மாட்டேன் என்றதன் அடிப்படை இந்த அவலமா? ஆனால் அவள் பெண் பேய் அல்ல என்று அவன் புரிந்து கொள்ளவில்லையே! அதை நிரூபிக்க அவகாசம் வேண்டுமே!

மீண்டும் ஒருதரம் மனோரஞ்சனிடம் கேட்டுப் பார்த்தாள். ''நியாயமான காரணம் இருக்கிறது, மனோரஞ்சன். என்னை நம்பி இந்த நிச்சய விழாவைக் கொஞ்சம் தள்ளிப் போடுங்களேன்'' என்றாள் கெஞ்சும் குரலில்.

முன்போலவே முகம் சுளித்து வெறித்து விட்டு, ''ஏன், உனக்கே இன்னும் கொஞ்சம் உயரத்தில் ஆள் பார்க்கலாம் என்று இருக்கிறதோ?'' என்று பழைய மாதிரியே கேட்கவும் திவ்யா கலங்கிப் போனாள். இவன் இப்படியே தான் பேசுவானா? திருமணமாகிச் சேர்ந்து வாழும் போது இப்படி நோகப் பேசினால் எவ்வளவு வேதனையாக இருக்கும்! இவனிடம் மெல்ல எடுத்துச் சொல்லி இம்மாதிரிப் பேச்சுக்களைத் தவிர்க்கச் செய்ய வேண்டும்.

அப்போதும் கூட திவ்யா தனது திருமணம் நின்று போகக் கூடும் என்று எண்ணவில்லை. எப்படியும் கடிதம் அவள் எழுதியது இல்லை என்று நிரூபிப்பது இயலக்கூடியது. இப்போதைக்கு தேவைப்படுவது சிறிது அவகாசமே. பிரபாவின் திருமணம் தடைப்படாமல் நிறைவேறுவதற்கான அவகாசம். ஆனால் அந்த அவகாசம் தான், என்ன பாடுபட்ட போதும் கிடைப்பதாகத் தெரியவில்லை.

இதற்கு மேல் மனோரஞ்சனிடம் எதையும் வெளிப்பட முடியாத காரணத்தால், கஷ்டப்பட்டு முறுவல் செய்து, ''அப்பப்பா! என்ன கோபம் வருகிறது உங்களுக்கு? பின்னால் உங்களோடு என்ன பாடுபடப் போகிறேனோ?'' என்று பயந்தாற் போலப் பாவனை செய்து உள்ளே

அடிபட்டதை மறைத்துத் திரும்பியவளுக்குச் சட்டென ஒன்று தோன்றியது. ''ரஞ்சன், உங்கள் அண்ணன் யாரை எல்லாமோ அழைத்திருப்பதாகச் சொன்னீர்களே! அவர்கள் யார் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்ட போது அவளுக்கு நெஞ்சு தடதடத்தது.

''ஏன்?'' என்று அவன் மீண்டும் சந்தேகமாக நோக்கவும், ''இல்லை.. அவர்கள் யார்.. எப்படிப்பட்டவர்கள் என்று தெரிந்தால் அவர்... களுக்கு ஏற்றபடி சாப்பாடு செய்யலாமே என்று நான்.. அ.. அதற்காகத்தான் கேட்டேன். வேறு ஒன்றுமில்லை'' என்று சமாளித்தாள் அவள்.

''ச்சு. எல்லாம் உண்டான சாப்பாடு போதும். பாயசம், வடை, இனிப்பு இருக்கிற போது வேறு என்ன?''

''அதில்லை ரஞ்சன். செய்கிறதை யாரும் குறை சொல்ல முடியாமல் நன்றாகவே செய்து வி..டலாமே என்றுதான்''

சதானந்தனைப் பற்றி ஏதாவது விவரம் அறிந்து கொள்ளும் வேகத்தில் கேட்டு விட்டவளுக்குக் கேட்ட பிறகு தான் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறோம் என்பது புத்தியில் பட்டது.

பெரியம்மாவுக்கு உடம்பு சரியில்லை, தள்ளி வை என்று கூறிவிட்டு உடனேயே வருகிறவர்களுக்கு நன்றாகச் செய்து விடுவதாக உளறி விட்டாளே. இதை இவன் கண்டுபிடித்துக் கேட்டால் என்ன சொல்வது?

ஆனால் அவள் பேச்சில் இருந்த முரண்பாடு அவன் கருத்தில் படவில்லை போலும். முந்தையப் பேச்சின் தொடர்பாக, ''வந்தால் தானே குறை சொல்வதற்கு? இங்கே இந்தச் சமயம் இருக்கிற நண்பர்கள் என்று மூன்று பேரை அழைத்தானாம். ஆனால அவர்களில் ஒருவர் கூட ஊரில் இல்லை. அண்ணன் குடும்பம், எம்.டி. குடும்பம் நான் மட்டும்



தான்'' என்று விவரம் கொடுத்து திவ்யாவின் மனதை ஓரளவு குளிர வைத்தான்.

சதானந்தன் வர மாட்டான்! இன்னமும் இடையில் இருக்கும் இரண்டு நாட்களில் அவன் திரும்பி வருவது சாத்தியமே என்றாலும், அவனை அழைத்தவர்களே அவன் வர மாட்டான் என்று முடித்து விட்டார்களே. நிச்சயமாக வரமாட்டான் தான்.

மனோரஞ்சனைப் பார்த்து மெய்யாகவே முறுவலித்து விட்டுக் கிளம்பினாள் அவள். ஆனால் வீட்டை அடையும் முன் மறுபடியும் மனது கலங்கி விட்டது. ஒருவேளை வந்து விட்டால்?

ஒரு விளக்கம் சொல்லத் தொடங்கினால் அதை முழுவதும் நிதானமாகக் கேட்டு, உண்மை, பொய் அறியத் தெரியாத முட்டாள்களுக்கெல்லாம் பயந்து நடுங்க வேண்டியிருக்கிறது! என்ன அநியாயம்!

வீட்டிற்குப் போனால் பிரபா பிடுங்கி எடுத்தாள்.

நாளானால் போய்க் கொண்டே இருக்கிறது. சதானந்தனின் நிபந்தனையை நிறைவேற்ற, திவ்யா எதுவுமே செய்வதாகத் தெரியவில்லை. எதுவும் செய்யப் போவது இல்லை என்றால் அதை இப்போதே சொல்லி விடலாம். உறவினர் கூட்டம் வந்த பிறகு அவர்கள் முன்னிலையில் கேவலப்படுவதை விட இப்போதே நிம்மதியாகப் பிரபா உயிரை விட்டு விடுவாள்.

தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல் இருந்தது திவ்யாவுக்கு.

''என்னை இந்த விரட்டு விரட்டுகிறாயே! இன்னொன்று யோசித்தாயா? அந்த அமுதன் நேரில் வந்து கலாட்டா செய்தால் என்ன ஆகும்?''

அவன் கலாட்டா ஒன்றும் செய்ய மாட்டான் என்றாள் பிரபா உறுதியோடு. ''சினேகிதிக்கு அழைப்பு கொடுக்கப் போகிறேன் என்று அம்மாவிடம் சொல்லி விட்டு, வெளியே போய் அமுதனுக்கு டெலி:.போன் செய்து எச்சரித்திருக்கிறேன். ''இப்போது நீ பல் பிடுங்கிய பாம்பு. இதற்கு மேல் ஏதாவது கலாட்டா செய்ய முயன்றால் அவதூறு வழக்கு போட்டு உன்னைக் கேவலப்படுத்தி விடுவேன்'' என்று மிரட்டி வைத்திருக்கிறேன். அவனது இயல்புக்கு ஏற்றபடி அவனும் எதுவுமே நடவாதது போலப் பாவித்து, 'ரொம்ப பிசியாக இருப்பதால் உன் விஷயம் பார்க்க நேரமிராது என்று முடித்தான். ஒதுங்கி விட்டதாக நாசுக்காகச் சொல்லுகிறானாம் ராஸ்கல்.. பெரும் தொல்லை ஒழிந்தது என்று நிம்மதியாக இருக்கலாம் என்றால்.. திவ்யா, நான் ரொம்பவும் தொல்லைப்படுத்துவதாகத் தோன்றுகிறதா? நான் என்ன செய்யட்டும். என்னால் சாப்பிட, தூங்க.. ஒன்றுமே முடியவில்லையடி. எப்போது பார்த்தாலும் ஒரே பயமாக இருக்கிறதே!'' என்று அவள் அழவும் மற்றவளுக்கு மனம் இரங்கியது.

பிரபாவின் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்தாள். ''உன் கவலை என்னுடையது இல்லையா? எங்கே போனாலும் பாறையில் முட்டுகிற மாதிரி இருக்கிறதே! பெரியப்பாவிடம் நிச்சயத்தை தள்ளிப் போடச் சொன்னாலே கோபப்படுகிறார். மனோரஞ்சனிடம் போனால் அவர் வேறுவிதமாய்ப் பாய்கிறார். அந்த சதானந்தன் காலிலேயே விழுந்து அவகாசம் கேட்கலாம் என்றால் அவன் ஆளையே காணோம். எத்தனை தடவை 'டயல்' செய்தாலும் அங்கே மணி அடிக்கிறதே தவிர யாரும் எடுக்கக் காணோம். ஆனால் ஒரு சின்ன ஆறுதல் செய்தி. மனோவுடைய அண்ணனுடைய நண்பர்களில் ஒருவர் இந்த சதானந்தன். இன்று மனோ சொன்ன அளவில், அவர் அண்ணன் அழைத்த மூன்று



நண்பர்களுமே ஊரில் இல்லாததால் வெள்ளிக்கிழமை விசேஷத்துக்கு ஒருவருமே வர மாட்டார்கள் என்றார். அதாவது சதானந்தன் வரமாட்டார்...''

திருப்தி அடைய மறுத்து, ''ஒருவேளை அதற்குள் திரும்பி வந்து விட்டால்..'' என்றாள் பிரபா.

''அதே எண்ணத்தில் தான் நானும் அவருக்கு அடிக்கடி டெலி:.போன் செய்து பார்த்துக் கொண்டு இருக்கிறேன். அவர் முகவரிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். கடிதம் தபாலில் எங்கேனும் தொலைந்து விட்டால் என்ன செய்வது என்று இன்னொரு கடிதம் எழுதி அதை அங்குள்ள 'வாட்ச்மேனி'டம் கொடுத்து சதானந்தன் உள்ளே வரும் போதே கொடுக்க வேண்டும் என்று கூறி இருபது ரூபாய் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன். கடிதத்தைச் சதானந்தனிடம் சேர்ப்பித்து விட்டால் பிறகு முப்பது ரூபாய் தருவதாகவும் சொல்லியிருக்கிறேன். அமுதன் வெளியே போய் விடுகிற நேரம் என்று நீ சொன்ன நேரத்தில் தான் போனேன் என்றாலும், அவனைச் சந்திக்க நேர்ந்து விடுமோ என்று எவ்வளவு படபடப்பாய் இருந்தது தெரியுமா? ஆனாலும் செய்தாக வேண்டிய வேலை என்று பல்லைக் கடித்துக் கொண்டு போனேன். இதற்கு மேல் நான் என்ன செய்யட்டும், சொல்லு?''

''வேறு எதுவும் செய்வதற்கு இல்லைதான்'' என்றாள் பிரபா சோர்வுடன். மூளையற்று இந்தக் கடிதத்தை நான் எழுதாமல் இருந்திருந்தால், எந்த நேரம் தலை மேல் குண்டு விழப் போகிறதோ என்று இப்படி நடுங்கும் அவசியம் இருந்திராது. ஆனால், அப்பா, அம்மா சொல்வது போல நான் முட்டாள் தானே. ச்ச'' என்றாள் அவள் வேதனையோடு.

இதே எண்ணம் திவ்யாவுக்கும் தோன்றிய போதும், சும்மாவே வருந்துகிறவளை மேலும் வருத்த மனம் இன்றி,

அதைக் காட்டிக் கொள்ளாமல் ஒன்று விட்ட சகோதரிக்கு ஆறுதல் கூறி அமைதி அடையச் செய்தாள் திவ்யா.

சதானந்தனைப் பற்றிய எந்தத் தகவலும் கிட்டாமலே வெள்ளிக்கிழமை விடிந்தது.

அன்று காலையில் கூடப் பெரியம்மா அறியாமல், அடுத்த தெரு மருந்துக் கடைக்குப் போய், சதானந்தனின் நம்பருக்கு 'டயல்' செய்து பார்த்தாள் திவ்யா. வெறுமனே மணி மட்டும் அடித்துக் கொண்டிருக்கவும், அவன் இன்னமும் திரும்பவில்லை என்று ஊகித்துக் கொஞ்சம் நிம்மதியுற்றாள்.

பிரபா திருமணம் வரையிலும் கூட அவன் வராமல் இருந்து விட்டால் எவ்வளவோ நன்றாக இருக்கும். ஆனால் அவன் ஏன் வரவில்லை? அவனுக்கு ஏதும் விபத்து.. ஆபத்து ஏற்பட்டிருக்குமா என்று யோசித்தபடியே திரும்பி வந்தாள்.

அங்கே அவனுக்கு உதவிக்கு யாரும் இருக்கிறார்களோ என்னவோ? பாவம்! ஆனால் என்ன பாவம்? அன்று இரக்கமே இல்லாமல் எப்படிப் பேசினான்? படட்டும்..

என்னென்னவோ நினைத்தபடி படியேறியவளை திலகம் எதிர்கொண்டாள். குளிக்காமல் கொள்ளாமல் எங்கோ சுற்றிக் கொண்டு இருக்கிறாய்? போய் மடமடவென்று 'ஷாம்பூ' போட்டுக் குளித்து விட்டு வந்து ஃபேன் அடியில் நின்று தலையைக் காய வை. இன்னும் அரை மணி நேரத்தில் நீ ரெடியாகி விட வேண்டும். ஓடு'' என்று விரட்டினாள்.

விசேஷ நாளின் கலகலப்பு அவளையும் பற்றிக் கொள்ள அவசரமாக டவலை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் ஓடினாள் திவ்யா.

நாதஸ்வர காசெட் ஒருபுறம் முழங்கியது.

அழைக்கப்பட்டிருந்த விருந்தினர் - மகளின் திருமணத்துக்கு இடையில் ஒரே ஒரு நாளே இருந்ததால் அதிகம் பேரை அழைத்து வேலையைப் பெருக்கிக் கொள்ளவில்லை ரங்கநாதன். மிகவும் முக்கியமானவர்களாய் மொத்தமே பத்து பேரைத்தான் அழைத்திருந்தார். அவர்கள் வந்து அமர்ந்து ஜூஸ் குடித்தபடி ஏதோ பேசிக் கொண்டு இருந்தனர். சரியான நேரத்தில் மாப்பிள்ளை வீட்டார் - மனோரஞ்சன், அவனுடைய அண்ணன், அண்ணன் மனைவி, மகன் என்று நாலைந்து பேர் - வந்து சேர்ந்தனர்.



சன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்த பெண்கள் இருவரின் முகங்களும், நிம்மதியாய் மலர்ந்தன.

வெற்றிலை, பாக்கு, பழங்கள் அழகாக அடுக்கப்பட்டிருந்த இரு தாம்பாளங்கள் சித்திரப் பாயின் நடுவே வைக்கப்பட்டிருந்தன.

எதிரும் புதிருமாக அமர்வதற்காக திவ்யாவுடைய பெரியப்பாவும் மனோரஞ்சனின் அண்ணனும் எழுந்த போது வாயிலில் இன்னும் ஒரு கார் வந்து நின்றது. வெண்ணிறக் கார்.

காரில் இருந்து இறங்கி வேகமாக உள்ளே வந்தவனைக் கண்டதும், ''வா, சதா சரியான நேரத்தில் வந்து விட்டாயே. உட்கார்'' என்று உபசரித்தான் மனோரஞ்சனுடைய அண்ணன்.

அடுத்த அறையில் குனிந்த தலை நிமிராமல் அவள் தான் மணப்பெண் போல அமர்ந்திருந்த அண்ணியிடம் பேச முயன்று கொண்டிருந்த பெண்கள் இருவரும் திடுக்கிட்டு நிமிர்ந்தனர்.

விரைந்தோடி வந்து புதிதாக வந்தவனை எட்டிப் பார்த்தனர்.

இவன் தானா அந்த சதானந்தன் என்ற கேள்விக்கு அவசியமே இல்லாது திவ்யா விழி அகல நிற்கவும், நெஞ்சை அழுத்திக் கொண்டு சுவரில் சாய்ந்தாள் பிரபா.

விழிகளில் கூர்மையுடன் திவ்யாவையே நோக்கியபடி, சட்டைப்பையில் இருந்த கடிதத்தை எடுத்து மெல்லப் பிரிக்கத் தொடங்கினான் சதானந்தன்.

கால்கள் தொய்யச் சரிந்து கொண்டிருந்த பிரபாவின் வெளுத்த முகத்திற்கு திவ்யாவின் பார்வை ஒருதரம் பாய்ந்து மீண்டு, மறுபடியும் சதானந்தனிடம் திரும்பியது.

அவனது புருவங்கள் கேள்விக்குறியாய் உயர்ந்தன.

சட்டென ஹாலுக்குள் அடியெடுத்து வைத்து, "பெரியப்பா எல்லாவற்றையும் இத்தோடு நிறுத்தி விடுங்கள். எனக்கு... எனக்கு இப்போது திருமணம் வேண்டாம்" என்று தெளிவாக உரைத்தாள் அவள்.

எல்லோரும் திகைத்து நிற்க, கண்ணாம்பாய் வெளுத்திருந்த பிரபாவின் முகத்தில் புத்துணர்வு பரவியது.

## 10

சற்று நேரம் அந்த இடத்தில் ஊசி விழுந்தால் கூடப் பேரொலியாய்க் கேட்டிருக்கும். அப்படி ஒரு நிசப்தம் நிலவியது.

உடனேயே அதற்கு ஈடு செய்வது போல எழுந்த கசமுசாவை மீறிக் கொண்டு, என்னடீ கண்ணா, என்ன உளறுகிறாய்? "திவ்யா, என்னம்மா உளறல் இது?" "என்னடீ உளறுகிறாய்? திமிரா?" என்று மூன்று குரல்கள் உரக்க ஒலித்தன.



"திமிரா?" என்று ஆத்திரமாய்க் கேட்டவனிடம், கொஞ்சம் புரிந்து கொள்ளேன் என்று விழிகளால் யாசித்தாள் திவ்யா.

"தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்கிற மாதிரி, திவ்யா, என்னடா கண்ணு இப்படிப் பேசி விட்டாய். போ.. ஏதோ தெரியாமல் பேசி விட்டேன் என்று மாப்பிள்ளையிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள். சீக்கிரம்" என்று மகளின் தோளைப் பற்றி உலுக்கினாள் திலகம்.

"என்ன உளறல் இது" என்று அதட்டியதோடு திகைத்து நின்ற ரங்கநாதன் உணர்வு பெற்றவராக, "ஆ..ஆமாம் மாப்பிள்ளை. சின்னவள் என்று செல்லம் கொடுத்து வளர்த்தது. சிறுபிள்ளைத்தனமாக உளறி விட்டாள். பெரிய மனது பண்ணி மன்னித்து விடுங்கள். எல்லோரும் உட்காருங்கள். நீங்களும் உட்காருங்கள் மாப்பிள்ளை" என்று வேண்டினார்.

"உட்காருவதா? அதற்கு நான் ஒன்றும் மான ஈனம் இல்லாத மடையன் இல்லை. கிளம்புங்கள் அண்ணா.. அன்றைக்கே யோசித்தேன், ஏன் நிச்சயதார்த்தத்தை தள்ளி வைக்கச் சொல்லுகிறாள் என்று. இப்போது புரிகிறது. புதியவன் நன்றாகவே மாட்டி விட்டானா? லட்சாதிபதியா? கோடீசுவரனா? எதற்கும் கோடீசுவரனாகவே பார்த்து விடு. மீண்டும் இதுபோல் நிறுத்த வேண்டியிராது. அல்லது அதை விடப் பிரமாதமான ஐடியாவாகத் திருமணம் இல்லாமலே சேர்ந்து வாழத் தொடங்கி விடலாம். இந்த மாதிரி விழா வைக்கும் செலவு கூட இராது"

தீ மழை பொழிந்தான் மனோரஞ்சன்.

என்ன, ஏது என்று ஒருவார்த்தை விசாரியாமல் தேளாய்க் கொட்டுகிறானே!

திவ்யா அயர்ந்து நிற்க, சதானந்தன் கடிதத்தை மடித்துப் பையினுள் பத்திரப்படுத்துவதைப் பார்த்து விட்டு, தங்கைக்குத் துணை வந்தாள் பிரபா.

"அவர் இவ்வளவு பேசுகிறார். அவரிடம் போய்க் கெஞ்சுவதா அப்பா? திவுக்குட்டியின் அழகுக்கும், படிப்புக்கும் நான், நீ என்று போட்டு போட்டுக் கொண்டு வருவார்கள். போய்த் தொலையட்டும் என்று விடுங்கள். அப்பா, அம்மா நீங்கள் முதலில் அவளை விடுங்கள். திவ்யா ஒன்று செய்தால் அதற்குக் காரணம் இருக்கும். இப்போது அவளை ஒன்றும் சொல்லாதீர்கள்" என்று பெற்றோரைச் சமாதானம் செய்ய முயன்றாள்.

ஆனால் ரங்கநாதனுக்குப் பொறுக்கவில்லை. "ஒரு திருமணம் கூடுவது என்றால் சும்மாவா? சின்னப்பிள்ளைகள் ஒன்றும் தெரியாமல் உளறுகிறீர்களே" என்று அவளை அடக்கி விட்டு மனோரஞ்சனிடம் ஓடினார்.

ஆனால் அவர் என்ன கெஞ்சியும் பிடிவாதமாகத் தன் அண்ணன் குடும்பத்தை அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டான் அவன். "இனி அவள் வேலைக்கு வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றதோடு.

நடந்து முடிந்து விட்ட சம்பவத்தின் அளவை அப்போதுதான் முழுமையாக உணர்ந்த திவ்யா கைகளில் முகம் புதைத்து அழுதபடியே அவளது அறைக்கு ஓடினாள்.

அவள் பின்னோடு வந்து, தோளைத் தொட்டு, "சாரி, திவும்மா" என்றாள் பிரபா பரிவாக.



இவளுக்கு உதவப் போன தன் பலன் என்ற எண்ணத்தை ஒதுக்க முடியாததாலேயே, பிரபாவின் பரிவையும் வருத்தத்தையும் திவ்யாவால் ஏற்க முடியாது போயிற்று.

பிரபாவின் பிடியிலிருந்து மெல்ல விலகி, சன்னல் அருகே சென்று வெளியே வெறித்தபடி, "நீ எதற்கும் பெரியம்மாவைப் போய்ப் பார். எதிர்பாராத அதிர்ச்சி, அவர்கள் உடம்பைப் பாதித்து விடக் கூடாது" என்று கூறி அடுத்தவளை அனுப்பினாள்.

பிரபாவின் காலடிச் சத்தம் தேய்ந்து மறையும் வரை அதையே கவனித்தபடி நின்றாள். ஓசை நின்ற பிறகே சுற்றுப்புறம் நினைவு வந்தவளாய்ச் சன்னலை விட்டுத் திரும்பிய போதுதான் அந்த வெண்ணிறக் கார் அவள் கண்ணில் பட்டது.

இரண்டு வீடு தள்ளி ஒரு காலி மனையின் முன்னே மரத்தடியில் காரை நிறுத்தியிருந்தான் அவன்.

இன்னும் என்ன? மடமடவென்று கீழே சென்றாள் திவ்யா.

பக்கத்து அறையில் திலகம் ஓய்ந்து கிடப்பதும், பிரபா தாயின் முதுகை வருடியபடி அமர்ந்திருப்பதும் தெரிந்தது.

பெரியப்பா, மற்றவர்கள் சுவடே தெரியவில்லை. மாப்பிள்ளை வீட்டாரிடம் கெஞ்சப் போயிருப்பார்களோ?

அனாதைகளாய் கிடந்த தாம்பாளங்களைக் காணவும் அவள் மனம் கொதித்தது.

விடுவிடுவென்று வேகமாக வெளியே சென்றாள்.

அவளது வரவை எதிர்பார்த்தவன் போலக் காரில் இருந்து இறங்கினான் சதானந்தன்.

"போதுமா? திருப்தி தானா? எல்லாவற்றையும் அழித்து என் பெரியம்மாவை வேதனைப்பட வைத்து விட்டீர்களே! என்று பொருமினாள் திவ்யா.

லேசாகத் தோளைக் குலுக்கினான் அவன். "இவ்வளவுக்கு வராமல் முன்பே இதை நிறுத்தியிருக்க வேண்டியது உன் பொறுப்பு. வெளியூர் போனவன் வராமலே போய் விடுவான் என்று மெத்தனமாய் இருந்தாய் போல.. ஆனால் என்னிடம் ஒத்துக் கொண்ட நிபந்தனையை நிறைவேற்றாமல் ஏமாற்ற முயற்சிக்கிறவர்களை சும்மா விட்டு விடுகிற முட்டாள் நான் அல்ல. இப்போது நான் நின்றதும் அதைச் சொல்லி விட்டுப் போகத்தான். மனோரஞ்சனைத் தொடர்ந்து உன் பெரியப்பா சிலரோடு போயிருக்கிறார். 'அறியாப் பெண்.. உளறி விட்டாய்' என்று பூசி மெழுக ஏற்பாடு என்று தெரிகிறது. ஆனால் மனோரஞ்சன் இளகுவான் என்று தோன்றவில்லை. அப்படி ஒருவேளை திரும்பி வந்தாலும் மேற்கொண்டு திருமண நடவடிக்கை ஏதும் தொடர்வதாகத் தெரிந்தால்... சட்டைப்பையைத் தட்டி "கடிதம் இன்னமும் என்னிடம் தான் இருக்கிறது.. மறக்க வேண்டாம்"

அவனை வெறித்துப் பார்த்தாள் திவ்யா.

இவ்வளவு பெரிய இடியை அவள் தலையில் போட்டு விட்டு இன்னமும் மிரட்டுகிறானே இவன்.

வளமான ஓர் எதிர்காலம் அவளுக்குக் கிட்டாமல் செய்ததே அநியாயம்.

அதற்கு மேல் பெரியப்பா பெரியம்மாவுக்கு எவ்வளவு அவமானம். அவரை விட வயதில் எவ்வளவோ சின்னவனான மனோரஞ்சனிடம் போய்க் கெஞ்சுகிற அளவுக்கு அவரை இறக்கியாயிற்று. அங்கே பெரியம்மா படுத்துக் கிடக்கிறார்கள். இதை விட மேலாக அவர்கள்



இருவரிடமும் இப்போது இவள் என்னவென்று விளக்கம் சொல்லுவாள்?

இவ்வளவையும் செய்து விட்டு இன்னமும் மிரட்டுகிறானே! மற்றவர்களின் துன்பம் பற்றிச் சற்றும் அக்கறையே இல்லாமல், இவன் என்ன மனிதன்?

அவள் பார்வையில் என்ன கண்டானோ? லேசான கேள்விக்குறியாக ஒற்றைப் புருவம் உயர, "என்ன விஷயம்? கடிதம் இருப்பதே இத்தனை நாள் மறந்து விட்டதா?" என்று கேட்டான் அவன்.

கடிதம்! இரக்கம் இல்லாத ராட்சசன்! "என் கடிதம் பார்த்த பிறகுமா இப்படிச் செய்தீர்கள்?" என்றாள் அவள் வெறுப்புடன்.

"கடிதம் பார்த்த காரணத்தினால் தானே இப்படிச் செய்யும்படி ஆயிற்று" என்றான் அவன் பதிலாக.

மட்டம் தட்டுகிறானாக்கும்!

"ச்சு.. இந்தக் கடிதத்தைச் சொல்லவில்லை. நீங்கள் வந்ததும் தரும்படி உங்கள் காலனி வாட்ச்மேனிடம் கொடுத்திருந்த கடிதம். அதைச் சொன்னேன்" என்று அவன் குரலிலேயே விளக்கினாள் திவ்யா.

ஆனால், "இன்னொரு கடிதமா? அதில் தொடக்கம் எப்படி? காதல் தேவன் தானா அல்லது காதல் கடவுளா?" என்று மேலும் மட்டம் தட்டினான் சதானந்தன்.

இது தெரு. இப்போதே யாரேனும் பார்த்துக் கொண்டு இருக்கலாம்.

பெருமுயற்சி செய்து ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "இல்லை. நெருங்கி வந்து விட்ட இந்த விசேஷத்தை நிறுத்த முடியவில்லை. அதனால் கொஞ்சம் பொறுத்துக்

கொள்ளும்படிக் கேட்டு எழுதிய கடிதம்'' என்றாள் அவள் இறுகிய குரலில்.

''இல்லை. நான் ஃப்ளாட்டுக்குப் போகவில்லை. பம்பாயிலிருந்து 'ஜெட் ஏர்வே'யில் திரும்பி வந்தவன், நேரே இங்கேதான் வந்தேன். ஆனால் உன் இன்னொரு கடிதத்தைப் பார்த்திருந்தாலும் அதற்கு அவ்வளவு மதிப்புக் கொடுத்திருப்பேன் என்று சொல்வதற்கில்லை. எப்படியும், இதற்கு மேல் இந்தத் திருமண ஏற்பாடு தொடராமல் பார்த்துக் கொள்வது உன் பொறுப்பு''

பிசினஸ் பேச்சு போலக் கறாராக பேசப் பேச திவ்யாவுக்கு மனம் தீயாய் எரிந்தது. இந்தக் கடிதமே அவள் எழுதியது அல்லவே! இது தெரியவரும் போது இவன் முகம் எப்படி இருக்கும்? அவன் குன்றிக் குறுகுவதைக் கண் கொட்டாமல் பார்த்து ரசிக்க வேண்டும்! கட்டாயமாய்!

''மீண்டும் என்ன?'' என்று அவன் கேட்ட பிறகு தான் மறுபடியும் அவளை வெறித்தபடி நிற்பது புரிந்து, ''இந்தக் கடிதம் என்னுடையது அல்ல என்று நான் நிரூபித்து விட்டால் உங்கள் நிபந்தனையின் விளைவுகளை மாற்றி முன்போல் சீராக்கி விட உங்களால் முடியுமா?'' என்று அவனைப் போலவே பிசினஸ் குரலில் கேட்டாள் அவள்.

அவன் அலட்சியமாகச் சிரித்து, ''கத்தரிக்காயில் நெய் வடிவதை நேரில் பார்க்கிற போது அதுபற்றி யோசிக்கலாம்'' என்று விடைபெற்றுக் காரில் ஏறிக் கிளம்பினான்.

என்ன அலட்சியம்! என்று நெஞ்சு கொதித்தது திவ்யாவுக்கு. இருக்கட்டும். இன்னும் சில நாட்கள். அதன்பின் இதற்கு வட்டியும் முதலுமாக அவள் கொடுக்கத்தானே போகிறாள்! ஆனால் இப்போது...

சொன்னது போலவே ஒருவரும் அறியாமல் மீண்டும் அறையை அடைந்தாள் திவ்யா.



அலங்காரங்களைக் களைகையில், புதுச்சேலையை மாற்றுகையில் மனம் தவியாய்த் தவித்தது. அதை விடவும் மேலாக இப்போது, வளர்த்த பெற்றோருக்கு என்னவென்று விளக்குவது என்பதே பெரும் பிரச்சினையாக உணர்ந்தாள்.

ரங்கநாதன் தனியாகத் தான் திரும்பி வந்தார். வந்ததும் நேரே மனைவியிடம் சென்றார். ''இதோ பார், நாளநின்று உன் மதளுக்குக் கல்யாணம். அதை நல்லபடியாக நடத்துவதற்கு நீ உன் உடம்பை நல்லபடியாக வைத்துக் கொள்ள வேண்டும். சும்மா மனதை அலைபாய விட்டுப் படுத்துக் கொண்டால் திருமண வேலை எப்படி நடக்கும். மனதைத் திடப்படுத்திக் கொண்டு எழுந்திரு. முதலில் எனக்குச் சாப்பாடு வை'' என்றார் கடினமான குரலில்.

திலகம் மெல்ல எழ, ''இதோ, நான் எடுத்து வைக்கிறேன் அப்பா'' என்று ஓடினாள் பிரபா.

அவள் செல்வதையும், அவளது துடிதுடிப்பான சுபாவத்துக்கு நேர் மாறாக, ஓசையற்று மெல்லப் படியிறங்கி வந்து, கதவோரமாய் திவ்யா நிற்பதையும் கவனித்து, ''புத்திகட்டை என்று எண்ணியதெல்லாம் புத்தியோடு நடக்கிறது, புத்திசாலி என்று எண்ணியது ஒரே மருங்கட்டையாகி விட்டது'' என்றார் வெறுப்புடன்.

''அங்கே.. அங்கே என்ன நடந்தது?''

''வேறு என்ன நடக்கும்?'' என்றார் அவர் கசந்த குரலில். ''ஆசையாக வளர்த்த பெண் முகத்தில் கரி பூசினாள் என்றால் அவன் சாணியே அடிக்கிறான். அழகான பெண் என்றாலே அகலிகை என்பதை மறந்து இவளை மணக்க வந்தது என் முட்டாள்தனம். காசு தருகிறேன், கம்பெனி கொடுக்க வா என்று அழைத்தாலே ஓடி வந்திருப்பாளாம். அவளை விடப் பணக்காரன் எவனோ கிடைத்து விட்டதால் இவனைக் கழட்டி விடுகிறோமாம். வீட்டுப் பெண் அழகாயிருந்தால் பணம் சம்பாதிப்பது எவ்வளவு சுலபம் என்கிறான்''

"அவனைச் சும்மாவா விட்டு வந்தீர்கள்?" என்று திலகம் ஆத்திரத்துடன் கேட்டாள்.

"வேறு என்ன செய்வது? கடைசி நேரத்தில் கல்யாணத்தை இப்படி நிறுத்தியதற்கு நாம் தான் வேறு என்ன காரணம் சொல்வது? கைநீட்டினால் ரசாபாசம் ஆகிவிடுமே என்று சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு திரும்பி வந்தேன்" என்றார் அவர் குரல் இறுக.

பெற்ற மகளாய் வளர்த்த பெரியப்பாவுக்கு என்ன மாதிரி தலைக்குனிவைத் தேடிக் கொடுத்து விட்டாள்! நிபந்தனை என்று ஏற்றவள், முடியாது, வேண்டாம் என்று முன்பே பிடிவாதம் பிடித்து இந்த விழாவை நிறுத்தியிருந்தால் இந்த அவமானம் நேர்ந்திராதே!

"என்னை மன்னித்து விடுங்கள் பெரியப்பா!" என்று கண்ணீருடன் அவர் காலில் விழுந்தாள் திவ்யா.

"சரி..சரி.. எழுந்திரு. திவ்யா" என்றார் ரங்கநாதன். "நீ ஏதோ முடிவு செய்து விட்டாய். அதை முன்கூட்டியே தெரிவித்திருந்தால் சில அனாவசியப் பேச்சுக்களைத் தவிர்த்திருக்கலாம். போகட்டும். நடந்து முடிந்த பிறகு அதைப் பற்றிப் பேசுவது முட்டாள்த்தனம். விடு. எல்லோருமே இந்தப் பேச்சை இனி எடுக்க வேண்டாம். நாளன்று பிரபா திருமணத்தை மட்டும் மனதில் கொண்டு, அதை ஒழுங்காகச் செய்து முடிப்போம்" என்று முடித்தார்.

அவரது குரலிலும் பேச்சிலும் இழையோடிய சிறு ஒதுக்கத்தை உணர்ந்து உள்ளூர வேதனைப்பட்டாள் திவ்யா. அவருடைய மகளுக்காகத்தான். அவருடைய மகளின் திருமணம் தடைப்பட்டு விடாமல் இருப்பதற்காக திவ்யா கொடுத்த விலை தான் இது. ஆனால் எதையும் வெளியிட்டுச் சொல்ல மாட்டாமல் வேதனையை விழுங்கிக் கொண்டு விலகிப் போனாள் அவள்.



வீட்டுத் தலைவரின் ஆணைக்கிணங்க, திவ்யாவின் திருமண விஷயம் அதற்கு மேல் அந்த வீட்டில் மறக்கப்பட்ட அல்லது மறக்கடிக்கப்பட்ட விஷயமாகிப் போயிற்று. ஆனால் கூடவே பெரியப்பாவின் 'திவுக்குட்டி'யும் மறைந்து போனது திவ்யாவின் மனதைப் பாதித்தது.

ஆனால் நல்லவேளையாக அதிலேயே உழன்று கொண்டு இருக்க முடியாமல் போயிற்று.

வினாடிகள் நிமிடங்களாகி, மணிகளாகி, நாட்களாகவும் மாற, ஞாயிற்றுக்கிழமை பொழுது விடிந்து, பிரபாவின் திருமணம் எந்தவிதச் சிக்கலும் இல்லாமல் நல்லபடியாக நடந்தேறியது.

மணமகன் அருகில் பிரபா பேரழகியாய் ஜொலித்தாள். மகளைப் பூரிப்புடன் நோக்கி, பெரியப்பாவும் பெரியம்மாவும் ஆனந்தக் கண்ணீர் வழிய நிற்பதைக் காண்கையில் திவ்யாவுக்குத் தன் இழப்பு மறந்தே போயிற்று.

இதற்கு என்ன விலை கொடுத்தாலும் தகுமே!

மாலையில் வரவேற்பின் போது தங்க நிற 'டிஷ்யூ' சேலையில் தேவ கன்னிகை போல நின்று கொண்டிருந்த பிரபாவின் முகம் சட்டெனப் பேயறைந்தாற் போல மாறுவதைக் கண்டு, அவள் பார்வையைத் தன் பார்வையால் தொடர்ந்து திருமண மண்டபத்தின் வாயிலை நோக்கினாள் திவ்யா.

அவளுக்கும் தூக்கி வாரிப் போட்டது.

ஏனெனில் தன் உயரத்தால் அக்கம் பக்கம் நின்றவர்களையெல்லாம் குள்ளமாக்கிக் கொண்டு கம்பீரமாய் வந்து கொண்டிருந்தவன் சதானந்தன்!

# 11

திருமணம், அது தொடர்பான சடங்குகள் நடந்த முழு நேரமும் பிரபாவின் அருகிலேயே நின்று அவளது தேவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தவள் திவ்யாதான். மாலை வரவேற்பின் போதும், மணப்பெண்ணின் தோழியாய், வந்தோரை வரவேற்பதும், பிரபாவின் கையில் கொடுக்கப்பட்ட பரிசுப் பொருட்களை வாங்கி, பின்புறமாய் இருந்த மேசையில் அடுக்குவதுமாகப் பிரபாவின் அருகிலேயே நின்று கொண்டிருந்ததால் அவளது முகமாற்றத்தைத் திவ்யாவால் உடனே கவனிக்க முடிந்தது.

காரணத்தை உணர்ந்ததும் அவளுக்கும் கலக்கமே. ஆனால் கலவரமுற்று, அவளது கையைப் பற்றிய பிரபாவின் கை நடுங்குவதை உணர்ந்ததும் உடனே நிமிர்ந்தாள்.

ஆதரவாய், பிரபாவின் கையை அழுத்தி விட்டு, "முகத்தை நேராக வைத்துக் கொள். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று அவள் காதில் முணுமுணுத்தாள்.

சற்றுத் தொலைவில் யாருடனோ பேசிக் கொண்டிருந்த பெரியன்னையை விளித்து, கொஞ்ச நேரம் பார்த்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு, வாயிற்புறம் நோக்கி விரைந்தாள்.

வரவேற்பில் நின்று, வருவோருக்குப் பன்னீர் தெளித்து, பூவும் கற்கண்டும் கொடுத்துக் கொண்டிருந்த சிறுமியரிடம் ஏதோ பேசிச் சிரித்து, அவர்களில் வயதில் மிகவும்



இளையவளான ஓர் ஐந்து வயதுச் சிறுமியின் குண்டுக் கன்னத்தில் செல்லமாகத் தட்டியவனைக் கண்டு திவ்யா மீண்டும் பிரமித்தாள்.

இவனால் இப்படிக் கூடச் சிரிக்க முடியுமா? என்ன அழகான, வெண்ணிறப் பல்வரிசை!

பார்த்துக் கொண்டு இருக்கையிலேயே, வரவேற்புக் கும்பலில் வயதில் பெரியவள் - பதினைந்து, பதினாறு வயதிருக்கும் - அவள் பன்னீரை மீண்டும் சதானந்தன் மேல் தெளித்து அவனது கவனத்தை ஈர்க்க முயல்வதையும், அவனும் அதை ஏற்று அவளை நோக்கி ஒரு புன்னகை செய்வதையும் காண திவ்யாவின் மனம் கடுத்தது. இவ்வளவு சின்னப்பெண்ணிடம் போய் இளிக்கிறானே! தன்னை வைத்துப் பிறரை எடை போட்டதால் தான் அவளை அவ்வளவு மட்டமாக எண்ணினான் போலும்.

புன்முறுவலுடனேயே உள்ளே திரும்பியவன், முறைத்த வண்ணம் நின்ற திவ்யாவைக் கண்டதும் என்ன என்பது போலப் புருவத்தை உயர்த்தினான்.

வீடியோ வாயில்புறம் திரும்புவதை உணர்ந்து, அவசரமாக முகபாவனையைச் சீர் செய்து வரவேற்பது போலப் புன்னகை காட்டினாள் திவ்யா.

விளக்கொளி அகன்றதுமே, "இங்கே எப்படி வந்தீர்கள்?" என்று அடிக்குரலில் சீறினாள்.

சிறு வியப்பு காட்டி, "வாயில் வரை காரில்.. பிறகு நடந்து வந்தேன். ஏன் கேட்கிறாய்?" என்று விசாரித்தான் அவன்.

அவனது கண்களில் இருந்த கேலி அவளது சீற்றத்தை அதிகப்படுத்தியது. ஆனால் அதை அந்தக் கூட்டத்தில் வெளிப்படையாகக் காட்ட முடியாமல், வலுக்கட்டாயமாய், கஷ்டப்பட்டு முகத்தில் புன்னகை காட்டியபடி, "புரியாதது போல நடிக்க வேண்டாம். இங்கே இப்போது எதற்கு வந்தீர்கள்?" என்றாள் தாழ்ந்த குரலிலேயே.

அவன் அவளை நேராக நோக்கி, "திருமண வரவேற்பில் கலந்து கொள்ள" என்றான் அப்பாவி போல.

"அழையா விருந்தாளியாகவா?" என்று வெடுக்கெனக் கேட்டாள் திவ்யா.

"அழைப்பு இருக்கிறதே" என்றான் அவன் சாவதானமாக. "உன் பெரியப்பா கூட அழைத்தாரே!"

"பொய்! பொய்! பெரியப்பாவுக்கு நீங்கள் யாரென்றே தெரியாது. எப்படி அழைத்திருக்க முடியும்?"

"வேண்டுமானால் உன் பெரியப்பாவிடமே கேட்டுப் பாரேன்" என்றான் அவன் இலகுவாக.

எப்படி முடியும்? பெரியப்பாவிடம் போய் இவனை எப்படி அறிமுகம் என்று கூறி என்ன விசாரிக்க முடியும்? இதை உணர்ந்து தானே இவனும் பேசுகிறான்? இவனை...

தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள அவள் சிரமப்படுவதைச் சில விநாடிகள் வேடிக்கை பார்த்து விட்டு, "மெய் தான் திவ்யா. முந்தா நாள் பார்த்தவர் தானே. நேற்று ஓர் இடத்தில் சந்திக்க நேர்ந்த போது இன்று கட்டாயம் வர வேண்டும் என்று அழைத்தார். பாவம், ஏமாளி என்றாலும்



பெரியவர் ஆயிற்றே.. வந்தேன். மற்றபடி... உன் ஆறுதலுக்கு ஒன்று சொல்லட்டுமா? என் நிபந்தனை மீறப்பட்டதாக நினைக்க எந்தவித முகாந்திரமும் இல்லாதபடியால் எந்த வெடியும் வெடிக்கப் போவதில்லை. இப்போது வழியை விட்டால் பரிசைக் கொடுத்து விட்டு, மரியாதைக்காக ஒரு வாய் சாப்பிட்டு விட்டு என் வழியே போய்க் கொண்டே இருப்பேன்" என்றான் அவன். "என்னை விட்டுப் பிரிய மனம் இல்லாவிட்டால் நீயும் என்கூடவே வரலாம்"

நின்ற இடம் நெருப்பாகி விட்டது போல அவசரமாக விலகிப் போனாள் திவ்யா. கையில் கடிதம் இருக்கிறதல்லவா? எல்லாம் கிண்டலாகத்தான் இருக்கும்!

மேடைக்குச் சென்று, அவன் பரிசை மணமகன் கையில் கொடுப்பதைப் பார்த்து விட்டு, மணப்பெண்ணின் தந்தை அழைத்ததற்கு மணமகனிடம் பரிசைக் கொடுக்கிறான் மடையன் என்று ஏளனமாய் எண்ணினாள்.

அடுத்துக் கிடைத்த முதல் தனிமையில், "ஏன்? அந்த சதானந்தன் எதற்கு வந்தான்?" என்று பதறினாள் பிரபா.

விவரம் அறிந்ததும் 'அப்பாடி' என்று பெருமூச்சு விட்டாள்.

திவ்யாவும் தன் பங்குக்குப் பிரபாவிடம் நினைவூட்டினாள். "தேனிலவு முடிந்து வருமுன் எப்படியும் உன் கணவரிடம் விஷயத்தைச் சொல்லி விடுவாயல்லவா, பிரபா? அதன் பிறகு தான் மிஸ்டர் சதானந்தனிடம் உண்மையை விளக்க முடியும். அவர் மூலம் ரஞ்சனிடம் கூட..." என்றவளுக்கு அன்று மனோரஞ்சன் பேசியது

நினைவு வந்தது. இல்லை. அது ஒரு கோபவெறியில் சொன்னது. பெரிதாக நினைக்கக் கூடாது என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொள்ள முயன்றவாறே "மனோரஞ்சனிடமும் ஓரளவு சொல்லி எல்லாவற்றையும் சரிப்படுத்த வேண்டும்" என்றாள்.

"எனக்காக இவ்வளவு பெரிய தியாகம் செய்திருக்கிறாயே, உனக்காக நானும் ஏதாவது நிச்சயமாய்ச் செய்வேன்" என்று உறுதி கூறினாள் பிரபா.

அன்றிரவே ஸ்டார் ஓட்டலில் கழித்து விட்டு மணமக்கள் மறுநாளே தேனிலவு கிளம்புவதாக ஏற்பாடு.

வீட்டில் வளைய வந்த ஒரு நபர் இல்லாதது மற்ற மூவரையுமே பாதித்தது. அனாவசியமாய் எதற்கும் பிரபாவை அழைத்து விட்டு, சோகமாய் நின்றனர்.

திருமண வேலைக்காக லீவு எடுத்ததையும் சேர்த்துச் செய்வதாகக் கூறி அலுவலக வேலைக்குள் புதைந்தார் ரங்கநாதன். வீட்டில் இருந்த நேரத்திலும் திவ்யாவிடம் அவர் பழைய நெருக்கம் காட்டாதது அவளை வெகுவாகத் துன்பப்படுத்தியது.

இன்னும் சில தினங்கள்! பிரபா திரும்பி வந்து உண்மை அறிவித்த பின், முன்னிலும் அதிகமாகத் தலையில் தூக்கி வைத்துக் கொள்ளப் போகிறீர்கள், பெரியப்பா என்று உள்ளூரச் சொல்லித் தன்னைத் தானே தேற்றிக் கொள்வாள் அவள்.

வேலை மிகுதியால் திலகத்தின் உடல்நிலை சற்று சீர்கேடு உற்று, வைத்தியமும் ஓய்வுமாக மெல்லத் தேறியது.



சமையலிலும், இங்குமங்குமாய் இறைந்து கிடந்த பொருட்களை ஒழுங்குபடுத்துவதிலுமாகப் பொழுதைப் போக்கினாள் திவ்யா.

மனோரஞ்சன் தான் அவளை வேலைக்கு வரக் கூடாது என்று கூறிவிட்டானே. மானேஜர் உத்தரவிட்ட பிறகு எப்படிப் போவது? ஆனாலும் அன்று பட்டாசு வெடிப்பது போல என்னமாய்ப் பேசி விட்டான்!

நத்தையாய் ஊர்ந்த பத்துநாட்களை நெட்டித் தள்ளி விட்டு, அன்று பிரபாவின் வருகைக்காக வீட்டை அலங்காரம் செய்து கொண்டிருந்தாள் திவ்யா.

மகளையும் மருமகனையும் வரவேற்று அழைத்து வர ரங்கநாதன் ஸ்டேஷனுக்குச் சென்றிருந்தார்.

"மெல்ல ஒரு சொம்பு ஊற்றிக் கொண்டு வந்து விடுகிறேன்" என்று குளியலறைக்குள் சென்றிருந்தாள் திலகம்.

திலகம் குளிக்கச் சற்று நேரம் அதிகம் ஆகும். பிரபா வருமுன் பெரியம்மா குளித்து வந்து விட வேண்டும் என்ற எண்ணத்தில், திலகம் குளிக்க வெந்நீர் எடுத்து வைத்து விட்டு, "சரியாகப் பத்து நிமிடம். அதற்குள் வெளியே வரவில்லை என்றால் கதவை உடைத்துக் கொண்டு நான் உள்ளே வந்து விடுவேன்" என்று மிரட்டி அனுப்பியிருந்தாள் திவ்யா.

டி.வி. திரையில் கொஞ்சம் தூசு படிந்தாற் போலத் தோன்றவே அதைத் துணி கொண்டு திவ்யா துடைத்துக் கொண்டு இருந்த போது வாயிற்புறமாகக் கார் ஒன்று வந்து வேகம் குறைப்பது போலத் தோன்றியது.

முதல் தடவையாக மருமகனை அழைத்து வருவதால் பெரியப்பா டாக்சி பிடித்திருப்பார் என்று அவள் எட்டிப் பார்த்த போது வீட்டு முன் காரைக் காணோம்.

ஏதோ தோன்றவும் வாயிலுக்கு வந்து எட்டிப் பார்த்தாள். அவன் தான். அன்று போலவே காலி மனையின் முன்னே நின்ற பூவரச மரத்தடியில் காரை நிறுத்திப் பூட்டிக் கொண்டிருந்தான்.

இந்த வேளையில் இவன் எதற்காக வந்தான் என்று ஒருகணம் கலங்கினாள் திவ்யா. ஆனால் உடனேயே அவன் இப்போது வந்தது நல்லதே என்று தோன்றி விட்டது.

பெரிய நீதிபதி போல அவ்ளைக் குற்றவாளியாக்கித் தண்டனை கொடுத்தானே. இப்போது பிரபாவின் வாய் மூலமாகவே தன் தவறு அறிந்து கூனிக் குறுகட்டும்!

ஆனால் பெரியப்பா பெரியம்மா இருவரும் இருப்பார்களே, எல்லா விவரமும் — முக்கியமாக அந்தக் கடிதத்தின் வாசகம் முழுமையாகத் தெரிந்தால் இருவரும் வருத்தப்படுவார்களே என்று வேதனை தோன்றியது.

ஆனால் உடனேயே, பிரபா தன் கணவரிடம் உள்ள நிலைமையைச் சரியாக விளக்கியிருப்பாள்; அதனால் அவள் கணவர், ஓர் அசட்டுத்தனத்தில் என் மனைவி எழுதிய கடிதம். வெறும் சிறுபிள்ளைத்தனம். அதைப் போய் ஏதோ பெரிய குற்றம் போல நினைத்து இவர் ஏதேதோ செய்து விட்டார் என்று பெரியவர்கள் மனம் நோகாமல் சொல்லி திவ்யாவின் மேல் தப்பு இல்லை என்று கட்டாயமாக நிரூபிப்பார். மனைவியின் உடன்பிறவாத் தங்கைக்காக, மனைவிக்காக இந்தத் தியாகம் செய்தவளுக்காக இதுகூடச் செய்யாமல் இருக்க முடியுமா, என்ன? நிச்சயம் செய்வார்.



பெரியப்பாவின் சிறு ஒதுக்கம் கூட மறைந்து முன்னை விடப் பிரியமாகி விடுவார்.

சதானந்தன் வரும்வரை காத்திருந்து, வரவேற்று, உள்ளே அழைத்துச் சென்று உட்கார வைத்து ஐஸ் கொணர்ந்து கொடுத்தாள்.

அவன் புருவங்களை உயர்த்தவும், "விரோதியானாலும் வீட்டுக்கு வந்தால் வரவேற்று உபசரிப்பது இந்த வீட்டுப் பண்பாடு" என்றாள் அழுத்தலாக.

"ஓகோ! ஆனால் பத்து நாட்களுக்கு முன் திருமணத்துக்கு வந்த போது இந்தப் பண்பாடு கொஞ்சம் மறந்து போயிருந்ததாகத் தெரிகிறதே!" என்றான் அவன் கிண்டலாக.

ஒருகணம் திகைத்து விட்டு, "அது எங்கள் வீடு இல்லையே" என்று சமாளித்தாள் திவ்யா.

"அது சரிதான்" என்று பழைய குரலையே ஒத்துப் பாடினான் அவன். "நல்லப் பண்பாடுகளை எல்லாம் வீட்டிலேயே பத்திரப்படுத்தி விட்டுப் படியிறங்குவதும் உன் வழக்கமாக்கும்!"

சுர்ரென்று எழும்பிய ஆத்திரத்தை அடக்கிக் கொண்டாள் திவ்யா. கடிதம் கையில் இருக்கிறதல்லவா? உயரத்தில் இருக்கும் நினைப்பில் குட்டிப் பார்க்கிறான். செய்யட்டும். இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்த அகம்பாவம் மண்ணாகப் போகிறதைப் பார்க்க மேலும் ஆனந்தமாயிருக்கும்.

அவன் அங்கே இருப்பது ஒரு பொருட்டில்லை என்பது போலத் திரும்பி, பாதியில் விட்டிருந்த வேலையைத் தொடர்ந்தாள் திவ்யா.

"என் வரவை எதிர்பார்த்தே இருந்திருப்பாய்!"

திரும்பிக் கூடப் பாராமல், "வரவை எதிர்பார்த்திருப்பது மெய்தான். ஆனால் உங்கள் வரவை அல்ல" என்று கருமமே கண் போல, டீவியை அழுந்தத் துடைத்தாள் திவ்யா.

"இதை நம்பச் சொல்கிறாயா? நேற்று மனோரஞ்சனுடைய அண்ணனிடம், மனோரஞ்சனின் மனதை மாற்றும்படி உன் பெரியப்பாவை அனுப்பிய போதே என் வரவை நீ எதிர்பார்த்திருக்கத்தானே வேண்டும்!"

சட்டெனத் திரும்பிப் பார்த்தாள் அவள். பெரியப்பா விட்டேற்றியாக ஒதுங்கினார் என்று நினைத்தாளே! ஆனால் அவர் விடாமல் அவளுக்காக அலைகிறாரே!

திவ்யாவுக்கு இது செய்தியாக இருந்தது. ஆனால் அவன் வேறு நினைத்தான்.

"எதையும் அறியாதவள் போலப் பாவனை பிரமாதம் தான். ஆனால் நம்புவதற்குத் தான் நீ வேறு ஆள் தேட வேண்டும்" என்றான் இகழ்ச்சியாக. "என்ன விஷயம்? கடிதம் என்னிடம் இருப்பதே மறந்து விட்டதா? ஏன் இந்த மடத்தனம்?"

கடிதம்!

அவனை நேராகப் பார்த்தாள் திவ்யா! "மிஸ்டர் சதானந்தன். இந்தக் கடிதம் என்னுடையது இல்லை என்று முன்பு சொன்னேனே..." என்று தொடங்கினாள் அவள்.

இடைமறித்து, "அதை நம்புவதற்கு இல்லை என்று நானும் அப்போதே சொன்னேனே!" என்றான் அவன்.

"யோசித்துப் பாருங்கள். ஒருவேளை இந்தக் கடிதம் எழுதியது வேறு யாராவதாகவும் இருக்கக் கூடுமோ என்று ஒருதரம் எண்ணிப் பாருங்களேன்"



"வாழ்வாகட்டும் தொழிலாகட்டும். வீண் கற்பனையில் நான் நேரத்தை வீணாக்குவதில்லை" என்றான் அவன் அழுத்தலாக.

பெரிய அழுத்தல்! இந்தக் கர்வம் எல்லாம் இன்னும் சற்று நேரத்தில் அப்பளமாக நொறுங்கப் போகிறது பார் என்று உள்ளூர திவ்யா கறுவுகையில் வாயிலில் கார் நின்ற ஓசை கேட்டது. பிரபாவின் குரலும் கேட்டது.

ஸ்விட்ச் போட்டாற் போல முகமெல்லாம் பிரகாசிக்க, "பிரபா" என்று வாயிலுக்கு ஓடினாள் திவ்யா.

ஆனால் பிரபா மட்டுமே இறங்கியிருக்க, டாக்சி மீண்டும் கிளம்பிச் சென்று விடவும், திகைத்து, "என்ன பிரபா, பெரியப்பா, அத்தான் எங்கே காணோம்?" என்று விசாரித்தாள்.

பதில் சொல்லுமுன் பிரபாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. சிரிப்புக்கிடையே, "எல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவார்கள். என்னைக் கவனம் கவனம் என்று விட்டு.. இவர் பெட்டியை ரயிலில் கூட வந்த சினேகிதர் சாமானோடு விட்டு விட்டார். அவர் வீட்டுக்குப் போய் வாங்கிவரப் போயிருக்கி..." என்று முடிக்க மாட்டாமல் குலுங்கிச் சிரித்தாள் அவள்.

பிரபாவின் சிரிப்பு ஒருவிதமாய் திவ்யாவுக்கு பெரும் ஆறுதலை அளித்தது. பிரபா சந்தோஷமாக இருக்கிறாள். கணவனோடு நெருக்கம் அமையாமல் இந்த ஆனந்தம் உண்டாக வாய்ப்பில்லை. இந்த நெருக்கம் இருக்கையில் நிச்சயமாய் எல்லாம் சொல்லியிருப்பாள்!

அத்தோடு...

திவ்யாவின் மூளை வேகமாக வேலை செய்தது. அவர்கள், முக்கியமாகப் பெரியப்பா வர நேரமாகும். பெரியம்மா குளித்து வரவும் இன்னும் கொஞ்ச நேரம் ஆகும். நல்லது. அதற்குள்...

சட்டெனப் பிரபாவின் கைகளைப் பற்றினாள் திவ்யா. ''அவர்கள் திரும்பி வருமுன் செய்து முடிக்க ஒரு வேலை இருக்கிறது. சீக்கிரம் உள்ளே வா, பிரபா'' என்று அவளை உள்ளே இழுத்து வந்தாள்.

அரவம் கேட்டு, ஐஸ் தம்ளரை டீபாயின் மேல் வைத்து விட்டு எழுந்த சதானந்தனைக் காட்டி, ''சொல்லு பிரபா. அந்தக் கடிதம் எழுதியது யார் என்று இவரிடம் சொல்லு. சொல்லி விட்டு இனியேனும் யார் விஷயத்திலும் அனாவசியமாய் மூக்கை நுழைக்க வேண்டாம் என்று நன்றாய் உறைக்கும்படி சொல்லு. சொல்லு. அந்தக் கடிதம் எழுதியது யார்?'' என்று பரபரத்தாள்.

திவ்யா ஏதோ புரியாத அன்னிய மொழி பேசினாற் போல விழிகளை அகல விரித்தாள் பிரபா. ''கடிதமா! என்ன கடிதம்? யார் எழுதியது? நீ சொல்வது எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!'' என்று மலங்க விழித்தாள்.

## 12

மெயினையே தொட்டு விட்டாற் போல வெகுவாக அதிர்ந்து போனாள் திவ்யா.

பேசுவது பிரபா தானா? ஏன் இப்படிப் பேசுகிறாள்? திவ்யாவின் எதிர்காலமே அவளது பதிலைத் தொக்கி நிற்பதை அவள் அறியவில்லையா? அதெப்படி முடியும்?



காய்ந்து போன தொண்டையைப் பிரயாசைப்பட்டு விழுங்கி நனைத்துக் கொண்டு, ''பி...பிரபா'' என்று அவள் ஏதோ பேச முயலுமுன், அவளை ஒதுக்கிவிட்டுச் சதானந்தனிடம் பேசினாள் பிரபா. ''ஹல்லோ மிஸ்டர் சதானந்தன், சௌக்கியமா? நீங்கள் உலகம் முழுவதும் சுற்றிக் கொண்டே இருப்பீர்கள் என்று கேள்விப்பட்டேன். இந்தத் தடவை மெட்ராசில் அதிக நாள் தங்கி விட்டீர்கள் போல?'' என்று முகமெல்லாம் முறுவலாக அவனிடம் குசலம் விசாரித்தாள்.

''ஆமாம் மிசஸ் கண்ணன், நானே நேராகக் கவனிக்க வேண்டிய வேலை ஒன்று இங்கே இழுத்துக் கொண்டே போவதால் இங்கேயே தங்கும்படி ஆயிற்று'' என்று அவனும் முறுவலித்தான்.

உடனே பேச்சின் திசையை மாற்றி அவனது தொழில் பற்றி விசாரித்தாள் பிரபா. அவனும் பதில் சொன்னான்.

இருவரும் பேசப் பேச ஒன்றும் செய்யத் தோன்றாமல் சிலை போல நின்று பார்த்துக் கொண்டிருந்தாள் திவ்யா. அவளது மனம், சண்டைக் காட்சிகளுக்காகப் பயன்படுத்தும் 'ஷுகர் கிளாஸ்' போல சுக்கல் சுக்கலாய் நொறுங்கிக் கொண்டு இருந்தது.

கடைசியாக உணவுக்குத் தங்குமாறு கேட்ட பிரபாவின் குழைவான வேண்டுதலை மறுத்து விட்டு, விடைபெற்றுச் சென்றான் சதானந்தன்.

அவன் தலை மறைந்ததும், திரும்பி, சுற்றுமுற்றும் நோக்கி விட்டு, ''அம்மா எங்கே?'' என்று சித்தப்பா மகளிடம் விசாரித்தாள் பிரபா.

அவள் குளியல் அறையில் இருப்பது அறிந்ததும் சட்டென மாறி, ''நீ என்ன, என் வாழ்வை அழித்தே

தீருவதாகக் கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கிறாயா?'' என்று அடிக்குரலில் சீறினாள்.

மீண்டும் அயர்ந்தாள் திவ்யா. யார் வாழ்வை யார் அழித்தது? பிரபா எல்லாவற்றையுமே மறந்து விட்டாளா?

''என்ன பிரபா, இப்படிப் பேசுகிறாய்? அவரிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் எல்லாம் சரியாகப் போயிருக்குமே...''

அழாக்குறையாக திவ்யா பேசிக் கொண்டு இருக்கையிலேயே பிரபா அவசரமாகக் குறுக்கிட்டாள். ''ஒன்றும் சரியாகப் போகாது. சதானந்தன் யார் தெரியுமா? கண்ணனுக்குத் தூரத்து உறவினர். திருமணத்தின் போது பரிசை இவரிடம் கொடுத்த போதே எனக்கு ஒரு மாதிரி இருந்தது. பிறகு நீ என்னமோ அப்பாவுக்காக வந்து தப்பாகப் பரிசைக் கொடுத்ததாகச் சொன்னாயே என்று நிம்மதியாய் இருந்தேன். அப்புறமாய், இவர் சொன்ன பிறகு தான் விஷயம் தெரிந்தது. நண்பருடைய சகோதரன் விஷயத்திலேயே இந்த ஆட்டம் காட்டுகிறவர், உறவுக்காரர்கள் என்றால் சும்மா விடுவாரா? உறவை விடவும் நட்பைப் பெரிதாக எண்ணுகிறவராக இருக்கலாம்தான். ஆனாலும் பிள்ளைப் பூச்சியை மடியில் கட்டிக் கொள்கிற மாதிரி, உறவினர் நடுவில் எங்கோ சுற்றி, எப்போது இவரிடம் வந்து வெடிக்குமோ என்று கலங்கிக் கொண்டே இருக்க என்னால் ஆகாதம்மா'' என்று திவ்யா அந்த மாதிரி ஓர் எண்ணம் கொண்டதே பிழை என்பது போல் சொல்லிக் கொண்டே போனாள்.

மீண்டும் திகைத்தாள் திவ்யா. ''அப்படியானால்.. பிரபா, நீ உன் கணவரிடம் சொல்லவே இல்லையா?'' என்று கேட்ட போது குரலில் காற்றுத்தான் வந்தது.



''இல்லை, இல்லை, இல்லை'' என்று சீறிய பிரபாவின் பார்வை உடனே தாழ்ந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு கணம் நின்றவள், திவ்யாவின் கையைப் பற்றி சோபாவில் உட்கார வைத்தாள். ''கொஞ்சம் பொறுமையாய் நான் சொல்வதைக் கேள் திவ்யா. கேட்டு விட்டு அதன்பின்.. கொஞ்சம் இரு.. இதோ வருகிறேன்'' என்று ஓசையற்று உள்ளே சென்றாள்.

குளியலறைக் கதவில் காதுவைத்துக் கேட்டு விட்டு முகத்தில் நிம்மதியுடன் திரும்பி வந்தாள். ''இன்னமும் நீர் விழும் சத்தம் கேட்கிறது. அம்மா வர இன்னும் ஐந்து நிமிடமாவது ஆகும்'' என்று திவ்யாவின் அருகில் அமர்ந்தாள்.

திவ்யாவின் கையைப் பிடித்துக் கொண்டு பேசலானாள். ''திவு, இவர் இருக்கிறாரே, என் கணவர், ரொம்பவும் உரிமை பாராட்டுகிறவர். உரிமை வெறி என்று கூடச் சொல்லலாம். ஊட்டியில் ஒரு நாள் 'மாட்டினி ஷோ' பார்க்கப் போனோம். அப்போது ஒருவன் என் மேல் இடித்து விட்டான். அவனை அடிக்கப் போய் விட்டார், தெரியுமா? ரசாபாசம் ஆகாமல் அவரை அழைத்து வருமுன் பெரும்பாடாகிப் போயிற்று. நான் ஒதுங்கி வந்திருந்தால் அவனால் இடிக்க முடிந்திருக்குமா என்று அன்று முழுவதும் திட்டினார். காலைப் பிடித்து மன்னிப்புக் கேட்ட பிறகுதான் விட்டார். இவரிடம் போய் இந்த கடித விஷயம் எப்படிச் சொல்லுவேன், சொல்லு?''

''இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு எனக்கு உள்ளூர உதறிவிட்டது. எப்படியோ சுற்றி அலைந்து இவர் கையில் இந்தக் கடிதம் கிடைத்து விட்டால் என்ன ஆகும் என்று நினைத்துப் பார்த்த போது அப்படியே நடுங்கி விட்டேன்.

''அப்புறமாய் மனதை நிதானப்படுத்தி யோசித்துப் பார்த்தேன். நல்ல காலமாக அந்தக் கடிதத்தில் நான் பிரபா என்று கையெழுத்துப் போடவில்லை. அவன் போடச் சொன்னான் தான். ஆனால் எனக்குத்தான் அதற்குள்ளாகவே, ரொம்பவும் கண்டபடி எழுதி விட்டோமே என்று கூசி விட்டது. அவன் வற்புறுத்திக் கொண்டு இருந்த போது ஏதோ தொடர்கதைக்குப் படம் வேண்டும் என்று டெலி:.போன் வந்தது. அதற்குள் இன்னொரு மாணவியும் வந்து விடவே அப்படியே விட்டு விட்டான். நல்ல காலம்.

''அத்தோடு நம் இருவர் கையெழுத்தும் கூட ஒரே மாதிரிதான். ஒரே மாதிரிச் சரிவு., ஒரே மாதிரி அளவு. கவனமாகப் பார்த்தாலும் ஒரே மாதிரி தான் தோன்றும். ஒருவகையில் அதுவும் நல்லதாயிற்று''

யாருக்கு என்று திவ்யா கசப்புடன் நினைத்தாள். ஆனால் இருவரின் கையெழுத்தும் ஒரே மாதிரி இருப்பதில் வியப்பதற்கு ஒன்றும் இல்லை. இருவருக்குமே கைபிடித்து எழுதக் கற்றுக் கொடுத்தது பெரியம்மாதானே!

ஆனால் ஒரு தாய், வேற்றுமை பாராமல் அன்புடன் கற்றுக் கொடுத்தது கூட ஒருவருக்கு வினையாகிப் போகுமா?

''... இந்த விஷயம் வெளிவந்தால் கூடக் கடிதம் உன்னுடையது என்றே முடித்து விடலாம் என்று கண்டு கொண்ட பிறகுதான் எனக்கு நிம்மதி ஆயிற்று...''

தான் தப்பிவிட்ட கதையை அளந்து கொண்டு இருந்தவளுக்கு தனக்குப் பதிலாக அநியாயமாய் மாட்டிக் கொண்டவளைப் பற்றிய நினைவு கொஞ்சமும் வரவில்லை என்பதை ஆச்சரியமும் வருத்தமுமாக உணர்ந்தாள் திவ்யா. இப்படி ஒருத்தி தன்னலமே குறியாக இருக்க முடியுமா? சேச்சே.. பற்றியிருந்த கையை மெல்ல உருவினாள் திவ்யா.



கூட இருந்தவளின் முக மாறுதலும் விலகலும் ஒருவாறு கண்ணிலும் கழுத்திலும் பட மீண்டும் திவ்யாவின் கரத்தைப் பற்றி, ''நான் சுயநலத்தோடு பேசுகிறேன் என்று நினைக்கிறாயா, திவுக்குட்டி? யோசித்துப் பார். எனக்குத் திருமணம் ஆகி விட்டது. இனி இது கலைந்தால் என் வாழ்வே அழிந்து போகுமே. ஆனால் நீ அப்படியா? எப்படியும் மணமாகாத கன்னி. அழகு, படிப்பு, கெட்டிக்காரத்தனம் எல்லாம் இருக்கிற போது வேறு கணவன் கிடைப்பது கஷ்டம் இல்லை. மனோரஞ்சன் தான் கதி என்று இல்லை. எனக்கு அப்படி இல்லை பார். கணவரான கண்ணனைத் தவிர வேறு யாரையும் நினைக்கக் கூட முடியாதே!

திருமணமாகி விட்டதால் தான் இப்படிச் சொன்னேன் என்கிற இதே பிரபா அன்று திருமணம் நின்று விட்டால் செத்து விடுவேன் என்றது திவ்யாவுக்கு நினைவு வந்தது. அப்போதும் இப்போதும் பிரபாவுக்குத் தன் சுகம் தான் முக்கியம். உயிருக்கு உயிராகப் பழகியிருந்தாலும் மற்றவளைப் பற்றி அவளுக்கு அக்கறை இல்லை.

இப்படித் தன் சுகமே பெரிதென்று எண்ணிச் செயல்பட தன்னால் முடியுமா என்று திவ்யா யோசித்தாள். இப்போது கூட ஒரு கையெழுத்து நிபுணரின் துணை கொண்டு கடிதம் தன்னது இல்லை என்று திவ்யாவால் நிரூபிக்க முடியும். சதானந்தரின் நிபந்தனை பற்றி மனோரஞ்சனிடம் சொல்லித் தன் வழியைச் சீர்ப்படுத்திக் கொள்ளவும் முடியும் தான். ஆனால் அப்போது பிரபாவின் பிழை கட்டாயம் வெளிப்பட்டு விடும். கண்ணனைப் பற்றி அவன் சொன்னது மெய்யென்றால் அவள் திருமண வாழ்வு அழிந்து போகும்; அதனால் பெரியப்பா, பெரியம்மா மிகவும் வேதனைப்படுவார்கள் என்பதாலேயே திவ்யாவால் அதைச் செய்ய முடியாது...

''அட பிரபுக்குட்டீ...!'' என்ற ஆனந்தக் கூச்சலுடன் ஓடிவந்து மகளை அணைத்துக் கொண்டாள் திலகம். ''மாப்பிள்ளை எங்கே? அங்கே எல்லாம் நன்றாய் இருந்ததா? எங்கே பார்ப்போம், கொஞ்சம் மெலிந்து விட்டாயே, தங்கம்?''

திருமணமாகி முதல் முறையாகப் பிரிந்து சென்ற சேயும் தாயும் அணைத்து நின்ற நிலை, திவ்யாவை உருக்கியது. இந்த மகிழ்ச்சியைக் குலைக்க அவளால் எப்படி முடியும்?

இரண்டு நாட்கள் தாய்வீட்டில் தங்கிவிட்டுப் புகுந்த வீட்டுக்குப் பயணப்பட்டாள் பிரபா.

அந்த இரண்டு நாட்களும், தாயாரும் தகப்பனாருமாக மகளைச் சீராட்டியதைப் பார்த்த பிறகே திவ்யாவுக்கு ரத்த பந்தத்தின் அருமை புரிந்தது. பிரபாவை அதட்டி மட்டம் தட்டிப் பேசியவர்கள் இவர்கள் என்றால் நம்பக்கூட முடியாது. அந்த அளவுக்கு அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்கிய போது முதல் முறையாக அந்த வீட்டில் வேற்றாளாக உணர்ந்தாள் திவ்யா.

முதல் நாளையப் பேச்சுக்குப் பிறகு பிரபாவிடம் திவ்யா தனித்துப் பேச முடியவில்லை. அத்தகைய பேச்சைப் பிரபா தவிர்த்தாள் என்று கூட திவ்யாவுக்குத் தோன்றியது. பிரபாவைப் பொறுத்தவரையில் அன்றே பேசி முடித்து விட்டது போலவே நடந்து கொண்டாள். உள்ளூரக் குமுறினாலும் திவ்யாவுக்கும் அந்தப் பேச்சை எடுக்க மனமில்லாது போயிற்று.

பிரபா கிளம்பிச் சென்ற பிறகு முன்னிலும் அதிகமாக மூவருக்கும் போரடித்தது.

மகளைப் பற்றித் திலகம் ஆயிரம் கவலைப்பட்டாள். துணிமணிகளைப் பத்திரமாய் வைத்துக் கொள்கிறாளோ



இல்லையோ, இரவில் மறக்காமல் பால் குடிக்க வேண்டுமே, மாப்பிள்ளைக்கு வேண்டியதைக் கவனித்துச் செய்யத் தெரியுமா...

அன்றும் இப்படிப் பத்துத் தடவை புலம்பி விட்டு, ''ஒருவர் செய்கிற வேலையை இரண்டு பேர் செய்தால் உடனே முடிந்து போகிறது. பிறகு இப்படிச் சும்மாவே உட்கார்ந்திருப்பதால் மண்டைக்குள் வண்டு குடைவது போல ஏதாவது உளப்பிக் கொண்டே இருக்கிறது'' என்று அலுத்துக் கொண்டாள் திலகம். ''ஊம்... நீ இந்தக் குழப்படி பண்ணாமல் இருந்திருந்தால் இப்போது உன் கல்யாண வேலை என்று எதையாவது செய்கையில் மனது மாறிப் போயிருக்கும். அதையும் ஏன் தான் மடத்தனமாய்க் கெடுத்து வைத்தாயோ?'' என்று அரற்றினாள்.

திவ்யாவும் பைத்தியம் பிடிக்கிற நிலையில் தான் இருந்தாள். முன்பேனும் திலகம் நோயுற்றதால் வேலை நிறைய இருந்தது. இப்போது திலகம் சொன்னது போல வேலையும் விரைவில் முடிந்து விட, அலுவலக வேலையும் இல்லாது போய்விடவே பொழுது போக அவள் மிகவும் திண்டாடினாள். அதற்கு மேலாகத் திலகத்தின் பேச்சு வேறு அவளை வாட்டி வதைத்தது.

எல்லாம் உங்கள் மகளுக்காகத்தான் என்று சொல்ல முடியுமா? சற்று யோசித்து, ''அவசரத்தில் கல்யாணம் செய்து அவகாசத்தில் அழு'' என்பார்களே, அதுபோல் ஆகிவிடக் கூடாதில்லையா பெரியம்மா? அதனால் தான் என்று சொல்லிச் சமாளிக்க முயன்றாள்.

ஆனால், ''அழுவானேன்?'' என்று கேட்டாள் திலகம். ''மனோரஞ்சன் எப்பேர்ப்பட்ட வரன்! ஆள் பார்க்கப் பளிச் சென்று இருக்கிறான். ஐயாயிரம் ரூபாய் 'டேக் ஹோம்' சம்பளம்! உன் பெரியப்பாவுக்கு இப்போதுதான் அவ்வளவு

வருகிறது. இதற்கு மேல் ஃப்ரீ குவாட்டர்ஸ், அலவன்சுகள்... ச்சு அதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டுமில்லையா?

காயம்பட்ட இடத்தில் கத்தியால் துழாவுவதை அறியாமல் திலகம் ஆற்றாமையோடு புலம்ப, தாங்க மாட்டாமல் திவ்யா அழுது விட்டாள்.

உடனே உருகி, "அழாதே, அழாதே" என்று தட்டிக் கொடுத்து விட்டு, "ஏண்டி, மனோரஞ்சனைப் பற்றித் தப்பான தகவல் எதுவும் உனக்குக் கிடைத்ததா?" என்று யோசனையோடு விசாரித்தாள் பெரியன்னை.

இது ஒருவழி என்று கண்டு, உள்ளூர மனோரஞ்சனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, "ஆ... ஆமாம். பெரியம்மா" என்றாள் பெண்.

"ஓகோ, அதனால் தான் வேண்டாம் என்றாயா! அப்போ சரிதான்.. ஆனால்.. சேச்சே.. உனக்குக் கிடைத்தது தப்புத் தகவல் கண்ணு. மனோரஞ்சன் வந்து உன்னைக் கேட்டதுமே, பெரியப்பா அடி முதல் நுனி வரை அவரைப் பற்றி அலசி விட்டாரே. எல்லாம் தலைவிதி! யாரோ சொன்னதைக் கேட்டுத் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டாய். ஒருவன் பெண்டாட்டியை இன்னொருவன் கட்ட முடியுமா என்பது சரிதான். விதிதான் உன் கண்ணை மறைத்து விட்டது: என்ன செய்வது? அடடா, அழாதே கண்ணு..." என்று மகளைத் தேற்ற முயன்றாள்.

துறுதுறுவென்று, வீட்டில் உதவி, அலுவலக வேலை என்று அலைந்தவள் திவ்யா. இப்படிச் சும்மாவே இருந்தால் தாங்க முடியாது என்று, 'வாண்டட் காலம்' பார்த்து வேறு வேலைகளுக்கு மனுச் செய்து வைத்தாள். இன்று மனுப் போட்டால் நாளையே வேலை கிடைத்து விடாதில்லையா? இடைப்பட்ட வேளைகளில் அருகில் இருந்த பார்க்கில்



உட்கார்ந்து காக்காயையும் குருவியையும் பார்த்துப் பொழுது போக்க முயன்றாள்.

அப்படி ஒருநாள் மாலையில் பார்க்கில் அமர்ந்து அவள் ஏதோ வெட்டி யோசனை செய்து கொண்டு இருந்த போது அருகில் யாரோ அமரவும் விதிர் விதிர்த்துப் போய்த் திரும்பிப் பார்த்தாள்.

அவன் தான். சதானந்தன்!

பவுர்ணமி இரவுகளில் பயமற்றுக் கடலில் அழகைப் பார்க்கச் சென்றது திவ்யாவுக்கு நினைவு வந்தது.

தட்டிக் கவிழ்த்தது போல எல்லாவற்றையும் கெடுத்து விட்டானே! அவனோடு பேச மனமில்லை அவளுக்கு. ஆனால் எழுந்து சென்றால் அவனுக்கு அஞ்சினாற் போல ஆகிவிடுமே என்று எதையோ தீவிரமாகப் பார்ப்பது போல நேர் எதிரே வெறித்தபடி அமர்ந்திருந்தாள் திவ்யா.

ஆனால் அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை போலும். எதுவுமே நிகழாதது போல, "ஹல்லோ, திவ்யா? எப்படியிருக்கிறாய்? சவுக்கியம் தானே?" என்று இலகுவாகக் குசலம் விசாரித்தான்.

பார்வை கூடத் திரும்பாமல், "இல்லை" என்றாள் திவ்யா சுருக்கமாக.

"ம் ..ம்? ஏன்? என்ன செய்கிறது? உடம்புக்கு.. அது ஆரோக்கியமாக இருப்பது போலத்தான் தெரிகிறது. பின்னே மனம் தான் சரியில்லையா?"

"ஆமாம்" என்று மீண்டும் ஒற்றை வார்த்தைப் பதில் வந்தது.

"ஏனோ?"

எல்லாமே அவனுக்கு வேடிக்கையாக இருக்கிறதாமா?

அவனை வெட்டுவது போல நோக்கி, "என்னமோ உலகத்தைக் காப்பாற்றுவதே தான்தான் என்று எண்ணிக் கொண்டு இருக்கிற ஒரு தலைக்கனம் பிடித்தவனால் என் திருமணம் நின்று விட்டது. கையிலிருந்த வேலையையும் இழக்கும்படி ஆயிற்று. அதனால் தான்..." என்றாள் அவள் குத்தலாக.

"அடடா! அப்..படியா விஷயம்?" என்று அதிகமாகவே பரிதாபப்பட்டான் அவன். "திருமண விஷயம்.. அது ஒருபக்கம் இருக்கட்டும். ஆனால் வேலைக்கு என்னால் ஏற்பாடு செய்ய முடியும். நானே வேலை தருகிறேன். செய்கிறாயா?"

"உங்களிடம் நான் வேலை செய்வதா? வாணலிக்குத் தப்பி அடுப்பு நெருப்பில் விழுவது அப்படி ஒன்றும் பிரமாதமாக எனக்குப் படவில்லையே!" என்று ஏளனமாய் உரைத்தாள் அவள்.

"அதாவது.. நான் நெருப்பு என்கிறாய்! எப்படியோ?"

"நிச்சயமாய் நீங்கள் நெருப்புதான். கண்ணால் கண்ட முதல் நாளே என் நிம்மதி, மகிழ்ச்சி எல்லாவற்றையும் சுட்டு எரித்து விட்டீர்களே" என்றாள் அவள் கசப்புடன்.

"ஏன்? உன்னிடம் மனோரஞ்சனுக்கு உண்மையான அன்பு இருந்திருந்தால் எந்தக் கடிதம் அல்லது எந்த நிபந்தனை உங்களைப் பிரிக்க முடியும்?

சதானந்தன் அழுத்தத்துடன் கேட்கவும் வேதனையோடு பார்வை தாழ்ந்தாள் திவ்யா. அவன் சொல்வதும் சரிதானே? தள்ளிப் போடலாமா என்று கேட்குமுன் கூட எப்படி எகிறினான்?



சிறு அமைதியின் பின், "பெரிய வேலை ஒன்றும் இல்லை, திவ்யா. என் வீட்டில் ஒரு சிறுவன். எட்டு வயதுப் பையன். அவனைப் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றான் சதானந்தன்.

வினாடி கூடச் சிந்தியாமல், "முடியாது" என்று மறுத்தாள் அவள்.

சம்பளம் முன்னதை விட அதிகம் தருகிறேன் என்றபோதும் அவள் தளரவில்லை. ஆனால், "திவ்யா, அந்தக் கடிதம் இன்னமும் என்னிடம் தான் இருக்கிறது" என்று சதானந்தன் ஒரு மாதிரிக் குரலில் நினைவூட்டவும் திகைத்துப் போனாள்.

ஆத்திரத்துடன் அவனை உறுத்து விழித்து, "உங்கள் நிபந்தனையை நான் சரியாகவே நிறைவேற்றியிருக்கிறேன்" என்றாள் சினத்தில் குரல் நடுங்க.

"இது இரண்டாவது நிபந்தனை" என்றான் அவன் இலகுவாக.

அடுத்தடுத்து நிபந்தனைகளை அடுக்குவது இவனுக்கு விளையாட்டாக இருக்கிறதாமா? ஒரு தரம் பணம் பெற்ற பின் திருப்தி அடையாமல் திரும்பத் திரும்ப மிரட்டும் பிளாக் மெயிலர் மாதிரிப் பேசுகிறானே! சொல்லப் போனால் இவனும் 'பிளாக் மெயிலர்' தானே. கடிதத்தை வெளியிட்டு விடுவதாக மிரட்டித்தானே அவளது கல்யாணத்தைக் கெடுத்தான்!

ஆனால் எப்படியும் திருமணம் நின்று விட்டது. இனி இவன் மனோரஞ்சனிடம் கடிதத்தைக் காட்டுவதால் பிரமாதமாய் என்ன நடந்து விடப் போகிறது? சும்மாவே 'அகலிகை' என்றவன் அதற்கு மேல் என்ன சொல்லிவிடப் போகிறான்?

"இரண்டாவது நிபந்தனையை ஏற்பதற்கு இல்லை" என்று நிமிர்வுடன் திருத்தமாக உரைத்தாள் அவள்.

"விளைவு விபரீதமாக இருக்கும், திவ்யா" என்று எச்சரித்தான் சதானந்தன்.

"என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள்" என்று அக்கறையற்றுப் பதிலளித்தபடி எழுந்தாள் அவள்.

"என்ன செய்தாலும் பரவாயில்லையா?"

"ஆமாம்" என்று அலட்சியமாகவே கூறிவிட்டு நடக்கத் தொடங்கினாள் திவ்யா.

"அந்தக் கடிதத்தைப் பிரபாவின் கணவரிடம் காட்டினால் கூடவா?"

திடுமென 'பிரேக்' போட்டது போல அப்படியே நின்று விட்டாள் திவ்யா.

## 13

சதானந்தனின் பேச்சில் பிரமித்து நின்ற திவ்யாவுக்குத் திடுமென ஒரு சந்தேகம் உண்டாயிற்று. அவள் சரியாகத்தான் கேட்டாளா?

அகன்ற விழிகளில் ஐயத்துடன் திரும்பி அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள். அங்கே எதையும் கண்டு கொள்ள முடியாமல், "நீங்கள் என்ன சொன்னீர்கள்?" என்று வினவினாள்.

"நீ சரியாகத்தான் கேட்டாய்"

"ஆனால்.. ஆனால்.. கண்ணனிடம் ஏன் காட்ட வேண்டும்?"



அவளையே நோக்கி, "மனைவியின் வண்டவாளங்களைக் கணவனிடம் சொன்னால் தானே முழுமையான பலன் கிடைக்கும்?" என்றான் சதானந்தன் ஒரு விசித்திரப் புன்னகையுடன்.

சட்டென உடம்பில் இருந்த சக்தியெல்லாம் வடிந்து விட்டாற்போல, திவ்யாவின் கால்கள் தொய்ந்தன. சமாளித்து நின்றபடி, "வந்து.. வந்து..." என்று காற்றே வார்த்தையாய் அவள் தொடங்கிய போது, "நீ உட்கார்ந்து பேசுவது நல்லது என்று நான் நினைக்கிறேன்" என்று அந்த சிமெண்ட் பெஞ்சில் அவள் சற்று முன் காலி செய்த இடத்தைச் சுட்டிக் காட்டினான் சதானந்தன்.

வற்புறுத்தலுக்கு இடம் வையாமல் திவ்யாவும் உட்கார்ந்து விட்டாள். இரண்டு பெரிய மூச்சுகள் எடுத்து சமாளித்துக் கொண்டு கேட்டாள். "எப்படித் தெரியும்?"

"உன் பெரியப்பா மகள் சொன்னாள்"

"பிரபாவா?" என்றாள் திவ்யா வியப்புடன்.

தோளைக் குலுக்கி, "அப்படித்தான் அவளுக்குப் பெயர் வைத்திருப்பதாக எனக்கு ஞாபகம்." என்றான் சதானந்தன் இலகுவாக.

பெரிய 'விட்' அடித்து விட்டானாக்கும்! ஆனால்.. 'ச்சு' என்று அலுத்துக் கொண்டவளுக்கு அவனை நம்ப முடியவில்லை. ஒருவேளை பிரபாவுக்கே மனம் உறுத்தி விட்டதா? எப்படியாவது கூடவே வளர்ந்த உடன்பிறவாத் தங்கையின் வாழ்வும் நன்றாகி விடட்டும் என்று எண்ணிச் சொல்லியிருப்பாளோ? ஆனால் எப்போது சொல்லியிருக்கக் கூடும். அவள் தான் ஊரிலேயே இல்லையே?

"எப்போது சொன்னாள்?" என்று மீண்டும் கேள்வி கேட்டாள் திவ்யா.

"அன்று தேனிலவு முடிந்து திரும்பி வந்த அன்று. உன் வீட்டில், உன் முன்னிலையில் தான் சொன்னாள். நீயும் தான் சொன்னாய்" என்று அவன் கூறவும், இவன் சும்மா வேடிக்கை செய்கிறான் என்று எண்ணி திவ்யாவுக்குச் சுருசுரு என்று சினம் ஏறியது. "பொய்.. அவ்வளவும் பொய்" என்று ஆத்திரத்துடன் சீறினாள்.

"இல்லை. திவ்யா" என்றான் சதானந்தன் அமைதியாக. "ரீடிங் பிட்வின் லைன்ஸ்" என்பார்கள். அது இல்லாமல் எவனும் வெற்றிகரமாகத் தொழில் நடத்த முடியாது. அன்று பிரபாவிடம் கடிதம் பற்றிய உண்மை சொல்லும்படி கேட்டாயே, அப்போது உங்கள் இருவர் பேச்சை மட்டும் நான் கேட்டுக் கொண்டு இருக்கவில்லை. இருவரின் முகபாவத்திலும் கவனமாயிருந்தேன். ஆவலும் நம்பிக்கையுமாக அவளிடம் உண்மையை எதிர்பார்த்த உன் முகம், வினாடிக்குள் அதிர்ச்சியை மறைத்து பிரபா மறுத்த விதம், அதை நம்பமாட்டாமல் நீ அதிர்ந்து நின்ற நிலை, உன் அதிர்ச்சியை துச்சமாய் ஒதுக்கி அவள் என்னிடம் பேசிய பாணி... எல்லாமாக எனக்கு உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டின"

கிட்டத்தட்ட ஒருவாரத்துக்கும் மேலாக அவனுக்கு உண்மை தெரியும். "பின்னே இத்தனை நாளாக ஏன் ஒன்றுமே செய்யவில்லை?" என்று கம்மிய குரலில் வினவினாள் திவ்யா.

"என்ன செய்ய.. ஓ! மனோரஞ்சனிடம் பேசி.. அவள் அபிப்ராயத்தை மாற்றி.. அதெல்லாமா? அன்று, பிரபா திரும்பி வருவதற்கு முன்தினம் உன் பெரியப்பா மனோரஞ்சனிடம் வந்த போது நானும் அங்கேதான் இருந்தேன். மனோரஞ்சன் என்ன பேசினான் என்று தெரியுமல்லவா?"



தெரியும். அவளுக்கு நன்றாகவே தெரியும். இரண்டு நாட்களுக்கு முன்பாக, ஒரு நாள் இரவில் தண்ணீர் குடிப்பதற்காகக் கீழே வந்த போது பெரியவர்கள் இருவரும் பேசியது. பெரியப்பா பெரியம்மாவிடம் கூறியது அவள் காதில் தெளிவாகவே விழுந்தது. "கண்ட ராத்திரியில் கடற்கரை போன போதே நான் யோசித்திருக்க வேண்டும். அங்கே எவனெவனோடு எப்படிப் பழகினாளோ?" என்றானாமே. "எட்டி அறையாமல் எப்படிக் கட்டுப்படுத்திக் கொண்டேனோ தெரியவில்லை. ஆனால் கெட்டிக்காரி, கபடு இல்லாதவள் என்று இஷ்டம் போல சுற்ற விட்டதும் பிசகு தானோ என்று இப்போது தோன்றுகிறது" என்று அவர் முடிக்கும் வரை கேட்டு விட்டுத்தான் திவ்யா திரும்பிப் போனாள்

கையைக் கூடத் தொட விடாதவளுக்கு மனோரஞ்சன் என்ன பட்டம் கட்டி விட்டான். இவனோடு உன் வாழ்வைப் பிணைப்பது எந்தவிதத்தில் உசிதம்?

எந்தவிதத்திலும் உசிதமல்ல. பெரும் பிசகாகத்தான் முடியும். தன் விஷப் பேச்சுக்களால் வாழ்க்கையை நரகமாகவே மனோரஞ்சன் மாற்றி விடுவான்.

ஆனால் எல்லாம் இவனால் தானே. இந்த சதானந்தன் அன்று கடித விஷயத்தில் தலையிடாமல் இருந்திருந்தால் இத்தனை துன்பங்களும் நேர வழியே இல்லையே.

மனதில் நினைத்ததை வாயால் வெளியிட்டாள். "அன்று நீங்கள் சும்மா இருந்திருந்தால் எந்தத் தொல்லையுமே நேர்ந்திராதே. பெரியப்பாவுக்கு இந்த அவமானம் நேர்ந்திராது. பெரியம்மாள் கண்ணீருக்கு அவசியம் இருந்திராது. வீட்டின் இனிய சூழ்நிலை மாறி இராது. அறிந்தவர், தெரிந்தவர் முகம் நோக்கிப் பேச முடியாமல் ஒதுங்க நேர்ந்திராது. எல்லாவற்றையும் விட, வீட்டின் செல்ல

மகளாக வளைய வந்தது மாறி, பெரியப்பாவுக்கும் பெரியம்மாவுக்கும் சுமையாகி விட்டேனோ என்று நான் கலங்க நேர்ந்திராது'' என்று கொட்டித் தீர்த்த போது அவளையும் மீறி கண்களில் நீர் துளிர்த்திருந்தது.

ஆத்திரத்துடன் அதைத் தட்டி விட்டு அவனை உறுத்து விழித்தாள். ''எல்லாம் உங்களால் வந்தது''

''இல்லை.. எல்லாம் உன் 'கஸின்' பிரபா அந்தக் கடிதம் எழுதியதால் வந்தது. உன் ஆத்திரத்தின் இலக்கு அவளாகத்தான் இருக்க வேண்டும்?''

மெய்தான். ஆனால்...

''போகட்டும்.. எப்படியானாலும் பெரியப்பா மகள் உறவு. உடன் பிறவாச் சகோதரி. என்ன தப்பு செய்தாலும் அரவணைத்துக் கொண்டு போகப்பட வேண்டியவள். சரி. அதை விட்டு விடலாம். சரிதானா?''

திவ்யா பேசாமல் இருக்கவும், ''நீ எப்போது என்னிடம் வேலைக்குச் சேருகிறாய்? சீக்கிரமாக என்றால் எனக்கு வசதி'' என்று சொல்லிக் கொண்டே போனவன், திவ்யா முகம் திருப்பி, ''என்ன உளறுகிறாய்?'' என்பது போலப் பார்க்கவும்.. ''என்ன விஷயம்?'' என்று விசாரித்தான்.

''உங்களிடம் வேலை பார்க்க முடியாது என்று நான் முன்பே சொல்லி விட்டேன்'' என்றாள் திவ்யா உறுதியான குரலில்.

''ஓ!'' என்றவன் ஒரு விசித்திரப் பார்வையுடன். ''அப்படியானால் கடிதத்தை மிஸ்டர் கண்ணனிடம் காட்டி விடலாம் என்று சொல்லு'' என்று கூறி மீண்டும் அதிர வைத்தான். அவள் தவறு செய்யவில்லை என்று அறிந்த பிறகும் மிரட்டுவானா? இவன் என்ன மனிதன்?



மீண்டும் சதானந்தன் வேகமாகப் பேசினான். திவ்யா அதிர்ந்து விழிக்கையிலேயே, ''அதுசரி, என்னதான் உறவு என்றாலும் தப்பு செய்தவள் தண்டனையின்றித் தப்ப விடலாமா? அத்தோடு, அநியாயமாய் நீ பட்டிருக்கும் கஷ்டங்களுக்குச் சரியானபடி பழிவாங்கின மாதிரியும் இருக்கும். அப்படித்தானே?'' என்று கேட்டான் அவன்.

சதானந்தனின் பார்வையில் இருந்த ஏதோ ஒன்று அவளைக் குழப்பிய போதும், அதை ஒதுக்கி அவனது கேள்விக்குப் பதில் சொன்னாள் அவள். ''கைவிரல் கண்ணில் பட்டு விட்டால் தண்டனை என்று விரலை வெட்டி விடுவீர்களா?'' என்றாள் குத்தலாக.

லேசாக முறுவலித்து, ''பின்னே என் நிபந்தனையை ஏற்றுக் கொள்'' என்று அவன் இலகுவாகக் கூறிய பிறகு தான் அவளுக்கு விஷயம் புரிந்தது. வேண்டுமென்றே சீண்டியிருக்கிறான்.

ஆனால், இது வெறும் சீண்டல் என்று நிச்சயமாய் இருக்கவும் முடியவில்லை. பழுதையா, பாம்பா என்று நிர்ணயிப்பது கடினமாக இருந்தது.

அவள் யோசனையாய்ப் பார்க்கவும் அவன் லேசாகத் தலையசைத்தான். ''எனக்கு என் காரியம் தான் முக்கியம், திவ்யா. அதை நிறைவேற்றும் போது மற்றவர்களைப் பாதிக்குமா இல்லையா என்று நான் கவலைப்படுவது இல்லை'' என்றான் நிதானமாக.

சதானந்தன் பாம்பு தான் என்று அவன் வாய் மூலமாகவே அறிகையில் அவளுக்கு ஏனோ மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. ஆனால் பாம்பு என்று தெரிந்த பின் அவள் பலதையும் யோசிக்க வேண்டியிருந்தது.

அவளை இப்படி மிரட்டியவனும் வேலை பார்க்க அழைக்கிறானே, ஏன்? சம்பளம் வேறு நிறையவே தருகிறேன் என்கிறான். பி.ஏ.யும் எம்.ஏ.யும் பெஞ்ச் துடைக்கிற இந்த நாளில் இந்தச் சம்பளம் தரும் வேலைக்கு நான் நீ என்று 'க்யூ'வில் நிற்க மாட்டார்களா? அதற்குத் திவ்யாதான் வரவேண்டும் என்று என்ன கட்டாயம்?

வேலை வேறு வீட்டில் என்றானே!

அவளது அழகைப் பற்றி அவ்வப்போது பெற்றோர் புகழுரைகள் இப்போது வேறு ஏதேதோ எண்ண வைத்தன. ஆனால் மனோரஞ்சன் சொன்ன மாதிரி அகலிகை என்று நினைத்து நெருங்கினால் கண்ணை நோண்டி விடுவாள்.

ஆனால் அதற்கு வெறுமனே வேலைக்கு வர வேண்டும் என்றால் போதுமே. எட்டு வயதுச் சிறுவனைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பானேன்? ஒரு சின்னப் பையனைப் பராமரிக்க அவள் என்ன 'கவர்னசா'?

அந்தப் பையன்.. ஏனோ மூச்சடைத்தது அவளுக்கு.

''அந்தச் சிறுவன்.. அவன் யார்? உ.. உங்கள் மகனா?'' என்று கேட்டு முடிக்குமுன் திக்கித் திணறினாள்.

ஒருகணம் சதானந்தனின் கண்கள் பளிச்சிட்டன. மீண்டும் பழைய முறுவலுடன், ''இல்லை.. என் நண்பருடைய மகன்'' என்று விவரம் தந்தான்.

''ஓ!'' மீண்டும் ஒழுங்காக மூச்சு வந்தது அவளுக்கு. சற்று யோசித்து, ''அவன் ஏன் உங்கள் வீட்டில் இருக்கிறான்?'' என்று மேலே விசாரித்தாள்.

''சொல்லுகிறேன்'' என்று தொடங்கிய போது சதானந்தனின் முகத்தில் சிரிப்பு மறைந்திருந்தது. ''சில மாதங்களுக்கு முன்பாக சிவாவுடைய பெற்றோர் இருவரும் இறந்து போனார்கள். கார் விபத்து. இறக்குமுன் மகனை என்னிடம் ஒப்புவித்தார்கள். அவனைப் பார்த்துக் கொள்ளத்தான்...''



''ஒரு நண்பருக்காக நடக்க இருந்த திருமணத்தை நிறுத்துகிறீர்கள். இன்னொரு சிநேகிதருக்காக ஒரு சிறுவனின் பொறுப்பை ஏற்கிறீர்கள். நண்பர்கள் என்றால் உங்களுக்கு மிகவும் முக்கியம் போல?''

''இந்த உலகில் நான் மிகவும் உயர்வாக மதிப்பது நட்பைத் தான். ஆனால் என் விஷயம் பேசுவது இப்போது அவசியம் இல்லை''

''முதலில் இங்கே உன் நிலைமையை எடுத்துக் கொள்வோம். உனக்கு வேலை இல்லை; வீட்டில் மகிழ்ச்சி இல்லை; அறிந்தவர் தெரிந்தவர் முகத்தில் விழிக்க முடியவில்லை. எங்காவது கண் காணாத இடத்துக்குச் சென்று விட முடியாதா என்கிற நிலை. அப்படித்தானே? அப்படி ஒரு கண்காணாத இடத்தை கைநிறையச் சம்பளத்தோடு என் வேலை தருமே.

''கடித விஷயம் அம்பலத்துக்கு வந்தாலன்றி மனோரஞ்சன் உன்னை மணக்க முன்வருவது அபூர்வம். கடிதம் வெளியானால் உன் ஆருயிர்ச் சகோதரி, கண்ணைக் குத்தினாலும் வெட்டிப் போட முடியாத விரல் — பிரபாவின் கதி என்ன ஆகும்?

''பொறு.. பொறு.. முதலில் என் பேச்சு முழுவதையுமே கேட்டு முடித்து விடு.. மனோரஞ்சனுக்குப் புத்தி சொல்லி, வற்புறுத்தி... எப்படியோ அவன் உன்னை மணக்கும்படியே ஏற்பாடு செய்தாலும் அது உனக்கு நன்மையாகுமா? மணக்க இருந்தவள் திடீர் என்று மாறிப் பேசினால், உண்மை அன்பு உள்ளவன் என்ன செய்வான்? விஷயம் என்ன என்று விசாரித்து உதவ அல்லவா முன்வந்திருப்பான்! இவன் என்ன

மாதிரி இழிவாகப் பேசி விட்டான்? இவனோடான வாழ்வு, நின்றால் பிழை; உட்கார்ந்தால் குற்றம் என்று நரகமாகி விடாதா? இந்த நரகத்திலிருந்து காத்ததற்காகக் கைமாறாகவேனும் நான் தரும் வேலையைச் செய்யலாமில்லையா?''

பட்டிமன்ற வாதம் போல, சதானந்தன் நீளப் பேசி முடித்த போது திவ்யாவால் பதில் ஏதும் கூற முடியவில்லை. அதிலும் மனோரஞ்சன் பற்றி அவன் கூறியது முழுக்க முழுக்க உண்மை ஆயிற்றே! அவனது பேச்சை எண்ணி எண்ணி திவ்யா எத்தனை தடவை வருத்தப்பட்டிருக்கிறாள்!

ஆனால் உலகில் எல்லோரிடமுமே அசுர குணம், தேவ குணம் இரண்டுமே இருப்பது இயற்கை. மனோரஞ்சனிடம் அடங்கிக் கிடந்த அசுர குணத்தை வெளிக் கொணர்ந்தது சதானந்தன் தானே!

கடிதம் எழுதிய ஒரு பிழைக்காகப் பிரபா உயிரையே விடத் துணிகிற அளவுக்குத் தவித்தாயிற்று. அந்தக் கடிதத்தைத் திருடச் சென்றதற்காகத் திவ்யாவும் பெரும் துன்பம் அனுபவித்தாயிற்று. இவர்களைப் பெற்றதற்காகவும், வளர்த்ததற்காகவும் பெரியப்பாவும் பெரியம்மாவும் கூட அல்லல்பட்டாயிற்று.

ஆனால் தீர விசாரியாமல் திவ்யாவையும் அவளது வளர்ப்புப் பெற்றோரையும் வேதனைப்பட வைத்த இவன் மட்டும் தண்டனையில்லாமல் தப்புவது என்றால் அதை திவ்யாவால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

ஆனால் அவன் முதலில் சொன்ன மாதிரி இந்த வேலை, திவ்யாவுக்கு ஒரு வரப்பிரசாதம் தான். அறிந்தவர், தெரிந்தவர், பெரியம்மா, பெரியப்பா யார் முகத்திலும் விழிக்கத் தேவையிராது. வளர்ப்புப் பெற்றோருக்குப் பாரமாயிருக்கிறோமோ என்றும் குன்றத் தேவையிராது.



வருவாயும் கணிசமாகவே இருக்கும்.

ஆனால் வேலைக்கு வரச் சம்மதம் என்று நேர்டியாகச் சதானந்தனிடம் சொல்லவும் அவளால் இயலவில்லை. ஏனோ காரணம் புரியாமல் நெஞ்சுக்குள் படபடப்பாக இருந்தது. எனவே மேலும் விவரம் வேண்டுகிறவளாகி, ''உங்கள் வீடு எங்கே இருக்கிறது?'' என்று விசாரித்தாள்.

''கேரளத்தில்'' என்றான் சதானந்தன். ''உப்பங்கழித் தீவுகள் என்று கேள்விப்பட்டிருக்கிறாயா? கடலின் ஓதநீர் பெருகி, கரை தாண்டி வந்து பெரிய பெரிய ஏரிகளாய் அமைந்திருக்கும். கேரளக் கடற்கரை முழுவதுமே இத்தகைய ஏரிகளைக் காணலாம். ஏரிக்குள் தீவுகளும் இருக்கும். அவற்றுள் ஒரு தீவில் இருக்கிறது என் வீடு. ரொம்பவும் அழகான வீடு'' என்று கூறும் போது அவன் முகத்தில், குரலில் பெருமிதம் இருந்தது.

''கேரளா என்றால் அங்கே மலையாளம் அல்லவா பேசுவார்கள்! எனக்கு மலையாளம் தெரியாதே. அதனால் நீங்கள் வேறு யாரையாவது...''

''மொழி பெரிய பிரச்சினை அல்ல'' என்றான் சதானந்தன். ''ஆனால் இந்த வேலையில் வேறு ஒரு சிக்கல் இருக்கிறது...'' என்றான் முகத்தில் கவனத்துடன்.

''என்ன?'' என்றாள் நெற்றிப்புருவம் கேள்வியாய்ச் சுளித்து.

''இந்த வேலையை நீ என் மனைவி என்கிற பெயரில் செய்ய வேண்டும்!''

ஆகா! இதற்குத்தானா எல்லாம்.. இங்கே சுற்றி அங்கே வளைத்துப் பேசியதெல்லாம் இதற்காகத்தானா? அவளை என்னவென்று நினைத்தான் இந்த ராஸ்கல்?

கண் இமைக்கும் நேரத்தில் கை ஓங்கி விட்டாள் திவ்யா.

## 14

கூண் சிமிட்டும் நேரத்தில் திவ்யா கை ஓங்கினாள் என்றால், அதை எதிர்பார்த்தவன் போல ஓங்கிய கை அவன் முகத்தில் இறங்குமுன் அந்தக் கையைப் பற்றித் தடுத்து நிறுத்தினான் சதானந்தன்.

கையை விடுவித்துக் கொள்ள அவள் முயல, "அடேயப்பா! என்ன வேகம்! அதை விட என்ன அவசரம்!" என்றான் வேடிக்கையாக.

இலகுவாகப் பற்றியிருந்தாற் போலத் தோன்றிய போதும் அவன் பிடியிலிருந்து விடுபட முடியாது போகவே, "முதலில் கையை விடுங்கள்" என்று கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளைத் துப்பினாள் அவள்.

"விடுகிறேன். ஆனால் உடனே எழுந்து ஓடி விடாமல் சற்றுப் பொறுமையோடு இருந்து என் பேச்சைக் கேட்டு முடிக்க வேண்டும்.

"மனைவியாகச் செய்யும் வேலை பற்றிய பேச்சையா?" என்றாள் திவ்யா எகத்தாளமாக.

"பொறுமை.. பொறுமை திவ்யா! மனைவியாக வேலை செய்ய வேண்டும் என்று சொன்னேனா? மனைவி என்ற பெயரில்.. கவனி.. பெ..ய..ரி.ல் செய்ய வேண்டும் என்று தானே சொன்னேன். நான் அதை விளக்குமுன் ஏன் இந்த அவசரம்?" என்று அவள் கையை விடுவித்தான் சதானந்தன்.

அவன் பற்றிய இடம் குறுகுறுத்தாற் போலத் தோன்றவே மறுகையால் அந்த சருமத்தை தேய்த்து விட்டபடி யோசித்தாள் திவ்யா.



ஆமாம். மனைவி என்ற பெயரில் என்று தான் சொன்னான் சதானந்தன்!

சதானந்தன்!

என்ன பெயரோ? அவனும் ஆனந்தமாக இருப்பதாகத் தெரியவில்லை. அவன் கண்ணில் படுகிறவர்களை ஆனந்தமாக இருக்க விடுவதாகவும் தெரியவில்லை என்று எண்ணும் போதே ஏதோ முரண்டியது.

அன்று கல்யாண மண்டபத்தில் அந்தச் சிறுமியின் கன்னத்தைத் தட்டிச் சிரித்தானே! அந்தக் குழந்தைக்குக் கூட அதில் எவ்வளவு ஆனந்தம்!

ஆனால் உடனேயே அந்தப் பன்னீர் தெளித்தவள்.. அவள் முகத்தையே கவனித்துக் கொண்டு இருந்தது போல, அவள் முகம் கடுக்கவும்.. 'என்ன'வென்று வினவினான் சதானந்தன். "என்ன யோசனை?"

அப்படியே சொல்ல வேண்டியதுதான்! அலுத்தாற் போல பாவனை காட்டி, "ஏதோ விளக்கம் என்றீர்களே.. அது வெளிவருவதற்காகக் கா..த்துக் கொண்டு இருக்கிறேன்" என்றாள் அவள்.

"ம்கூம்?" என்று சந்தேகம் காட்டியவன், உடனே எழுந்து, 'பாண்ட்'டின் பின்புறப் பாக்கெட்டிலிருந்து ஒரு பர்சை எடுத்துப் பிரித்தான்.

அதிலிருந்து ஒருபடத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான். "சிவா படம்.. கூட இருப்பவர்கள் அவனுடைய பெற்றோர்"

குதூகலமான குடும்பம். பளிச்சென்றிருந்த முகங்களில் தான் என்ன தன்னம்பிக்கை! பிள்ளையை அணைத்தாற் போலத் தாயார் நிற்க, இருவரையுமே சுற்றியிருந்தது தந்தையின் கை.

கண்ணைக் காக்கும் இமைகள் போலப் பிள்ளையைப் பற்றியிருந்த பெற்றோர் இப்போது இல்லை என்று எண்ணுகையில் திவ்யாவின் நெஞ்சுக்குள் ஏதோ பிசைந்தது.

''ஆறுமாதம் முன்பாக ஒரு கார் விபத்தில் இருவரும் இறந்து போனார்கள். குற்றுயிரும் குலையுயிருமாய்க் கிடந்த போது என்னைப் பார்க்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். போலீஸ் மூலம் தான் எனக்குத் தகவல் தெரிந்தது... சிவாவைப் பார்த்துக் கொள்ளும்படிக் கேட்டார்கள்... எந்தக் காரணம் கொண்டும் பிள்ளையைச் சொந்தக்காரர்கள் வசம் - இருவகைச் சொந்தத்தில் யாரிடமுமே விட்டு விடக் கூடாது என்று என்னிடம் சத்தியம் வாங்கினார்கள். சொத்து பத்து அதிகம். அதை அனுபவிப்பதற்காகப் பிள்ளையை ஏதும் செய்து விடுவார்களோ என்று வாசு, அவன் மனைவி இரண்டு பேருக்குமே பயம்...''

''ஆனால் சிவா எங்கே இருந்தாலும் தான் தீங்கு செய்ய முடியுமே. சினிமாவில் வருகிற மாதிரி யாராவது கொலைகாரனை ஏவி விட்டால் அப்புறம் எந்த அளவுக்குக் காப்பாற்ற முடியும்?'' என்றாள் திவ்யா அச்சத்துடன்.

அவன் தலையசைத்து, ''உயிர் பற்றி அவர்கள் இருவரும் அஞ்சவில்லை. வாசு வருமுன் காக்கிற ரகம். இருவகைச் சொந்தக்காரர்களின் குணம் புரிந்ததுமே, எந்தவிதத்திலேனும் வாரிசற்றுப் போனால் சொத்து முழுவதும் ராமகிருஷ்ணா மடத்துக்கு என்று ஏற்கனவே உயில் எழுதி, அதை விளம்பரப்படுத்தியும் இருந்தான். ஆனால் பிள்ளையைக் கொண்டு போய் வைத்துக் கொண்டு 'கார்டியன்' என்கிற பெயரில் கொடுமை செய்தால்? ஏதேனும் கொடுமை செய்து வெறும் உயிர்ப் பிண்டம் ஆக்கி விட்டால்?, எத்தனை கதைகள், சினிமாக்களில் பார்த்திருக்கிறோம்..



அப்படியெல்லாம் செய்யாவிட்டால் கூட, சிவாவின் படிப்பு, எதிர்காலம் பற்றி யாருமே அக்கறை எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்கிற அளவு அவனுக்கு நிச்சயம்''

''இவ்வளவு கவனமாய் இருப்பவர் எப்படித்தான் காரை விபத்துக்குள்ளாகிற மாதிரி ஓட்டினாரோ, பாவம்!''

''அதில் அவன் தப்பு எதுவும் இல்லை.. எதிரில் வந்த லாரி திடுமென 'கண்ட்ரோல்' போய் விட்டது.. வழியில் நின்ற மாட்டின் மேல் மோதி விடாமல் அவசரமாக ஒடித்த லாரி டிரைவருக்குத் திரும்பவும் ஒடித்து அவரது பாதையில் வண்டியைச் செலுத்த முடியவில்லை. ஒழுங்காகச் சென்று கொண்டிருந்த வாசுவின் காரில் ஏகப்பட்ட சுமையுடன் லாரி மோதி விட்டது...''

சதானந்தனின் பேச்சு நின்று போயிற்று. அந்த விபத்து அவனது மனக்கண் முன் மீண்டும் நிகழ்ந்ததோ? அழுந்திய உதடுகளும், விடைத்த நாசியும், சுளித்த புருவங்களும்.. பார்க்கையில் திவ்யாவுக்குப் பரிதாபமாகக் கூட இருந்தது.

சுளித்திருந்த புருவங்களை லேசாக நீவி விட்டால் ஆறுதலாக இராதா என்று எண்ணியவள், எண்ணத்தைச் செயலாக்குவது போல வலக்கரம் உயரத் தொடங்கவும் திடுக்கிட்டுப் போனாள்.

யாரோ ஒருவனின் புருவங்களை அவள் வருடி விடுவதா? அதிலும் அவன் அவளுக்குக் கெடுதல் மட்டுமே செய்திருப்பவன். விரோதி! அவனுடைய சினேகிதனின் கதை பரிதாபமாக இருக்கிறது என்றால் அவன் மேலும் இரக்கப்பட்டு விடுவதா? என்ன முட்டாள்த்தனம்!

சற்று யோசித்து விட்டு, ''உங்களைத்தானே மகனைப் பார்த்துக் கொள்ளச் சொன்னார்கள்?'' என்றாள் திவ்யா.

ஒரு பெருமூச்சுடன் நிகழ்காலத்துக்கு வந்தான் சதானந்தன். "ஆமாம். அவன் கடைசியாக என்னிடம் அப்படிச் சொன்னதைக் கேட்ட சாட்சிகளும் இருக்கிறார்கள். அப்படியிருந்தும் பிள்ளையையும் சொத்துக்களையும் ஒப்படைக்க வேண்டும் என்று கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள் சிவாவுடைய உறவினர்கள். பணம் படுத்தும் பாடு!"

"உங்கள் பக்கம் 'பக்கா'வாக சாட்சிகள் இருக்கும் போது அவர்களால் என்ன செய்ய முடியும்?"

"அவர்களது வாதமே வேறு. வாகு சாகிற நேரத்தில், பக்கத்தில் இருந்த நண்பனைப் பெரிதாக எண்ணிச் சொல்லியிருக்கலாமாம். ஆனால் அந்த மாதிரி நேரத்தில் நாலையும் யோசித்து முடிவெடுக்க அவனால் முடிந்திராதாம். முக்கியமாக என்னுடையது பெண் இல்லாத வீடாம். பிள்ளையின் பசி, தாகம், ஆரோக்கியம் எல்லாம் பார்க்கப் பெண்ணால் தான் முடியுமாம். அதனால் தனியாக இருந்து உலகம் சுற்றுகிற என்னிடமிருந்து சிவாவைப் பிரித்து, அவர்களிடம் அனுப்பிக் குடும்பச் சூழ்நிலையில் வளரச் செய்ய வேண்டுமாம்"

"ஓகோ! இங்கே தான் மனைவி என்ற பெயரில் ஒருத்திக்குத் தேவை ஏற்படுகிறது!"

அவளது குரலில் இழையோடிய சிறு ஏளனத்தை உணர்ந்தோ என்னவோ, அவளை நேராகப் பார்த்து, "கரெக்ட்!" என்றான் அவன்.

"ஏன்? வேறே எவளும் கிடைக்கவில்லையா?" என்ற போது திவ்யாவின் குரலில் வெளிப்படையாக எள்ளல் தெரிந்தது.



"கிடைப்பாள். ஆனால் இந்தக் கோர்ட் விவகாரம் முடிந்த பிறகு அவளிடமிருந்து எளிதில் விடுபட முடியாதே. 'டைவர்ஸ்' தரமாட்டேன் என்றால்? நீயானால் சும்மாவே வர மறுக்கிறவள். வாய்ப்பு கிடைத்தால் பறந்து விட மாட்டாயா? அதற்காகத்தான் உன்னிடம் கேட்கிறேன்"

"ஆமாமாம்.. நீங்களோ மகாமன்மதன். அதிலும் சர்க்கரை போல இனிமையான பேச்சு வேறு. அதற்காகவே 'கோந்து' போல ஒட்டிக் கொண்டு விட மாட்டார்களா? ரொம்பவும் சகிக்க முடியாவிட்டாலும் பணம் வேறு."

அவளது குத்தலும் கேலியுமான பேச்சில் அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. யோசனையாகப் பார்த்தாள் திவ்யா.

திருமணம், ரத்து எல்லாம் இவனுக்கு எவ்வளவு அலட்சியமாகத் தோன்றுகிறது! அப்படியில்லா விட்டால் அவள் திருமணத்தை ஒரே பிடிவாதமாய் நிறுத்தியிருப்பானா? ஆயிரம் பொய் சொல்லியேனும் ஒரு கல்யாணத்தை நடத்தி வை என்பார்கள். இவன் நடக்க இருந்ததைக் கலைத்து விட்டானே! மனோரஞ்சன் தகுதியானவனா, அப்படி அல்லவா என்பது வேறு விஷயம் இப்போது கைமாறு, மண்ணாங்கட்டி என்றாலும் அப்போது அவன் அதற்காகவா கல்யாணத்தைக் கெடுத்தான்? இல்லையே! இவன் அரைகுறையாக அறிந்து, இஷ்டம் போல முடிவு செய்து அதற்குத் தக்கபடி மற்றவர்களை ஆட்டிப் படைத்ததற்கு இவனுக்கு என்ன தண்டனை?

அந்தக் கணத்தில் முடிவு செய்தாள் திவ்யா. இந்தப் பெயரளவுத் திருமணத்தைச் செய்து கொண்டு பிறகு டைவர்ஸ் தர மறுத்து இவனை ஆட்டிப் படைத்து அலைக்கழிக்க வேண்டும்!

முகத்தில் மலர்ச்சியுடன் அவனை நிமிர்ந்து பார்த்து, ''எனக்குச் சம்மதம்'' என்றாள் அவள்.

விழி இடுங்க அவளைக் கூர்ந்து நோக்கினான் சதானந்தன்.

தன் காரணத்தை ஊகித்து விடுவானோ என்று திவ்யாவின் மனம் படபடக்கத் தொடங்கிய போது, முறுவல் செய்து, ''நன்றி'' என்று அவள் கையைப் பற்றித் தூக்கி விரல் நுனியில் முத்தமிட்டான் அவன்.

கூச்சத்துடன் கையை இழுத்துக் கொண்டாள் அவள்.

திருமணத்தைப் பலர் அறியப் பெரிதாகச் செய்ய இருவருக்குமே மனம் இல்லை.

மனோரஞ்சன் மணக்க இருந்த பெண்ணை, அந்த மணம் நின்று இவ்வளவு சீக்கிரத்தில், அவனுடைய அண்ணனுடைய நெருங்கிய நண்பனான சதானந்தன் மணமுடிக்கப் போவதாக, அந்தக் குடும்பம் அறிய இப்போது சொல்வது அநாகரீகம் என்பது சதானந்தனின் கருத்து.

திவ்யாவுக்கும் அதே எண்ணம் தான் என்றாலும் நாகரீகம், அநாகரீகம் பற்றி ரொம்பத் தெரிந்தவன் போல அளக்கிறானே? என்று எண்ணினாள் அவள்.

வேண்டுமானால் ரங்கநாதன் தம்பதிக்கு மட்டும் திவ்யா சொல்லிக் கொள்ளலாம் என்று அவன் அனுமதி கொடுத்த போது முடியவே முடியாது என்றாள் அவள்.

இப்போதுதான் மனோரஞ்சனோடான திருமணம் நின்று போய் வீட்டில் ஏகப்பட்ட ரகளை. இந்தச் சமயத்தில் இன்னொருவனை மணக்கப் போவதாக அவள் சொன்னால் அவளுடைய பெரியப்பா பெரியம்மாவுக்கு அவள் மேல் இருக்கும் கொஞ்ச நஞ்ச மதிப்பும் காற்றில் வைத்த கற்பூரமாய்,



அடியோடு அழிந்து போய் விடாதா? அதற்கு மேல் விவாகரத்து என்று திரும்பி வரும் போது - என்ன தான் இழுத்தடித்து அலைக்கழித்தாலும், ஒருநாள் விலகித்தானே ஆக வேண்டும். அப்படித் திரும்பி வரும் போது வீட்டில் அவள் மதிப்பு ஒரேயடியாக நாறிப் போகுமே. தகப்பன் போல என்று வெறுப்பாகி விடும்.

இந்த சதானந்தனின் திருமண சமாசாரத்தை அடியோடு மறைத்து விடுவதுதான் சரி. சும்மா ஏதோ ஒரு வேலை என்றே சொல்வது எல்லா வகையிலும் நல்லது என்பது திவ்யாவின் நினைப்பு.

கூட்டிக் கழித்துப் பார்த்தால் உண்மையும் அதுதானே! சம்பளம் வாங்கிக் கொள்ளப் போகிறாள்; அந்தச் சம்பளத்துக்காக ஒரு சிறுவனைக் கவனித்துக் கொள்ளப் போகிறாள். அந்த வேலைத் தொடர்பாக நீதிமன்றத்தின் கண்ணை மறைக்க ஒரு திருமண நாடகம். அவ்வளவேதானே?

பெரிதாக நினைத்தது, ஒரு சிறு காற்றில் சீட்டுக்கட்டு மாளிகையாய்ச் சரிந்து விழுந்த பின், திருமணம் என்கிற வார்த்தைக்கு உரிய மதிப்பு கொடுக்க அவளுக்கும் தோன்றவில்லை.

அவனும் பெரிதாக அலட்டவில்லை. ''உன் விருப்பம்'' என்று தோளைக் குலுக்கியதோடு விஷயத்தை முடித்து விட்டான்.

எப்போதுமே அவளது விருப்பத்துக்குத் தடையாக எதையும் செய்திராதவர்கள் திவ்யாவின் வளர்ப்புப் பெற்றோர். ஆனால் இந்த வேலை விஷயமாக அவள் கூறிய போது சற்று நேரம் அங்கே நிசப்தம் நிலவியது.

சாப்பிடும் போது, சாதாரணமாகச் சொல்லி விட்டு, தட்டிலிருந்த முருங்கைக்காயில் இருந்து சதையைப் பிரித்து எடுத்துக் கொண்டிருந்தாள் திவ்யா.

அந்த அசாதாரணமான அமைதி சற்று அதிகப்படியாக நீளவும், சற்றே திகைத்து நிமிர்ந்து பார்த்தாள்.

திலகம், ரங்கநாதனை ஏதோ பார்வையால் தடுத்துக் கொண்டிருப்பது தெரியவும், மேலும் திகைத்து ரங்கநாதனை திரும்பிப் பார்த்தாள்.

அவர் முகம் இறுகியிருந்தது.

''என்ன பெரியப்பா?'' என்றாள் பெண் வியப்புடனேயே.

''ஒன்றுமில்லை.. ஒன்றும் இல்லை'' என்றார் அவர், அவள் புறம் திரும்பாமலேயே. ''நீ உடனடியாக இந்த வேலையை ஏற்பதாக ஏதும் ஒப்புக் கொள்ள வேண்டாம்''

''ஏன்?'' என்றாள் திவ்யா ஆச்சரியத்துடன். இந்த வேலை பற்றி, அதைத் தருபவர் பற்றி நன்றாக விசாரித்து விட்டேன் பெரியப்பா. நீங்கள் வேண்டுமானால்...''

''தேவையில்லை'' என்றார் அவர் அவள் பேச்சில் குறுக்கிட்டு. ''அடி முதல் நுனி வரை நான் விசாரித்ததற்குக் கிடைத்த மதிப்பு எவ்வளவு என்பது எனக்கு நினைவு இருக்கிறது. ஆனாலும் இரண்டு நாள் பொறு'' என்று முடித்து விட்டார்.

என்றும் இல்லாதபடி திலகமும் ஆயிரம் கேள்வி கேட்டாள்.

அந்த சதானந்தனை அவளுக்கு எப்படித் தெரியும்? அவளுக்குப் பிள்ளைகளைப் பற்றி என்ன தெரியும் என்று



அவன் அவளுக்கு அந்த வேலை தருகிறான். இங்கேயே, இந்த ஆஃபீசிலேயே பார்ப்பது அல்லது வேறு கிளைக்கு மாற்றல் கேட்டால் என்ன? அல்லது இந்த ஊரிலேயே வேறு வேலை பார்த்தால் என்ன? வெளியூர் சென்றாவது அந்த சதானந்தனிடம் தான் வேலை பார்த்தாக வேண்டும் என்று என்ன கட்டாயம்?

குடைந்து குடைந்து திருப்பித் திருப்பித் திலகம் கேட்கவும் திவ்யா அலுத்துப் போனாள்.

இதன் அடிப்படைக் காரணத்தை, ''நீங்கள் பெற்ற மகளின் நல்வாழ்வுக்காகத் தான்' என்று சொல்லி அந்தத் தாய் மனதை நோகடிக்க மனம் வராத காரணத்தினாலேயே மனம் களைத்தும் போனாள்.

சோர்வும் எரிச்சலுமாக, ''ஒரு முக்கிய காரணத்தால் - சரியான காரணம் இல்லாமல் நான் ஏதாவது செய்திருக்கிறேனா, பெரியம்மா? - மனோரஞ்சனை மணப்பது முடியாதது என்று ஆகி விட்டது. அதற்கு மேல் அதே ஆஃபீசில் எப்படி வேலை பார்ப்பது? வேறு கிளைக்கு மாற்றல் கேட்டாலும் அங்கேயும் மனோரஞ்சன் வரத்தானே செய்வார்? எப்படியும் வேறு வேலை தேடித்தான் ஆக வேண்டும். அந்தப் பையன் சிவா, சதானந்தனுடைய சினேகிதர் மகன். பாவம், திடீர் என்று பெற்றோர் இறந்து அனாதையானவன். மிஸ்டர் சதானந்தனுக்கு ஓர் இடத்தில் இருந்து பிள்ளையைப் பார்த்துக் கொள்ள முடியாதபடி சுற்றிக் கொண்டே இருக்கிற தொழில். ஒரு நாலைந்து மாதம் பார்த்துக் கொள்ளச் சொல்லி நல்ல சம்பளமும் தருகிறேன் என்கிறார். எனக்கும், தெரிந்தவர்கள் மத்தியிலிருந்து கொஞ்ச காலம் விலகி இருப்பது நன்றாகயிருக்கும் என்று தோன்றியதால் இதை ஒத்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன். இதில் என்ன தப்பு? இதுவரை ஆறுதடவை இதை எல்லாம் சொல்லி

விட்டேன், பெரியம்மா. இன்னமும் எத்தனை தடவை சொன்னால் உங்களுக்குத் திருப்தியாகும் என்று சொல்லுங்கள். சொல்லுகிறேன்...'' என்று கூறும்போதே அவள் கண்களில் கண்ணீர் வந்து விட்டது.

''அதில்லை திவ்யா.. அன்றைக்குக் கல்யாண மண்டபத்தில் வாசலில் சென்று வரவேற்று, அந்தப் பிள்ளையிடம் பேசினாய். அப்புறம் பார்க்கில் பார்த்ததாகக் கடைசி வீட்டுக் கனகம் சொன்னாள். கல்யாண மண்டபத்தில் நீ அவரோடு பேசியதைக் கண்டிருந்ததால் உடனே அடையாளம் தெரிந்தது என்று சொன்னாள். எதிலும் தடபுடா என்கிறாய். ஒன்று கிடக்க ஒன்றில் போய் மாட்டிக் கொள்ளக் கூடாது பார். பெறாவிட்டாலும் வளர்த்த பாசம், கவலையாகத்தானே இருக்கிறது'' என்று கூறவும், எரிச்சல் பட்டதற்காக உள்ளூர வருந்தி, மீண்டும் காரண காரியங்களைப் பொறுமையாக விளக்கினாள் திவ்யா.

மாலையில் வந்து ரங்கநாதன் பேச்சு அவளை வேறுவிதமாய் வருத்தியது. ''பாரம்மா, என்னதான் இருபத்தியோரு வருடங்களாக வளர்த்த போதும் உன்னைத் தட்டிக் கேட்கும் உரிமை எங்களுக்குக் கிடையாது என்பது எனக்கு நன்றாகவே தெரியும். தெரிய வைத்தும் இருக்கிறாய். ஆனாலும் மனம் கேட்காமல், உன் அப்பாவுக்கு டெலிஃபோன் செய்து விவரம் தெரிவித்தேன். உரிமை உள்ளவன் அவன் தானே? ஆனால் அவன் சொல்கிறான், பதினாறு வயதுக்கு மேலே ஆணோ, பெண்ணோ அவர்கள் தனி மனிதர்கள். அவரவர் விருப்பம் போல நடக்க விட்டு விட வேண்டுமே தவிர அதில் தலையிடக் கூடாது என்கிறான். உன் விருப்பம் என்று விட்டு விட வேண்டுமாம். நம் சட்டப்படியும் உனக்குத் தன்னுரிமை தரும் பதினெட்டு முடிந்து மேலேயும் மூன்று ஆண்டுகள் முடிந்து விட்டன. அதனால் உன் அப்பா சொன்னது போல, உன் விருப்பம் போல நீ எங்கே வேண்டுமானாலும் போகலாம்; என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் ஒன்று மட்டும் கேட்டுக் கொள்ளுகிறோம். வளர்த்த எங்கள் பெயரைக் காப்பாற்று'' என்று உருப் போட்டு ஒப்புவித்தவர் போலக் கூறிமுடித்தவர், அதற்கு மேல் பேசப் பிடிக்காதவர் போல அவரது அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டார்.



திலகமும் ஒதுங்கிக் கொண்டு விட, தனிமையில் சற்று நேரம் கண்ணீர் உகுத்தாள் திவ்யா.

பிறகு கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள். அவளைப் பொறுத்தவரையில் திவ்யா எந்தத் தப்பும் செய்யவில்லை. அவளைப் பெற்றோருக்கும் மேலாக வளர்த்தவர்களின் பாசம் எந்தவிதத்திலும் குறையாது. அவர்களின் இந்தக் கோபம் தற்காலிகமானது. உண்மை தெரியாமல் அவர்கள் பேசும் சில வார்த்தைகளுக்காக வருந்துவது தவறு. காலம் இவர்களின் கோபத்தை ஆற்றும். அதுவரையும் பிரிந்து இருப்பதே நல்லது. இப்போதைக்கு இதை நினைத்து மனதை உளப்பாமல், சதானந்தனுக்குப் பாடம் கற்றுக் கொடுப்பதில் கவனத்தைச் செலுத்துவது நல்லது.

அவனுக்கும் புத்தி கற்பித்தே ஆக வேண்டும் இல்லையா? வலிக்க ஓர் அறை விழுந்தால் தானே, அடுத்தவர் காரியத்தில் மூக்கை நுழைப்பது பிழை என்று அவனுக்கும் தெரியும்?

முகத்தைக் கழுவிக் கொண்டு பெட்டி அடுக்கத் தொடங்கினாள் திவ்யா.

கல் விட்டெறிந்த குளத்து நீர் போல அவளது மனதைச் சலனப்படுத்திக் கொண்டே இருக்கும்படி இன்னொன்று நடந்தது.

மேற்கொண்டு பயண விவரங்கள் பேசுவதற்காக, இன்னொரு தரம் சதானந்தனைத் திவ்யா சந்தித்துப் பேச நேர்ந்தது.

அப்போது அந்தக் கடிதத்தைக் கேட்டாள் அவள்.

அவ்வளவு நேரம் சாதாரணமாகப் பேசிக் கொண்டு இருந்தவன் உடனே மாறினான். "அது என் வீட்டுக்கு நீ வந்து சேர்ந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றான் சுருக்கமாக.

கடிதம் பற்றிய உண்மை தெரிந்த பிறகும், அவன் நம்பாமல் பேசியது உள்ளூர வருத்த, "அப்படியானால் நீங்கள் என்னை இன்னமும் நம்பவில்லை?" என்றாள் அவனை நேராகப் பார்த்து.

அவன் முகத்தில் ஒரு திரை விழுந்தது. "ஒரு பெண்ணை நம்புகிற முட்டாள்த்தனத்தை இந்தப் பிறவியில் இனி நான் செய்ய மாட்டேன்!" என்று குரலில் அழுத்தத்துடன் அறிவித்தான் சதானந்தன்.

சுள்ளென்று சினம் பெருக, "அப்படி நம்ப முடியாத பெண்ணிடம் எப்படித்தான் பிள்ளையை ஒப்படைக்கிறீர்களோ!" என்றாள் அவள் எகத்தாளமாக.

"முழுமையாக ஒப்படைக்க மாட்டேனே. மேற்பார்வை இட நான் இருப்பேன். நான் இல்லாத சமயங்களில் என் பார்ட்னருடைய மகள் வினோதினி வருவாள்" என்றான் அவன் அதே அழுத்தத்துடனேயே.

"வினோதினியா! அவளை மட்டும் எப்படி நம்புவீர்கள்? ஒருவேளை அவள் பெண்ணில்லையோ!" என்றாள் திவ்யா கோபமும் கிண்டலுமாக.

"பெண் தான். நூற்றுக்கு நூறு பெண்ணே தான்" என்று சொல்லும் போதே அவன் முகத்தில் திரைவிலகி புன்னகை



பரவியது. "ஆனால் சிறுவயதிலிருந்து உடன் பழகிய சிநேகிதி" என்றான் என்னவோ அதுவே பெரிய தகுதி போல.

அவளுக்கு உள்ளூர மேலும் கொதித்தது. "அவ்வளவு சிறந்தவள் என்றால் அவளிடமே சிவாவை ஒப்படைத்திருக்கலாமே!" என்று வேகத்துடன் திருப்பினாள்.

"என் வளர்ப்பு மகனை யாரிடம் ஒப்படைப்பது என்று எனக்கே தெரியும். பிறர் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை" என்றான் சதானந்தன், கடைசி வார்த்தையைத் தனதாக்கி.

வினோதினி! பெயரைப் பார் பெயரை! பெயர் மாதிரியே அவளும் பார்ப்பதற்கு வினோதமாய்... கோணல் மாணலாய் இருப்பாளா?

இருக்காது என்று நெஞ்சில் கனத்துடன் நினைத்தாள் திவ்யா. அப்படியெல்லாம் இருந்தாள் என்றால் அவளைப் பற்றிப் பேசும் போது அவன் முகத்தில் இவ்வளவு ஆனந்தம் இராது.

இவர்கள் இருவருக்கும் என்ன உறவு?

## 15

வினோதினியைப் பற்றி மேலும் இரண்டு மூன்று தரம், வெறுமனே பேச்சுவாக்கில் கேட்பது போல விசாரித்துப் பார்த்தாள் திவ்யா.

ஆனால் சதானந்தன் தோளைக் குலுக்கியதோடு சரி. "அங்கே நீதான் பார்க்கப் போகிறாயே. அப்போது தெரிந்து கொள்.. போதும்" என்று கூறிவிட்டான்.

பெயரைப் பார், 'சதானந்தன்' என்று. 'சதா அழுத்தம்' என்று வைத்திருக்க வேண்டும் என்று உள்ளூர எரிச்சல்பட்டது தவிர திவ்யாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ரங்கநாதன் தம்பதியினர், தங்களுக்கு முழு ஒப்புதல் இல்லை என்று தெளிவாகவே காட்டிய போதும், கண்டு கொள்ளாதது போன்ற பாவனையுடனேயே திவ்யா கிளம்பி விட்டாள்.

ஆனால் அப்போதும், ஓர் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து, ''உன் சேமிப்பில் கையில் கொஞ்சம் வைத்திருப்பாய் என்று நினைக்கிறேன். எதற்கும் இதையும் வைத்துக் கொள். எப்போதும் எச்சரிக்கையுடன் இரு'' என்று பெரியப்பா உரைத்த போது சமாளிப்பது அவளுக்கு மிகவும் சிரமமாகவே இருந்தது.

எல்லாம் கொஞ்ச நாள். பிறகு எல்லாம் சரியாகி விடும் என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டபடி தலையாட்டினாள் அவள்.

இரவெல்லாம் தன் குழப்பத்தில் இருந்த திவ்யாவுக்கு. மறுநாள் காலையிலிருந்து கேரள மண்ணின் எழில் தவிர வேறு எதையும் நினைக்கக் கூட முடியவில்லை.

எங்கு பார்த்தாலும் பசுமை. இடையிடையே ஓடிய ஆறுகள் அல்லது ஓடைகள். ஆங்காங்கே வீடுகளும், குளங்களும், வீட்டின் மேல் ஏற்றப்பட்டிருந்த மிளகுக் கொடிகளும், அவற்றின் வெற்றிலை வடிவ இலைகளும் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை அவளுக்கு.

பவுர்ணமியின் அழகைக் காணக் கடற்கரைக்கு ஓடுகிற ரசிகை ஆயிற்றே. அவளது கலங்கிய மனதிற்கு மலையாள மாநிலத்தின் அழகு அருமருந்தாய் ஆயிற்று.



அவளது ஆர்வத்தைப் பார்த்து விட்டு, எதிர்ப்புறம் இருந்த இருவரும் மிளகுக் கொடியும், மரவள்ளிக் கிழங்கும் வளர்க்காத வீடே லேசில் இராது என்று பெருமையோடு அவளுக்கு விளக்கத் தொடங்கினார்கள்.

அவளது பரபரப்பையும் மகிழ்ச்சியையும் பேசாமல் கையைக் கட்டிக் கொண்டு அமர்ந்து பார்த்ததோடு சரி; காஃபி, காலை உணவு என்று கவனித்ததற்கு மேல் சதானந்தன் அவளது ஆரவாரத்தில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் எதிர்ப்புறம் இருந்த தம்பதியிடம் கலகலப்பாக, எதையும் மறையாது பேசினான்.

கூட வந்தவர்கள் இருவரும் திருச்சூரைச் சேர்ந்தவர்கள். குருவாயூருக்கு மிக அருகில் வசிப்பவர்கள் என்பதால் இவர்களின் நோக்கம் அறிந்ததும், அவர்களும் கூடவே வந்து திருமணத்தில் கலந்து கொண்டதோடு, திருமண ரிஜிஸ்டரில் சாட்சிக் கையெழுத்தும் போட்டனர்.

எல்லாம் நடக்க நடக்க, திவ்யாவுக்கு வயிற்றுக்குள் பிசைந்தது.

சதானந்தன் சும்மா பேருக்கு ஏதோ செய்வான் என்று பார்த்தால் நிஜக்கல்யாணம் மாதிரியே மண மேடை, மங்கல வாத்தியம், அய்யர், மந்திரம் என்று ஏற்பாடு செய்திருந்தான். போட்டோ, வீடியோ வேறு! திருமணச் சடங்குகள் அனைத்தும் கோவிலில் நடப்பது வேறு அவளுக்கு மிகவும் மனதைப் பாதித்தது. கடவுள் முன்னிலையில் நடக்கிறதே. இதைப் போய் சும்மா, நாடகம், நடிப்பு என்று எப்படி ஒதுக்கி விட முடியும் என்று மனம் கலங்கினாள்.

ஆனால் உடனேயே ஒன்று தோன்றியது. ஜெயதேவரின் கதையில் சொல்லுவது போல, இறைவன் இல்லாத இடம்

என்று ஒன்று இருக்கிறதா?; சாமி சிலை இருக்கும் இடம் மட்டுமே தெய்வ சந்நிதானம் என்று கூறுவது என்ன மடத்தனம் என்று தனக்குத்தானே கூறித் தன்னையே தேற்றிக் கொண்டாள் அவள்.

ரயிலில் உடன் வந்தவர்கள் சாட்சிக் கையெழுத்திட்டதற்கு நன்றி தெரிவிப்பது போல, ஓர் உயர்தர ஓட்டலில் அவர்களுக்கு விருந்தளித்தான் சதானந்தன், திருமணத்தில் கலந்து கொண்ட எல்லோருக்குமே. உடன் இருந்து உண்டு விட்டு, ஃபோட்டோ பிலிம், வீடியோ காசட் இரண்டையும் வாங்கிக் கொண்டு மீண்டும் பயணத்தைத் தொடங்கி விட்டான்.

கேரளத்தின் இயற்கை எழில் சற்று மங்கித் தெரிந்தது திவ்யாவுக்கு. பழக்கமற்ற கனமாய்த் தாலி கோத்திருந்த தங்கச் சங்கிலி கழுத்தை உறுத்தியது. மனதை அதை விடவும் அதிகமாகவே நெருடியது.

வெறும் நாடகத் திரும்ணத்துக்கு இவ்வளவு கனமான நகை ஏன்? ஒருவேளை...

சட்டென அவன் புறம் திரும்பி, "இது தங்கம் தானா?" என்று தாலிக் கொடியைத் தொட்டுக் காட்டி விசாரித்தாள்.

புருவங்களை உயர்த்தி, "ஏன் இந்த ம.. அசட்டுத்தனமான சந்தேகம்?" என்று பதில் கேள்வி கேட்டான் சதானந்தன்.

உடனே திருத்திக் கொண்டாலும் அவன் சொல்ல வந்தது புரிந்து விட ஆத்திரமுற்று, "இதில் மடத்தனத்துக்கு என்ன வந்தது?" என்று படபடத்தாள் அவள்.



"பின்னே? நான் ஒரு நகை வாங்கினால் அது தங்கமா என்று சந்தேகப்படுவதை வேறு என்னவென்று சொல்வது?"

"உங்கள் பழக்கங்கள் எல்லாம் எனக்கு என்ன தெரியும்?"

தெரியும்தான். நிறையவே தெரியும்தான். பாவனையாகப் பேசும் போது புருவங்களை உயர்த்துவது, மெய்யான கேலியில் கண்ணோரம் சுருங்குவது, கோபத்தில் முகம் இறுகுவது, குரல் தாழ்ந்து வார்த்தைகள் அழுத்தமாக விழுவது, கூட இருப்போரின் சிறு சிறு தேவைகளை மறக்காமல் கவனிப்பது.. ஒரேயடியாய்த் தெரியாது என்று சொல்லுவதற்கு இல்லைதான்.

ஆனால் அவன், அவளது பேச்சை ஏற்று, "சாரி.. இப்போது ஏன் இந்தத் திடீர் சந்தேகம்?" என்று தணிந்து போய் விசாரித்தான்.

"இல்லை... நாடகக் கல்யாணத்துக்குப் போலி நகை போதாதா?" என்று அவள் தொடருமுன் "ஷட்-அப்" என்று சீறினான் சதானந்தன்.

அவள் திகைத்து விழிக்கவும் சில கணங்கள் அவளை வெறித்துப் பார்த்தான். பிறகு, "இப்போது நாம் சென்னையில் இல்லை திவ்யா. பகலில் பக்கம் பார்த்துப் பேசு, இரவில் அதுவும் பேசாதே என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. யார், என்ன என்று அறியாத போது இந்த இடமும் இரவு போலத்தானே? விழக்கூடாத காதுகளில் உன் பேச்சு விழுந்தால் இதுவரை செய்ததெல்லாம் வீண்தானே" என்று தாழ்ந்த குரலில் விளக்கினான் அவன்.

அவளே எதிர்பாராத வண்ணம், சதானந்தனின் சீறல் திவ்யாவைப் பாதித்திருக்கவே, சமாதானம் அடைய மறுத்து, "இது முதல் வகுப்பு கேபின். இங்கே வேறு யாரும் இல்லாத போது நான் கேட்டதில் என்ன விபரீதம் வந்து விடும்?" என்று விடாமல் கேட்டாள் அவள்.

ஆனால், "கேபினுக்கு வெளியே யாராவது நிற்கிறார்களா இல்லையா என்று அறிய உனக்கு 'எக்ஸ்ரே' கண் ஏதாவது இருக்கிறதா?" அவன் கேலிக்குரலில் மட்டம் தட்டிய போது அதற்குப் பதிலாக ஏதும் சொல்ல முடியவில்லை அவளால்.

வாய்ப்பை விடாமல், "அப்படி யாரும் நின்றிருந்து உன் பேச்சு காதில் விழுந்திருந்தால் இயல்பான ஆவலிலேயே யார் என்ன என்று கவனிப்பார்கள். அதுவே 'சிவா' வழக்கு சம்பந்தப்பட்டவர்களாக இருந்தால் எல்லாம் தொலைந்தது போலத்தான், இல்லையா? சும்மா சும்மா என்னை எதிர்த்துப் பேசியாக வேண்டும் என்று இல்லை, திவ்யா.. என் பேச்சைக் கேட்டு அதன்படி நடந்தும் பார்க்கலாம். அப்படி நடப்பது நல்லது என்பதைக் காலப்போக்கில் நீ கண்டு அறியவும் செய்யலாம்" என்று கேலிக் குரலில் அவன் குட்டு வைத்த போது உள்ளூரப் புகைந்த போதும், அவள் பேசாமல் தான் இருக்கும்படி ஆயிற்று.

ஏதாவது மறுத்துப் பேசினால் அவன் சொன்னது போல வேண்டுமென்றே எதிர்த்துப் பேசுவது போல ஆகும் என்பதோடு, அவன் சொன்ன காரணம் சரியானதாகவும் இருந்து தொலைத்ததே!

பேச வழியின்றி அவள் வாய்மூடி இருக்க, அவன் மேலும் சொன்னான்: "இந்த வினாடியிலிருந்து நீ என்



மனைவியாகவே உன்னை எண்ணிப் பழக வேண்டும், திவ்யா" என்று குரலில் அழுத்தத்துடன் கட்டளையிட்டவன், அவள் முகம் கடுக்க ஏதோ சொல்ல வாயெடுக்கவும், கை உயர்த்தி அடக்கினான். "பொறு.. நான் சொல்லி முடித்து விடுகிறேன். மனைவியாக நினைத்துப் பழகச் சொன்னதற்காக நீ என் படுக்கையில் கூட பங்கேற்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. நம் வீட்டில் உனக்குத் தனி அறையே தரப்படும். ஆனால் மற்றவர்கள் வித்தியாசமாக எண்ணாத அளவுக்கு நடந்து கொண்டால் போதும். அதுவும் சிவாவின் வழக்கு நல்லபடியாக முடியும் வரைதான். நான் தரும் சம்பளத்துக்கு இந்த அளவு நீ செய்வாய் என்று நம்புகிறேன்.. இடையில் ஏதோ சொல்ல வந்தாயே, என்ன?"

இதற்கு என்ன பதில் சொல்வது? அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பதைச் சரியாகவே ஊகித்து, அதற்குச் சற்று அதிகப்படியாகவே பதிலும் சொல்லி முடித்து விட்டு வேண்டுமென்றே என்னவென்று கேட்டால் அவளால் என்ன சொல்ல முடியும்? இவ்வளவு விவரம் நீ சொன்னாயே, இந்தக் கேபினுக்கு வெளியே யாரும் நிற்கவில்லை என்று நீ மட்டும் எக்ஸ்ரே கண்ணால் பார்த்து விட்டா பேசினாய்? நீ பேசியது மட்டும் வெளியே நிற்பவர்களின் காதில் விழுந்திராதோ என்று அவனைப் போலவே கேலி போலக் குட்டவும் முடியவில்லை.

ஏனெனில் அவன் அந்த அளவுக்குத் தாழ்ந்த குரலில் தான் பேசினான்.

எந்த வகையிலும் திருப்பிக் கொடுக்க முடியாமல் போகவே, ஒன்றும் பேசாமல், வெளியே பார்ப்பவள் போலச் சன்னல் புறம் திரும்பிக் கொண்டாள் திவ்யா.

காலையில் திருவனந்தபுரம். கொஞ்ச நேரம் கார்ச் சவாரி.

படகுத்துறையில் நின்றபடி கடலை நோக்கிய திவ்யாவுக்கு ஆச்சரியமாய் இருந்தது. அவள் பார்த்துப் பழகியிருந்த வங்கக் கடலின் அலைகளை நினைக்கையில் அரபிக் கடல், குளம் போல அலையற்றுத் தோற்றமளித்தது.

அவள் வெளிப்படையாக வியந்த போது சதானந்தன் வாய்விட்டுச் சிரித்தான். "இது கடல் அல்ல. உப்பங்கழி என்றவன் தொடு வானம் போல தூரத்தில் சற்றே வெளிர் நீலமாய்த் தோன்றிய இடத்தைக் காட்டி, "அங்கேதான் கடல் இருக்கிறது. 'டைடல் வேவ்' என்பார்கள். பெருக்கு சமயத்தில் அலைகள் ஓங்கி அடிக்கும் போது கடல் நீர் கரை தாண்டி வந்து சேர்ந்து இப்படிக் குட்டிக் கடல்களாகி இருக்கின்றன.. வா" என்று அந்த மோட்டார்ப் படகில் ஏறக் கை கொடுத்தான்.

சற்றே தயங்கி விட்டு, காற்றில் அலைப்புற்றுக் கொண்டிருந்த படகில் எந்தப் பிடிமானமும் இல்லாமல் ஏறினால் கீழே விழ வேண்டும் என்பது புரிந்து, அவனது கையைப் பிடித்துக் கொண்டு படகில் ஏறினாள் திவ்யா.

சாமான் ஏற்றியதும் சதானந்தனின் ஒரு தலையசைவில் மற்றவர்கள் அகன்று விட, படகு கிளம்பியது.

கடல் காற்று முகத்தில் மோத, கடலைக் கிழித்துச் செல்லும் படகில் அமர்ந்து பயணம் செய்வது திவ்யாவுக்குப் புதிய அனுபவம். உற்சாகத்துடன் அனுபவித்தாள்.

சற்று நேரம் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு, "நல்லவேளை.. எங்கே உனக்கு 'ஸீ சிக்னஸ்' வந்து விடுமோ என்று கொஞ்சம் கவலை இருந்தது. இப்போது நிம்மதி" என்றான் சதானந்தன்.



சூரிய ஒளிபட்டு, நீர்த்திவலைகள் வைரக்கற்களாய் வண்ணங்கள்ள வாரி இறைப்பதை ரசித்தபடி, "இதில் கவலைப்பட என்ன இருக்கிறது? தலைவலி மாதிரி கொஞ்ச நேரக் கஷ்டம். இப்போது போகும் போது ஒருதடவை; பிறகு வரும் போது ஒரு தடவை. அவ்வளவுதானே என்றாள் அவள் கவலையுற்று.

"இல்லை... நான் எப்போ..." — என்று தொடங்கி விட்டுப் பேச்சை நிறுத்தி, அவளை ஒரு பார்வை பார்த்து விட்டுத் திரும்பினான் அவன்.

அவனது பார்வையை உணர்ந்து அவள் திரும்புமுன் அவன் முகம் மாறி விட்டது. "அதோ" என்று சுட்டிக் காட்டினான். "நம் வீடு"

நம் வீடு! வீடா அது? மாளிகை!

ஆனால் அவன் நாடக வசனத்தை ஒழுங்காகத் தான் சொல்கிறான். இனி அவள் முறை! என்ன சொல்வது?

சற்று யோசித்து விட்டு, "ஆகா! நம் வீடு இவ்வளவு அழகென்று நீங்கள் சொல்லவே இல்லையே!" என்று முகம் மலர அவள் உரைக்கவும் அவன் பார்வை மீண்டும் மாறியது.

அவளால் புரிந்து கொள்ள முடியாத் பார்வை!

என்னவென்று அவள் யோசிக்கத் தொடங்குமுன் அந்தத் தோற்றம் மீண்டும் மாறிவிட, "இப்போது தான் பார்க்கிறாயே.. எப்படி இருக்கிறது? சொல்லேன்" என்று இலகுவாகப் பேசினான் சதானந்தன்.

வேறு என்ன சொல்ல முடியும்?

சுற்றிலும் பொன்மணல் பரப்பு. அடுத்து பன்னிற மலர்களுடன் பசேல் என்ற தோட்டம். பாதுகாப்புக்காக

அமைக்கப்பட்டிருந்தாலும், பார்வைக்கும் அழகாக ஏழடி உயரத்துக்குக் கிரில் ஓர்க். அதன் நடுவில் மேட்டுப்பகுதியில் பெரும் கருங்கல் கட்டிடம். பழைய காலக் கட்டிடம். நன்கு பராமரிக்கப்பட்டு பளிச்சென்றிருந்தது. உயரமான கதவுகளும், ஜன்னல்களும், மேற்புறம் அர்த்த சந்திர வடிவுடன், கம்பீரமாய் ஓர் அரச மாளிகை போலத் தோன்றியது அவன் வீடு.

அதையே மறையாமல் சொல்லவும் அவன் முகம் மலர்ந்தது. "முன்பு பிரிட்டிஷ் ஆட்சி இருந்த சமயம், அவர்களின் பிரதிநிதி கட்டியது. இங்கே சுதந்திரப் போராட்டம் வலுப் பெற்ற போது அவரிடமிருந்து என் தாத்தா வாங்கினார். அப்போது சும்மா லீவு நாளைக் கழிப்பதற்காக என்று வாங்கியது. அப்பாவும் அடுத்து நானும் இங்கேயே தொழிலையும் பெருக்கினோம். இதையே முக்கியமாக வசிக்கும் இடமாகவும் ஆக்கிக் கொண்டோம்''.

படகு அதற்குரிய இடத்தில் நிற்கவும் இலகுவாகத் தாவிப் படித்துறையில் குதித்தான் சதானந்தன். அவள் இறங்குவதற்கு உதவியாகக் கையை முன்போலவே நீட்டினான்.

இப்போது தயக்கமின்றியே அவன் கையைப் பற்றிக் கொண்டு இறங்கினாள் திவ்யா. ஆனால் அப்போதும் படகு சற்று ஆடிவிட அவள் நிதானம் தப்பி விழப் போனவள், அவனது கைப்பிடியின் பலத்தினாலேயே விழாமல் சமாளித்தாள்.

"தாங்க்ஸ்'' என்று திரும்பிப் பார்க்குமுன், இரு பணியாட்கள், சாமான்களைத் தூக்கிச் செல்லக் கண்டாள். உள்ளூர வியப்போடு யோசனையாகவும் இருந்தது.



கண்ணசைவில் கண நேரத் தாமதம் கூட இல்லாமல் ஓடோடி வேலை செய்கிறார்களே. பாவம். இவர்களையும் ஏதாவது வழியில் மிரட்டி வைத்திருப்பான் போல.. பாவம் இந்த ஆட்கள் என்று எண்ணினாள் அவள்.

மேலும் பொருட்களை இறக்கிச் செல்லப் படியிறங்கி வந்த ஒருவனிடம் சதானந்தன் ஏதோ கேட்டான்.

பணியாளின் பதிலில், "என்னுடன் வா'' என்று திவ்யாவை அழைத்துக் கொண்டு படியேறி, வீட்டைச் சுற்றிக் கொண்டு வீட்டின் பின்புறம் சென்றான்.

பேச்சு சிவாவைப் பற்றி என்பதை உணர்ந்த போதும் வார்த்தைகள் சரிவரப் புரியாமல், "மலையாளம் மாதிரித் தெரியவில்லையே, இது என்ன மொழி மிஸ்டர் சதானந்தன்?'' என்று விசாரித்த திவ்யா, அவன் நடப்பதை நிறுத்தி முறைக்கவும் விழித்தாள். "எ...என்ன?'

"மண்ணாங்கட்டி!'' என்று வெடித்தவன், ஒருவாறு சற்று நிதானப்படுத்திக்கொண்டு, "நீ என்ன சொல்லி என்னை அழைத்தாய்? மிஸ்டர் சதானந்தனா? விட்டால் ஊர் முழுக்க ஒலிபெருக்கி வைத்துச் சொல்லுவாய் போல் இருக்கிறதே, நம் திருமணம் பொய்யென்று'' என்றான் எரிச்சலை அடக்க மாட்டாத குரலில்.

"சா..சாரி...'' என்றாள் அவள் சின்னக்குரலில். "முதலில் நீ என்னை எப்படி அழைப்பது என்று முடிவு செய்து கொண்டு மேலே போகலாம். என் சிநேகிதர்கள் என்னைச் 'சதா' என்பார்கள். வினு.. வினோதினி என்னைச் 'சது' என்பாள். வேண்டுமானால் நீயும் அதேமாதிரி...'' என்று அவன் முடிக்குமுன் அவசரமாகக் குறுக்கிட்டு "மாட்டேன்'' என்றாள் அவள்.

"ஏன்?''

சற்றுத் திணறிவிட்டு, ''வ..வந்து மற்றவர்கள் அழைப்பது போல நானும் கூப்பிட்டால் நன்றாயிராதே... அதனால்... அதாவது மனைவி என்றால் கொஞ்சம் வித்தியாசமாய்...'' என்று இழுத்தாள்.

''ம்ம்..ஓ.கே. ஆனந்த் என்று கூப்பிடு'' என்றான் அவன். ''ஆ...ஆனந்த்...''.

''ஆ.. ஆனந்த் அல்ல. வெறும் ஆனந்த். இரண்டு தரம் கூப்பிட்டுப் பழகிக் கொள்'' என்று அவளை இருதரம் அழைக்க வைத்து திருப்தியுற்ற பிறகே மேற்கொண்டு நடக்கத் தொடங்கினான் சதானந்தன்.

நடந்தபடியே, ''என்ன மொழி என்று கேட்டாயே. இது கொச்சையான மலையாளம். உனக்குப் புரிவது கடினம் தான். ஆனால் எளிமையான தமிழ்ப் பேச்சை புரிந்து கொள்ளும் அளவுக்கு இவர்களுக்குக் கற்றுக் கொடுத்து வைத்திருக்கிறேன். அதனால் உனக்குக் கஷ்டமிராது'' என்று பேசியபடியே இருவரும் வீட்டின் மறுபுறம் சென்றனர்.

சட்டென நெஞ்சு உருகிப் போயிற்று திவ்யாவுக்கு.

கடல் கொந்தளிக்கும் சமயங்களில் கூடக் கடல் நீர் வீட்டின் உள்ளே வந்து விடக் கூடாது என்பதற்காக அந்த மாளிகை மிகவும் உயரத்தில் கட்டப்பட்டிருந்தது. அதேசமயம் நாற்புறமும் கடற்கரை மணலில் விளையாடுவதற்காகவும், கடலில் குளித்து மகிழ்வதற்காகவும் வீட்டிலிருந்து இறங்கிச் செல்ல அகலமான பெரிய படிக்கட்டுகளும் இருந்தன.

அவ்வாறு வீட்டின் பின்புறமாய் அமைக்கப்பட்டிருந்த படிக்கட்டை ஒட்டிய கைப்பிடிச் சுவரின் மேல், கடலை வெறித்தபடி அமர்ந்திருந்தான் ஓர் ஒல்லியான சிறுவன்.



கடற்காற்றின் வேகத்தில் சட்டை உடம்போடு ஒட்டி அவன் எவ்வளவு ஒல்லி என்பதைத் துல்லியமாகக் காட்டியது.

ஏதோ தோன்றவும் சட்டெனத் திரும்பி, சதானந்தனைப் பார்த்தாள் திவ்யா.

இரக்கமும், வருத்தமும், வேதனையுமாக அந்த முகம் அப்படியே அவள் மனதில் பதிந்தது.

அவள் நோக்குவது உணர்ந்து, வினாடிக்குள் முகத்தை மாற்றிக் கொண்டு, ''சிவா!'' என்று மென்மையாக அழைத்தான் சதானந்தன்.

''வாங்க, அங்கிள்'' என்றான் சிறுவன் திரும்பாமலே. என்னை மாமா வீட்டுக்கோ, சித்தப்பா வீட்டுக்கோ அனுப்ப 'ஆர்டர்' கொண்டு வந்திருக்கிறீர்களா?''

ஆண்பிள்ளை, தைரியமாக இருக்க வேண்டும் என்று யாரேனும் சிவாவுக்குப் போதித்திருப்பார்கள் போலும். குரலைத் திடமாக வைத்துக் கொள்ள அவன் எவ்வளவோ முயன்றும் கடைசியில் நடுங்கி விட்டது.

அது பொறுக்காமல் ஓர் எட்டில் அவனை அணுகி அணைத்தான் சதானந்தன். ''சேச்சே.. அப்படி ஏதும் நடக்க அங்கிள் விட்டு விடுவேனா? இங்கேயே உனக்குத் துணையாக இருப்பதற்காக ஓர் 'ஆன்ட்டி' கொண்டு வந்திருக்கிறேன். இனியாரும் உன்னை இங்கிருந்து அசைக்க முடியாது, தெரியுமா?'' என்றான் சவால் குரலில்.

'நட்புதான் மிகவும் முக்கியம்' என்று அன்று சதானந்தன் சொன்னது உணர்ந்து சொன்ன வார்த்தைகள் தான் போலும். சிவா தன்னுடைய உறவினரிடம் செல்ல விரும்பாத அளவுக்கு நண்பன் மகனிடம் அன்பு காட்டி இருக்கிறானே! ஆனால்

அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது. சிவா உறவினர்களைப் புறக்கணித்து சதானந்தனோடு இருக்க விழைந்ததுதான்.

''இதோ, இவள்தான் உன் ஆன்ட்டி'' என்று அறிமுகப்படுத்தினான் சதானந்தன்.

ஒருதரம் அவளை ஏற இறங்கப் பார்த்து விட்டு, அவள் அருகில் வந்து நின்று, ''ஹலோ.. ஆன்ட்டி சவுக்கியமா? பிரயாணம் சுகமாக இருந்ததா?'' என்று பெரியவர்கள் போலப் பொறுப்பாய்க் குசலம் விசாரிக்கவும் திவ்யாவுக்கு விழிகளில் நீர்த்ததும்பியது.

அடக்கிக் கொண்டு, ''ம்.. பயணம் நன்றாகத் தான் இருந்தது. ஆனால் இங்கே வந்ததும் படகில் இருந்து இறங்கத் தெரியாமல் கீழே விழப் போனேன். உன் அங்கிள் இல்லையென்றால் தண்ணீரில் விழுந்து நன்றாக நனைந்திருப்பேன். நீ எப்படி? உனக்கு 'போட்'டில் ஏற, இறங்கத் தெரியுமா?'' என்று பேச்சுக் கொடுத்தாள் திவ்யா.

''ம்!'' என்று பெருமையோடு அறிவித்தான் சிறுவன். ''நான் ஒரு தடவை கூட விழுந்தது இல்லை. அப்படித்தானே, அங்கிள்?'' என்று சதானந்தனைச் சாட்சிக்கு அழைத்தான்.

''கரெக்ட். சிவா ரொம்பவும் கெட்டிக்காரன் தெரியுமா?'' என்று பிள்ளையைத் தட்டிக் கொடுத்தபடி கண்களால் திவ்யாவுக்கு நன்றி சொன்னான் சதானந்தன்.

ஏனோ வானத்தில் பறப்பது போல உணர்ந்தாள் திவ்யா.

ஆனால் இந்த 'வானத்தில் பறக்கிற சுகம்' எல்லாம் விரைவிலேயே மறைந்து போயிற்று. 'என்னைச் சொல்லி விட்டு இவன் மட்டும் என்ன பெரிய ஒழுங்கு?' என்று அவள் கோபத்தில் குமுறும்படி ஆயிற்று.



# 16

கண்களால் நன்றி தெரிவித்த சதானந்தன், விரைவிலேயே வார்த்தைகளாலும் அவளுக்கு நன்றி உரைத்தான். ''நீ கீழே விழ இருந்ததாகச் சொன்னது நல்ல ஐடியா, திவ்யா. பாவம் என்று இளகி விட்டான் என்று நினைக்கிறேன். இதுபோல இன்னும் ஏதாவது சொல்லி அவனைச் சாப்பிடவும் வைக்க வேண்டும். உடம்பில் சதையே இல்லாமல் எலும்புக்கூடு மாதிரி அவன் இருப்பதைப் பார்க்க வேதனையாக இருக்கிறது'' என்றான்.

''இவ்வளவு பாசம் காட்டுகிறீர்கள் அவனைத் தனியே விட்டு விட்டு நீங்கள் பாட்டில் மெட்ராசிலேயே இருந்தீர்களே!'' என்று குறை கண்டுபிடித்தாள் திவ்யா.

''விவரம் தெரியாமல் பேசக் கூடாது, திவ்யா. ஒரு சிறுவனின் பொறுப்பை ஏற்க நேர்ந்ததாலேயே நான் என் வேலைகள் அத்தனையையும் விட்டு விட்டு அவனுக்குத் துணையாக உட்கார்ந்து விட முடியுமா? அப்படியும், இரண்டு தரம் வந்து போனேன் என்பது உனக்குத் தெரியாவிட்டாலும், அவன் விஷயமாகவே மெட்ராசில் தங்க நேர்ந்தது உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே!''

அவளைக் கட்டாயப்படுத்தி அழைத்து வந்ததைக் குறிப்பிடுகிறான்! ஆனால்...

தண்ணீர் குடிக்கச் சென்ற சிவா திரும்பி வந்து விடவே நல்லவேளையாகப் பேச்சு வேறு திசைக்கு மாறியது.

மாளிகையைச் சுற்றிக் காட்டினான் சதானந்தன்.

முன்காலத்தில் 'பால்ரூ'மாகப் பயன்பட்ட பெரிய ஹாலும், அதன் நடுவே தொங்கிய பிரம்மாண்டமான 'கிறிஸ்டல்' சரவிளக்கும் திவ்யாவின் மனதை மிகவும் கவர்ந்தன. தன் வேலையாக, முன்பு மெழுகுவர்த்தி வைத்த இடங்களில் கூம்பு வடிவ மின்சார பல்புகளைப் பொருத்தியிருந்தான் சதானந்தன். 'ஸ்விட்'சைப் போட்டு விட்டுப் பார்க்க மிக அழகாய் இருந்தது. சரவிளக்கின் இருமருங்கிலும் வரிசையாகத் தொங்கிய வண்ணக் கண்ணாடி விளக்குகளைக் காட்டி, ''இதன் பெயர் 'லஸ்தர் விளக்கு', ஆன்ட்டி'' என்று தன் பங்குக்குத் தன் விஷய ஞானத்தைக் காட்டினான் சிவா.

'லஸ்டர்' என்றால் ஒளி என்று அர்த்தம். ஒளி பெருக்கிய விளக்குகள். 'லஸ்டர்' விளக்கு உச்சரிப்பு வசதிக்காக மருவி லஸ்தர் விளக்காகி விட்டதாக்கும். தன் கண்டுபிடிப்பை வெளியே காட்டிக் கொள்ளாமல், ''அப்படியா? இதுவரை இப்படி விளக்குகளை நான் பார்த்ததே கிடையாது. கலர் கலராய் அழகாய் இருக்கிறதே'' என்று அவன் பேச்சில் உற்சாகம் காட்டினாள் அவள்.

ரொம்பவும் அவள் மனதைக் கவர்ந்த இன்னொன்று அந்த பிரிட்டிஷ் பிரதிநிதியின் மதுக்கிண்ணங்களின் 'கலெக்ஷன்'. பெரிய 'கிறிஸ்டல்' 'காப்ளட்'டிலிருந்து கட்டை விரல் அளவு கண்ணாடிக் கிண்ணங்கள் வரை விதம் விதமாய்க் கண்ணைப் பறித்தன. ''இவ்வளவு சிறு கிண்ணத்தில் எந்த அளவுக்கு ஊற்றி, எவ்வளவு குடிக்க முடியும்? வேண்டாத விருந்தாளிகளுக்கு இதில் ஊற்றிக் கொடுப்பார் போல அந்தப் பிரதிநிதி'' என்று சொல்லிச் சிரித்தாள் திவ்யா.



''கஞ்சப் பிசுநாரி.. இல்லை ஆன்ட்டி?'' என்று கூறித் தானும் நகைத்தான் சிவா.

இருவர் சிரிப்பையும் பார்த்து முறுவலித்து விட்டு, ''அதுதான் இல்லை. இதில் ஒவ்வொருவகைக் கிண்ணத்திலும் ஒவ்வொருவித மதுவைத்தான் பரிமாறுவார்கள். இந்தக் குட்டிக் கிண்ணத்தில் பரிமாறப்படுகிற மது ரொம்பவும் சக்தி உள்ளது. விலை உயர்ந்தது. ஒரு கிண்ணம் முழுவதும் குடித்தாலே மயக்கம் வந்து விடுமாம்'' என்று விளக்கினான் சதானந்தன்.

''ம்..ம்..'' என்று சற்று யோசித்து விட்டு, அப்படியானால் விரோதிகளை வரவழைத்து, இந்த மதுவைக் கொடுத்து, மயங்கிக் கிடக்கிற போது கடலில் தூக்கிப் போட்டு 'குளோஸ்' பண்ணியிருப்பார் இந்தப் பிரதிநிதி. அப்படித்தானே ஆன்ட்டி?'' என்று தன் கற்பனை கதைக்குத் திவ்யாவிடம் ஒப்புதல் கேட்டான் சிவா.

''விரோதிகளுக்கு இவரும் விரோதிதானே. இவரை நம்பி எப்படி வருவார்களாம்?'' என்று முறுவலோடு வினவினாள் திவ்யா.

மீண்டும் யோசித்து, ''ஃபிரண்டு மாதிரி நடித்து, ஏமாற்றி வரவழைத்திருப்பார்'' என்று மீண்டும் கதை பின்னினான் சிறுவன்.

எட்டு வயதுக்குக் கெட்டிக்காரன் தான் என்று எண்ணியபடி, ''நன்றாகக் கதை சொல்கிறாயே! நிறையக் கதை படிப்பாயாக்கும்!'' என்று அவனை மெச்சினாள் திவ்யா.

"ஊகூம்.. ஆனால் தினமும் இரவில் அம்மா எனக்குக் கதை படித்துச்..." என்றவன் சட்டென அங்கிருந்து ஓடினான்.

கதவு தாண்டு முன் கேட்ட விசும்பல் ஒலி அவன் ஏன் ஓடினான் என்பதை உணர்த்தியது.

வருத்தத்துடன் சதானந்தனைப் பார்த்தாள் திவ்யா. "சாரி.. இப்படி ஆகும் என்று தெரியாது..."

சிவா சென்ற திசையிலிருந்து அவளிடம் பார்வையைத் திருப்பினான் சதானந்தன். "வாசுவும் இப்படித்தான் மனதுக்குக் கஷ்டம் என்றால் தனியே ஓடி விடுவான். இவன்.. முதலில் இருந்ததற்கு இப்போது எவ்வளவோ பரவாயில்லை. ஆனாலும் ஒரு சின்ன செய்கையால், பார்வையில் எல்லாம் நினைவு வந்து விடுகின்றன. ஆனால் அவனைச் சொல்வானேன்? சிவாவின் ஒரு சில 'போஸ்'களில் எனக்கே அவனுடைய தந்தையின் நினைவு பயங்கரமாய்த் தாக்கி விடுகிறது. எனக்கே இப்படி என்றால் இந்தப் பிஞ்சுமனம் என்ன பாடுபடும்?"

உள்ளார்ந்த வேதனையோடு சதானந்தன் பேசப் பேச, திவ்யாவுக்கும் நெஞ்சுக்குள் ஏதோ செய்தது. உலகிலேயே முக்கியம் நட்பு என்றவன் ஆயிற்றே. உலகிலேயே முக்கியமானதை இழப்பது என்றால் எவ்வளவு வேதனையாய் இருக்கும்.

சிவாவை விடுத்து, தன்மனம் சதானந்தனிடம் பரிதாபப்படத் தொடங்குவதை ஒரு திடுக்கிடலுடன் உணர்ந்த திவ்யா, உடனே சுதாரித்தாள். "நான் வேண்டுமானால் சிவாவைப் போய்ப் பார்க்கட்டுமா?" என்று கிளம்பினாள்.



"இப்போது வேண்டாம்.. ஒரு பத்து நிமிடம் பொறுத்து அதன்பின் போய்ப் பார். அவன் ஒரு மாதிரி ரோஷக்காரன். பிறர், அவன் அழுவதைப் பார்ப்பதையோ, அணைத்து ஆறுதல்படுத்துவதையோ அவன் விரும்புவதில்லை. கூடப் படித்தவர்கள் பரிதாபமாய்ப் பார்ப்பார்கள் என்றே இவன் முன்பு படித்த பள்ளிக்குப் போக அடியோடு மறுத்து விட்டான்."

"ஓ! அது வேறு இருக்கிறதே. இங்கிருந்து பள்ளிக்கு எப்படிப் போவான்?"

"சிவா விஷயத்தில் அது பிரச்சினை இல்லை. ஏற்கனவே ஊட்டி கான்வென்டில் தான் படித்துக் கொண்டிருந்தான். அடுத்த ஆண்டு ஏற்காட்டில் சேர்த்து விட ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறேன். லீவு நாட்கள் மட்டும் தான் நம் பொறுப்பு. முன்பு அதைப் பெற்றோருடன் கழித்தான். இனி நாம் துணையிருக்க வேண்டும்.."

அடுத்த ஆண்டு லீவு நாட்கள் தொடங்கும் போது திவ்யா இங்கிருக்க மாட்டாள் என்பதை மறந்தவன் போல் சதானந்தன் சொல்லிக் கொண்டே போனான்.

ஆனால் திவ்யாவுக்கு அது நினைவு வந்து விட அவள் மனம் ஏனோ சோர்ந்தது.

வேறென்ன? பெற்றோரை இழந்த இந்தச் சிறுவனுக்கு உதவி செய்ய முடியவில்லையே என்று தான் தனக்குத் தானே காரணம் கற்பித்துக் கொண்டாள்.

சதானந்தன் சொன்ன பத்து நிமிடங்கள் சென்றதும், சிவாவைத் தேடிச் சென்றாள் திவ்யா.

சோர்ந்து போய் அமர்ந்திருந்த சிறுவனைப் பார்க்கையில் திவ்யாவின் மனம் பாகாய் உருகியது. தோளில் சாய்த்து, தலையை வருடி ஆறுதல் சொல்ல வேண்டும் போல மனம் துடித்தது. ஆனால் சதானந்தன் கூறியது நினைவு வரவே, நிதானமாக நடந்து சென்று சிவாவின் அருகில் அமர்ந்தாள்.

ஒரு சிறு அமைதியின் பின், ''உனக்குத் தெரியுமா, சிவா, நான் என் அம்மாவைப் பார்த்ததே இல்லை'' என்றாள்.

திரும்பிப் பார்த்து, ''அதெப்படி முடியும்?'' என்றான் சிறுவன்.

''நிஜம்தான்.. நான் பிறந்த போதே என் அம்மா இறந்து போனார்களாம். அப்பாவும் யாரோ சொந்தக்காரர் வீட்டில் என்னை விட்டு விட்டு அமெரிக்காவுக்குப் போய் விட்டார். எப்படியோ வளர்ந்தேன். நீ சொன்னது போலக் கதை, கிதை என்று யாரும் வாசித்து நான் கேட்டதே இல்லை'' என்று பெற்ற பெண் போலவே வளர்த்த பெரிய தந்தை, தாயிடம் மனதுக்குள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, சற்றே சோகமாகச் சொன்னாள் திவ்யா.

முழுதும் பொய்யில்லை என்பதாக ஒரு சின்ன சமாதானமும் கூட. ஓரளவு விபரம் தெரிந்தவள் என்றாலும், இந்த மாதிரிப் படுக்கை நேரத்தில் கதைகள் வாசிக்கிற அளவு திலகத்துக்குத் தெரியாது. அதனால் கதை வாசிப்பு இல்லை என்கிற அளவு மெய்தான்.

ஆனால், ''ராபின் சன் க்ரூஸோ, கலிவர் ட்ராவல்ஸ் ஒன்று கூடவா கிடையாது? நீங்கள் ரொம்பப் பாவம் ஆன்ட்டி'' என்று பரிதாபம் பொங்கி விட்டது சிறுவனுக்கு.

ஒருபுள்ளியை அழித்துச் சின்னதாக்க முடியாவிட்டாலும் அருகில் அதை விடப் பெரிய புள்ளியை வைத்தால் முன்னது சின்னதாகிவிடும். அதேபோல,



சிவாவின் சோகத்தை விடப் பெரியதான ஒரு துன்பத்தை அவள் காட்டவும், ஒத்திட்டுப் பார்க்கையில் சிவாவுக்குத் தன் துயரம் சிறியதாகத் தோன்றத் தொடங்கி விட்டது.

குட்டிப் பாப்பாவாக இருக்கும்போதே அம்மா இல்லையாமே! எவ்வளவு பாவம்!

திவ்யாவின் கையைப் பற்றி, ''கவலைப்படாதீர்கள் ஆன்ட்டி.. உங்களுக்கு நானே எல்..லாக் கதைகளும் சொல்லித் தருகிறேன்'' என்று அவளைத் தேற்றத் தொடங்கி விட்டான் அவன்.

அந்த வினாடியில் இருந்து அவன் தன்னுடைய பெற்றோரையோ அவர்களது இழப்பையோ அடியோடு மறந்து விட்டான் என்று சொல்ல முடியாது.

ஆனால் பெற்றோரைப் பற்றிய நினைவில், ஒதுங்கித் தனித்திருந்து கண்ணீர் வடிப்பது நின்று, அதுபற்றித் திவ்யாவிடம் பேசுகிற அளவுக்கு வந்தான் சிவா.

சதானந்தன் கவனித்து விட்டு 'வெல்டன்' என்ற போது உச்சி குளிர்ந்தது திவ்யாவுக்கு.

கூடவே குழப்பமும் உண்டாயிற்று.

சதானந்தன் அவளுடைய விரோதி. விரோதியின் பாராட்டில் மனம் மகிழ்வது எப்படிச் சரியாகும்?

யோசித்துப் பார்த்து அது ஏன் என்பதையும் திவ்யா கண்டுபிடித்தாள்.

விசுவாமித்திரர் வசிஷ்டரைத் தன் விரோதியாகவே எண்ணியிருந்தவர். ஒருசமயம் போர் கூட நடத்தியவர். ஆனாலும் அதே வசிஷ்டர் வாயால் 'பிரம்ம ரிஷி'ப் பட்டம் வாங்கிய பிறகுதானே அவருக்கு நிம்மதி ஆயிற்று.

அதுபோலவே, விரோதியின் பாராட்டு என்பதால் அவளுக்கு அதிக மகிழ்ச்சியாக இருக்கிறது. அவ்வளவே!

இந்த முறை மதராசில் இருந்து சிவாவுக்கு ஒரு 'லைஃப் ஜாக்கெட்' வாங்கி வந்திருந்தான் சதானந்தன்.

அதை அணிந்து கொண்டு மீன் குஞ்சாய் நீரில் துழாவுவது ஒரு பெரும் பொழுதுபோக்காயிற்று சிவாவுக்கு.

சிறுவனோடு சேர்ந்து சதானந்தனும் நீச்சலடிக்கும் போது அவர்கள் அறியாமல் நின்று திவ்யா கவனிப்பது உண்டு. துளி அளவு கூட அதிகச் சதை இல்லாமல் இறுகிய தசைக் கோளங்கள் கம்பீரமாய் அசைய, சதானந்தன் நீந்துவது, அவளுக்குக் கண்கொள்ளாக் காட்சி. சீச்சி.. வெறும் ஜட்டி தவிர வேறு ஒன்றும் இல்லாமல் இருப்பவனைப் பார்ப்பது பிசகு என்று தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்ட போதும், அவளது பார்வை அவனை விட்டு விலக மறுத்தது.

ஒருநாள், "உன் ஆன்ட்டியை நீந்த அழைத்து வாடா" என்று சிவாவை ஏவிவிட்டு விட்டான் சதானந்தன்.

கையைப் பற்றி இழுத்தவனிடம், தனக்கு நீந்தத் தெரியாது என்று சொல்லக் கூச்சப்பட்டு, "சேலை காலில் மாட்டிக் கொள்ளும்" என்று சமாளித்து வைத்தாள் திவ்யா.

அடுத்து 'மெயின் லான்ட்' சென்ற போது சதானந்தன் அவளுக்கு ஒரு நீச்சல் உடை வாங்கி வந்து விடவே திணறிப் போனாள்.

அவன் அப்படி நீந்துவதே ஒரு மாதிரி இருக்கையில் அவன் முன்னே அவள் வேறு கிட்டத்தட்ட அதே மாதிரி எப்படி நிற்க முடியும். எண்ணத்திலேயே கூசிச் சிலிர்க்கையில் இன்னொன்றும் தோன்றியது. அந்த உடையில் அவளால் வெறுமனே நிற்கத்தான் முடியும். ஏனெனில் நீந்தத் தெரியாதே!



அதன்பின், மற்றவர்கள் இருவரும் அறியாதபடி, ஒரு சாதாரண சுரிதாரை அணிந்து கொண்டு ஆழமில்லாத பகுதியிலேயே நீந்தப் பழகினாள். பழக முயன்றாள். அவ்வளவே?

கழுத்தளவு தண்ணீர்தான். ஆனால் காலை எதுவோ கவ்வி இழுக்கவும், மிரண்டு, நிதானம் தவறி நீருக்குள் மூழ்கி, இரண்டு வாய் உப்புத் தண்ணீரைக் குடித்து, ஒருவாறு சமாளித்து எழுந்தால், அருகே நின்று சிரித்துக் கொண்டிருந்தான் சதானந்தன்.

கோபத்துடன் ஏதோ சொல்ல வாய் திறந்த திவ்யா, சொல்ல வந்ததை மறந்து திகைப்புடன் அவனையே நோக்கினாள்.

கண்ணனின் மாயச் சிரிப்பைக் கண்டதும் கோபியரின் கோபமெல்லாம் கற்பூரமாய்க் கரைந்து, மறைந்தே போய் விடும் என்று திவ்யா படித்திருக்கிறாள்.

அந்தக் கண்ணனும் இப்படித்தான் குறும்பாக, கவர்ச்சியாக நகைத்திருப்பானோ?

ஆனால் இவன் கண்ணனல்லவே! சிவாவின் விஷயத்தில் நன்றாக நடந்து கொண்ட போதும், அவள் விஷயத்தில் கொடுமைக்காரக் கம்சன் ஆயிற்றே!

அவளது முகமாறுதல்களைக் கவனியாதவன் போல, "நீந்தத் தெரியாது என்றால் அதைச் சொல்லி ஒழுங்காகக் கற்றுக் கொள்வதுதானே? சேலைதட்டி விடுமாம்! மகாப் பெரிய மேதாவி மாதிரி இந்த வறட்டு ஜம்பம் எதற்கு? போய் நீச்சல் உடை அணிந்து வா, கற்றுத் தருகிறேன்" என்று அழைத்தான் சதானந்தன்.

நீச்சல் உடை! இவன் முன்னிலையில்!

''ஊகூம்.. வேண்டாம்'' என்றாள் அவள் அவசரமாக.

''ஏன்?'' என்று கேட்டவன் அவளது தயக்கத்தை மாறாக ஊகித்து, ''இந்த இடம் குளிப்பதற்காக ஒதுக்கப்பட்டது, திவ்யா. இங்கே வேறு யாரும் வரமாட்டார்கள். ஆனால் பரவாயில்லை. இனிப் போய் உடை மாற்றி வர நேரமாகி விடும். இப்படியே கற்றுத் தருகிறேன்'' என்று கைகளை நீட்டினான். ''முதலில் என் கையைப் பிடித்துக் கொண்டு கால்களால் நீரை.. என்ன? என்றவன் அவள் அசையாமலே நிற்கவும், சட்டென ஒரு காலால் நீருக்குள் அவளது கால்களைத் தட்டி விட்டான்.

அவள் நிதானம் தவறி குப்புற விழும் போது, வயிற்றுப் பக்கம் கைகளால் தாங்கி, ''ம்.. கை கால்களைத் தண்ணீரில் அடித்து, உள்ளே போய் விடாமல் மிதக்கப் பழகு'' என்று உத்திரவிட்டான்.

தடுக்க முடியாமல், அதற்கு மேல் மறுக்கவும் முடியாமல் போய் விட, அவனது அண்மையிலும் தொடுகையிலுமாகத் திவ்யா திணறித் திண்டாடினாள்.

அவனது கரங்களை மரக்கட்டைகளாகப் பாவித்து, அவன் சொன்னபடி செய்ய முயன்றாலோ அவளது கை கால்கள் அதற்கு ஒத்துழைக்க மறுத்தன.

''ஊகூம்.. அப்படி அல்ல திவ்யா. கைகளும் கால்களும் ஒரு 'ரித'த்துடன் மாறி மாறி.. ம்.. இது உனக்குச் சரிப்படாது'' என்றவன், அவளைப் பற்றியபடி நீரில் ஆழமான பகுதிக்கு நீந்திச் சென்றவன், அங்கே அவளை விட்டு விட்டு கரைப்பக்கம் செல்லத் தொடங்கினான்.

ஆத்திரத்துடன், ''என்ன இ...'' என்று தொடங்கியவள், நீரினுள் முழுகத் தொடங்கவும், கை கால்களைக் கண்டபடி அடித்து நீருக்கு மேல் வந்தாள்.



ஒருகணம் அவள் மனம் ஏதேதோ எண்ணியது.

ஆனால் மறுகணம், நீருக்கடியில் போய் விடாமல் கரை சேர்வது ஒன்றே குறியாகக் கை கால்களைப் படபடவென்று அடித்து முன்னேற முயன்றாள்.

ஒரே நினைவாக முயன்றவளுக்குக் கால் தரையில் பட்ட பிறகு தான் கரையருகே வந்து விட்டதையே புரிந்து கொள்ள முடிந்தது.

நீந்துவதை விட்டு, காலைத் தரையில் ஊன்றி எழுந்து நின்றவள், மார்பின் குறுக்கே கைகளைக் கட்டியபடி நின்று வேடிக்கை பார்த்திருந்தவனை ஆத்திரத்துடன் முறைத்து, ''உங்கள் மனதில்... என்னதான் நினைப்பு?'' என்றாள் மூச்சு வாங்க.

''நீ நீந்தப் படிக்க வேண்டும் என்றுதான்'' என்றான் அவன் அசையாமல்.

''அதற்கு?...'' இன்னமும் அவளுக்கு மூச்சு நேராக வில்லை. ''ஆனாலும் விடாமல், ''அதற்கு இப்படித்தான் முழுகிச் சாகட்டும் என்று விட்டு விட்டு வந்து விடுவதா?'' என்று கேட்டு விட்டாள்.

கண்களில் குறுஞ்சிரிப்பு எட்டிப் பார்க்க, ''அங்கிருந்து இங்கே எப்படி வந்தாய், திவ்யா?'' என்று கேட்டான் அவன். புரிந்து கொண்டு அவளது கண்கள் விரியவும் வாய்விட்டுச் சிரிக்கத் தொடங்கினான்.

சற்றே அசடு வழிந்து விட்டு, ''வந்து... வந்து ரொம்ப தாங்க்ஸ்'' என்று நன்றி உரைத்தாள் திவ்யா.

தோளைக் குலுக்கி விட்டு, ''யூ ஆர் மோஸ்ட் வெல்கம்'' என்று கூறியவாறு படியேறினான் சதானந்தன்.

மேல்படியை அடைந்ததும் திரும்பி, ''எனக்கும் இது ஓர் இனிமையான அனுபவம் தான்...'' என்றவன் மேலே நில்லாமல் சென்று விட்டான்.

சற்று நேரம் அப்படியே நின்றாள் திவ்யா. இனிமையான அனுபவம் என்று இவன் எதைச் சொல்லியிருக்கக் கூடும். அவளுக்கு இவ்வளவு விரைவில் நீச்சல் கற்றுக் கொடுத்து விட்டதையா? அல்லது... கற்றுக் கொடுக்கும் போது அவளைத் தொட நேர்ந்ததையா? யோசித்துப் பார்த்தால் அவளுக்கும்... ஊகூம்... இதைப் பற்றி யோசியாமல் இருப்பதே நல்லது என்று முடிவு செய்தாள் அவள். நினைத்தால் அவனைப் பழிவாங்குகிற எண்ணம் மறந்தாலும் மறந்து விடும்!

சதானந்தனின் தொழில் என்னவென்று மெல்லத் தெரிந்து கொண்டாள் திவ்யா. 'ப்ராண் கல்சர்!' எறாவை வளர்த்து, பிடித்து, பதப்படுத்தி, ஏற்றுமதி செய்தான். நார்ப்பொருட்கள் ஏற்றுமதி வேறு. மேற்குமலைத் தொடரில் பெரிய டீ 'எஸ்டேட்'டில் உயர்ரகத் தேயிலை பயிர் செய்து அதையும் ஏற்றுமதி செய்தான்.

எல்லாம் ஏற்றுமதி விவகாரம் என்பதால், அந்நியச் செலாவணி ஈட்டுகிறவன் என்று அரசாங்கம் அவனுக்குப் பல சலுகைகள் செய்து கொடுத்திருந்தது.

அந்தக் குட்டித் தீவுக்கு குடிநீர் வசதி, டெலி∴போன், ∴பேக்ஸ் வசதி எல்லாமே கொடுத்து இருந்தது.

டெலி∴போன் இருப்பது தெரிந்ததும் சதானந்தனின் அனுமதியோடு, பெரிய தந்தைக்கு டெலி∴போன் செய்து பேசினாள் திவ்யா. ஆனால் இருவர் மனதிலுமே தடைகள் இருந்ததால் வெறும் நலம், நலமாவுடன் வைக்கும்படி ஆயிற்று.



கொஞ்ச நேரம் அது அவள் மனதை உறுத்தவும் செய்தது. மோட்டார்ப் படகில் ஒரு சுற்று சுற்றி விட்டு வரலாம் என்று சிவாவையும் அவளையும் சதானந்தன் அழைத்துச் சென்ற போதுதான், நீலவானமும், கடலும், கடற்பறவைகளுமாக ஒருவாறு அந்த உறுத்தல் மறைந்தது.

அடிக்கடி, படகைத் தானே ஓட்டிக் கொண்டு சதானந்தன் சென்று விடுவான்.

தொழில் விஷயமாக என்பது திவ்யாவின் ஊகம். ஆனால் அப்படியே அவன் வெளியூர் எங்கேனும் செல்வதும் சாத்தியம்தான். அவனிடம் சம்பளம் பெறும் அவளிடமோ, அவனைச் சார்ந்து வாழும் சிவாவிடமோ அவன் சொல்லிக் கொண்டு தான் போக வேண்டும் என்று கட்டாயம் இல்லை.

அதுவும், ''சதா அங்கிள் வெளியூர் கிளம்பினால் நான் அழுவேன் என்று, அங்கிள் என்னிடம் சொல்லாமலே தான் போவார். போனபிறகு அங்கே இருந்து டெலி∴போனில் தான் சொல்லுவார். 'டெல்லியில் இருக்கிறேன். வரும் போது உனக்கு என்ன வேண்டும் என்று கேட்பார். கேட்பதை வாங்கி வருவார்' என்று சிவா ஒரு தரம் சொன்னதிலிருந்து, சதானந்தன் எப்போது கிளம்பினாலும் அவன் திரும்பி வரும் வரை, திவ்யாவுக்கு இருப்பு கொள்ளாது. அவன் திரும்பி வந்து சேரும் வரை உள்ளூர ஒரே உதைப்பாக இருக்கும்.

முத்துத்தீவுக்கு அவர்கள் வந்து சுமார் இரண்டு வாரங்கள் இப்படிச் சென்ற பின், அன்றும் சதானந்தன் வெளியே சென்றிருந்தான்.

அவன் போய் நாலுமணி நேரம் ஆயிற்று. இன்னமும் வரவில்லையே என்று மனதை உளப்பிக் கொண்டிருந்த போது, அவளது காதுகளில் தேன் சொரிந்தாற் போல, படகின் மோட்டார் ஒலி கேட்டது.

ஓடிப் போய் பார்க்கத் துடித்த மனதை அடக்கிக் கொண்டு, ஏதோ பரீட்சைக்குப் படிக்கிற மாதிரி கையில் இருந்த புத்தகத்தில் பார்வையைப் பதித்து அசையாமல் இருந்தாள் திவ்யா.

ஆனால் அவளது தீட்டிய காதுகளில், சதானந்தனின் அழுத்தமான காலடி ஓசை விழவே இல்லை.

சற்று நேரம் ஆனதும் பொறுமையிழந்து திரும்பிப் பார்த்த திவ்யா திகைத்தாள்.

அங்கே ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அவளது பார்வை திவ்யாவை அக்குவேறு ஆணிவேறாகக் கழற்றி ஆராய்ந்தது.

திவ்யா மெல்ல எழவும், "நீதான் திவ்யாவா?" என்று ஒரு மாதிரிக் குரலில் விசாரித்தாள் அவள்.

அந்தக் குரல் உசுப்பி விட, நிமிர்ந்து, "ஆமாம்.. சதானந்தனுடைய மனைவி" என்றாள் திவ்யா.

"ச்சு.. அது" என்றாள் அந்தப் பெண் வெகு அலட்சியமாக. "கோர்ட்டுக்காகச் சதானந்தன் கொண்டு வந்த பொய் மனைவி!" என்று அவள் மேலே விளக்கம் வேறு கூறவும் திவ்யாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

## 17

முதலில் திவ்யாவுக்குத் தோன்றியது, 'அய்யோ, யாருக்கும் தெரியக் கூடாது என்றானே, இவளானால் வெளிப்படையாகப் பேசுகிறாள்' என்பதுதான்.



அவசரமாகச் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

சிவா மேலே அவனது அறையில் இருந்தான்.

வேலையாட்களும் காலையில் சுத்தம் செய்கிற பணி முடிந்து விட்டால் அப்புறம் பக்கவாட்டில் அவரவருக்கு உரிய இடத்தில் ஒதுங்கி விடுவார்கள். அழைத்தால் தவிர வரக் கூடாது என்பது சொல்லாமலே உணர்த்தப்பட்ட ஒன்று.

முதலில் இந்த வேலையாட்களின் பணிவைக் கண்டு, அவர்களையும் சதானந்தன் அதட்டி மிரட்டி கைப்பிடியுள் வைத்திருக்கிறான் என்று திவ்யா தவறாக எண்ணியது உண்டு. ஆனால் அவ்வளவு பேரும் சதானந்தனிடம் பணிவோடு பிரியத்தையும் காட்டுவதை உணர்ந்து தன் அபிப்ராயத்தை மாற்றிக் கொண்டிருந்தாள்.

தன் தொழில்கள் மூலம் சதானந்தன் அந்தப் பகுதியில் பலருக்கு வேலை கொடுத்திருந்தான். இங்கே வேலை செய்வோரின் பல உறவினர்கள் அவனிடம் பணிபுரிபவர்களே. வீட்டு வேலையாட்கள் எல்லாருமே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே. எல்லோருக்கும் மற்றவர்களை விட ஓரளவு சம்பளமும் அதிகமாகவே கொடுப்பதாகவும் அறிந்தாள் திவ்யா. அத்தோடு திருமணம் என்று வந்து பரிசும் பணமும் வாங்கிப் போவதை அவளே பார்த்திருக்கிறாள். யாரோ நோயுற்றவருக்காக அவனது படகையே அனுப்பியதையும் கண்டதுண்டு.

பார்க்கப் பார்க்க, அவனது கண்ணசைவில் ஓடி ஓடி வேலை செய்வதெல்லாம் தங்கள் சுக துக்கங்களில் பங்கெடுத்து, தங்களுக்கு எவ்வளவோ நன்மை செய்யும் எசமானனை மகிழ்விக்கவே என்று புரிந்து கொண்டிருந்தாள்.

மெல்லினம் மிகுந்த அவர்களது மொழியில் சதானந்தனைப் போல அவளால் பேச முடியாவிட்டாலும்,

தமிழில் மெல்ல, நிறுத்தி, அவள் தெரிவிக்கும் அவளது விருப்பங்களை முயன்று புரிந்து கொண்டு, அவர்கள் நிறைவேற்றுவதைக் கண்டு மனம் உருகியிருக்கிறாள்.

புரிந்து கொள்ள அவர்கள் படும்பாட்டைப் பார்த்து விட்டு, அவளாகவே சதானந்தனிடம், அவர்களது மொழியில் அவளுக்குத் தேவைப்பட்ட சிலவரி வார்த்தைகளைக் கற்றுக் கொண்டு - தன் வேலையாட்களுக்காகத் தானே என்றோ என்னவோ என்னவோ, அவனும் உற்சாகமாகவே கற்றுக் கொடுத்தான் — அந்த வார்த்தைகள் மூலம் அவள் இடும் கட்டளைகளை மிகவும் மகிழ்ச்சியோடு நிறைவேற்றுவார்கள்.

எல்லாம் எதற்காக? அவர்களது மனம் கவர்ந்த முதலாளியுடைய மனைவி என்பதற்காகத்தானே!

இவளானால் எங்கே, யார், என்ன என்பதே இல்லாமல் போட்டு உடைக்கிறாளே! சதானந்தனிடம் சொல்லி அடக்க வேண்டும் என்று எண்ணும் போது தான் இவளுக்கு எப்படித் தெரியும் என்ற யோசனை வந்தது.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று விசாரித்தாள்.

''இவ்வளவு கூட ஊகிக்கத் தெரியாதா? கொஞ்சம் யோசித்துப் பார்ப்பது தானே? பரவாயில்லை. கஷ்டப்படாதே. நானே சொல்லி விடுகிறேன். சொன்னது சதுவே தான்'' என்றாள் அவள்.

சது!

இவள்.. இவள்தான் அந்த சிறுவயதிலிருந்து உடன்பழகிய சினேகிதியம்மாளா! மேற்பார்வையிட வருவாள் என்றானே, அந்த வி..னோ..தினி!

''உங்கள் பெயர் வினோதினியா?'' என்று வினவுகையிலேயே திவ்யாவின் பார்வை கூர்மையுற்றது.



இந்தப் பெண்ணுக்கு வயது இருக்க வேண்டும். சதானந்தனோடு சிறு வயதிலிருந்து உடன் பழகி வளர்ந்த சினேகிதி என்றால் கிட்டத்தட்டவேனும் அவன் வயது ஆகியிருக்க வேண்டுமே.. இருபத்தேழு.. இருபத்தெட்டு? மிக இளமையாய்க் காட்டிக் கொள்ளப் பெருமுயற்சி செய்திருந்தாள். ஜீன்ஸ், டாப்ஸ் என்று 'டீன் ஏஜ்' ஆடைகள், முக அலங்காரங்கள், ஆனால்.. அளவுக்கு அதிகமான உடல் பயிற்சி செய்பவள் போல, அவள் உடலில் ஆண் சாயல் கொண்ட முதிர்ச்சி தெரிந்தது.

''பரவாயில்லையே! கண்டுபிடித்து விட்டாயே! ஏதோ.. கொஞ்சம் இருக்கிறது போலும்!'' என்று தலையை ஏளனத்துடன் தொட்டுக் காட்டினாள் அவள்.

திவ்யாவை அவளுக்குப் பிடிக்கவில்லை என்று தெளிவாகக் காட்டினாள்.. ஏன்?

ஆனால் ஒன்று.. காரணம் புரியாமலே திவ்யாவுக்கும் வினோதினியைப் பிடிக்கவில்லைதான். முதல் முதலாக அவளது பெயரைச் சதானந்தன் வாய்மூலம் கேட்ட போதே ஏனோ பிடிக்காமல் போய் விட்டதே!

மேற்பார்வையிட வருவாள் என்று சதானந்தன் சொன்னதற்கிணங்க, ''சிவா எங்கே?'' என்று விசாரித்தாள் வினோதினி.

''அவன் அறையில் இருப்பான் என்று நினைக்கிறேன்'' என்றாள் திவ்யா.

''என்ன என்ன? இருப்பான் என்று நினைக்கிறாயா? இதுதான் நீ சிவாவைப் பார்த்துக் கொள்கிற லட்சணமா?'' என்று பாய்ந்தாள் வந்தவள்.

சிவா இயல்பில் கொஞ்சம் தனிமை விரும்பி. பேசுவது, பழகுவது, விளையாடுவது, நீந்துவது என்று சேர்ந்து கொண்ட போதும், அவனுக்குத் தனிமையும் வேண்டும். அவனது பழைய விளையாட்டுச் சாமான்களைப் பார்த்தால் பழைய நினைவு வந்து அவன் வருத்தப்படக்கூடும் என்று சதானந்தன் புதிதாகவே நிறைய விளையாட்டுச் சாமான்களை வாங்கிக் குவித்திருந்தான். லாரி, ட்ரக், வீடு என்று அமைக்கக் கூடிய பிளாக்குகள், 'இன்சினீயரிங் கிட்', வார்த்தைப் புதிர்கள், என்று அவன் வயதுக்குரிய மூளை வேலைச். சாமான்கள். அவனும் அவைகளை வைத்து ஏதாவது செய்து வைத்து, சதானந்தன் வந்ததும் காட்டுவான்.

சிவாவுக்குத் துணையாக இருந்து, அவனுக்கு வேண்டியதைச் செய்ய என்று சதானந்தன் ஒருவனை அமர்த்தியிருந்தான். கண்ணை உறுத்தாத தூரத்தில் சிவா பின்னே அவன் சென்று கொண்டே இருப்பான். சதானந்தன் அல்லது திவ்யா சிவாவுடன் இல்லாத போது இவன் - பாலன், சிவாவைக் கண்பார்வையில் வைத்திருக்க வேண்டும் என்பது சதானந்தனின் கட்டளை.

எனவே சிவா பத்திரமாய்த் தான் இருப்பான் என்பது நிச்சயம். ஆனால் இவள் இந்த விரட்டு விரட்டுகிறாளே!

நீ என்னடி கேட்பது என்று இவளுக்குத் திருப்பிக் கொடுக்கவும் திவ்யாவுக்குத் தயக்கமாய் இருந்தது. சதானந்தன் இவளுக்கு என்னென்ன உரிமைகள் கொடுத்திருக்கிறானோ? அது தெரியாமல் திவ்யாபாட்டில் ஏதாவது சொல்லப் போக, பிறகு அது விபரீதம் ஆகி விடக் கூடாது.

ஆனால் வரட்டும் இந்த சதானந்தன்! ஒரு 'மிஸ்டர் சதானந்தனு'க்கு அந்த ஆட்டம் ஆடினானே! இவன் மட்டும் சொல்லலாமோ? நன்றாகக் கேட்க வேண்டும்!



ஆனால் வழக்கத்தை விடவும் தாமதமாகவே அவன் வந்த போதே திவ்யாவால் எதையும் கேட்க இயலாது போயிற்று. 'போட்' சத்தம் கேட்டதுமே புள்ளி மானாய் படகுத் துறைக்கு ஓடினாள் விநோதினி.

அபரிமிதமாய் அன்பு காட்டி சதானந்தனை வரவேற்றாள். தோளோடு அணைத்து ஒரு வரவேற்பு! கைகோத்தபடி இருவரும் வந்தவிதமும் திவ்யாவைப் பெரிதாகத் தாக்கிற்று!

"... சிவா இருக்கிற இடம் கூடத் தெரியாதவள். இவளெல்லாம் என்ன 'கவர்னஸ்'.." என்ற வார்த்தைகள் திவ்யாவின் காதில் விழுந்தன.

சதானந்தனிடம் கேள்வி கேட்பதை விட, விநோதினிக்கு அவன் கூறிய பதிலைக் கேட்பதில் ஆர்வம் மிகுந்தது திவ்யாவுக்கு.

"சிவா கூட ஆள் இருக்கிறான். அதனால் எப்போதும் திவ்யா அவனோடு கூடவே இருக்க அவசியம் இல்லை வினு..

கோர்த்த கை பிரியாமலே இருவருமாக, சதானந்தனின் ஆஃபீஸ் அறைக்குள் சென்றார்கள்.

சதானந்தன் தனக்காக ஒரு வார்த்தை அந்த விநோதினியிடம் சொன்னான் என்று இதம் கொள்ள திவ்யாவால் முடியவில்லை. உண்மையைத்தானே சொன்னான் என்று ஒதுக்கவே தோன்றியது.

ஆனால் அணைத்தாற் போல வரவேற்பும், கோர்த்த கரங்களும் அவளது மனதை உறுத்தின.

ஆஃபீஸ் அறையின் மூடிய கதவை வெறித்தபடி நின்றவளுக்கு இன்னொன்றும் தோன்றியது.

இந்த அறைக்குள் வேறு யாரும் போகக் கூடாது என்று உத்திரவு. அங்கே அவன் இருக்கும் போது எதற்காகவும் தொந்திரவு செய்யக் கூடாது என்பதும் அங்கே மிகவும் கவனமாகக் கடைப்பிடிக்கப்படும் மரபுதான்.

அந்த அறைக்குள் இவர்கள் இருவருமாக என்ன செய்கிறார்கள்?

திவ்யாவின் மூளை பரபரவென்று வேலை செய்தது. ஒருவேளை சதானந்தனின் தொழில் ஏற்றுமதி அல்லவோ? ஏதேனும் கடத்தல் வேலை செய்கிறானோ? சினிமாக்களில் கடத்தல்காரர்கள் கூட ஒரு பெண் இருபாளே, அது போலப் பெண்தானோ இந்த வினோதினி?

சேச்சே.. என்ன கிறுக்குத்தனமான எண்ணங்கள்! இப்படியே நின்று மனதைக் கண்டபடி அலைய விட்டால் பைத்தியமே பிடித்தாலும் பிடித்து விடும்.

பிடிவாதமாய் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு, நீந்தும் இடம் சென்றாள். தனியாக மொட்டு மொட்டென்று உட்கார்ந்து மனதை உழப்பிக் கொள்வதற்குக் கொஞ்ச நேரம் நீந்திப் பார்க்கலாம். அன்று இருபதடி தூரம் நீந்திக் கடந்த போதும், அதேபோலத் தொடர்ந்து நீந்தும் துணிவு திவ்யாவுக்கு வரவில்லை. சதானந்தனைத் துணைக்கு அழைக்கவும் கூச்சமாய் இருந்தது.

இன்னொரு காரணமும் இருந்தது. சதானந்தனைப் பொறுத்தவரையில் எந்தவித பாதிப்பும் இல்லாமல், ஒரு டாக்டரின் தன்மையோடு தொட்டு சொல்லிக் கொடுத்து விட்டுப் போய் விட்டான். ஒருவேளை இந்த மாதிரி அணைத்து வரவேற்பு, கை கோத்தல் எல்லாம் பழகி விட்டால் எதுவும் தோன்றாதோ என்னவோ?



ஆனால் திவ்யா அப்படி இல்லையே. 'பீக் அவர் பஸ்'சில் எருமை மாடுகள் இடிக்கும் என்பதற்காகவே அரை மணி நேரம் சீக்கிரமாகவே கல்லூரி, ஆஃபீஸ் போய்ப் பழகியவள். அவன் பயிற்சி கொடுத்த தினத்தன்று முழுவதும் ஒரு மாதிரி உணர்ந்ததோடு இரவு தூங்கவே இல்லை. அதனால் அவன் இருக்கும் சமயங்களில் தண்ணீர்ப் பக்கம் வருவதை விடுத்தாள். அவன் துணை இல்லாமல் நீந்தவும் பயம். எனவே அன்றோடு அந்தப் பக்கம் போவதில்லை.

இன்று வீடு வெறுத்து விடவே, அவர்கள் இருவரையும் விட்டு முடிந்த அளவு தூரம் சென்று விடும் எண்ணத்தில் கடல் புறம் சென்றாள்.

முழங்கால் அளவு இறங்கிய பிறகே தண்ணீரில் ஒரு விசித்திரத்தைக் கண்டாள் திவ்யா.

சுமார் பதினைந்து சென்டிமீட்டர் விட்டமுள்ள கண்ணாடிக் கிண்ணங்களைக் கவிழ்த்தினாற் போலச் சில வடிவங்கள் நீரில் நீந்திக் கொண்டிருந்தன. அருகில் சென்றால் பறக்கும் தட்டு போல 'விர்'ரென்று வேகமாய் விலகிச் சென்றன. அவள் அசையாமல் நின்றால் அவள் அருகிலேயே வந்து நீந்தின. ஒன்றே ஒன்று மட்டும் குட்டி.

திவ்யாவின் ரசிக மனம் தலைதூக்க, அசையாமல் நின்று அவைகளைப் பார்த்தாள்.

ஏதோ மீன் வகை என்பது புரிந்தது. ஆனால் தலை, வால், வயிறு என்று எதையுமே கண்டு கொள்ள முடியாமல், எல்லாம் ஒரே மாதிரி, ஊடுருவிப் பார்க்கக் கூடிய கண்ணாடிக் கட்டி போலவே இருந்தன. வட்ட வடிவமான கட்டி.

ஒன்றைப் பிடித்து, தொட்டியில் விட்டு, சிவாவிடம் காட்ட வேண்டும் என்று தோன்றியது. அவனுக்கும் இப்படிப் புதிய விஷயங்களில் ஆர்வம் அதிகம்.

அணிந்திருந்த சுரிதார் செட்டின் சட்டை இடுப்பிலிருந்து இரண்டாகப் பிரிந்து நீளமாய், முழங்காலுக்கும் கணுக்காலுக்கும் இடையே முடிகிற ரகம். எனவே குர்த்தாவின் முன்பகுதி ஓரத்தை இருகைகளாலும் டவல் மாதிரி தண்ணீருக்கடியில் பிடித்துக் கொண்டு காத்திருந்தாள்.

ஒரு பெரிய கண்ணாடி மீனும், சின்னதும் - தாய், குட்டியாயிருக்கும் என்று திவ்யாவிற்குத் தோன்றியது. வகையாக மாட்டவே, அப்படியே தூக்கிக் கொண்டு கிளம்பினாள். இவைகளைச் சீக்கிரம் தண்ணீருக்குள் விட வேண்டுமே!

எதிரே வந்த சதானந்தன் என்னவென்று எட்டிப் பார்த்தான். அவ்வளவுதான். முன்புறம் தூக்கிப் பிடித்திருந்த அவளது கைகளைப் பட்டென்று தட்டி விட்டான். அந்த மீன்கள் இரண்டும் மணலில் விழ, அவளை விலக்கி இழுத்துச் சென்று, அவளது சட்டையைக் கழுத்தோரமாய்ப் பற்றிக் கிழித்துக் கழற்றித் தூர எறிந்தான்.

எல்லாம் வெகு சில வினாடிகளுக்குள் நடந்து முடிந்து விட்டன.

சுரிதார் சட்டையைக் கழற்றுகிற போதுதான் உணர்வு வந்தவளாய் அவனைத் தடுக்க முயன்றாள் திவ்யா. ஆனால் பிடிவாதமாய் தன்பலம் காட்டி அவன் கழற்றி வீசிவிட, உள்ளாடை மேல் மார்பின் குறுக்கே கைகளைப் போர்த்தி மறைக்க முயன்றபடி அவனுக்கு முதுகு காட்டித் திரும்பி நின்று, "என்ன இது!" என்று கோபமாகச் சீறினாள். ஈரமான வெற்றுடம்பில் காற்று மோதியதில் அவளுக்கு லேசாக வெடவெடத்தது.

"சொல்கிறேன்.. முதலில் இதை அணிந்து கொள்"



தோளில் விழுந்தது அவனது டீ ஷர்ட் என்பதைக் கண்ட திவ்யா சற்றே தயங்கினாள். ஆனால் இந்த நிலையில் திரும்பக் கூட முடியாது. அவளுக்கு அவனிடம் நன்றாகச் சண்டை வேறு போட்டாக வேண்டும். அவன் உடம்பிலிருந்து நேராக வந்ததால் அந்த டீ ஷர்ட் கதகதப்பாய், உடம்பின் குளிருக்கு இதமாய் இருந்தது. ஆனால் குளிரின் காரணமே அவனல்லவா?

பிடிவாதமாய் ஆத்திரத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டு அவனை நோக்கித் திவ்யா திரும்பவும், 'பக்'கென்று சிரித்து விட்டான் சதானந்தன்.

சுளிப்புடனேயே குனிந்து நோக்கிய திவ்யாவுக்கும் தன்னை மீறிப் புன்னகை தோன்றியது.

அவனுக்குச் சரியாக, உடம்பைக் கவ்வினாற் போல இருந்த டீ ஷர்ட் அவள் உடம்பில் தொளதொளவென்று வழிந்தது. பெரியதாயிருந்த கழுத்து காலர் ஒரு தோளைத் தாண்டி சரிந்தது.

கண்ணாடியில் பார்த்தால் எப்படி இருக்கும் என்று ஊகிக்க முடிந்ததால் அவளுக்கும் சிரிக்கத்தான் தோன்றியது. ஆனாலும் முடிந்தவரை அடக்கிக் கொண்டு, "என் சுரிதாரைக் கிழித்து எறிந்து விட்டு என்ன பெரிய சிரிப்பு? நல்ல சுரிதார். அதன் 'யோக்'கின் பூவேலைக்காகவே இருநூறு ரூபாய் கொடுத்தேன்" என்று குறை கூறினாள்.

எவ்வளவோ முயன்ற போதும் அந்த நேரத்துக்குத் தேவைப்பட்ட கோபத்தைக் குரலிலோ முகத்திலோ கொண்டு வர முடியவில்லை அவளால். எல்லாம் வெறும் குறை கூறலுக்கு மேல் போக இயலாது போயிற்று.

"அந்த இருநூறை நான் தந்து விடுகிறேன், சரிதானா?" என்றான் அவன் சமாதானமாக.

''ஆகா! அந்தச் சுரிதாரின் துணி, தையல் கூலி, இதெல்லாம் யார் தருவார்களாம்?'' என்றாள் திவ்யா மிடுக்காக.

''ஓகே! ஓகே! எல்லாமாக ஓர் ஐநூறு.. இல்லை ஆயிரமே தந்து விடுகிறேன் போதுமா? ஆனாலும் இது நல்லதற்குக் காலம் இல்லையடாப்பா..'' என்று சோகமாகச் சொன்னான் அவன்.

''என் நல்...ல சுரிதாரைக் கிழித்து வீணாக்கியது எந்த வகையில் எனக்கு நல்லதாம்?''

''சுரிதாரில் என்ன இருந்தது?''

''மீன்.. கண்ணாடி மாதிரி ஏதோ மீன் வகை''

''ஜெல்லி ஃபிஷ்''

''ஓ.. இதுதான் ஜெல்லி ஃபிஷ்சா? என்ன அழகு தெரியுமா?'' என்று மீன் மணலில் விழுந்த இடத்தை நோக்கியவள் திகைத்தாள். ''அடடா! அழகு அழகாய் நீரில் நீந்திக் கொண்டிருந்தது. இப்போது ஒன்றுமே இல்லாமல் கரைந்து விட்டதே!'' என்று பரிதாபப்பட்டாள்.

''ரொம்பவும் உருக வேண்டாம். இது உடம்பில் பட்டால் ஊறல் தாங்க முடியாது. உடம்பெல்லாம் தடித்து வீங்கி விடும். மீனவர்களே பயந்து ஒதுங்கி விடுவார்கள். நீயானால் மடியோடு கட்டிக் கொண்டு வந்து நின்றாய்!''

''நிஜமாகவா சொல்லுகிறீர்கள்? ஊகூம்.. நான் தொட்டுப் பார்த்தேனே.. ஒன்றும் இல்லையே! கொஞ்சம் கூடச் சொரிச்சல் வரவே இல்லையே..!''

''அதிர்ஷ்டம் என்று கொள். விஷம் இல்லாத வகையும் ஒன்றிரண்டு உண்டு. பாம்பு போல என்று வை. ஒன்றிரண்டு



விஷப் பாம்புகளுக்காக பாம்பின் இனத்தையே ஒதுக்குவது இல்லையா? அதே மாதிரிதான். பாம்பிலாவது கொஞ்சம் அடையாளம் கண்டு கொள்ள முடியும். இதில் அதுவும் முடியாது. ஆனால் பொதுவாக இந்தப் பக்கம் வருவதில்லை. நீ நிறையப் பார்த்தாயா?''

''இல்லை.. மொத்தமே நாலுதான்''

''இந்த மீன்கள் கூட்டமாக வாழ்பவை. ஒருவேளை ஒத நீரோடு சேர்ந்து இந்த நாலும் வந்திருக்கலாம். இரண்டு போயிற்று. மீதி இரண்டும் பெருக்குநீர் வடியும் போது தானாகவே போய் விடலாம்''

திவ்யாவுக்கு ஒன்று நினைவு வந்தது. ''அங்கே கூட ஒரு தடவை, கல்பாக்கம் அணு மின்சார நிலையத்தில், கடல் நீர் வரும் பெரிய குழாய் முழுவதும் இந்த ஜெல்லி ஃபிஷ் கூட்டமாக வந்து அடைத்துக் கொண்டதால் ஒரு நாள் முழுவதும் எங்களுக்கு மின்சாரம் தடைப்பட்டுப் போயிற்று. குழாயைச் சுத்தம் செய்யுமுன் பெரும்பாடு பட்டுப் போனார்கள்...'' என்று தெரிவித்தாள். அந்த ஜெல்லி ஃபிஷ் தான் இது என்று எனக்குத் தெரியாது.. வந்து.. தாங்க்ஸ். கோ..கோபப்பட்டதற்கு சாரி..'' என்றாள் திவ்யா.

லேசாக விழியிடுங்க அவனது பார்வை மாறியது. ''எல்லாமே அப்படித்தான். என் பேச்சைக் கேட்டு நடப்பது கடைசியாக நல்லதாகத்தான் முடியும்'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

இரண்டாவது தடவையாக இதே வசனம்.

புது மணமகளாக, பெரிய மானேஜர் மனைவியாக இருக்க வேண்டியவளைப் பிள்ளை பார்க்கும் ஆயாவாகக் கொண்டு வந்து வைத்திருப்பது எந்த வகையில் அவளுக்கு நன்மையாகுமாம்? இருக்கட்டும். இதற்கெல்லாம் ஒருநாள் வட்டியும் முதலுமாய் வாங்கத்தானே போகிறான்!

சட்டென முகம் மாற, அவனை உறுத்து விழித்தாள் திவ்யா. "உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும். சிவா கேஸ் முடிந்து விட்டதா?"

"ஊகூம்.. இப்போதுதான் திருமணம் பற்றி கோர்ட்டில் ஆல்பம், காசெட் கொடுத்திருக்கிறோம்.. ஏன்?"

"அன்று நான் மிஸ்டர் சதானந்தன் என்று அழைத்ததற்கே அந்த ஆட்டம் ஆடினீர்கள். ஆனால் நீங்களே இது பொய்த் திருமணம் என்று தமுக்கடிக்கிறீர்களே!" அவளது குரல் குற்றம் சாட்டியது.

"யார்... ஓ, வினோதினியா? வினோதினி ரொம்பவும் நெருங்கிய சினேகிதி என்றேனே"

"நெருங்கிய பெண் சினேகிதி என்றால் அதற்குத் தனி அர்த்தம் உண்டு"

தோளைக் குலுக்கி, "பெண் புத்தி போகுமா?" என்றான் சதானந்தன்.

சொன்னது அதிகப்படிதான். ஆனால் வினோதினி நடந்து கொண்ட விதமும் திவ்யாவுக்கு அதிகப்படியாகத்தான் தோன்றியது. எனவே அந்தப் பேச்சுக்காக அவள் மன்னிப்புக் கேட்பதாக இல்லை.

"இப்படிக் கோனல் மாணலாக அணிந்திருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. மாற்றப் போகிறேன்" என்று கூறி வீட்டை நோக்கி நடந்தாள்.

கூடவே நடந்தபடி, "உன் பெயர் வெறும் திவ்யா தானா? அல்லது முன்னே பின்னே ஏதாவது கொசுறு உண்டா?" என்று பேச்சுக் கொடுத்தான் அவன்.

அரை வினாடி தயங்கி விட்டு, ஒன்றும் பேசாமலே மேலே நடந்தாள் திவ்யா.



கீழ்க்கண் பார்வையில் அவளது முகம் சிவந்திருப்பதைக் கண்டதும், "சொல்லேன்.. எனக்கென்னவோ வெறுமனே திவ்யா என்று வைத்திருப்பார்கள் என்று தோன்றவில்லை" என்றான் சதானந்தன்.

அப்போதும் அவள் பேசாதிருக்கவும், "பரவாயில்லை.. நான் மிஸ்டர் ரங்கநாதனுக்கே எழுதிக் கேட்டுக் கொள்கிறேன்" என்றான்.

நின்று, "எழுதக் கூடாது" என்றாள் திவ்யா. பெரிய தந்தையின் நினைவில் லேசாகக் கண்கலங்கியது அவளுக்கு.

கவனியாதது போலே, "ஏனோ?" என்று பேச்சைத் தொடர்ந்தான் சதானந்தன்.

"அது என் பாட்டியின் பெயர். பெரியப்பாவுக்குப் பிடிக்காது. அதனால் தான் வெறும் திவ்யா ஆக்கினார்"

பெயர் மட்டுமல்ல.. அந்த அம்மாளையே ரங்கநாதனுக்குப் பிடிக்காது. அவசரக் கோலமாய் ராமநாதனின் திருமணம் நடப்பதற்கே அவள் தான் காரணம் என்பது ரங்கநாதனின் முடிவு. தந்தை மனம் மாறும் வரை பொறுமையாக இருந்திருந்தால் தம்பி மனைவி அநியாயமாய்ச் சாக வேண்டியதும் இல்லை; தம்பியும் இப்போது நல்லபடியாகக் குடும்பம் நடத்திக் கொண்டிருப்பான் என்பது அவர் கருத்து. எனவே, தம்பி மனைவியின் ஆசை என்று தம்பியின் மூலம் அறிந்த அவர், அதே பெயரைத் தம்பி மகளுக்கு வைத்த போதும் ஒரு பாதியை அடியோடு மறக்கடித்து விட்டார்.

"உன் பெரியப்பா மாதிரியே நானும் நினைக்க வேண்டியது இல்லை.. என்ன மகாப் பெரிய ரகசியம்? திவ்யப் பிரபாவா? திவ்ய ஜோதியா? திவ்ய குமாரி.. அல்லது லட்சுமியா?"

''திவ்விய சொரூபம்'' என்றாள் அவள் சின்னக்குரலில்.

''வாட்! திவ்விய சொரூபமா?'' விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கி விட்டான் சதானந்தன்.

''இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?'' என்றாள் திவ்யா மிடுக்காக. ஆனால் பெயரைக் கேட்டுச் சிரிக்கிறானே என்கிற கோபத்தை விட, இப்படி ஒரு பெயரை வைத்தார்களே என்கிற குன்றல்தான் அவளுக்கு அதிகம் இருந்தது.

சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''பெயருக்காக அதிகம் சிரிக்கவில்லை. உனக்கு இருபது வயதில்லையா? உன் அம்மாவின் இருபதாவது வயதில் நீ பிறந்து உன் தாயாரும் அவருடைய தாயாரின் இருபதாவது வயதிலேயே பிறந்திருந்தாலும் கூட குறைந்தது அறுபது ஆண்டுகளுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். இப்போதைக்குப் பழைய பேர் போலத் தோன்றினாலும், அது வைக்கப்பட்ட சமயத்தை நினைத்துப் பார்த்தால் ஸ்டைலான பெயர் தான். எனவே நான் பெயரை எண்ணிச் சிரிக்கவில்லை'' என்றான் சதானந்தன்.

''பின்னே?'' என்று விடாமல் கேட்டாள் திவ்யா.

''பெயர்ப் பொருத்தம் தான்.. திவ்ய சொரூபமா? அதை விடக் காளி சொரூபம் என்று வைத்திருக்கலாம்'' என்று மீண்டும் நகைத்தான்.

''நானா காளி சொரூபம்?'' என்று ஆத்திரத்துடன் முறைத்தாள் திவ்யா.

இடது கையின் அசைவால் அவளது தலை முதல் கால் வரை சுட்டிக் காட்டி, ''இதே சொரூபம்... நான் அடிக்கடி பார்த்துப் பழகிய திருவுரு இதுவேதான்'' என்று கிண்டலாகச் சிரிக்கவும் அவளுக்கும் சிரிப்பு வந்தது.



அவன் சிரிப்பதை ரசனையோடு பார்த்திருந்து விட்டு, ''ம்.. இந்த திவ்விய சொரூபம் தான்'' என்று சதானந்தன் ஒத்துக் கொள்ளவும் அங்கே மீண்டும் ஒரு சிரிப்பலை பரவியது.

## 18

அன்றிலிருந்து, வினோதினி அடிக்கடி முத்துத் தீவுக்கு வந்து போனாள். முதல் நாளைக்கு மிகவும் வித்தியாசமானவளாகப் பழகினாள்.

ஒதுங்க முயன்ற திவ்யாவை இழுத்து வைத்துப் பேசினாள். ''சிவா தனியாக அவன் பெற்றோரை நினைத்து அழுது கொண்டிருக்கிறானோ என்று தோன்றியதால் ரொம்பவும் கடுமையாகப் பேசிவிட்டேன். சாரி. என் பேச்சை மனதில் வையாதே!'' என்றாள்.

பிள்ளைக்காக என்கையில் திவ்யாவால் கோபத்தைப் பிடித்து வைக்க முடியவில்லை. மனதுக்குள் கோபதாபங்களை வளர்த்துக் கொண்டே இருப்பது அவளது வழக்கமும் இல்லை.

எனவே வினோதினி நீட்டிய கைக்கு ரொம்பவும் ஆசையோடு இல்லை என்றாலும், பதில் கரம் கொடுக்கவே செய்தாள்.

வினோதினி தடையற்று நிறையப் பேசினாள். சதானந்தனுடைய பார்ட்னருடைய மகள் என்பதாலும் அவனோடு கூடவே வளர்ந்ததாலும் தொழில் பற்றி, சதானந்தன் பற்றிய பேச்சே அதிகம் இருக்கும்.

''இப்போதே இங்கே எங்களுடையதுதான் பெரிது. ஆனால், இன்னும் இரண்டு மூன்று பேர் இருக்கிறார்கள். அவர்களிடமும் வாங்கி, மொத்தமாய் ஒரே உடைமையாக்கி விட வேண்டும் என்பதுதான் அப்பா, சது இருவருக்கும் எண்ணம்'' என்பாள்.

இரண்டு பங்குதாரர் இருக்கும் போது எப்படி ஒரே உடைமையாக்க முடியும் என்று உள்ளூரக் குடைந்தது திவ்யாவுக்கு. சதானந்தனுக்கும் வினோதினிக்கும் திருமணம் நடந்தால் ஒழிய அது சாத்தியம் இல்லையே! ஆமாம். அப்படித்தான் என்று சொல்லி விடுவாளோ என்கிற பயத்தில் அவளால் அதைக் கேட்கவும் முடியவில்லை. இதில் பயப்பட என்ன இருக்கிறது என்று யோசித்தால், அதுவும் புரியவில்லை.

சின்ன வயதில் இருந்து ஒரே பிடிவாதம் சதுவுக்கு. நினைத்தால் நடத்தியே தீர வேண்டும் என்று அவள் கூறிய போது திவ்யாவுக்கும் அது சரியென்றேபட்டது. ஒரே பிடிவாதமாய் அவளது திருமணத்தை நிறுத்தி, அதே பிடிவாதமாய் அவளை இங்கே கொணர்ந்து .. பழைய கதையை எண்ணிப் பார்க்கையில் அவளது பளிங்குமுகம் கடுத்தது.

அவளையே பார்த்திருந்த வினோதினி, முறுவலித்து, ''உனக்கும் தெரிந்திருக்குமே!'' என்று உரைக்கவும் திவ்யா திடுக்கிட்டாள்.

இவளிடம் சதானந்தன் எல்லாவற்றையுமா கூறி விட்டான்? எல்..ல்லாவற்றையும்?

சொல்லியிருக்கத்தான் வேண்டும். மற்றபடி நாடகத் திருமணம் என்பது எப்படித் தெரிய முடியும்?



மனதிற்குள் சிறு சோர்வை உணர்ந்தாள் திவ்யா. திவ்யாவைப் பற்றிப் பேச்சு திரும்பியது. பேச்சு திசை மாறியதே சந்தோஷமாக அவளும் தன் வளர்ப்பு, படிப்பு, வீட்டுச் சூழல் பற்றிப் பேசலானாள்.

திவ்யாவை அடிக்கடிப் படகில் அழைத்துப் போவாள் வினோதினி. 'எறா'வைப் பிடித்து, தோல் உடைத்து, பதப்படுத்துவதைக் காட்டினாள். பெரிய பெரிய அறைகளில் பெட்டி பெட்டியாக அடுக்கி வைத்திருப்பதை வியப்புடன் பார்த்தாள் திவ்யா. அதை விடவும், எறாவை உடைத்து, தரம் பிரிக்கிற வேகம் பெரும் அதிசயமாய் இருந்தது.

ஒருநாள் அவளது வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். திருவனந்தபுரத்தில் கடற்கரை ஓரமாய் ஓர் அழகிய பங்களா. அழகாகவே இருந்தது.

குளிர்பானத்தைத் திவ்யாவிடம் கொடுத்துச் சொன்னாள். ''என் சினேகிதிகள் பொறாமையாகப் பேசுவார்கள். இந்தப் பக்கத்திலேயே மிகவும் அழகான இரண்டு வீடுகளும் உனக்கே சொந்தம் என்றால் அநியாயமடி'' என்பார்கள். ''சதுவின் வீடும் ரொம்ப அழகுதான், இல்லை?'' என்று அபிப்ராயம் கேட்ட போது திவ்யாவால் பதில் சொல்ல முடியவில்லை. தொண்டை அடைத்திருப்பதை வெளிக் காட்டாமல் வெறுமனே தலையாட்டி வைத்தாள்.

சதானந்தனைப் பற்றி ஒருமையில் பேசி விட்டு, ''சின்ன வயதிலிருந்து சேர்ந்தே வளர்ந்தோமா, வயதிலும் சது சில மாதங்கள் தான் மூத்தவன் என்பதால், 'டீன் ஏஜ்' சமயத்தில் நான் அவனை விட வளர்ந்து விட்டேனா, அதிலிருந்து கட்டாயமாய் 'நீ, நான்' என்றுதான் சொல்லுவேன். அம்மா எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். அப்புறமும் இப்படி

அழைத்தால் நன்றாயிராதேடி' என்று. பிறகு சதுவுக்கே இது பிடித்துப் போனதால் விட்டு விட்டார்கள்..'' என்று விளக்கினாள்.

இவள் கொஞ்சம் பேசாமல் இருக்க மாட்டாளா என்று எரிச்சலுடன் நினைத்தாள் திவ்யா. பெரிய 'சது'!

திடுமெனத் தோன்றிய ஒரு வக்கிரத்துடன், ''அவருக்குப் பெண்களிடம் மதிப்பே இல்லையே'' என்று சொல்லி விட்டாள். ''பெண்களை நம்ப மாட்டேன் என்று சொல்கிறாரே!''

உன்னைப் பெண்ணாக நினைத்து, சதானந்தன் உன்னிடம் பிரியமாய்ப் பழகவில்லையடி. சும்மா ஒரு சினேகிதம்தான் என்று குறிப்பாய்ச் சொல்லி அவள் பேச்சை நிறுத்த முயன்றாள்.

ஆனால் வினோதினியின் முகம் இருண்ட விதத்தில் அவளுக்கே ஒரு மாதிரி ஆகி விட்டது.

ஏன் இப்படி? வினோதினியிடமும் அவன் இதேபோலப் பேசியிருப்பானோ? அதனால் தான் அவர்களது திருமணம் தள்ளிப் போய்க் கொண்டிருக்கிறதோ? பாவம் தான்.

சற்றுநேரம் இமை தாழ்த்தித் தரையைப் பார்த்துக் கொண்டிருந்த வினோதினி, லேசாகப் பார்வையை உயர்த்தி, தன் செயற்கை இமையின் நீள முடிகளின் வழியே திவ்யாவை நோக்கினாள். ''இது... இதுபற்றி சதா உன்னிடம் வேறே என்ன சொன்னார்?'' என்றாள் மெதுவாக.

''பெரிதாக எதுவும் சொல்லவில்லை. ஆனால் எந்தப் பெண்ணையும் இனி நம்ப முடியாது என்பது போலச் சில சமயங்களில் சொல்லியிருக்கிறார்'' என்றாள் திவ்யா சுருக்கமாக.



மறைக்க நினைக்காவிட்டாலும், இடம் பொருள் ஏவல் காட்டி விளக்கவும் திவ்யா தயாராயில்லை.

நல்லவேளையாக வினோதினி கேட்கவும் இல்லை. ஒரு மூச்சு விட்டுப் பிறகு சொன்னாள். ''அது, நாங்கள் எல்லோருமே மிகவும் நம்பியிருந்த ஒரு பெண்ணால் வந்த வினை. நல்லவள் என்று நினைத்து அனைத்தையுமே அவள் கையில் விட்டிருந்தோம். ஒரு முக்கியமான தருணத்தில் பெரும் பணத்தை எடுத்துக் கொண்டு மாயமாய் மறைந்து விட்டாள். அதிலிருந்தே அவ்வப்போது சது இப்படித்தான் பேசுவது. அந்த எண்ணத்தை மாற்ற நான் அரும்பாடுபட்டுக் கொண்டு இருக்கிறேன். பெண்களை மதிக்கத் தெரிந்த பிறகுதான்.. போகட்டும். அது என் துன்பம்.. இப்போது வேறு பேசுவோம்''

திவ்யாவுக்கு வினோதினியிடம் மரியாதை உண்டாயிற்று. பெண்களை மதிக்கத் தெரிந்த பிறகுதான் திருமணம் என்று, இவ்வளவு பொறுமையாய், பிடிவாதமாய் வேலை செய்கிறாளே!

அதுவும் மனதில் அவன் மேல் இவ்வளவு அன்பை வைத்துக் கொண்டு!

வினோதினியோடு திவ்யா செல்லும் இந்தப் பயணங்களில் சிவா ஒருபோதும் கலந்து கொள்வது இல்லை. ஏன், வினோதினி வருகிறாள் என்றாலே எதிர்த்திசை ஓரத்துக்கே போய் விடுவான். அப்படியிருக்கக், கூட வருவது எங்கே?

வா என்று அழைத்தாலும், வீட்டிலேயே மெக்கானிகல் செட் வைத்து விளையாடப் போகிறேன் என்று விடுவான்.

தனியாக வந்து கூப்பிட்டால், வினோதினியின் செண்ட் நாற்றமடிக்கிறது, அதனால் வரவில்லை என்பான்.

ஏனோ வினோதினியிடம் அவனுக்கு ஈடுபாடு இல்லை என்று திவ்யா ஊகித்தாள்.

ஒருவேளை, தன்னைப் போல இழப்புக்கு ஆளானவள் என்பதால் திவ்யாவை ஏற்றுக் கொண்ட சிறுவனுக்கு, அப்படிப்பட்ட துன்பம் எதையும் அனுபவித்திராத வினோதினியைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறதோ? ஊகூம். இல்லை சிவா பொறாமைப்படுகிற ரகம் இல்லை.

மனம் ஒட்டாமல் போகலாம். அவ்வளவே

ஆனால் வினோதினியோடு நல்லபடியாகப் பழகத் தொடங்கினால் இந்த ஒதுக்கம் மறைந்து விடும் என்று நினைத்தாள் திவ்யா.

அதிலும், அவள் படகு ஓட்டுகிற லாவகத்தைப் பார்த்தால் அவளிடம் மயங்கியே போய் விடுவான்.

ஆனால் சிவாவை எதிலும் வற்புறுத்தக் கூடாது என்று சதானந்தன் கூறியிருந்ததால் அவனாக மனம் மாறட்டும் என்று விட்டு விட்டாள் திவ்யா.

இடையில் ஒருநாள் பார்க்க வேண்டிய இடம் என்று திருவனந்தபுரத்தில் பத்மநாபர் கோயிலுக்கு திவ்யாவை அழைத்தான் சதானந்தன்.

சிவாவையும் தான்.

ஆனால், திவ்யா உற்சாகத்துடன் கிளம்ப, சிவா உடன் வர மறுத்தான்.

கோயில், ஓட்டல், ஐஸ்கிரீம். திவ்யா ஆசை காட்டிய எதுவும் அவனை அசைப்பதாக இல்லை.

என்ன செய்வது என்று புரியாமல் அவள் சதானந்தனை நோக்க, அவன் தோளைக் குலுக்கி விட்டு, ''அவன் இஷ்டம்..



நீ கிளம்பு'' என்று கூறிவிட்டுத் தன் வேலையைப் பார்க்கச் சென்றான்.

கடைசியாக, ''இங்கே தனியாகப் போரடிக்கும், சிவா'' என்று சொல்லிப் பார்த்தாள் திவ்யா.''

அவனை நேராகப் பார்த்து, ''நீங்கள் வருமுன் நிறைய நாட்கள் தனியாகத்தானே இருந்தேன்'' என்றான் சிறுவன் அலட்சியமாக. அவள் திகைத்து நிற்கவும், மனம் இளகினாற் போல, அவள் கையைப் பற்றி, ''என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள், ஆன்ட்டி. நான் ஏதாவது விளையாடிக் கொள்வேன். பாலனுக்குக் கூடச் சில விளையாட்டு கற்றுக் கொடுத்து இருக்கிறேன். அதனால் அவனோடு சேர்ந்தும் விளையாடுவேன். அப்புறம் நீச்சல், அதற்கு மேல் போரடித்தால் டெக்கில் ஏதாவது 'கார்ட்டூன்' போட்டுப் பார்ப்பேன். அதற்கும் மேல் போரடித்தால், ஹாஸ்டலில் செய்கிற மாதிரி, அம்மா படத்தைத் தொட்டுக் கொண்டு தூங்கி விடுவேன்'' என்றான் சிறுவன் அவளுக்கு ஆறுதலாக.

நெஞ்சை அடைத்துக் கண் கலங்கியது திவ்யாவுக்கு. தாயின் படத்தைத் தொடும் போது அவளை இனிப் பார்க்கவே முடியாது என்பது நினைவு வராமலா போகும்? பெற்றோரை இழப்பது எவ்வளவு பெரிய கொடுமை? அதுவும் இந்த வயதில்?

அருகில் அமர்ந்து, ''சிவா, எங்களோடு வந்தால் இதெல்லாம் இல்லாமலே ஜாலியாகப் பொழுது போய்விடும் இல்லையா, கண்ணா?'' என்று மெதுவாகக் கேட்டாள்.

''எனக்குத் திருவனந்தபுரமே பிடிக்காது, ஆன்ட்டி..'' என்று சிறுவன் ரகசியம் பேசினான். ''அங்கே போனால் கோர்ட்டில் கேஸ் நடக்கும். கூண்டிலே ஏற்றி, ''அப்பா, அம்மா இல்லை.. எங்கே இருப்பாய்'' என்று கேட்பார்கள்.

''அங்கிள் என்னை அடிப்பாரா, திட்டுவாரா, உதைப்பாரா என்று திரும்பத் திரும்பக் கேட்பார்கள். அப்புறம் யார் குளிப்பாட்டி விடுவார்கள் யார்...'' அசிங்கமாவெல்லாம் கேட்பார்கள். எனக்குப் பிடிக்காது ஆன்ட்டி. அங்கிளிடம் சொன்னால், 'ஆண்பிள்ளை எதையும் தைரியமாய் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்பார். அப்படித்தான் இருக்கப் பார்க்கிறேன். ஆனாலும் பிடிக்கவில்லை ஆன்ட்டி...''

அவன் பேச்சை ஜீரணித்துக் கொண்டு, ''இன்று கோர்ட் கிடையாது, சிவா.. அதனால்..'' என்று மீண்டும் தொடங்கினாள் திவ்யா.

''ஆனால் அந்த வினோதினி ஆன்ட்டியின் வீடு இருக்குமே!'' என்றான் பையன்.

அவள் அதிர்ந்து நோக்கவும், ''அங்கே எல்லோரும் 'புவர் பாய்' என்று என் தலையை முதுகைத் தடவிக் கொண்டே இருப்பார்கள். எனக்கு அதுவும் பிடிக்காது. அப்புறம், அந்த வினோதினி ஆன்ட்டி சொல்லுகிற மாதிரி அவளை 'அக்கா' என்று கூப்பிடவும் பிடிக்காது'' என்று கூறி அவளை மேலும் அதிர வைத்தான்.

அதற்கு மேல் திவ்யா அவனை வற்புறுத்தவில்லை. ஏனெனில் வினோதினி வீட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கலாம் என்பது அவளுக்கும் பிடிக்கவில்லை. வினோதினி எவ்வளவோ அன்பாகப் பழகும் போது இப்படி நினைப்பது தப்பு என்று தனக்குத்தானே பலமுறை அறிவுறுத்திக் கொண்ட போதும் அது மாறவே இல்லை.

இருவருமாகச் செல்லும் போது, துள்ளி விழுந்த ஒரு வண்ண மீனைப் பார்த்து விட்டு, ''சிவா பார்த்தால் சந்தோஷப்பட்டிருப்பான். நீங்கள் ஒருதரம் அவனிடம் அழுத்திச் சொல்லியிருக்கலாம்'' என்று குறைப்பட்டாள் திவ்யா.



''நீ சொன்னதே தப்பு. அவனாக ஒரு முடிவெடுத்து, அதே உறுதியாய் நின்று செயலாற்ற அவன் படிக்க வேண்டாமா?'' என்று சதானந்தன் கூறவும் திவ்யா உள்ளூர ஆச்சரியப்பட்டாள்.

இதற்காகத்தான் இவன் மறுமுறை சிவாவை அழைக்கவே இல்லையா!

''ஆனால் அவ்வளவு மன உறுதி வளர்க்க நினைக்கிறவர், 'புவர் பாய்' என்று பரிதாபம் காட்டுகிற இடத்துக்கு எப்படி அழைத்துப் போகிறீர்களாம்?'' என்று நினைத்ததைக் கேட்டு விட்டாள்.

''யார்? வினோதினி வீடு பற்றி சிவா சொன்னானா? ஆனால் அந்த மாதிரிச் சூழ்நிலைகளில் இருந்து தன்னை விலக்கிக் கொள்ளவும் அவனுக்குத் தெரிய வேண்டும் தானே? இப்போது அவனாக அந்தச் சூழ்நிலையையே தவிர்த்து விட்டான் பார். இன்னும் பத்து ஆண்டுகள், அவனது பதினெட்டு வயது வரையும் தான் என் கட்டுப்பாடு செல்லும் திவ்யா. அதன்பின் மீண்டும் இந்தப் பணம் கொத்திக் கழுகுகள் அவனைச் சூழ்ந்து கொள்ளத்தான் செய்வார்கள். அப்போது அவனே தான் சுயமாகச் சிந்தித்து நல்லது, கெட்டது அறிந்து செயல்பட்டாக வேண்டும். அதற்குரிய திறமை, நான் சொல்வதையே செய்து கொண்டு இருப்பதிலோ, என் சிறகுக்குள் பதுங்கிக் கொள்வதிலோ வளராது. அதனால் தான் முடிந்தவரை அவனை அவன் போக்கிலேயே விடுகிறேன்'' என்று விளக்கினான் சதானந்தன்.

இந்த ஒன்றரை மாதங்களில், சதானந்தனுக்கு அவனது வேலை தான் முக்கியம் என்று திவ்யா ஓரிருமுறை நினைத்திருக்கிறாள். ஆனால் அவன் இவ்வளவு யோசித்துச் செயல்படக் கூடும் என்று அவள் நினைக்கவே இல்லையே!

பெற்றோரை இழந்த போதும் இப்படி ஒருவனின் பாதுகாப்பு கிடைத்தது சிவாவின் அதிருஷ்டமே! சதானந்தனுடைய பிள்ளைகளும் அப்படித்தான். அதிருஷ்டசாலிகளாகவே இருப்பார்கள்.

கற்பனை சிறகடித்து, இரு சிறு குழந்தைகளையும் அவர்களுடைய தாயையும் உருவகப்படுத்திப் பார்த்தது. குழந்தைகளின் முகத்தில் சதானந்தனின் ஜாடை தெரிந்தது. அவர்களுடைய தாயின் மலர்ந்த முகத்தில் தன் சாயலைக் கண்ட திவ்யா அதிர்ச்சியுற்று நிமிர்ந்தாள்.

முதலில் கோயிலுக்குச் சென்றார்கள். மியூசியம், பார்க் என்று சுற்றி விட்டு 'வெலிங்டன் ஐலண்டு'க்குச் சாப்பிடச் சென்றார்கள்.

பெரிய ஓட்டல்.

''டேபிள் ரிசர்வ் பண்ணி இருக்கிறேன். முதலில் முகம் கழுவி விட்டு வரலாம்'' என்று அவளைப் பெண்கள் அறைக்கு வழி காட்டி அனுப்பி விட்டு ஆண்கள் அறைக்குள் சென்றான் சதானந்தன்.

தாமதமாக்கி, இனிய மனநிலையைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்று அவசரமாக வந்ததாலோ என்னவோ, திவ்யா சதானந்தனுக்கு முன்னதாகவே வெளியே வந்து விட்டாள்.

நீச்சல் குளத்தை வேடிக்கை பார்த்தபடி, வராண்டா ஓரமாக நின்றவள், ''ஹல்லோ!'' என்ற உற்சாகமான குரலில் திரும்பினாள்.

திவ்யா புரியாமல் விழிக்கவும், அவர் பெரிதாகப் புன்னகை செய்தார். ''என்னை உங்களுக்குத் தெரியாது, மேடம். ஆனால் உங்களை எனக்குத் தெரியும். கோர்ட்டிலே



உங்கள் படங்கள் - திருமணப் படங்கள் பார்த்தேன். நீங்கள் மிஸஸ் சதா தானே?''

மொழியறியாத காரணத்தினாலும், மரியாதையின் காரணத்தினாலுமாக இதுவரை இந்தப் பெயரில் அவளை யாரும் அழைத்தது இல்லை. வினோதினி வீட்டில் அவள் வெறும் திவ்யாதானே.

அறியாத மனிதரும் அழைப்புமாகத் தடுமாறி விட்ட திவ்யாவுக்குத் தன்னியல்பாய் உண்மை வாயில் வரத் தொடங்கியது. ''அ.. அது சும்..'' என்று உடனேயே நிலைமை புரிந்து நிறுத்தி, மாற்றி மேலே பேசுமுன், அவளது தோளில் சதானந்தனின் கை அழுந்தப் பதிந்தது. ''நேரமாகி விட்டது, சாரி டார்லிங்..'' என்று அவளைத் தோளோடு அணைத்தபடி நின்றவன், அந்தப் புதியவரோடு உற்சாகமாய் உரையாடலானான். ''ஹல்லோ, சுதீரன்.. என்ன அதிசயமாய்...''

சில நிமிடப் பேச்சின் பின், அன்றைய உணவு தன் விருந்து என்று அழைத்த அந்த சுதீரனிடம், ''இன்னமும் எங்கள் தேனிலவு முடியவில்லை, சுதீரன். எங்களுக்குத் தனிமை வேண்டும்'' என்று சதானந்தன் கண் சிமிட்டவும் அவர் ஓர் அவுட்டுச் சிரிப்புடன் விடைபெற்றார்.

''உங்கள் தேனிலவு முடிந்தபின் ஒருதரம் எங்கள் வீட்டுக்கு விருந்துக்கு வர வேண்டும்'' என்ற அழைப்புடன்.

பிடித்தபிடி விடாமல் சதானந்தன் அழைத்துச் சென்ற விதத்திலிருந்தே சரியான மண்டகப்படி காத்திருக்கிறது என்று திவ்யா ஊகித்தாள். ஆனால் சரியான நேரத்தில் அவள் சுதாரித்துக் கொண்ட பிறகும் ஏன் இந்தக் கோபம் என்று தான் அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

பல தளங்களை உடைய ஓட்டலில், மேல்தளத்தில், அழகான 'வ்யூ பாயிண்ட்'டுன் கூடிய மேஜையை அவர்களுக்காக ஏற்பாடு செய்திருந்தான் சதானந்தன். ஆனால் அதை ரசிக்க முடியாமல், 'சூப்'பை வைத்துவிட்டுப் பணியாள் அகன்றதுமே பாடத் தொடங்கி விட்டான். "நம் வீட்டு உள்விவகாரம். அதை அகப்பட்டவர்களிடமெல்லாம் சொல்லித்தான் ஆக வேண்டுமா?"

எதிர்பார்த்திருந்ததால் அவளாலும் பதில் கொடுக்க முடிந்தது. "நான் சரியான நேரத்தில் பேச்சை நிறுத்தி விட்டேன். ஆனால் சொல்லியிருந்தாலும் கூட, நீங்கள் வினோதினியிடம் சொல்லலாம் என்கிற போது நான் சொல்வது மட்டும் எப்படித் தப்பாகும்?" என்றாள் நிமிர்வுடன்.

"திரும்பவும் நன்றாகக் கேட்டுக் கொள். வினோதினியின் குடும்பமே சிநேகிதம்" என்றான் அவன் கடித்த பற்களுக்கிடையே.

"பேசாமல் நீங்கள் அவளையே மணந்து கொண்டு இருந்திருக்கலாம். ஒருவேளை அவள்..."

"நான் யாரை எப்போது மணப்பது என்று உன்னைக் கேட்டுச் செய்ய வேண்டியது இல்லை. மரியாதையாக உன் திருவாயை மூடியே வைத்துக் கொள், முட்டாள்..!" என்றான் அவன் சுள்ளென்று.

திவ்யா அயர்ந்து போனாள். முட்டாளா? அவளா? என்ன தைரியம்!?

இப்போது என்ன நடந்து விட்டது என்று இப்படிக் கோபப்படுகிறான்? சரியாகச் சொல்லப் போனால், ஆத்திரம் கொள்ள வேண்டியவளே அவள். அவளுக்கு அவன் செய்திருக்கிற கெடுதல்களுக்குக் கோபத்தில் குதிக்க



வேண்டியவள் அவள். ஏதோ ஒரு சின்னப் பையனுக்காகச் செய்கிறான் என்று பொறுத்துப் போனால் ரொம்பவும் எகிறுகிறானே! ஒருவேளை வினோதினி விஷயம் உறைத்து விட்டதா?

"போதும் நிறுத்திக் கொள்ளுங்கள்" என்று பதிலுக்குச் சீறினாள் திவ்யா. "பந்தை உதைக்கிற மாதிரி இஷ்டம் போல" என்னை ஆட்டி வைக்க முடியாது. ஜாக்கிரதை. இதற்குமேல் ஏதாவது பேசினால் நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன்" என்று இறுகிய குரலில் எச்சரித்தாள்.

"என்ன செய்து விடுவாயாம்?"

அவள் சொன்னாள்.. சொல்லியே விட்டாள்.

## 19

முதன்முதலில், அந்தக் கடிதத்தை எழுதியவள் திவ்யா என்ற எண்ணத்தில் சதானந்தன் அவளை இழிவாக நடத்தியிருந்த போதும், பிற்பாடு உண்மை அறிந்த பிறகு அவன் அவளை மோசமாக நடத்தியது இல்லை.

கோபப்பட்டிருக்கிறான் தான்.

சொல்லப் போனால் இந்தத் திருமணத்தின் உண்மை வெளிப்பட்டு விடுமோ என்கிற அச்சத்தில் தான் இருமுறையும் அவளிடம் சினம் காட்டினான்.

அப்போதும் கூட இப்படிச் சீறியதில்லை. முட்டாள் என்று பட்டம் கட்டியதும் இல்லை.

ஒருவேளை... வினோதினி, அவன் பெண்களை மதிக்குமுன் மணப்பது இல்லை என்று இருந்தது அவளது வாய் மூலமாகவே திவ்யா அறிந்த விஷயம். மனதுக்குப் பிடித்தவளின் மறுப்பே துன்பம் தான். அவமானமும் தான். அதை அறிந்து, திவ்யா குத்திக் காட்டினாள் என்று அப்படிக் கொதித்து விட்டானோ?

ஆனால் அதற்காக அவன் கொதித்திருப்பானோ என்ற எண்ணத்திலேயே தானும் பொங்கி விட்டதுதான் பிறகு எத்தனையோ தடவை யோசித்தும் திவ்யாவுக்குப் புரிய மறுத்தது.

ஆனால் அன்றைக்கு இதையெல்லாம் யோசிக்கவும் தோன்றவில்லை. சீறிக் கொண்டு இருந்தவள், 'என்ன செய்து விடுவாய்' என்று அலட்சியமாக - அவளால் பெரிதாக ஒன்றும் செய்ய முடியாது என்ற நிச்சயத்துடன் - அவன் கேட்கவும், அவனை அதிரச் செய்ய வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகவே போட்டு உடைத்து விட்டாள்.

''சிவாவின் வழக்கு முடிந்த பிறகும் நான் உங்களுக்கு விவாகரத்து தர மாட்டேன்!'' என்றாள்.

அவனுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை போலும்! சும்மா சும்மா அவளை அடக்கிப் பழகி விட்டானில்லையா? திருப்பி அடித்தால் நம்புவது கடினமாகத்தான் இருந்திருக்கும்.

''என்னது?! என்ன சொன்னாய்? திரும்பச் சொல்லு. நீ இப்போது என்ன சொன்னாய்?'' திருப்பித் திருப்பிக் கேட்டுத் தவித்து விட்டான்.

அவசரப்பட்டு சொல்லி விட்டோமே என்று அவளுக்கு உள்ளூர இருந்த போதும், ஒருதரம் சொன்ன பிறகு திரும்பச் சொல்லுவதில் என்ன வந்து விடப் போகிறது?



''நான்... சிவாவின்.. வழக்கு.. முடிந்தபிறகும்.. உங்களுக்கு... மண விடுதலை தரமாட்...டேன்'' என்று அழுத்தம் திருத்தமாக உரைத்தாள்.

அய்யோ, அப்படி ஏதும் செய்து விடாதே, சாரி என்று அவன் கெஞ்சப் போவதை எதிர்பார்த்து அவ்வளவு தெளிவாகச் சொன்னவள் ஏமாந்து போனாள்.

அவளது முகத்தைச் சற்று நேரம் கூர்ந்து கவனித்தவன், ''சரி.. சூப்பை எடுத்துக் கொள்'' என்று சாதாரணமாகக் கூறி விட்டு, தன் பக்கம் இருந்த கப்பிலிருந்து ஸ்பூனால் சூப்பை எடுத்து அருந்தத் தொடங்கி விட்டான்.

இப்போது விழித்தவள் திவ்யாதான். ஒருவேளை அவள் சொன்னதை அவன் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ? அல்லது சும்மா ஒரு பேச்சுக்குத்தான் மிரட்டுகிறாள் என்று நினைக்கிறானோ? விஷயத்தை விளங்கச் சொல்லி அவனைக் கலங்கச் செய்தே ஆக வேண்டும் என்று முடிவுடன் விவரித்தாள்.

விவரிக்குமுன்னும் கொஞ்சம் திணற வேண்டியிருந்தது.

'ஆனந்த்' என்று அவன் அழைக்கச் சொல்லியிருந்த போதும், கொஞ்சமும் இல்லாத நெருக்கத்தைக் காட்டி அவனை அப்படி அழைக்க அவளுக்குப் பிரியமில்லாததால் பொதுவாக அவனை அழைத்துப் பேசும் சந்தர்ப்பங்களையே தவிர்த்து விடுவது அவளது வழக்கம். வினோதினியின் சதுவும் ஏனோ பிடிக்கவே இல்லை. எனவே வெளிநண்பர்கள் போல, அந்த சுதீரன் அழைத்தது போலச் சொல்ல முடிவு செய்து பேசினாள்.

''இதோ பாருங்கள், சதா, நான் சும்மாவேனும் சொல்கிறேன் என்று நினையாதீர்கள். அன்றைக்கு மற்ற பெண்களை மணந்தால் விடுபட முடியாது என்றீர்களே,

அப்போதே நான் எடுத்த முடிவு இது. என்னை இந்தப் பாடுபடுத்துகிற உங்களைப் பழிவாங்க ஒரே வழி, உங்களை மணந்து, உங்களுக்குத் தேவைப்படும் போது 'டைவர்ஸ்' கொடுக்க மறுத்து அலைக்கழிப்பதுதான் என்று தீர்மானித்துதான் உங்களை மணந்தேன்'' என்று விளக்கினாள்.

''ஓகோ! அதுதானா விஷயம்? நீ திடீரென்று முகமலர்ச்சியோடு சம்மதித்தது வியப்பாய்த்தான் இருந்தது. ஆக, அதற்கு இதுதானா காரணம்?'' என்றவன் சட்டென வாய் விட்டுச் சிரித்து அவளைக் குழம்ப வைத்தான்.

அவள் குழம்பிக் கொண்டு இருக்கையிலேயே, பேரரை அழைத்து, சூப் கிண்ணங்களை அகற்றி, ஆர்டர் செய்த உணவைக் கொண்டு வரச் செய்தான்.

உணவை வைத்து விட்டு பேரர் சென்றதும், ''இந்த மீன் புலவு இங்கே ஸ்பெஷல், திவ்யா.. சாப்பிட்டுப் பார்'' என்று உபசரித்தான்.

''நான் சொல்வது மெய் என்று நீங்கள் உணரவில்லை என்று நினைக்கிறேன்''

''அப்படியல்ல.. ஆனால் உன் திட்டம் நிறைவேறுவதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவு என்பது என் அபிப்பிராயம்''

''எப்படியாம்?'' என்றாள் அவள் தலையைச் சிலுப்பி.

''ம்ம்...'' என்று தட்டைப் பார்த்தான் சதானந்தன். மீண்டும் நிமிர்ந்து, ''திவ்யா, முதலில் சாப்பிட்டு விடலாம். அதன்பின் இங்கேயே 'வ்யூ' பார்த்தபடி பேசலாம். நல்ல சாப்பாட்டை வீணாக்கி விடாதே. எனக்குப் பசி வேறு... ப்ளீஸ்'' என்றான்.



அதற்குமேல் சாப்பிட்டு முடிக்கும் வரை திவ்யாவும் 'கருமமே கண்ணாயினாள்' ஆயினாள்.

சுற்றியலைந்த பசியோடு, உணவின் சுவையும் அதற்கு உதவியது.

ஃப்ரூட் சாலட் வந்த போது, கண்ணாடித் தடுப்பின் அருகே இருக்கைகளை இழுத்துப் போடச் செய்தான் சதானந்தன்.

கையில் 'சாலட்' கிண்ணத்துடன் அமர்ந்து, ''இப்போது பேசலாம்'' என்று சதானந்தன் கூறிய அதே சமயத்தில் ''இப்போதாவது பேசலாமா?'' என்று திவ்யாவும் கேட்டுவிட இருவருக்குமே சிரிப்பு வந்து விட்டது. திவ்யாவுக்கு அவளை மீறி வந்த நகை.

விரைவிலேயே சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''சொல்லுங்கள்.. என்னால் ஏன் முடியாது?'' என்று வினவினாள் அவள்.

அவன் சொல்ல மறுக்கவில்லை. அவளை நேராகப் பார்த்து, ''முதல் காரணம், அந்தக் கடிதம் இன்னமும் என்னிடம் தான் இருக்கிறது..'' என்றான் மெதுவாக. ''அதை அடியோடு மறந்து விட்டாய் போல?''

இதற்குத்தான். இதற்காகத்தான் வெளியே காட்டிக் கொள்ளக் கூடாது என்று முதலில் நினைத்தது. பிறகு மறந்தும் போயிற்று. அவசரப்பட்டு, தட்டிக் கவிழ்த்தாற் போல.. இப்போது விவாகரத்து தந்தால் தான் கடிதத்தை தருவேன் என்றால் என்ன செய்வது? இரண்டு நிபந்தனை இட்டவன் மூன்றாவதற்கு ஏன் தயங்கப் போகிறான்?

சாலடில் இருந்த செரிப்பழத்தை இங்கும் அங்குமாய் உருட்டியபடி வேகமாய் யோசித்தாள் திவ்யா. எதையும்

காட்டிக் கொள்ளாமல் பேசுவது நல்லது என்று முடிவு கட்டினாள்.

நிதானமாக அந்த செரிப் பழத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு, "நான் மறக்கவில்லை. ஆனால் தீவில் வந்து தருவதாகச் சொன்ன நீங்கள் தான் தர மறந்து விட்டீர்கள். நீங்கள் ஒரு 'ஜென்டில்மேன்' தந்து விடுவீர்கள் என்று நினைத்திருந்தேன்" என்றாள் நிதானமாய்.

"ஜென்டில்மேன்!" புதிய பட்டம் - உன் வாயால் கேட்கப் பெருமையாக இருக்கிறது. ஆனால் கடித விஷயமாய் நீ என்னைக் குற்றம் சொல்வது தவறு. உனக்கு வேண்டியதை நீ தான் கேட்டு வாங்கியிருக்க வேண்டும். உன் தப்புக்கு என்னைச் சொல்லாதேம்மா" என்று தோளைக் குலுக்கினான் அவன்.

அவனது கேலிக்குரலும் இலகுபாவனையும் அவளைக் குழப்பின. கடிதம் கையில் இருப்பதால் இன்னமும் எதையும் சாதிக்கலாம் எனும் இறுமாப்பில் பேசுகிறானா? ஆனால் முகத்திலோ குரலிலோ கடினம் இல்லையே!

எப்படியும் கடிதத்தை மறந்தது தப்புத்தான். ஆனால், முத்துத்தீவில் எளிமையாய் உடையணிந்து, இலகுவாய்ப் பேசிச் சிரித்து அவன் பழகிய போது இவனிடம் ஒரு வெடிகுண்டு இருப்பது மறந்துதான் போயிற்று. அல்லது அவளது சைக்காலஜி அறிந்து, அப்படிப் பேசிப் பழகி மறக்கடித்து விட்டானா?

உள்ளே இருந்த கலக்கத்தை மறைத்து, "அந்தக் கடிதம் இப்போது செல்லாக்காசு. அதனாலேயே அதைப் பெறும் அக்கறை எனக்கு இல்லாமல் போயிருக்கலாம்" என்றாள் அவள் விட்டேற்றியாக.

"அணுகுண்டு எப்படிச் செல்லாக்காசு ஆயிற்று?"



"பிரபாவுக்குத் திருமணமாகி இரண்டு மாதங்கள், சரியாக அறுபத்தோரு நாட்கள் முடிந்து விட்டன. இவ்வளவு நாளில் அவள் மனதால் கணவனை எவ்வளவு நெருங்கியிருப்பாள்! குழந்தை கூட வந்திருக்கக் கூடும். அந்த நெருக்கத்தின் முன் இந்தக் கடிதம் அவளை என்ன செய்ய முடியும்?" என்றாள் அலட்சியம் போலக் காட்டி.

சில கணங்கள் அவளது முகத்தை ஊடுருவியவன் பல்வரிசை தெரியச் சிரித்தான். "சரி.. அப்படியே வைத்துக் கொள்வோம். ஆனால் மண விடுதலையை எந்த அடிப்படையில் மறுப்பாயாம்?"

"என் ஆ..சைக் கணவரைப் பிரிய எனக்கு மனம் வரவில்லை என்பேன்" என்றாள் அவள் அவன் பாணியிலேயே.

"ஆ...சைக் கணவனா?!" என்று மீண்டும் நகைத்தான் அவன்.

இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது என்று புரியாவிட்டாலும் எதிரொலி போலத் தானாக அவள் முகத்திலும் இளநகை அரும்பியது.

"அப்படியானால் உன் கணவனோடு சேர்ந்து வாழப் பிரியப்படுகிறாயா என்று கோர்ட்டில் கேட்டால் அழுத்தம் திருத்தமாய் 'ஆமாம்' என்று விடுவாயா?"

"நிச்சயமாய்!"

"இப்போது போலவே எப்போதும் வாழப் போவதாகச் சொல்லுவாய், இல்லையா? ஆனாலும் நான் விரும்புகிற சமயம் மணவிலக்கு பெற என்னால் முடியும், தெரியுமா?" என்றான் சதானந்தன் ஒருவிதமான புன்னகையுடன்.

''ச்சு.. நான்தான் மறுப்பேன் என்று சொன்னேன் இல்லையா?'' என்றாள் திவ்யா பொறுமை இழந்து.

''மறுப்பாய் தான்.. ஆனால் திருமண வாழ்வின் அடிப்படை ஒன்று உண்டு தெரியுமா? அது இல்லாத திருமணம் செல்லாது. ஒரு சின்ன வைத்தியப் பரிசோதனை உன்னைக் கன்னி என்று காட்டிக் கொடுத்து விடுமே. அப்புறம் கோர்ட்டில் என்ன சொல்லி என்னை அலைக்கழிப்பாயாம்?''

விநாடிக்குள் செங்கொழுந்தாய்ச் சிவந்து போனாள் திவ்யா. சே.. இதை யோசிக்கவே இல்லையே.. என்ன மடத்தனம்! இப்போது இவனை நிமிர்ந்து பார்ப்பது எப்படி? கையிலிருந்த கிண்ணத்தில் மீந்திருந்த ஒரே ஒரு பழத்துண்டை கரண்டியால் இங்குமங்கும் தள்ளி அளைந்தாள், அதுவே கவனம் போலப் பார்த்தபடி..

அவனுக்கு இன்னமும் ரொம்ப வேடிக்கையாக இருந்தது போலும்.. அவள் கையிலிருந்த கிண்ணத்தை வாங்கி அருகில் இருந்த தட்டில் வைத்தான்.

''அப்படி என்னை அலைக்கழிப்பது தான் உன் முக்கிய லட்சியம் என்றால் அதற்கு இன்னும் ஒரு வழி இருக்கிறது, திவ்யா'' என்றான் சீரியசாக.

''என்னது?''

''நாம் இருவரும்.. நீ அவ்வளவு ஆசைப்பட்டால் நான் ரெடிம்மா. இந்த ஓட்டலிலேயே நல்ல அறைகள் கிடைக்கும்..''

''அறைதான் கிடைக்கும்'' என்று கோபமும் எரிச்சலுமாக நிமிர்ந்தவளுக்கு அவனது கண்களைச் சந்தித்ததும் சிரிப்பு வந்து விட்டது.

எல்லாம் விளையாட்டு!



இருவருமாகச் சிரித்து முடித்ததும், ''இன்று உங்களுக்கு என்ன வந்தது என்றே தெரியவில்லை. காரணம் இல்லாமல் கோபப்படுகிறீர்கள். காரணம் இல்லாமல் சிரிக்கிறீர்கள்'' என்று குறை கூறினாள் திவ்யா.

''காரணம் உண்டு. ஆனால் கோபத்தின் காரணத்தை நீயே அழித்து விட்டாய்'' என்று முறுவலித்தான் அவன்.

அவனது காரண காரியங்கள் புரியாவிட்டாலும் இந்தப் புன்சிரிப்பே இதம் தந்து விடத் திருப்தி அடைந்தாள் திவ்யா.

பழிவாங்கும் திட்டம் பிசுபிசுத்தது கூட ஏனோ பெரிதாகப்படவில்லை. கூடவே விநோதினியின் வீடு செல்லாமலே திரும்பி வந்ததும் கூட மனதுக்கு இதமாகவே இருந்தது.

விநோதினி அன்பாகவே பழகினாலும், அவள் வீடு சிவாவைப் போலவே அவளுக்கும் பிடிக்கவில்லைதான்.

அன்றைய் மெயிலில் இருந்த ஒரு ரோஜா வண்ணக் கவரை ஆவலுடன் எடுத்துப் பிரித்துப் படித்த சதானந்தனின் முகம் மலர்ந்தது; அதேசமயம் ஏதோ ஒரு யோசனை.

சிவாவை அழைத்து, ''இந்த வாரக் கடைசியில் பச்சைமலைக்குப் போக வேண்டும். இரண்டு நாள் தங்குவதற்கு உன் விளையாட்டுச் சாமான்களில் தேவைப்பட்டதை எடுத்து வைத்துக் கொள். துணிமணி திவ்யா எடுத்து வைப்பாள்'' என்று கூறவும் சற்று யோசித்து விட்டு சிவா உற்சாகமாகவே எழுந்தான்.

''நான் என் 'ரோலர்ஸ்கேட்'சை எடுத்து வைக்கப் போகிறேன்'' என்று அவனது அறைக்கு ஓடினான்.

''மலை என்றால்.. அவனுக்கு ஸ்வெட்டர் எடுத்து வைக்க வேண்டுமா?'' என்று கேட்டபடி திவ்யாவும் எழுந்தாள்.

''அவனுக்கு மட்டுமல்ல.. உனக்கும் தான். முக்கியமாக உன்னைப் பார்க்க வேண்டும் என்றுதான் அம்மா வரச் சொல்லியிருக்கிறார்கள்''

''அம்மாவா!'' என்று வாயைப் பிளந்தாள் திவ்யா.

''உங்களுக்கு அம்மா இருக்கிறார்களா?'' என்றாள் மிகுந்த ஆச்சரியத்துடன்.

''ஏன்? எல்லோருக்குமே அம்மா இருந்துதானே ஆக வேண்டும்? இதற்கு இவ்வளவு ஆச்சரியப்படுவானேன்?''

''ச்சு.. அதல்ல'' என்றாள் திவ்யா. ''உங்களுக்கு அம்மா இருக்கும் போது பெண் இல்லாத வீடு என்று கோர்ட்டில் எப்படி வாதாட முடியும்?'' என்றாள் சந்தேகமாய்.

''முடியும்.. முடிந்தது. ஏனென்றால் சிவாவை ஓடியாடிப் பார்த்துக் கொள்ள முடியாத அளவு என் அம்மா வயதானவர்கள். நோயாளி.. அத்தோடு அவர்கள் என்னோடு வசிக்கவும் இல்லை. இந்த மூன்றினால் என் வாதம் அடிபட்டுப் போயிற்று''

''ஆனால் ஏன்..''

''என்னது.. ஏன்?''

''உங்கள் அம்மா ஏன் உங்களோடு வசிக்கவில்லை?'' என்று மேலும் துருவியவள், அவன் முகம் கடுக்கவும், ''சாரி.. சொல்லக் கூடாது என்றால் சொல்ல வேண்டாம்'' என்றாள்.

''சொல்லக் கூடாதது என்பதற்கு அது ஒன்றும் சிதம்பர ரகசியம் அல்ல. ஆனால் ஏதோ ரகசியம் இருப்பது போல நீ துளைத்ததுதான் எரிச்சல் வந்தது. பரவாயில்லை. சொல்கிறேன். கேட்டுக் கொள். என் அம்மாவுக்கு இந்த உப்புக்காற்று ஒத்துக் கொள்ளவில்லை. இதைவிட



மலைக்காற்று நல்லது என்று டாக்டர்கள் சொன்னதால் நம் டீ எஸ்டேட்டிலேயே தங்கி விட்டார்கள். முன்பு 'கெஸ்ட் ஹவுசா'க இருந்த வீடு அது. சில மாற்றங்களோடு அதிலேயே வசிக்கத் தொடங்கி விட்டார்கள்.. என்ன?''

அவன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே அவளுக்கு வேறு ஒரு பயம் வந்தது. ''என்னைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னீர்களே. நான்.. என்னைப் பற்றி என்ன.. எல்லாமே சொல்லி விட்டீர்களா?'' என்று கவலையுடன் கேட்டாள்.

''எல்லாமே என்றால்? அந்தக் கடிதம், திருட வந்தது எல்லாமேயா? அது அவர்களுக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லையே. அவசியமற்ற எதையும் நான் அம்மாவிடம் சொல்லவில்லை..''

''இ...இது?'' என்று கழுத்தைக் காட்டினாள் அவள்.

''சிவா கேஸ் விவரம் அம்மாவுக்குத் தெரியும். அதன் கடைசித் திருப்பம் வரை எழுதியிருக்கிறேன். போதுமா? உனக்குத் துணி எடுத்து வைக்கும் போது மஞ்சள், பச்சை என்று எடுத்து வை. இரண்டும் அம்மாவுக்கு மிகவும் பிடித்த நிறங்கள்''

'உன் தாயைக் குளிர்வித்து எனக்கு ஆகப் போவது என்ன?' என்று தோன்றிய போதும் பேசாமல் தலையாட்டினாள் திவ்யா. ''இன்னும் ஒன்றே ஒன்று. கேட்கலாமா?''

''என்ன?''

''உங்கள் அம்மா என்றால் மிஞ்சி மிஞ்சி வயது ஐம்பது இருக்குமா? அதற்குள் வயதானவர்கள் என்பானேன்?''

''நான் கொஞ்சம் லேட்டாகப் பிறந்தவன். அதனால் இப்போது அம்மாவுக்கு வயது ஐம்பத்தைந்து முடிந்து விட்டது. ஐம்பதிற்கு ஐம்பத்தைந்து அதிக வித்தியாசம் இல்லைதான். ஆனால் ஐந்து ஆண்டுகளுக்கு முன் அப்பாவை இழந்ததிலிருந்து உள்ளூர ஓய்ந்து போனார்கள். அதனால் நோயாளி போல ஓய்வாய் இருக்க வேண்டிய கட்டாயம்''

சதானந்தனின் குரலும், அவன் பேசிய விதமும் அவனுள் இருந்த இறுக்கத்தை வெளிப்படுத்தின.

''என்ன விஷயம்? ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?'' என்று கேட்டு விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள் திவ்யா. மனைவி என்கிற பெயரில் வேலை செய்ய வந்தவள், நிஜ மனைவி போல மனதைப் பற்றி விசாரிக்கலாமா?

ஆனால் அவனுக்கு அப்படி ஏதும் தோன்றவில்லை போலும். மனதில் இருந்ததை வாய் மொழியாக உரைத்தான். ''பொதுவாக அம்மாவுக்குப் பிடிக்காதது என்று தெரிந்த எதையும் நான் செய்வது இல்லை திவ்யா. இப்போதும் அதனால் தான்.. உன்னைப் பற்றி என்ன எண்ணி விடுவார்களோ என்று ஒரு கலக்கம். ... கொஞ்சநாள் போகட்டும் என்று நினைத்தேன். அவர்கள், யார் மூலம் என்ன கேள்விப்பட்டார்களோ, உடனே வரும்படி எழுதி விட்டார்கள். எழுதி விட்ட பிறகு தள்ளிப் போட முடியாது... அவர்கள் மனம் ஒப்ப வேண்டுமே என்றுதான். என்னிடம் எதிர்ப் பேச்சு பேசுகிற மாதிரி இல்லாமல் அம்மாவிடம் நன்றாக நடந்து கொள்ள வேண்டும் திவ்யா''

அந்தக் காலத்துப் பெண்மணி. இந்த மாதிரிக் காரணங்களுக்காகப் பொய்த் திருமணம் செய்ததைத் தப்பாக எண்ணுவார்கள் என்று அஞ்சுகிறான் போல. அத்தோடு இந்த மாதிரித் திருமணத்துக்குச் சம்மதித்து வந்த பெண்ணைப் பற்றியும் நல்ல அபிப்பிராயம் கொள்வது கடினம்.



அதனால் அவர் ஏதாவது சொல்லப் போக, திவ்யா பதிலுக்குத் திருப்பி ஏதாவது கொடுத்து விடப் போகிறாளோ என்று அஞ்சுகிறானா? உன்னை நம்பி ஒப்படைத்த பையனைப் பார்த்துக் கொள்ள இப்படி ஒரு பெண்ணைக் கொண்டு வந்தாயா? முதலில் அவளை வெளியேற்று என்றால் மேலே என்ன செய்வது என்றும் ஒருவகையில் பயப்படுகிறான். சிவாவின் வழக்கு இன்னமும் முடியவில்லையே!

ஒருவகையில் அவளுக்கு அது நல்லதுதான். தாயை மீற முடியாமல் அவளை அவன் திருப்பி அனுப்பவும் கூடும். ஆனால் சிவா? அவனை 'அம்போ' என்று விட்டு விட்டு அவளால் எப்படிப் போக முடியும்? சிவாதான் எப்படி இருப்பான்?

அவன் எப்படியோ போய்த் தொலையட்டும் என்று இருக்க முடியாமல் அவன் மேல் வேறு பிரியம் உண்டாகித் தொலைத்து விட்டதே!

அதோடு பழிவாங்கும் திட்டம்? விவாகரத்து விஷயமாய் முடியாவிட்டாலும் ஏதாவது ஒருவழி தேடிப் பழிவாங்க வேண்டாமா?

இவ்வளவு படுத்தியவனைப் பழிவாங்காமல் போவார்களா, என்ன? இங்கிருந்து செல்லும்படி ஆகிவிடக் கூடாது என்பதற்கு ஆயிரம் காரணங்கள் தோன்றின. விழிகளை உயர்த்தி அவன் முகத்தைப் பார்த்தாள் திவ்யா. அங்கிருந்த கவலை மற்றதை மறக்கடித்து விட, ''கவலையே படாதீர்கள். உங்கள் அம்மாவிடம் நான் இனிமையே உருவாக நடந்து கொள்கிறேன்'' என்று முறுவலித்தாள்.

ஆனால், ''வேண்டாம்.. வேண்டாம்'' என்று பதறினான் சதானந்தன். ''அந்த மாதிரி நடிப்பை அம்மா உடனே கண்டு

கொள்வார்கள். நீ சாதாரணமாய் இரு. அதுபோதும். வாக்குவாதம் வேண்டாம். அவ்வளவுதான்.''

அவள் சரி என்று தலையாட்டவும், அவளருகில் வந்தான் சதானந்தன். அவளது கைகளைப் பற்றி, ''இது எனக்கு எவ்வளவு முக்கியம் என்று உனக்குத் தெரியாது திவ்யா. ஆனால்.. மிகவும் நன்றி'' என்று கூறி அவளது விரல்களில் லேசாக முத்தமிட்டான்.

உள்ளே ஏதோ தலைகீழாகப் புரள்வதைத் திவ்யா உணர்ந்தாள். இவனுக்கு இதுவே பழக்கமாகி விட்டது. இப்படி எல்லாம் செய்தால் இவனைப் பழிவாங்குவது எப்படியாம்?

அவள் செயலிழந்து நிற்கையில் பற்றிய கைகளை விடாமலே, அவள் முகத்தையே கவனமாகப் பார்த்து, ''இதற்குப் பிரதியாக உனக்கு எதுவும் வேண்டுமானால் சொல்லு, க.. திவ்யா, தருகிறேன்'' என்றான் சதானந்தன்.

என்ன வேண்டும்? எத்தனையோ வேண்டுமாய் இருக்கலாம். ஆனால் எதையாவது சிந்திக்க முடிந்தால் அல்லவா எதெது வேண்டும் என்று யோசித்துச் சொல்ல முடியும்? எதுவுமே தோன்றாததால் மெல்லத் தலையசைத்தாள் திவ்யா.

இனம் விளங்காப் பார்வையுடன் அவளது கைகளை ஒருதரம் அழுத்தி விட்டு, ''நீ கேளாமலே எனக்குத் தெரியும். திரும்பி வந்ததும்... இல்லை. இப்போதே என்னோடு வா'' என்று அவளது ஒருகையை விடாமலே தன் அலுவல் அறைக்கு அவளை அழைத்துச் சென்றான்.

தரையோடு பதித்திருந்த இரும்பு பீரோ ஒன்றின் முன் அவளை நிறுத்தி விட்டு, பீரோவைத் திறந்தான். உள்ளிருந்து ஒரு காகிதத்தை எடுத்து அவளது கையில் திணித்து, ''இது கூட வேண்டாமா?'' என்று சிறு முறுவலுடன் வினவினான்.



பிரபாவின் கடிதம்! திவ்யாவின் வாழ்வில் நிகழ்ந்த மாற்றங்கள் அத்தனைக்கும் ஆணிவேர்!

''எரித்து விடு'' என்றவன் அவள் அசைவற்று நிற்கவும், அவனே ஒரு லைட்டரைக் கொண்டு வந்து, கடிதத்தை எடுத்துப் பிரித்து முனையில் பற்ற வைத்தான். கையில் பிடித்திருந்த இடம் தளர, பெரும்பாலும் எரிந்து முடிந்ததும், வெள்ளையர் முறைப்படி அங்கே ஒவ்வோர் அறையிலும் இருந்த கணப்பில் போட்டு விட்டு வந்தான்.

பார்வையால் அவனையே தொடர்ந்தவள், அவன் அருகில் வந்ததும் கேட்டாள். ''உங்கள் பிடிமானத்தை அழித்து விட்டீர்களே! இப்போது நான் எல்லாவற்றையும் உதறி விட்டுக் கிளம்பினால் என்ன செய்வீர்கள்?'' என்று மெல்ல வினவினாள்.

ஒற்றை விரலால் அவளது கன்னத்தை மிருதுவாய் வருடினான் சதானந்தன். ''ஏற்ற காரியத்தை நீ இடையில் விடுகிறவள் அல்ல, திவ்யா. உன்னிடம் எனக்கு நம்பிக்கை இருக்கிறது'' என்றான், ''நீ பெண்ணாக இருந்தபோதும்!''

அவளது கடைசி வார்த்தைகளின் காரணம் வினோதினி மூலம் ஓரளவு அறிந்திருந்ததால் திருப்பிப் பேசாமல் பெட்டி அடுக்குவதாகக் கூறியபடி வெளியே சென்றாள் திவ்யா.

அன்று மாலையில் வினோதினி வந்த போது, பச்சை மலைப் பயணம் பற்றி அவளிடம் விவரித்தாள் திவ்யா. ''அங்கே சதானந்தனுடைய அம்மா எப்படி, வினோதினி? சிறுவயதில் இருந்து சேர்ந்து வளர்ந்தவர்கள் என்பதால் உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்குமே''

''சது ஒன்றும் சொல்லவில்லையா? அவரிடம் கேட்டிருப்பாயே?''

''அவர் அம்மாவைப் பற்றி அவரிடமே எப்படிக் கேட்பது? கேட்டாலும் தாயார் எனும் போது சிறப்புக்கள் மட்டும் தானே தெரியும்? அவர்களுக்கு எதெது பிடிக்காது என்பது தெரிந்து அதற்குத் தக்கபடி நடந்து கொண்டால் நல்லது அல்லவா?''

''யாருக்கு?'' என்று கேட்ட போது வினோதினியின் குரல் மாறியிருந்தது. திவ்யா வியப்புடன் நோக்கவும் முறுவல் செய்து, ''சிவா வேலை முடிந்தால் நீ அவர்களைப் பார்ப்பது கூட அரிது. அப்படியிருக்க அத்தையின் அபிப்பிராயம் பற்றி இவ்வளவு கவலைப்படுகிறாயே என்று நினைத்தேன்'' என்றாள் சமாதானமாக.

''எனக்கு... ஒருவர் வீட்டுக்குப் போகிற போது, அங்கே இருக்கிற நாட்களை நல்லபடியாகக் கழித்து விட்டு வருவது நல்லது என்பது தான் எனக்கு. ஆனால் உங்கள் சது தான் ஏனோ ரொம்பவும் கவலைப்படுகிறார். அவர்களிடம் நல்லபடியாய் நடந்து கொள்ள வேண்டும் என்று பயங்கரமாய் 'அட்வைஸ்' அதனால் தான் கேட்டேன்'' என்று விளக்கினாள் திவ்யா.

சற்று நேரம் யோசித்து விட்டு, ''தனியாகக் குறிப்பிட்டுச் சொல்லும்படி ஆள்.. அத்தையிடம் ஒன்றும் இல்லை திவ்யா. கொஞ்சம் தான் நினைத்தது நடக்க வேண்டும் என்பார்கள். முன்பு கூட.. அதுபோகட்டும். அதிகம் நெருங்காமல் முடிந்த அளவு நீ ஒதுங்கிப் போய் விடுவது உனக்கு நல்லது. அங்கேயும் தேயிலைத் தோட்டங்களில் இலை பறிப்பதே பார்க்க சுவாரசியமாய் இருக்கும். மலையில் இயற்கைக் காட்சிகள் வேறு. உனக்கு ரசிகமனம் என்றாயே! வாய்ப்பை விடாமல் நன்றாகச் சுற்றிப் பார்த்து விட்டு வா. அவர்கள் பக்கத்தில் இருந்தால் தானே வம்பு? சுற்றிப் பார்க்கிற சாக்கில் விலகி விடு.. அப்புறம், நானும் வெளியூர் போகிறேன்.



அதைச் சொல்லத்தான் வந்தேன். வரட்டுமா?'' என்று உடனேயே கிளம்பி விட்டாள்.

சதானந்தனோடு அந்த அழகான மலையாள நாட்டில் பயணம் செய்வதே ஓர் இனிமையான தனி அனுபவமாக இருந்தது திவ்யாவுக்கு.

பயணத்தின் முடிவிலோ சதானந்தனைப் பற்றிய ஒரு பெரிய உண்மையும் தெரியவந்தது.

## 20

மோட்டார்ப் படகாகட்டும், காராகட்டும், இரண்டையுமே சதானந்தன் மிகவும் நன்றாகவே ஓட்டினான். கூட இருப்போர், அவரவர் நலத்தைப் பற்றிய எண்ணம்கூட இல்லாமல் சுற்றிலும் பார்த்து ரசிக்க முடிந்தது. கேரள மாநிலத்தில் ரசனைக்குரிய காட்சிகளுக்குப் பஞ்சம் ஏது?

ஏற்கனவே அந்த மாநிலத்தை அறிந்து வைத்திருந்த சதானந்தன், முக்கியமானவற்றைக் காட்டுவதற்கு வசதியாக இருவரையும் முன்புறமாய் அமரச் சொன்னான்.

நடுவில் அமர்ந்தால் எம்பி எம்பிப் பார்க்க வேண்டியிருக்கும் என்பதால் சிவா ஓரமாய் அமர்ந்து கொள்ள, திவ்யா நடுவே அமர வேண்டியதாயிற்று.

சதானந்தனின் அண்மை முதலில் அவளைச் சற்று பாதித்தபோதும் வெளிப்புற அழகில் விரைவிலேயே மறைந்துவிட்டது. சதானந்தனும், இதைப்பார், அதைப்பார் என்று காட்டினான். இடையிடையே சலசலத்த நீரோடைக்கருகே காரை நிறுத்திக் கால் நனைத்தார்கள். ஒரு

மரம் முழுக்கக் கட்டியிருந்த தூக்கணாங் குருவிக் கூடுகளைச் சுற்றிச்சுற்றி வந்து பார்த்தார்கள். குஞ்சு பொரித்துப் பறந்து விட்டிருந்த இரு கூடுகளை சிவாவும் திவ்யாவும் ஆளுக்கு ஒன்றாக எடுத்து பத்திரப்படுத்தினர். அங்கங்கே ஒற்றையாய் முளைத்து பெரிய பெரிய கனிகளோடு நின்ற பலாமரங்களைப் பார்த்தார்கள். தானாகப் பழுத்த பழத்தை ஒரு குரங்கு உண்பதை, அவனைத் தொட்டு அழைத்துக் காட்டினாள் திவ்யா.

தன் பயண அனுபவங்களில், இருவருமே ரசிக்கக் கூடியவற்றைச் சிரிக்கச் சிரிக்கச் சொன்னான் சதானந்தன்.

ஒருதரம் தொழில் விஷயமாய் இரண்டு பேரோடு வரும்போது வழியில் கார் நின்று போய்விட, சிறுத்தைப்புலி ஒன்று கார்மேல் ஏறி உள்ளே வர முயற்சித்ததையும், காரின் 'ஹாரனை'ப் பலமாக ஒலித்ததும் அது மிரண்டு, தலைதெறிக்க வாலை உயர்த்தியபடி ஓடியதையும் சுவைபட விவரித்தான்.

ஆனால் அதேபோல சாலையில் ஒருதரம் குறுக்கிட்ட யானை மந்தையை விரட்ட 'ஹார்ன்' பண்ணியபோது, அதுவும் கொஞ்சம் பிளிறும் ஓசைபோல இருக்கவே, யானை மந்தை காரைச் சுற்றி வளைத்துக் கொண்டு விட்டதாம். ஒன்றிரண்டு பெரிய யானைகள் கார்க் கண்ணாடியைத் தட்டிப் பார்க்கவும் கூட இருந்தவர் மயக்கம்போட்டு விட்டாராம். சற்றுநேரம் நின்று பார்த்துவிட்டு யானைக்கூட்டம் போய்விட, நண்பரைத் தட்டி எழுப்ப முயன்றால், யானைதான் பிடிக்கிறது என்று பயங்கரமாய்க் கத்தத் தொடங்கி விட்டாராம்.

''அவர் கத்திய கத்தலில் போன யானைக் கூட்டம் திரும்பி வந்துவிடுமோ என்று பயந்து போனேன்'' என்றான் சதானந்தன்.



கண்களை உருட்டி, கூடச்சிரித்து சிவா கதை கேட்ட விதத்தில் திவ்யாவுக்கு வேறு ஒன்று தோன்றியது.

சில மணி நேரங்கள் சென்றபின் சிவாவுக்குத் தூக்கம் வந்து விட்டது.

காரை நிறுத்தி, அவனைத் தூக்கி, காரின் பின் சீட்டில் தலைக்குக் குஷன் வைத்துக் கிடத்தி, உருண்டு விழுந்து விடாமல் இருப்பதற்காக இன்னொரு குஷனை அண்டை கொடுப்பதைப் பார்க்கையில் மீண்டும் திவ்யாவுக்கு அதே எண்ணம் தோன்றியது.

ஆனால், பின்புறம் இரு கதவுகளையும் 'லாக்' செய்து மூடிவிட்டு, முன்னே வந்து பழையபடி அமர்ந்து, அவன், 'என்ன விஷயம்?' என்று கேட்கவும் சட்டென அவள் முகத்தில் சூடு பரவியது.

சமாளித்துக் கொண்டு, ''ஓ... ஒன்றுமில்லையே!'' என்று முடிந்த அளவு மிடுக்காகப் பதிலிறுத்தாள் திவ்யா.

அவள்புறமாய் நன்றாகத் திரும்பி அமர்ந்து, ''ஏதோ இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறதே! அப்படி என்னிடமிருந்து எதை மறைக்க முயற்சிக்கிறாய்?'' என்று அவன் விடாமல் வினவினான்.

''மகாப்பெரிய விஷயம்! உப்பு பெறாதது'' என்றாள் அவள் வருவித்த அலட்சியத்துடன். அவன் காரை எடுக்காமல் காத்திருக்கவும், ''நண்பர் மகனுக்கு இந்த வயது என்றால் உங்களுக்கு என்ன வயது இருக்கும் என்று யோசித்தேன்...'' என்று நிறுத்தினாள் அவள்.

லேசாக முறுவலித்து விட்டு அவன் சொன்னான். ''வாசு இனத்தில் மிகவும் சிறுவயதிலேயே திருமணம் செய்து விடுவார்கள். உடனேயே தொழிலிலும் புகுத்தி விடுவார்கள்.

திருமணமானபோது அவனுக்கு வயது பத்தொன்பது. அவனுடைய மனைவிக்குப் பதினாறு. உடனேயே சிவா பிறந்து விட்டான். எனக்கும் வாசுவுக்கும் ஒரே வயதுதான் என்றால்... உன் மகாப் பெரிய விஷயம், உப்பு பெறாத கேள்விக்குப் பதில் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால்... என்றவன் அவள் முகத்தைக் கூர்மையுடன் நோக்கி, "அவ்வளவுதானா யோசித்தாய்? இன்னும் கொஞ்சம் உண்டுபோல் இருக்கிறதே?" என்று ஒரு வற்புறுத்தலோடு வினவினான்.

உதட்டைக் கடித்துக் கொண்டு வெளியே பார்த்தாள் திவ்யா.

ஆனால் அவன் காரை எடுக்காமலே அமர்ந்திருக்கவும், வேறு வழியின்றி, "சிவாவிடம் இவ்வளவு நன்றாய், மனமறிந்து இதமாய் நடந்து கொள்கிறீர்களே, உங்களுக்கு மகன் இருந்தால் அவனிடமும் அப்படித்தானே பிரியமாய் நடந்து கொள்வீர்கள்... ஆனால் திருமணமே செய்து கொள்ளவில்லையே ஏன்? என்று நினைத்தேன்" என்றாள் அவள் சிறு குரலில்.

உன்யோசனையை உன் வேலையோடு நிறுத்திக் கொள் என்று ஏதாவது கடுமையாகச் சொல்லக்கூடும் என்று காத்திருந்தாள் திவ்யா.

ஆனால், அவன் முகத்தில் அவ்வப்போது தென்படும் பொருள் விளங்காத பார்வையுடன் திரும்பி, "அதுபற்றிப் பிறகு சொல்லுகிறேன்" என்று கூறிக் காரை எடுத்தான் சதானந்தன்.

அந்தப் பார்வையின் பொருள்புரியா விட்டாலும், அதில் கோபம் இல்லை என்பதைப் பெரும் நிம்மதியோடு உணர்ந்தாள் திவ்யா.



கேரள மாநிலத்தின் கடல்புறத்து நெய்தல் பகுதியின் அழகையும், சமவெளியின் மருதநிலத்து அழகையும் கண்கொள்ளாமல் அனுபவித்த திவ்யாவுக்கு அதன் மலைப்புறத்து குறிஞ்சி அழகு மூச்சடைக்க வைத்தது.

வளைந்து வளைந்து ஏறிய மலைப்பாதையும், மேகங்கள் கொஞ்சுகிற மலைமுகடுகளும் அவளைக் கண்சிமிட்ட விடவில்லை.

உயரமாய் வளர்ந்திருந்த பாக்குத் தோட்டத்தையும், அதில் சிலர் மரத்துக்கு மரம் தாவிப் பாக்குப் பறிப்பதையும், காரை நிறுத்தி, சதானந்தன் காட்டியபோது அவளுக்குச் சில கணங்கள் நெஞ்சுத் துடிப்பு நின்றுகூடப் போயிற்று. இருபுறமுமாய்ச் சீராக ஆடிக்கொண்டிருந்த ஒரு நெடிய பாக்கு மரத்தின் உச்சியில் இருந்த ஒருவன் விழாமல் அடுத்த மரத்தின் மேல் பத்திரமாய்த் தொத்திக் கொண்டதைப் பார்த்த பிறகுதான் அவளது இதயம் மீண்டும் ஒழுங்காகத் துடிக்கத் தொடங்கியது.

"கீழே விழுந்து விட்டால் என்ன ஆகும்?" என்றாள் அச்சம் தீராமலே.

"மரணம்தான். உயரம் பார்த்தாயல்லவா?" என்று அவன் கூறவும் அவளுக்கு உடல் சிலிர்த்தது.

"சேசே. முதலில் இப்படிப் பாக்கு பறிப்பதைச் சட்ட விரோதமாக்க வேண்டும்" என்று படபடத்தாள்.

"பிறகு பாக்குக்கு என்ன செய்வது? நம்நாட்டில் நிறையப் பேருக்கு வெற்றிலைபாக்கு இல்லாமல் இருக்கவே முடியாதே!"

"....அப்படியானால் ஏதாவது மிஷின் வைத்துப் பறிப்பது. என்னென்னவோ கண்டுபிடிக்கிறார்கள்;

செய்கிறார்கள். இதற்கு ஒன்று கண்டுபிடித்துப் பயன்படுத்தினால் என்ன?'' என்று விடாமல் விவாதித்தாள் திவ்யா.

''அப்புறம் இவர்கள் என்ன ஆவார்கள? தலைமுறை தலைமுறையாக இதே தொழிலைச் செய்து பிழைப்பவர்கள்'' என்றவள் அவள் பேசாதிருக்கவும், ''ஆபத்தில்லாதது என்று ஒன்றும் கிடையாது, திவ்யா. புல்தடுக்கிச் சாகிறவனும் உண்டு, யானை ஏறிப் பிழைத்தவனும் உண்டு என்பார்கள். விமானத்தில் இருந்து விழுந்து உயிர் பிழைப்பவர்கள் இல்லையா? நீ சொல்கிற மாதிரி இயந்திரங்களைக் கொண்டு வந்தால் முழுமூச்சாய் எதிர்ப்பவர்கள் இவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்களிடமே இது ஆபத்து என்று எடுத்துச் சொன்னால் ஒத்துக் கொள்ளவும் மாட்டார்கள். 'சித்திரமும் கைப்பழக்கம்' என்பதுபோல சிறுவயதில் இருந்து பழகி விடுவதால் எச்சரிக்கை அவர்களது உடம்போடு பிறந்ததுபோல் ஆகிவிடுகிறது. நீ பார்த்தாயே, அவன், அடுத்த மரத்தை நன்றாக, வாகாகப் பற்றிக் கொள்ளும்வரை முதல் மரத்தை விட்டானா?'' என்று அவன் விளக்கம் கூறிக் கேட்டபோது அவளால் மறுத்துப் பேசவும் முடியவில்லை.

''நீங்கள் சொல்வது சரிதான்'' என்றாள் சிறு குரலில்.

அவளது மனம் முழுமையாகச் சமாதானம் அடையவில்லை என்பதை உணர்ந்து, அவள் தலையை லேசாக வருடிக் கொடுத்துவிட்டுக் காரை எடுத்தான் அவன். கொஞ்சம் இதமாய் இருந்தது அவளுக்கு.

இந்தியாவின் மேற்குப் பகுதியில் சூரியன் மறையத் தாமதம் ஆகும் என்பதால் பச்சைமலைப் பகுதியை இந்த விசித்திரமான குடும்பம் சென்றடைந்தபோது, மாலை நேரம் ஆகிவிட்ட போதும் வெளிச்சம் நன்றாகவே இருந்தது.



அபிராமி, முகத்தில் மலர்ச்சியோடு, குரலில் நெகிழ்ச்சியோடு அவர்களை வரவேற்றார். நடையின் தளர்ச்சி மட்டும் இல்லை என்றால் அவருக்கு ஆரோக்கியக் குறைவு என்று நம்பவே முடியாது.

வினோதினியின் ஆலோசனைப்படி, அவரை நெருங்காமல், வெளிப்படையாகத் தெரியாத அளவில், முடிந்தவரை ஒதுங்கியே நின்றாள் திவ்யா.

ஒன்று சதானந்தனை ஒண்டி, அவன்பின் நின்றாள். அல்லது சிவாவின் தேவைகளைக் கவனிக்கும் சாக்கில் அவனோடு சுற்றினாள்.

வந்தநாள் - வெள்ளியன்று இரவு. பொதுவான பேச்சுகளுடன் உணவை முடித்துவிட்டு, பயண அலுப்பு தீர விரைவாகவே படுக்கச் சென்று விட்டனர்.

ஆனால் மறுநாள் காலை உணவு ஆனதும், காரியஸ்தரோடும், அடுத்துவந்த டீ எஸ்டேட் பொறுப்பாளரோடும் கணக்கு வழக்குகளில் மூழ்கிவிட்டான், சதானந்தன்.

சிவா தனது ரோலர் ஸ்கேட்டருடன், வீட்டைச் சுற்றிலுமாக அமைக்கப்பட்டிருந்த 'ஜாகிங்' பாதையில் சுற்றத் தொடங்கி விட்டான்.

அவன் மேல் ஒரு கண் வைத்துக் கொள்ளும்படி ஒருவேலையாளை அனுப்பிவிட்டு, திவ்யாவின் பக்கம் திரும்பினார் அபிராமி.

''வாம்மா. இனி நாம் இரு பெண்களுமாக, நிம்மதியாய்ப் பேசலாம்'' என்று அவரது அறைக்கு அழைத்துச் சென்றார்.

கூடவே நடந்தபடி, "நான்... தேயிலைத் தோட்டம் பார்த்ததே இல்லை..." என்று ஒதுங்கிவிட முயன்றாள் திவ்யா.

ஆனால், அவளது கருத்தைப் புரிந்து கொள்ளாமல், "அடடா! முன்பே சொல்லியிருக்கக் கூடாதாம்மா? இப்போது உன்னை அழைத்துப் போக ஆள் இல்லையே! பரவாயில்லை. ஆனந்தனுக்கு மதியச் சாப்பாடு எடுத்துப் போக ஆள் வரும்போது அல்லது இன்று அவனே மதியம் வருவான் என்று நினைக்கிறேன். அப்போது அழைத்துப் போய்க் காட்டச் சொல்லுகிறேன்" என்று பரிவாய் அபிராமி உரைக்கவும் அவளுக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

"அப்படிக் கட்டாயம் பார்த்தாக வேண்டும் என்று இல்லை, அம்மா" என்றாள் இதமான குரலில்.

அவளைத் திரும்பிப் பார்த்து முறுவலித்து விட்டுத் தலையசைத்தார் அவர். விளையாட்டாக மிரட்டுவதுபோல விரலைத் தூக்கிக் காட்டிவிட்டு, "அம்மா இல்லை. அத்தை" என்று கூறிக் கதவைத் திறந்தார்.

தன் தலையில்தானே குட்டிக் கொள்ள வேண்டும்போல இருந்தது திவ்யாவுக்கு. மகனோடு சேர்ந்து தாயும் எச்சரிக்கும்படி ஆயிற்றே. ஆனால் இங்கே கூட அந்த நாடகம் அவசியம்தானா என்று எண்ணியபடி பெரியவரைப் பின்தொடர்ந்தாள்.

சதானந்தனுடைய ஜாடையில், சற்று வயதான ஒருவரின் ஆள் உயரப் படத்தின் கீழ் மலர்க்கொத்து வைக்கப்பட்டிருந்தது.

திவ்யாவின் பார்வையைத் தொடர்ந்தவர், "உன் ஊகம் சரிதான். ஆனந்தனுடைய அப்பா. கும்பிட்டுக் கொள்ளம்மா. எல்லாம் நல்லபடியாக நடக்கவேண்டும் என்று நான் நேற்றே



அவரிடம் வேண்டிக் கொண்டுவிட்டேன்... முன்னே மாதிரி என்னவோ செய்யப் போய் என்னவோ ஆனமாதிரி இல்லாமல் இப்போதாவது என் ஆசை நிறைவேறும்படிக் கடவுளிடம் சொல்லி ஏற்பாடு செய்யுங்கள் என்று வேண்டினேன்..." என்று முடித்தார்.

பெரியவரின் பேச்சில் தலையோ காலோ புரியாததால் திவ்யா பேசாமலே இருந்தாள்.

அபிராமியும் ஏதோ யோசனையில் இருக்கவே சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது. அதன்பின் ஏதோ முடிவுக்கு வந்தவர்போல சிவகாமி பேசத் தொடங்கினார்.

"பாரம்மா திவ்யா, உன்னை நான் நேற்றுத்தான் முதல் முதலாகப் பார்த்தேன். இன்றுதான் தனிமையில் பேச முடிந்திருக்கிறது. அதேபோல நானும் உனக்கு முழுக்கமுழுக்க அன்னியளே. இரு புதியவர்கள், நின்று நிதானித்துப் பேசிப் பழகலாம் என்றால் அதற்கு இடம் தராமல் நாளையே கிளம்பவேண்டும் என்கிறான் என் மகன். இதற்குமேல் உன்னை மிரட்டி விடக்கூடாது என்று உத்திரவு வேறு..."

விழிகள் விரிய, "நீங்கள், என்னை மிரட்டுவதா? எப்படி முடியும்?" என்று வியந்தாள் திவ்யா.

"அதை அவனிடம்தான் கேட்கவேண்டும்" என்று கைகளை அசைத்துப் பாவனையோடு சிரித்தார் பெரியவர்.

சதானந்தனைப் போலவே அடுத்தவரைக் கூடச் சேர்ந்து சிரிக்க அழைக்கும் சிரிப்பு. இவரிடம் போய் நெருங்காமல் ஒதுங்கிப் போய்விடுவது நல்லது என்றாளே இந்த வினோதினி!

திவ்யாவின் சிரிப்பை முகத்தில் கனிவுடன் நோக்கியவர், ''முகவுரை, பதவுரைக்கெல்லாம் நேரம் இல்லாதபடியால் நேரடியாகச் சொந்த விஷயம் பேசலாமா, அம்மா?'' என்றவர் அவள் யோசனையோடு தலையாட்டவும், ''நேற்று சிவாவோடு, ஆனந்தனும் நீயுமாக வந்தீர்களே. அப்போது எனக்குக் கொஞ்ச நேரம் மனதே ஆடிப்போய் விட்டதம்மா. என் மகனை, மனைவி, பிள்ளையோடு அப்படிப் பார்க்கத்தான் எனக்கு மிகவும் ஆசை...'' என்று தொடங்கினார்.

விநோதினியின் பேச்சு நினைவுவர, ''அது இப்போதைக்கு எப்படி முடியும், அம்... அத்தை?'' என்றாள் திவ்யா.

''முடியாதா...?'' என்ற தாயின் முகம் வாடியதைக் காண, அவளுக்குப் பாவமாயிருந்தது.

மகனின் குடும்ப வாழ்வு தள்ளிப்போகும் காரணத்தை விளக்குகிறவளாகி, ''அவருக்குப் பெண்களிடம் மதிப்பு இல்லை என்பதால்...'' என்று திவ்யா தொடங்கவும், சட்டென எழுந்து நின்றார் அபிராமி.

''கடவுளே! அந்த ஒரு பிழைக்காக இன்னும் எத்தனை காலம்தான் தண்டனை அனுபவிப்பது? நல்லதை எண்ணித்தானே செய்தோம்....'' என்று அவர் வேதனையோடு அரற்றவும் திவ்யா திகைத்துப் போனாள்.

யாரோ ஒரு பெண் என்றல்லவா விநோதினி சொன்னாள். இதில் இந்தத் தாயின் பிழை என்று ஒன்று எங்கே வந்தது? அதற்கு மேல் 'தண்டனை' 'செய்தோம்' என்று அவரது வார்த்தைகள் எல்லாமே அவளைக் குழப்பியடித்தன.

திவ்யாவின் முகத்தைப் பார்த்துவிட்டு, ''உனக்குப் பவித்ரா பற்றிய முழுவிவரமும் தெரியுமா?'' என்று கேட்ட



அபிராமி, அவள் இல்லையென்று தலையசைக்கவும், ''சொல்லுகிறேன். அது தெரிந்தால்தான் உனக்கு இன்றைய ஆனந்தனை நன்றாக அறிந்து கொள்ள முடியும்'' என்று தொடங்கினார்.

''அப்போது ஆனந்தனுடைய சிநேகிதர்களில் வாசுவுக்குத் திருமணமாகி, சிவா பிறந்து அவனுக்கு இரண்டு வயதான சமயம். மூன்று பேரில் பெரியவனான நிரஞ்சன் ஒரு பிசாசைக் கட்டிக் கொண்டுவந்து படாதபாடு பட்டுக் கொண்டிருந்தான். மூன்று நண்பர்களும் மிகவும் நெருக்கம். நிரஞ்சன் வேலை என்று வடக்கே போய் விட்டாலும் வாசு குடும்பத்தோடு நம் வீட்டுக்கு அடிக்கடி வருவான். முத்துத்தீவு மாளிகை அவனுக்கு மிகவும் பிடிக்கும். 'இங்கே இருக்கும்போது நானே ராஜபரம்பரை போல உணருகிறேன்' என்பான்.... பாவம்...

''அவன் வரும்போதெல்லாம் சிவா எங்களோடு வித்தியாசம் இல்லாமல் ஒட்டிக் கொள்வான். எங்களுக்கும் பேரன் பேத்தி ஆசை வந்தது. ஆனால் நிரஞ்சன் நினைவில் மிகவும் எச்சரிக்கையோடு பெண் பார்த்தோம்.

''தூரத்து உறவில், ஒரு வசதியும் இல்லாத ஒரு பெண். அவள்தான் பவித்ரா. சாதுவான பெண். பார்க்கவும் பளிச்சென்று இருப்பாள். அந்தச் சமயத்தில் தகப்பனையும் இழந்து தனியாக நின்றது. தீவுக்கே அழைத்துவந்து கூடவே வைத்திருந்தோம். பெற்ற பெண்ணாய் எல்லாம் கற்றுக் கொடுத்தேன். இரும்புப் பெட்டி திறப்பது உட்பட.

''முதலில் இவ்வளவு சீக்கிரம் திருமணம் வேண்டாம் என்ற ஆனந்தனும், நாங்கள் மிகவும் ஆசைப்படுகிறோம் என்றதும் சரியென்று விட்டான். பவித்ராவின் அழகும் தலையாட்ட வைத்திருக்கலாம்.

''அப்போது ஒரு முக்கியமான திருமணம் திருவனந்தபுரத்தில். திருமணம் ஆகுமுன் பவித்ராவை இதுபோல இடங்களுக்கு அழைத்துச் செல்வது சரியல்ல என்று விட்டுவிட்டுப் போனோம். அவளும் கூச்சப்படுகிற டைப்... அப்படித்தான் நினைத்தோம். அப்புறம் திடீரென்று உடம்பு சரியில்லாமல் போனவர் ஒருவரைப் பார்க்கப் போக வேண்டியிருந்தது.

''திரும்பி வந்து பார்த்தால் பவித்ராவையும் காணோம்; இரும்புப் பெட்டியில் இருந்த மூன்று இலட்சம் ரூபாய்ப் பணத்தையும் காணோம்.

''பவித்ராவே திருடியிருப்பாள் என்று எங்களில் யாராலும் நம்பமுடியவில்லை. கொள்ளைக்காரர்கள் வேலையாக இருக்குமோ என்று கூட யோசித்துப் பார்த்தோம். ஆனால் முத்துத் தீவு மாளிகையின் கதவுகள் பார்த்திருக்கிறாயல்லவா? உடைத்து உள்ளே வருவது முடியாத காரியம். கதவு உடைக்கப்படவும் இல்லை. அத்தோடு அந்தப் பகுதியில் திருட்டு பயமும் கிடையாது. அத்தோடு, வேலையாட்கள் அவர்கள் பகுதியில் ஒதுங்கியிருந்தாலும், ஒரு குரல் கொடுத்தால் வந்து விடுவார்களே! அத்தோடு அந்த வீட்டுப் பாதுகாப்பு தெரியுமல்லவா? வீட்டைச் சுற்றிலும் இரண்டு ஆள் உயரத்துக்கு இரும்பு கிராதி. முன்னும் பின்னும் உள்ள கதவுகள் தவிர வேறு எங்கும் யாராவது தொட்டால்கூட மணி அடித்து, அத்தனை வேலையாட்களையும் கூட்டிவிடும். அதனால் அவளாகவே கதவைத் திறந்து அவளாகவேதான் சென்றிருக்க வேண்டும். வேறு யாரும் வந்து அந்த இரும்புக் கிராதி மேல் ஏறி, உள்ளே வந்து, அவளை மிரட்டி அழைத்துச் சென்றிருக்க முடியாது.



''வேலையாட்களை விசாரித்தோம். மதியம் சாப்பிட்டதுமே, உங்கள் வேலையைப் பாருங்கள் என்று அனுப்பி விட்டாள். அப்புறம் தெரியாது என்றார்கள்.

''ஆனால் பாலனுடைய தாய், தற்செயலாகப் பார்த்தபோது, தூரத்தில் ஒரு படகில், ஒரு தொப்பி போட்ட ஆளுடன் ஊதா கலர் சேலை கட்டின ஒரு பெண் போனது தெரிந்தது என்றாள்.

''அன்று பவித்ரா கட்டியிருந்த சேலை நீலம்தான். போலீசுக்குப் போக யாருக்குமே விருப்பம் இல்லை. குடும்ப விஷயம் சந்திக்கு வரும். போகிறாள் என்று விட்டு விட்டோம்.

''ஆனால் அன்றிலிருந்து திருமணம் என்ற பேச்சையே இவனிடம் எடுக்க முடியவில்லை...''

இனி ஒரு பெண்ணை நம்புகிற முட்டாள்தனம் என்றதன் பின்னே இப்படி ஒரு கதையா? யார் அந்த தொப்பி போட்ட ஆள்? யாரா்யிருந்தாலும், சதானந்தனை விடுத்து இன்னொருவன் உயர்வென்று அவளால் எப்படிச் சொல்ல முடிந்தது? அதைத்தான் திவ்யாவால் நம்பவே முடியவில்லை.

''எப்போதாவது துணிந்து கேட்டாலும், நல்ல பெண்கள் எல்லோரும் உங்கள் தலைமுறையோடு முடிந்துவிட்ட விஷயம். இதனால் இந்தப் பேச்சை இனி எடுக்காதீர்கள் என்று விடுவான். என்றாலும் அப்படி இல்லையென்று அடித்துப் பேச முடியாமல் விட்டுவிடுவேன். கண்காண நல்லபடியாய் யாரும் இல்லையே!'' என்றார் அபிராமி நிராசையுடன்.

''ஏனம்மா... சாரி, ஏன் அத்தை அப்படிச் சொல்லுகிறீர்கள்? விதி கொண்டு சென்றுவிட்ட போதும், சிவாவுடைய அம்மா இந்தத் தலைமுறைதானே? நீங்கள் அதை அவரிடம் சொல்லலாமே!'' என்றாள் திவ்யா

''வாசுவுடைய மனைவி நளினி மற்றவர்களிடம் நன்றாக நடந்து கொண்டாலும் மாமியாரை ஆட்டி வைத்து விட்டாள், திவ்யா. அவளை உதாரணமாகச் சொன்னால் இன்னமும் முருக்கமரம் ஏறிவிடுவான் ஆனந்தன். அதனால்தான் கண்ணு, உன்னிடம் ஒன்று கேட்கலாம் என்று நினைத்தேன்.''

''என்ன அத்தை?''

''உங்கள் திருமணம் சிவாவுக்காக நடந்தது என்றாலும் சட்டபூர்வமானது. இது அப்படியே நிலைக்கும்படி செய்துவிடேன்.''

# 21

சதானந்தனுடைய தாயார் ஒன்று கேட்க நினைத்தேன் என்ற போது, ஏதோ முக்கியமான விஷயம் என்கிற அளவு திவ்யா ஊகிக்கத் தான் செய்தாள்.

மகனைப் பற்றி ஏதோ கேட்கப் போகிறார், ஆனால் அவளுக்கே சரிவரத் தெரியாததைப் பற்றி அவருக்குத் திருப்தி ஏற்படும்படி என்ன சொல்ல முடியும் என்று யோசித்தபடி தான் 'என்ன'வென்று கேட்டாள் திவ்யா.

ஆனால் திருமணத்தையே நிலைக்கச் செய்து விடு என்றதும் பிரமித்துப் போனாள்.

முதல்முறையாகப் பார்த்து இருபத்து நாலு மணி நேரம் கூட ஆகவில்லை. அவளிடம் போய் இப்படி ஒரு வேண்டுகோளா?

முதலில் திகைத்த திவ்யாவுக்கு, உடனேயே சிரிப்பு வந்தது. ஆனால் வாய் விட்டுச் சிரிக்கவும் முடியவில்லை. தொண்டை அடைத்து உள்ளே வலித்தது.



திருமணத்தை நிலைக்கும்படிச் செய்வது அவள் கையிலா இருக்கிறது? சிவாவின் வழக்கு முடிவடைந்ததும் மணவிலக்கு பெறுவதில் கண்டிப்பாக இருக்கும் அவருடைய மகனல்லவா அதைச் செய்ய வேண்டும் என்று ஏக்கத்துடன் எண்ணுகையிலே அவள் மனம் திகைத்தது.

அப்படி அவன் திருமணத்தை நிலைக்கச் செய்தாலும் அதை ஏற்றுக் கொண்டு விட அவள் தயார் தானா? ''விவாகரத்து எளிதில் பெறுவேன்'' என்று அவன் சொன்ன நினைவில் அவள் முகம் வாடியது.

கூடவே அந்த வினோதினி!

''என்னம்மா?''

கனிவான குரலில் அவளுக்குக் கண்ணைக் கரித்தது. அதிகம் பேச முடியாமல், ''வினோதினி'' என்றாள் தொண்டை அடைக்க.

''வினோதினியா? எப்போதும் நம் வீட்டைச் சுற்றிச் சுற்றி வருவாள். அவள் தகப்பனார் நல்ல மாதிரி. அந்தப் பக்கத்து மனிதர். அதனால் எறாத் தொழிலில் பங்குதாரராகச் சேர்த்தோம். நாலில் ஒரு பங்கு. ஆனால் அவருடைய மனைவி, மகளிடம் எனக்கு அவ்வளவு ஈடுபாடு கிடையாது. தன்னைத் தவிர வேறு எண்ணத் தெரியாதவர்கள். ஆனால் வினோதினிக்கு என்ன?''

இந்த மாதிரிப் பேசுகிறவரிடம் வினோதினிதான் உங்கள் எதிர்கால மருமகள் என்று எப்படிச் சொல்லுவது?

திவ்யா தடுமாறிக் கொண்டு இருக்கும் போதே வாயிலில் ஜீப் சத்தம் கேட்டது. சதானந்தனின் குரலும் கேட்டது.

வியப்புடன், 'அட, பேச்சிலேயே நெடுநேரம் கழிந்து விட்டது போல் இருக்கிறதே! பேச்சு சுவாரசியத்தில் நேரம்

போனதே தெரியவில்லை'' என்று கடிகாரத்தைப் பார்த்தார் அபிராமி. ''வழக்கத்தை விடச் சீக்கிரமாகத்தான் வந்திருக்கிறான். உன்னை என்ன மிரட்டுகிறேனோ என்று பயந்து ஓடிவந்து விட்டான் போல'' என்று கூறிக் கொண்டு இருக்கும்போதே சதானந்தன் உள்ளே வந்து விட்டான்.

தாயையும், அவளையும் பார்த்த பார்வையில் கூர்மை இருந்தது. ''என்ன, மகளைப் பற்றிய விசாரணை எல்லாம் முடிந்து விட்டதா? சாப்பிட்டதும் என்னோடு வந்தாயானால் தேயிலை பறிப்பது, ஃபாக்டரியில் பதப்படுத்துவது எல்லாம் பார்த்து விட்டு வரலாம்'' என்று தாயிடம் தொடங்கி, திவ்யாவிடம் முடித்தான் சதானந்தன்.

அதே திட்டமாக, உணவு முடிந்து தாயுடன் சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்து விட்டு, சிவாவையும், திவ்யாவையும் அழைத்துக் கொண்டு தான் சென்றான்.

சிவா அங்கும் இங்கும் ஓட, சீரான பாதைகளின் வழியே, வரிசையாகப் பெண்கள் தேயிலை பறிப்பதைக் காட்டியபடி நடந்தான் சதானந்தன்.

ஒரு பெண்ணோடு, தங்கள் முதலாளி நடப்பது பழக்கம் இல்லாதது போல, குறுகுறுவென்ற பார்வைகள் அவர்களை மொய்த்தன.

இன்னொன்றும் தோன்றிவிட, ''நம் விஷயம் இங்கே தெரியுமோ?'' என்று விசாரித்தாள்.

''சொல்லவில்லை. அம்மாவுக்கு மட்டும் தான் தெரியும்'' என்றவனின் கீழ்க் கண்பார்வை தன்னை அளவிடுவதைத் திவ்யா உணர்ந்தாள்.

என்ன என்று யோசித்துக் கொண்டு இருக்கும் போதே அவன் சொன்னான். ''அம்மாவுக்கு நான் திருமணம் செய்து



பேரன், பேத்திகளைப் பெற்றுத் தர வேண்டும் என்று மிகவும் ஆசை, திவ்யா. அந்த வேகத்தில் அவர்கள் ஏதாவது சொன்னால் அதைப் பொருட்படுத்த வேண்டாம்''

திவ்யாவினுள் ஏதோ வாடிப் போயிற்று.

தாயார் என்ன சொல்லக் கூடும் என்று யோசித்து, அதில் நம்பிக்கை வைத்து ஏதாவது கற்பனையை வளர்த்துக் கொள்ள வேண்டாம் என்று எச்சரிக்கிறான்.

ஆனால் அவன் சொல்லாமலே அவளுக்குத் தெரியாதா? எதுவும் பேசப் பிடிக்காமல் வெறுமனே தலையாட்டி விட்டு மேலே சற்று வேகமாக நடக்கத் தொடங்கினாள் அவள்.

மறுநாள் கிளம்பும் போது, பூசையறையில் குங்குமம் எடுத்துக் கொள்ளுமாறு கூறி திவ்யாவை அழைத்துச் சென்றார் அபிராமி.

குங்குமச் சிமிழ், வெள்ளித்தட்டில் ஓர் அழகிய ஜரிகைச் சேலையோடு உட்கார்ந்திருந்தது.

உதட்டைக் கடித்தவள், பேசாமல் குனிந்து, ஒற்றை விரலைக் குங்குமத்தில் தோய்த்து நெற்றியில் தீற்றிக் கொண்டு நிமிரவும், ''எல்லாம் உனக்குத் தானம்மா.. எடுத்துக் கொள்'' என்றார் தாயார்.

அவள் தயங்கவும், ''பேசாமல் எடுத்துக் கொண்டு விடு, திவ்யா. இல்லாவிட்டால் அம்மாவின் மனம் தாங்காது..'' என்றது சதானந்தனின் கேலிக்குரல்.

அந்தப் பூசையறைச் சூழ்நிலைக்கு அவன் குரல் ஒட்டாமல் ஒலித்தது.

அங்கே நின்று வாதிட மனமற்று, பிறகு பிரிந்து செல்லும் போது, வைத்து விட்டுப் போய் விட வேண்டும் என்ற உறுதியோடு சேலையை எடுத்துக் கொண்டாள் வித்யா.

சதானந்தன் கூடவே இருந்த போதும், அவன் சுற்றிக் கொண்டு போய் காரில் ஏறிய நேரத்தைப் பயன்படுத்தி, ''நான் சொன்னதை மறந்து விடாதே'' என்று முணுமுணுத்து வழியனுப்பி வைத்தார் அபிராமி.

ஒருநாள் பழக்கத்திலேயே ஆண்டாண்டு காலம் அன்போடு பழகிவிட்ட உணர்வு. ஆனால் இந்த அன்பை அனுபவிக்க அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லையே!

திரும்புகையில் சிவா அவர்களுடன் வரவில்லை.

சிவா தன்னோடு இருக்கட்டும். அவனைப் பார்த்து ஏதேதோ ஏக்கங்களைக் கொஞ்சம் தீர்த்துக் கொள்ளப் பார்க்கிறேன் என்று அவனைத் தன்னோடு நிறுத்திக் கொண்டு விட்டார் அபிராமி.

சதானந்தன் பையனைப் பார்த்தான்.

தன் சக்கர பூட்சில் சுற்றுகிற ஆர்வத்தோடு, எஸ்டேட் மானேஜரின் பேரன் ஒரு பையன், ஒரு சிநேகிதனும் கிடைக்கவே, சிவாவும் தங்கி விட்டு வருவதாகவே சொன்னான்.

சிறுவனின் முடிவுகளைச் சதானந்தன் மறுப்பது இல்லை என்றாலும், ஒரு சிறு தயக்கத்தின் பின்னரே இதற்குச் சம்மதித்தான்.

ஆனால், ''நானும் வேண்டுமானால் சிவாவுடன் தங்கி விடவா, அவனைக் கவனித்துக் கொள்வது தானே என் வேலை?'' என்று திவ்யா கேட்ட போது அடியோடு மறுத்து விட்டான்.



''என் பெயரளவு மனைவி என்பது தான் உன் முக்கியமான வேலை. அதற்குள் உன்னை இங்கே விட்டு விட்டு நான் மட்டும் போனேன் என்றால் சிவாவுடைய உறவினர்கள் மோப்பம் பிடித்து உண்மையை ஊகித்து விடக்கூடும்'' என்று காரணம் கூறி, அவளை அழைத்துக் கொண்டுதான் கிளம்பினான்.

திரும்பி வருகையில் காரில் அமைதி நிலவியது.

அதை விடப் பெரிய விஷயங்கள் மனதை அடைத்துக் கொண்டு இருந்ததாலோ என்னவோ, நாலாபுறமும் கொட்டிக் கிடந்த இயற்கை அழகில் திவ்யாவின் மனம் செல்லவில்லை.

உள்ளூர ஒரே கேள்வி உறுத்திக் கொண்டு இருந்தது. அந்த பவித்ராவிடம் சதானந்தன் எந்த அளவுக்குத் தன்னை இழந்திருந்தான்?

மலையிறங்கி, சமவெளியை அடையும் வரை, சதானந்தனும் பேசவில்லை.

தாயாரைப் பார்த்ததும் பவித்ராவின் நினைவு வந்து விட்டதோ என்று நினைத்தாள் திவ்யா.

கையோடு கொண்டு வந்திருந்த உணவை உண்டதாகப் பேர் பண்ணி விட்டு மீண்டும் அவர்களது பயணம் தொடர்ந்தது.

ஒரு முடிவுக்கு வந்தவன் போல அமைதியைக் கலைத்தான் சதானந்தன். ''முற்றிலும் புதியவர்கள், ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளவே நேரம் பிடிக்கும் என்று எண்ணி உன்னை அம்மாவிடம் விட்டுப் போனது அவ்வளவு சரியில்லை என்று இப்போது தோன்றுகிறது. சின்னச்சின்னப் பேச்சுகளுக் கெல்லாம் அவகாசம் இல்லை என்று நேரடியாகச் சொந்த விஷயத்துக்கு வந்து விட்டார்களாக்கும்?'' குரலில் சிறு கேலியுடன்.

சிறு மவுனத்தின் பின் அவள், "முகவுரை பதவுரைக்கு நேரம் இல்லை என்றார்கள்" என்ற போது தன்னை மீறி முறுவல் வந்தது. இருவருக்குமே தான்.

இன்னும் சற்று தூரம் பேசாமல் ஓட்டியவன், "என்ன சொன்னார்கள்?" என்று விசாரித்தான்.

அவள் பேசாதிருக்கவும், "பார் திவ்யா, என்னால் எளிதாகவே ஊகிக்க முடியும்.. ஊகித்துச் சொல்லட்டுமா?" என்று அவன் சொன்னதும் பதறிப் போனாள் திவ்யா.

அவனுடைய தாயார் கடைசியாகக் கேட்டதையும் அவன் ஊகித்து விட்டால்?

அத்தோடு அவனுக்கு இன்னொன்றும் தெரிய வேண்டியிருந்ததே!

"பவித்ரா!" என்றாள் சுருக்கமாக.

"ஓ!"

"ஸ்டியரிங் வீலி'ல் அவனது கை அழுந்துவதை உள்ளூர ஒரு வேதனையுடன் திவ்யா கண்டாள். இன்னமும் இவ்வளவு பாதிப்பு இருக்கிறதே!

"ம்ம்... அடி முதல் எதையும் விடவில்லை- என்று சொல்லு?"

"இல்லை என்று நினைக்கிறேன்.. ஆனால்.."

"என்ன ஆனால்..?"

"வந்து.. பவித்ரா பார்ப்பதற்கு எப்படி இருப்பாள்?'

"கட்டாயம் தெரிந்தாக வேண்டுமா?"

'ஆமாம்.. ஆமாம்' என்று மனம் அலறுவதே



அவனுக்குக் கேட்டாலும் கேட்டு விடும் என்று எண்ணினாள் திவ்யா.

முடிந்த அளவு குரலைச் சமனப்படுத்திக் கொண்டு "அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்.." என்றாள் கேலி போல.

"ம்கூம்! அப்படியானால் நானும் சொல்லி விடுகிறேனே.. ம்.. அவள் அழகாய்த்தான் இருந்தாள். உன்னை மாதிரிச் சுண்டி இழுக்கிற ரகம் அல்ல. அமைதியாய், சாதுவாய் இருந்தாள். இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது போலத் தோற்றம் என்பது பிறகு தெரிந்த விஷயம். போதுமா?" அவளைப் போலவே கேலிக் குரலில் தொடங்கிய போதும் முடிக்கும் போது அவனது குரல் இறுகியிருந்தது.

அப்படியானால் இன்னமும் அவளது இழப்பு அவனைப் பாதிக்கிறது என்று தானே அர்த்தம்? ஆனால் அப்படி ஒரு பாதிப்பை வைத்துக் கொண்டு வினோதினியை எப்படி மணக்க முன்வருகிறான்?

எப்படியும் திருமணம் என்று ஒன்றைச் செய்துதானே ஆக வேண்டும்? பெருகிக் கொண்டே போகும் சொத்துக்களுக்கு வாரிசை ஏற்படுத்தித்தானே ஆக வேண்டும். இன்னும் யாரோ அறியாதவர்களிடம் ஏமாறுவதை விட சிறுவயதிலிருந்து பழகிய சிநேகிதி வினோதினி மேல் என்று எண்ணியிருப்பானோ?

யோசிக்க யோசிக்க எல்லாம் குழப்பமாக இருந்தது திவ்யாவுக்கு. வேதனையான குழப்பம். அவன் பவித்ரா நினைவில் இருப்பதும் பிடிக்கவில்லை; பவித்ராவை நினைத்துக் கொண்டோ அல்லது மறந்தோ வினோதினியை மணப்பதும் பிடிக்கவில்லை.

பின்னே?

ஊகூம். முன்னே இருக்கும் விஷயத்தை விடுத்துப் பின்னே என்று யோசிப்பது முட்டாள்த்தனம்.

நேர்ப்பார்வையாய்ப் பார்த்தபடி காரை ஓட்டியவனைப் பார்வையால் ஆராய்ந்தாள்.

கவனத்துடன் உணர்ச்சி துடைத்த முகத்திலும் ஓர் இறுக்கத்தை அவளால் உணர முடிந்தது.

''அவள்... அந்த இழப்பு இன்னமும் வேதனையாக இருக்கிறதா?''

''இழப்பு என்றால் எதைச் சொல்கிறாய்? பணத்தையா அவளையா? இரண்டையும் விட நல்லவள் என்று நம்பி ஏமாந்ததுதான் பெரிய பாதிப்பு. அதுவும் அவளை நம்பியது யாரெல்லாம்? பல தொழில்களைத் தொடங்கி வெற்றிகரமாக நடத்தி வந்த என் தந்தை. வழி இல்லை என்று வந்தவருக்கெல்லாம் ஏதாவது செய்து வளர்த்து விட்ட என் தாயார்! உடன் பயின்றவர்களும் நண்பர்களும் கெட்டிக்காரன் என்று ஆலோசனை கேட்கத் தேடி வந்த நான்! நானும் இந்த தேங்காய் நார் கார்ப்பெட் தொழிலைத் தொடங்கி வெளிநாட்டு ஆர்டர்கள் பெருகிக் கொண்டு இருந்த சமயம். எங்கள் மூவருக்கும் முதுகில் மண் கட்டி விட்டு, அறியாத பெண், சாது என்று எண்ணியிருந்த ஒருத்தி மறைந்து விட்டிருக்கிறாள் என்றால் எவ்வளவு பெரிய அவமானம்! அதுதான் இன்னமும் உறுத்துகிறது!''

எங்கள் வீட்டு விஷயம். நீ என்ன கேட்பது என்று இல்லாமல் அவன் பதில் சொன்னது கொஞ்சம் ஆச்சரியம் தான். ஆனால் அவளுக்கு இன்னும் ஒன்று தெரிய வேண்டியிருந்தது. கேட்கலாமா கூடாதா என்று வெகு நேரம் யோசித்தாள்.



இன்றைய நிலைமையில் அந்தக் கேள்வியின் பதில் என்னவாக இருந்தாலும் அது அர்த்தமற்றதுதான். ஆனாலும் அவளுக்குத் தெரிய வேண்டியிருந்தது. ரொம்பவும் கட்டாயமாகவே தெரிய வேண்டியிருந்தது. எனவே கேட்டாள். ''நீங்கள் பவித்ராவைக் காதலித்தீர்களா?''

பாதையிலிருந்து பார்வையைத் திருப்பி அவளை நேராகப் பார்த்தான் அவன்.

என்னவோ மூச்சு விடக் கூட சிரமமாயிற்று அவளுக்கு.

''அம்மா என்ன சொன்னார்கள்?''

''அவர்கள் மிகவும் ஆசைப்பட்டதால் நீங்கள் ஒத்துக் கொண்டதாகச் சொன்னார்கள். கூடவே பவித்ராவின் அழகும் தலையாட்ட வைத்திருக்கும் என்றார்கள்.. ஆனால்..''

காரை ஓரமாகச் செலுத்தி நிறுத்தி விட்டு அவள் புறம் திரும்பினான் சதானந்தன்.

இமைகள் விரிய அவன் முகத்தில் பதிந்திருந்த பார்வையை நேராக நோக்கினாள். திரும்பவும் மூச்சடைத்தது அவளுக்கு.

''இந்தக் கேள்வியின் பதில் உனக்கு நிச்சயம் தெரிந்தாக வேண்டுமா?''

''ஆ... ஆமாம்''

''ஏன்?''

''தெ.. தெரியாது''

''நாளை நான் வெளியூர் போக வேண்டியிருக்கிறது. போய் விட்டு வந்ததும் இந்தக் கேள்வியின் பதிலை உனக்குச் சொல்லுகிறேன். அதுவரை பொறுத்திரு''

மீண்டும் திரும்பிக் காரை ஓட்டத் தொடங்கினான் சதானந்தன்.

மீதிப் பயணம் மவுனத்தில் கழிந்தது.

## 22

மறுநாள் அதிகாலையிலேயே சதானந்தன் கிளம்பிச் சென்று விட தனிமைத் துன்பம் என்றால் என்னவென்று முழு அளவில் உணர்ந்தாள் திவ்யா.

எப்போதுமே சதானந்தன் அதிகமாக வீட்டிலேயே தங்கியிருந்தான் என்று சொல்ல முடியாது. வந்த புதிதில் சில தினங்கள் தவிர, காலையில் செல்பவன் மாலையில் தான் திரும்புவான். அப்புறமும் அலுவல் அறைக்குள் சென்றான் என்றால் அப்புறம் யாரும் பார்க்க முடியாதுதான்.

ஆனாலும் அவன் ஊரில் இருக்கிறான். மாலையானால் வருவான் என்பதே போதுமானதாய் இருந்தது போலும்.

இப்போது அது இல்லை எனவும் என்னவோ ஒன்றுமே இல்லாதது போல ஆயிற்று. அத்தோடு தனிமை விரும்பி என்றாலும் ஓரளவு நேரம் கூடக் கழித்த சிவாவும் இல்லாதது வேறு அவளுக்கு பைத்தியம் பிடித்து விடும் போல இருந்தது.

வந்த புதிதில் அத்தனை மனக் கலக்கங்களையும் மறக்கடித்த இயற்கை எழில் இப்போது சக்தியிழந்து போயிற்று. சும்மா சும்மா என்ன கடல் என்று எரிச்சல் வந்தது.

சதானந்தனின் வீட்டில் உணவு எப்போதுமே நன்றாயிருக்கும். அன்று மரத்தூள் மாதிரி விழுங்க முடியாது போயிற்று.



உணவு அப்படியே இருந்ததைக் கண்டு, ''பாலு'' என்று ஒரு தம்ளரில் பால் கொணர்ந்து வைத்தாள் சமையல்காரி.

வேண்டாம் என்பது போல் தலையசைத்து விட்டுச் சென்றவள், ஒருவேளை முன்தினம் நெடுநேரம் காரில் வந்தது உடம்பை ஏதும் செய்கிறதோ என்று எண்ணிப் படுக்கையில் படுத்துப் பார்த்தாள். அதுவும் பிடிக்காமல் எழுந்தாள். வெளியே கத்திச் சென்ற ஏதோ கடல் பறவையின் ஒலி நாராசமாய் விழுந்தது.

என்ன பைத்தியக்காரத்தனம்! ஒருநாள் தனியே இருக்க முடியாமல் அப்படி என்ன வந்து விட்டது எனக்கு என்று தன்னையே சாடிக் கொண்டு இருந்த போது பெரியம்மா அவ்வப்போது பாடும் பாடல் ஒன்று நினைவு வந்தது.

''பாலும் கசந்ததடி சகியே! படுக்கை நொந்ததடி. கோலக்கிளி மொழியும் செவியில் குத்தலெடுத்ததடி'' என்று குமாரி கமலா சபாவில் ஆடிய போது, தன் சின்ன வயதில் பார்த்து ரசித்த பாட்டு என்று அவ்வப்போது திலகம் முனகுவது உண்டு.

காதல் கொண்ட பெண்ணைப் பற்றிய பாடல் அது. ''சுத்த பொய்'' என்பாள் திவ்யா. ''மனோரஞ்சனை மணக்கப் போவது எனக்கு மகிழ்ச்சியாய் இருக்கிறது. அப்படியானால் அவர் மேல் எனக்குக் காதல் தானே. ஆனால் எனக்குச் சாப்பாடு, தூக்கம், பறவைகள் ஒலி எல்லாமே ரொம்பப் பிடிக்கிறதே. இந்தப் பாட்டே தப்பு பெரியம்மா'' என்று விதண்டா வாதம் செய்வாள்.

ஒருவேளை அவள் மனோரஞ்சன் மேல் காதல் கொண்டிருக்கவில்லையோ? இப்போதுதான்...'

சற்று நேரம் அப்படியே நின்று விட்டாள் திவ்யா.

இந்த சதானந்தனைப் பாராததால் எதுவுமே பிடிக்கவில்லை என்றால், அவளுக்குச் சதானந்தன் மேல் காதலா?

எப்படி முடியும்?

அவளது திருமணத்தை நிறுத்தி, பெற்றோராய் வளர்த்தவர், மற்றவர்களிடையே மதிப்பிழக்க வைத்து, எதிர்காலத்தையே இருட்டடித்தவன் மேல் வெறுப்பல்லவா உண்டாகி இருக்க வேண்டும்? அவனைக் காணப் பிடிக்காமல், அவன் குரலைக் கேட்கப் பிடிக்காமல் அல்லவோ இருந்திருக்க வேண்டும்.

ஆனால்...

அவனது பாராட்டில் குளிர்ந்து, அண்மையில் சிலிர்த்து, அவன் தொட்டதும் துவண்டு.. கடவுளே! அவள் இதுவரை கண்டு கொள்ளவே இல்லையே!

அதுமட்டுமில்லையே! முதலில் வினோதினி அவனை அணைத்து வரவேற்ற போது என்னமாய் எரிந்தாள்! இன்னமும் வினோதினி அன்பாகப் பழகிய போதும் அவளோடு ஒட்டி உறவாட மனம் வரவில்லை தானே. பொறாமைதானே காரணம். பவித்ராவை நினைத்துக் கொண்டு இருக்கிறானோ என்று வேதனைப்பட்டதும் அதனால் தான் இருக்க வேண்டும்!

அவனை முதல் முதல் பார்த்தபோதே அவனது தப்பான அபிப்பிராயத்தில் மனம் நொந்தாளே! அப்போதே அவள் தன்னை இழக்கத் தொடங்கி விட்டாளா?

எல்லாவற்றுக்கும் மேலாக சதானந்தனின் சிரிப்பு! ஒவ்வொரு தரம் அவன் வாய்விட்டுச் சிரிக்கும் போதும், தன்னை மறந்து நின்றதை நினைக்கையில் வெட்கமாகக் கூட இருந்தது.



அவனைப் பழிவாங்குவதற்காக மணக்கச் சம்மதிப்பதாக நினைத்தது கூடத் தவறுதான். உள்ளூர ஆசை கொண்ட மனம் இப்படி ஒரு சாக்கை உருவாக்கி அதைப் பற்றிக் கொள்ளுமாறு அவளைத் தூண்டியிருக்கிறது.

தோட்டத்துப் பூக்களை ஒவ்வொன்றாகப் பார்த்து மகிழ்வது போல, சதானந்தனோடான இனிய நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் அசை போடலானாள் திவ்யா.

நேரம் இனிமையாகக் கழிந்தது. இதே நினைவாக அமர்ந்திருந்தவளுக்கு, அவளது பெயர் இருமுறை அழைக்கப்பட்டும் காதிலேயே விழவில்லை.

மீண்டும் அழைத்து, தோளைப் பற்றி உலுக்கவும் தான் சுய உணர்வு பெற்றாள்.

''அப்படி என்ன தீவிர யோசனை?'' கூப்பிடக் கூப்பிட அப்படியே உட்கார்ந்திருந்தாயே!'' என்று வினோதினி விசாரிக்கவும்-அவளுக்கு வெட்கத்தில் முகம் சிவந்தது.

அப்படியா காது கூடக் கேளாமல் போயிருக்கும்?

திவ்யா வெட்கத்துடன் முறுவலிக்கவும், ''என்ன மனோரஞ்சனிடமிருந்து கடிதம் வந்ததா?'' என்று கேலியாகச் சிரித்தாள் வினோதினி.

தூக்கி வாரிப் போட, பூலோகத்துக்கு வந்தாள் திவ்யா.

தன்னைப் பற்றிய கண்டு பிடிப்பிலேயே அகமகிழ்ந்து போனது எவ்வளவு பெரிய மடத்தனம்? காதல் என்பது ஒருவர் மட்டும் சம்பந்தப்பட்ட விஷயமா? அடுத்தவர் மனமும் இணைவதல்லவா காதல்!

பவித்ராவைப் பற்றிய கேள்விக்கே அவன் வந்து பதில் சொல்வதாகக் கூறிப் போய் விட்டான். இந்த வினோதினி

வேறு சதானந்தனோடு வாழப் போகும் தன் எதிர்காலம் பற்றி ஆயிரம் விதமாய்க் கூறி விட்டாள். ஆமாம். பல தடவை சொல்லியிருக்கிறாளே! ஏதோ உறைத்தது.

துரும்பையும் தூணாய்ப் பற்றியது திவ்யாவின் மனம். அவள் தானே சொன்னாள். எல்லாம் வினோதினியின் வாய் மொழிதானே? வரும் போதும் போகும் போதும் கூடத் தோளை அணைப்பதும், தொட்டுப் பழகுவதும் அவளேதானே. அவனாக இந்த மாதிரி எதைச் செய்தும் திவ்யா பார்த்ததில்லையே.

வினோதினி சொன்னதெல்லாம் அவளது ஆசைக் கற்பனையாகவும் இருக்கலாம்.

திவ்யாவிடமாவது கையைப்பற்றியிருக்கிறான்; விரல்களில் முத்தமிட்டிருக்கிறான். இந்த அளவு கூட வினோதினியிடம் அவன் செய்து திவ்யா பார்த்ததில்லையே! ஆனால், துரும்பையும் பற்றிய மனது திருப்தி அடையவும் மறுத்தது. சதானந்தன் திவ்யாவின் விரல்களில் முத்தமிட்ட போது கூடத்தான் வேறு யாரும் பார்த்ததில்லை. இதே கதை வினோதினியிடமும் நடந்திருக்கலாம் அல்லவா!

இந்த சதானந்தன். என்னதான் எண்ணிக் கொண்டு இருக்கிறான்? அவன் வந்ததும் விளக்கமாகக் கேட்டு விட வேண்டும்.

அவள் முகத்தையே பார்த்தபடி வினோதினி மீண்டும் கேட்டாள். ''என்ன, திரும்பவும் தூக்கமா? மனோரஞ்சனிடமிருந்து தகவல் ஏதும் வந்ததா என்று கேட்டேனே?''

''இல்லை'' என்று தலையாட்டியவள் திரும்பவும் திகைத்தாள்.



''மனோரஞ்சன் பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்?''

வினோதினி கிண்கிணியாய்ச் சிரித்தாள். ''எப்படித் தெரியும்.. அல்லது யார் சொல்லியிருப்பார் என்று நீதான் கண்டுபிடியேன்'' என்று விளையாட்டாக அவள் கூறவும் திவ்யாவின் மனம் சோர்ந்தது.

இதைக்கூட வினோதினியிடம் சொன்னான் என்றால் வினோதினி, சதானந்தனின் மனதிற்கு உகந்தவளே தானோ?

திவ்யாவின் மனம் வாடும் போதே, ''சது எங்கே? வேலை இடங்கள் எங்கேயும் வந்தது போலத் தெரியவில்லையே?'' என்று கேட்டுத் தொய்ந்த மனதை நிமிர்த்தியும் வைத்தாள் வினோதினி.

எல்லா.. வற்றையும் வினோதினியிடம் சதானந்தன் சொல்லி விடவில்லையாம். முன்போலவே துரும்பையும் பற்றுகிற வேலைதான். ஆனாலும் துரும்புதானே என்று விடவும் முடியவில்லை.

சற்றே நிமிர்ந்து, ''வெளியூர் போயிருக்கிறார்''

''எந்த ஊர்?''

''அது தெரியாது..''

''எப்போது வருவார்?''

''அதுவும் தெரியாதே..'' என்று கைவிரித்தாள் திவ்யா.

அவள் முகத்தை ஒரு பார்வை பார்த்து விட்டு, ''எங்கள் வீட்டுக்குத் தகவல் அனுப்பியிருப்பார். நான் காலையிலேயே 'போட்'டை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டதால் தகவலைப் பெற முடியவில்லை. மற்றபடி என்னிடம் சொல்லாமல் சது எதையும் செய்ய மாட்டாரே'' என்றாள் வினோதினி.

அவள் கிளம்பிச் சென்ற பிறகு சற்று நேரம் சோர்வுடன் அமர்ந்திருந்தாள் திவ்யா.

வினோதினி மாதிரி மோட்டார்ப் படகு ஓட்டத் தெரிந்தாலும் ஒரு படகை எடுத்துக் கொண்டு கொஞ்ச நேரம் சுற்றி வரலாம். சுற்றுத் தருமாறு கேட்ட போதும் ஏனோ சதானந்தனுக்கு அதில் ஆர்வம் இல்லை. அவள் அங்கிருந்து வெளியே சென்று விடாமல் சிறை வைத்த மாதிரி.. சிறை தானா? இருக்குமா?

சேச்சே.. அவளது மனம் கவர்ந்த நாயகனைப் பற்றிக் குறைவாக ஒன்றுமே நினைக்கக் கூடாது.

ஆயினும் வினோதினியையும் பவித்ராவையும், நினைக்கையில் திவ்யாவின் மனம் சோர்ந்து தான் போயிற்று.

ஆனால் ரத்தினமாய் உள்ளிருந்து ஒளிர்ந்த காதலை எண்ணிப் பூரிப்பாகவும் உணர்ந்தாள் அவள்.

இருதினங்கள் இப்படியே கழிந்தன.

பொதுவாக நல்லதை விடக் கெடுதலையே அதிகம் எதிர்பார்ப்பது மனித இயல்பு. அதற்கேற்ப திவ்யாவின் மனமும் அன்று மிகவும் கலங்கிப் போயிருந்தது. சதானந்தன் வரவும் இல்லை. அவனைப் பற்றிய தகவலும் இல்லை. அவனுக்கு ஏதும் உடம்பு சரியில்லாமல் போயிருந்தால்..?

சோர்ந்து கிடந்தவளுக்கு ஜீவ அமுதம் போலத் தூரத்தில் மோட்டார்ப் படகு வரும் சத்தம் கேட்டது.

சதானந்தன்!

ஓடிப் போய் எட்டிப் பார்த்தாள். தூரத்தில் படகு வருவது தெரிந்தது.



இறங்கி வாயிலுக்கு ஓடப் போனவள் இடையில் கண்ணாடியை எட்டிப் பார்த்தாள். கண்ணராவி! அவசரமாகக் குளியல் அறைக்குள் ஓடி முகம் கழுவித் துடைத்தாள். மின்னல் வேகத்தில் லேசான ஒப்பனை. அவசர அவசரமாய் உடை மாற்றல். சேலை கட்ட நேரமாகும். சுரிதார் மேல்.

சுரிதாரின் தாவணியை மேலே போட்டுக் கொண்டே வாயிற்புறம் ஓடிவந்தவள் சட்டென நின்றாள்.

இவன் எங்கே இங்கே வந்தான்? எப்படி வந்தான்?

"ஹல்லோ.. திவ்யா" என்று அழைத்தபடி அவளை நோக்கி வந்து கொண்டிருந்தவன் மனோரஞ்சன்.

"ம..மனோரஞ்சன்!" என்று தடுமாறினாள் திவ்யா.

வாயிற்புறமாய்ப் படகு நிறுத்தும் இடத்திலிருந்து, மனோரஞ்சனுடன் கூட வந்த பணியாளர், "அறிஞ்சாள் தன்னே? வரட்டே?" என்று பணிவுடனே திரும்பி மீண்டும் முன்புறம் சென்றான்.

அவன் தலை மறைந்ததும், "திவ்யா, என் கண்மணி. உன்னைத் தவறாக நினைத்ததற்காக என்னை மன்னித்து விடம்மா. மன்னித்து விடுவாயல்லவா?" என்று அவள் அருகில் வந்து, கைகளைப் பற்றி மன்னிப்பு கேட்டான் மனோரஞ்சன்.

"ப..பரவாயில்லை, மனோரஞ்சன். அன்றைய நிலைமை அப்படி" என்று மெதுவாகக் கைகளை உருவிக் கொண்டாள் திவ்யா. "இங்கே நீங்கள் எப்படி.... முதலில் உட்காருங்கள்.. ஏதாவது பானம்.. உங்களுக்குக் காஃபி தானே பிடிக்கும், கொண்டு வரச் சொல்லுகிறேன்" என்று உள்ளே திரும்பினாள்.

சட்டமாய் அமர்ந்து, "கொண்டு வரச் சொல்லு. இந்த உப்புத் தண்ணீர் மேல் படகில் வந்ததும் ஒரே காற்றுமாகத்

தொண்டை வரண்டாற் போலத்தான் இருக்கிறது. ஆனால் சீக்கிரம் கொண்டு வரச் சொல்லு. ஜல்தி'' என்றான் அவன்.

அவள் உடனேயே திரும்ப வேண்டும் போலிருக்கிறது என்று எண்ணி, அவசரமாகவே கா∴பி கொணரச் செய்தாள்.

''இங்கே நான் இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும், மனோரஞ்சன்?'' என்று விசாரித்தபடி எதிர் சோ∴பாவில் அமர்ந்தாள்.

கா∴பி கப்பை எடுத்து அவசரமாக ஒரு மடக்கு விழுங்கிய மனோரஞ்சன் வியப்புடன் நோக்கி இன்னொரு வாய்க் காப்பியை ஆற அமர ரசித்துக் குடித்தான். ''சுற்றிலும் ஒரே தண்ணீர்க் காடு.. இங்கே இப்படி நல்ல பால் எப்படிக் கிடைக்கிறது?'' என்று அவனும் விசாரித்தான்.

''வேண்டியதெல்லாம் தினமும் படகில் வரும். ஆனால் நீங்கள் எனக்குப் பதில் சொல்லவில்லையே?''

''என்ன கேள்வி? ஓ, அதுவா? அதுதான் அய்யாவின் சாமர்த்தியம். நீ இங்கே இருப்பதைக் கண்டு பிடித்தது மட்டும் அல்ல. அன்றைக்கு ராமர் இலங்கையில் இருந்து சீதையைக் காப்பாற்றியது போல உன்னைக் காப்பாற்றி அழைத்துக் கொண்டு போகப் போகிறேன்'' என்று பெருமை பேசினான் அவன்.

ராமபிரான் இலங்கையில் யார் வீட்டில் இப்படிச் சட்டமாய் உட்கார்ந்து கா∴பி குடித்தார் என்று நினைத்துச் சிரிப்பு வந்தது அவளுக்கு.

அதை விட அவன் பேச்சு இன்னமும் வேடிக்கையாகவும் வியப்பாகவும் இருக்கவே வசதியாகச் சாய்ந்து கொண்டு, ''காப்பாற்றுவதா? யாரிடமிருந்து காப்பாற்றப் போகிறீர்கள், மனோரஞ்சன்?'' என்று கேட்டாள்.



''இரு.. இதைக் குடித்து முடித்து விடுகிறேன்'' என்று கடைசிச் சொட்டு வரைக் குடித்து முடித்து விட்டு, கப்பை டீபாயின் கண்ணாடி பரப்பின் மேல் வைத்து விட்டு நிமிர்ந்தான்.

''எல்லாம் அந்தத் தடிப்பயல் சதானந்தனிடம் இருந்துதான்!'' என்றான் கோபத்துடன்.

சதானந்தனின் கட்டான உடல் நினைவு வர, இவன் பெரிய ஒல்லி மனிதன். சொல்ல வந்து விட்டான் என்று ஆத்திரம் வந்தது திவ்யாவுக்கு.

''மனோரஞ்சன்! அவர் உங்கள் அண்ணனுடைய மிக நெருங்கிய சினேகிதர்'' என்று நினைவுபடுத்தினாள்.

''உண்மை தெரியும் வரை நானும் இப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். பிறகல்லவா தெரிகிறது அவன் எவ்வளவு பெரிய அயோக்கியன் என்று''

''எனக்கு, நீங்கள் பேசுவது ஒன்றும் புரியவில்லை, மனோரஞ்சன் என்ன உண்மை?''

''அதுதான், சதானந்தன் உன்னை மிரட்டி இங்கே கொண்டு வந்து சிறை வைத்திருக்கிறான் என்கிற உண்மை''

சற்றுத் திகைத்துப் போனாள் திவ்யா. சதானந்தனின் மிரட்டல் வெளிப்பட்டு விட்டது என்றால் பிரபாவின் கடிதமும் வெளியாகி இருக்குமே!

''பிரபா எப்படி இருக்கிறாள், மனோரஞ்சன்?'' என்றாள் கவலையோடு.

''பிரபாவா? அவளுக்கென்ன? புருஷன் வீட்டில் சந்தோஷமாக இருக்கிறாள். ஆனால் இப்போது அவள் பேச்சு எதற்கு?.. நீ என்ன, நன்றாக உட்கார்ந்து கேள்வி மேல்

கேள்வி கேட்டுக் கொண்டு இருக்கிறாய்? "சட்டுபுட்டென்று உன் துணிமணிகளை எடுத்துக் கொண்டு சீக்கிரமாய்க் கிளம்பு, திவ்யா" என்று அவளை அவசரப்படுத்தினான் அவன்.

மீண்டும் தலைகால் புரியாமல் திவ்யா திகைத்தாள். கடித விஷயம் வெளிவந்தது போலவே தெரியவில்லை. பின்னே?

"எனக்கு இன்னும் ஒன்றும் புரியவில்லை, மனோரஞ்சன். நான் இங்கே ஒரு சிறுவனுக்கு 'கவர்னசா'க வந்தேன்..."

"அது வெளியே பரப்பப்பட்ட கதை என்று எனக்குத் தெரியும் திவ்யா. எப்படி உன்னைக் கொன்று விடுவதாக மிரட்டி சதானந்தன் கெட்ட எண்ணத்தோடு இங்கே கொண்டு வந்தான் என்பதும், அந்தக் காலத்து சீதை போலவே நீ எவ்வளவு கஷ்டப்பட்டுக் கற்பைக் காப்பாற்றிக் கொண்டு இங்கே தவிக்கிறாய் என்பதும் தெரியும்"

மனோரஞ்சன் சினிமா கதை போலச் சொல்லவும் திவ்யா மெய்யாகவே மிகவும் திகைத்துப் போனாள்.

ஒருவாறு சமாளித்து, "இந்தக் கதையெல்லாம் உங்களுக்கு யார் சொன்னது?" என்று விசாரித்தாள்.

"அது..." என்று தொடங்கிய மனோரஞ்சன் உடனே நிறுத்திக் கொண்டான். "யார் சொன்னால் என்ன? உண்மை தெரிந்த பிறகு உன்னைக் காப்பாற்றாமல் அங்கே உட்கார்ந்திருக்க நான் கோழையல்ல. இப்போது சதானந்தனிடமிருந்து தப்பிப் போய் விட்டால் அத்தோடு எல்லாம் சரியாகி விடும். நாலு பேர் ஏதாவது பேசக் கூடும். அதனால் முதலில் ஒரு 'வர்ஜினிட்டி டெஸ்ட்' எடுத்துக் காட்டி விட்டால் எல்லார் வாயும் மூடிவிடும். பிறகு நாம் திருமணமே செய்து கொள்ளலாம்.



தூக்கி எறியக் கூடிய சாமான் என்று அருகில் ஒன்றும் இல்லாததால் இவன் மண்டை பிழைத்தது என்று எண்ணினாள் திவ்யா.

'வர்ஜினிட்டி டெஸ்ட்டா?' ராஸ்கல்...

இவனெல்லாம் எப்படி மேனேஜர் பதவிக்கு வந்தான்? சிபாரிசா? லஞ்சம் கொடுத்தானா?

பெருமுயற்சி செய்து தன்னை அடக்கிக் கொண்டு எழுந்து நின்றாள் அவள். "நான் உங்களோடு வருவதற்கு இல்லை, மனோரஞ்சன். அதனால் நீங்கள் போகலாம்" என்றாள் இறுகிய குரலில்.

"அவன் மிரட்டலில் நீ மிகவும் பயந்து போயிருக்கிறாய், திவ்யா. பயப்படத் தேவையே இல்லை. குறுக்கே எவனாவது வந்தால் சுட்டுக் கொளுத்தி விடுவேன். அப்பாவின் துப்பாக்கி கூடக் கொண்டு வந்திருக்கிறேன். அதைக் காட்டி மிரட்டியே போய் விடலாம். வா" என்று அவள் அருகே வந்து அவளது கையைப் பற்றினான் மனோரஞ்சன்.

"நான் பத்து எண்ணுமுன் நீ இங்கிருந்து வெளியே போகா விட்டால் இங்கே ஒரு கொலை விழும்!" என்ற எச்சரித்தது ஒரு சில்லிட்ட குரல் - சதானந்தனின் குரல்.

எடுத்துச் சென்ற சிறு கைப்பெட்டியுடன், மேற்புறம் வளைவாக அமைக்கப்பட்ட அந்த உயரமான வாயிலில் சதானந்தனைப் பார்த்ததும் அப்பாடி என்று இருந்தது திவ்யாவுக்கு.

ஆனால், "உன்னோடு வராவிட்டால் என்னைக் கொன்று விடுவதாக மிரட்டி, திவ்யாவை இங்கே கொண்டு வந்திருக்கிறாயே, நீயெல்லாம் ஒரு பெரிய மனிதனா? மரியாதையாய் எங்களுக்கு வழியை விடு. ஒதுங்கி நில்

என்கிறேன்.. வேண்டாம்.. கிட்டே வராதே. வந்தால் உன்னைச் சுட்டு விடுவேன்'' என்று திவ்யாவின் கையை விட்டு விட்டு இடுப்பில் சொருகியிருந்த துப்பாக்கியை எடுத்து சதானந்தனைக் குறிபார்த்தான் மனோரஞ்சன்.

## 23

நல்ல சமயத்தில் வந்து மனோரஞ்சனின் தொல்லையிலிருந்து காப்பாற்றினான் என்று நினைத்த திவ்யாவுக்குத் துப்பாக்கியைக் கண்டதும் நெஞ்சு நடுங்கி விட்டது.

''அய்யோ.. வேண்டாம்'' என்று மனோரஞ்சனின் கையைப் பிடிக்கப் போனவள் அதற்கும் அஞ்சினாள். மனோரஞ்சன் துப்பாக்கி சுடுவதில் பயிற்சி பெற்றவன் அல்ல. அதை எப்படிப் பிடித்திருக்கிறானோ! இவள் பாட்டில் கையைப் பிடித்து இழுக்கப் போக, அது இடைவழியில் வெடித்து வைத்து யாருக்காவது என்னவாவது ஆகி விட்டால்?

முக்கியமாக, சதானந்தனின் மேல் குண்டு பட்டு விட்டால்?

அப்படியே நின்று, சதானந்தனை வேண்டிக் கொள்ளத் தொடங்கினாள்.

''வேண்டாம், ஆனந்த். உள்ளே வராதீர்கள். மனோரஞ்சன் சொல்வது போல விலகிப் போய் விடுங்கள்'' என்று கெஞ்சிக் கதறினாள்.



அவளது அழைப்பில் சட்டென பார்வையை அவளிடம் திருப்பிய சதானந்தன் மேலே அவளது பேச்சை மதிப்பதாக இல்லை.

''துப்பாக்கியைக் கீழே போடு மனோரஞ்சன் முட்டாள் வேலை செய்யாதே'' என்று அவனை அதட்டியபடியே ஒவ்வோர் அடியாக முன்னேறினான்.

''ஏ..ய்.. யாரை அதட்டுகிறாய். என் அண்ணனுடைய நண்பன் என்று மதிப்புக் கொடுத்த காலம் மலையேறி விட்டது மச்சி.. மரியாதையாய் ஒதுங்கிப் போகா விட்டால் உயிர் போய் விடும். அட.... சொல்லிக் கொண்டே இருக்கிறேன். நீ உள்ளே வந்து கொண்டே இருக்கிறாயா?'' என்று கையை உயர்த்தி நேராகக் குறிபார்த்தான்.

திவ்யாவின் இதயம் நின்று விட்டது என்றே சொல்லலாம். தன் கெஞ்சலுக்குச் சதானந்தனிடம் மதிப்பில்லை என்று கண்டவள், மனோரஞ்சனிடம் மன்றாடத் தொடங்கினாள். ''வேண்டாம், மனோரஞ்சன். ப்ளீஸ்.. ப்ளீஸ்..

ஆனால் முன்னவனைப் போலவே இவனும் அவளைக் கவனித்தான் இல்லை.

ஒற்றைக் கையால் துப்பாக்கியைச் சரியாகப் பிடிக்க முடியாமல் நடுங்கவே அடுத்த கையாலும் சேர்த்துப் பிடிக்க முயற்சி செய்தான் மனோரஞ்சன். ஆனால் சுடுவேன் என்று மிரட்டுவது வேறு; நிஜமாகவே சுடுவது வேறு அல்லவா?

மனோரஞ்சனின் கை நடுங்கவும், தன் கையிலிருந்த பெட்டியை அவனை நோக்கி வீசினான் சதானந்தன். குறிதவறாமல் பெட்டி மனோரஞ்சனின் கையைத் தாக்க, துப்பாக்கி பறந்தது.

அதை மீண்டும் மனோரஞ்சன் பற்றுமுன், வேலையாள் மாயன் பாய்ந்து சென்று, அதை எடுத்து வந்து சதானந்தனிடம் கொடுத்தான்.

துப்பாக்கியின் 'சிலின்டர்'ரைத் திறந்து உள்ளிருந்த குண்டுகளை உள்ளங்கையில் கொட்டி, வெளியே விசிறி அடித்தான் சதானந்தன்.

மீண்டும் துப்பாக்கியை மூடி, மாயனிடமே தந்து, மனோரஞ்சனிடம் கொடுக்குமாறு பணித்தான்.

துப்பாக்கியை இழந்ததுமே அரை உயிர் போனது போல ஆகி விட்டான் மனோரஞ்சன். வெற்றுத் துப்பாக்கியை வாங்கி பெல்ட்டில் பழைய மாதிரியே சொருகினான்.

"இதை நான் சும்மா விட்டு விடுவேன் என்று நினைக்க வேண்டாம், சதானந்தன். போலீசோடு மீண்டும் வருவேன். அதற்குள் என்னை ஏதாவது செய்து விடலாம் என்றும் நினைக்க வேண்டாம். நான் இங்கே வந்தது இன்னொருவருக்கும் தெரியும். நான் ஒழுங்காகத் திரும்பிப் போய்ச் சேரா விட்டால்.. சேராவிட்டால் உன்னை உண்டு இல்லை என்று ஆக்கி விடுவார்கள்.."

அருவருப்புடன் கைகளைத் தூசி தட்டினான் சதானந்தன். "ஒன்று மட்டும் நினைவில் வை மனோரஞ்சன். திவ்யா என் மனைவி. சான்று வேண்டுமானால் குருவாயூரில் போய்ப்பார். என்ன கஷ்டமோ என்ன துக்கமோ, அவள் இங்கிருந்து வெளியேற நான் அனுமதிக்க மாட்டேன். இதை மனதில் வைத்துக் கொண்டு கிளம்பு. இப்போது மரியாதையாக படகுக்குப் போகிறாயா, அல்லது உன்னை இழுத்துக் கொண்டு போய்ப் படகில் போடும்படி மாயனுக்கு உத்திரவிடட்டுமா?"



எந்தவித ஆபத்தும் இல்லாமல் பிழைப்போம் என்று மனோரஞ்சன் நினைக்கவில்லை போலும். அவசரமாகக் கிளம்பி விட்டான். ராமபிரானைப் போலச் சீதையை மீட்க வந்த கதை எல்லாம் மறந்து, விரைந்து ஓடி விட்டான்.

படகு கிளம்பிச் சென்று, அதன் மோட்டார் ஓசை தேயும் வரை அங்கே அமைதி நிலவியது.

படகு கிளம்பும் வரை, இந்த மனோரஞ்சன் இங்கே எப்படி வந்தான், ஏன் இப்படி உளறிக் கொட்டினான் என்று அவனைப் பற்றி எண்ணிய திவ்யா, படகு கிளம்பிய கையோடு அவனை அடியோடு மறந்து போனாள்.

மனம் நிறைய அடைத்துக் கொண்டு நின்றவன் சதானந்தன்தான்.

சதானந்தன் வந்ததும் ஏதேதோ கேட்க வேண்டும் என்று எண்ணியிருந்தவளுக்கு அதற்குத் தேவையான தனிமை கிடைத்த போது வாயே திறக்க முடியவில்லை.

நீ யாரை விரும்புகிறாய்? என்னையா அல்லது வினோதினியையா? இப்படியெல்லாம் ஓர் ஆண் மகனிடம் எப்படிக் கேட்பது? அதுவும் சதானந்தனைப் போல, ஒரு முழுமையான ஆணிடம்!

அப்படியே துணிந்து கேட்டு விட்டாலும், அவன் உன்னை விரும்பவில்லை என்று சொல்லி விட்டால் அதன் பின் முகத்தை எங்கே கொண்டு போய் வைத்துக் கொள்வது? மனோரஞ்சனிடம் மனைவி என்றானே, அவனை விரட்டுவதற்காக மட்டும் சொன்னானா? அல்லது...

ஏதேதோ எண்ணி மனம் அலை பாய்ந்த போதும், அவன் அங்கே இருப்பதே சுகமாக அவனைப் பார்த்துக் கொண்டு நின்றாள் திவ்யா.

படகு மறைந்து, மாயன் தன் இடம் சென்று விட, மெல்ல திவ்யாவின் புறமாகத் திரும்பினான் சதானந்தன். ''கடைசியில் பெண் என்று காட்டி விட்டாயல்லவா'' என்றான் குரலில் மிகுந்த கசப்புடன்.

தூக்கி வாரிப் போட்டது திவ்யாவுக்கு. ''நான் என்ன செய்தேன்?'' என்றாள் எதுவும் புரியாமல்.

''ஆகாகா! என்ன அருமையான நடிப்பு! யார் யாரையோ நடிக்க வைத்து 'ஆஸ்கார் அவார்டு' கொடுக்கிறார்களே! நீ மட்டும் நடிப்புத் தொழிலில் இருந்திருந்தால், ஓய்வெடுக்கும் வரை ஒவ்வோர் ஆண்டும் அந்தப் பரிசு உனக்குத் தான்'' என்றான் அவன் எகத்தாளமாக.

அவள் ஏதோ பேச வாயெடுக்கையில் அவனே தொடர்ந்தான். ''ஆனாலும் பாவம் தான். இல்லை? பூசைவேளைக் கரடி போலச் சரியான நேரத்தில் வந்து தொலைத்து விட்டேன். இல்லையென்றால் இந்நேரம் மனோரஞ்சனோடு ஜாலியாகக் கிளம்பியிருப்பாய்! ஆனால்..'' ஏளனமாகச் சொல்லிக் கொண்டே போனவனின் குரல் சட்டெனக் கடினமுற்றது.. ''அவனோடு நீ இந்த உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் உன்னைச் சும்மா விட்டு விடுவேன் என்றா நினைத்தாய்? இனியும் ஒரு பெண் என் குடும்பத்தை அவமானப்படுத்த விடுவேன் என்று எப்படி எண்ணினாய்?''

ஆக, மனைவி என்றது மனோரஞ்சனை விரட்ட மட்டும் தான்!

தலையசைத்து, ''இல்லை.. நீங்கள் நினைப்பது தப்பு, ஆனந்த்...நான்'' என்று தொடங்கியவள் மேலே பேசுமுன் சதானந்தன் குறுக்கிட்டான்.



''அந்தப் பெயர் சொல்லி என்னை அழைக்கும் தகுதி இனி உனக்கு இல்லை... அப்படிக் கூப்பிடாதே'' என்றான் முகத்தில் அடித்தாற்போல.

தொண்டையை அடைத்தது அவளுக்கு. ஒரு காலத்தில் அவளைக் கட்டாயப்படுத்தி 'ஆனந்த்' என்று அழைக்கச் சொன்னவனே அவன் தான். அவள் தான் இல்லாத நெருக்கத்தைக் காட்டி அப்படி அழைக்கப்பிடிக்காமல், வேறு மாதிரி அழைக்கத் துணிவும் இல்லாமல் அவனை அழைத்துப் பேசுவதையே தவிர்த்து வந்திருந்தாள். 'எஸ்டேட்'டுக்குச் சென்ற போது, அபிராமி மகனை 'ஆனந்தன்' என்று அழைத்ததைக் கேட்டதிலிருந்து உள்ளூர ஒரு நெகிழ்வு அவளுக்கு. அன்புக்குரிய தாயார் அழைப்பது போலவே அவளையும் கூப்பிடச் சொல்லியிருக்கிறானே என்பதே இதமான இம்சையாய் இருந்து வந்தது. அப்போதும் எளிதாய் அவனை 'ஆனந்த்' என்று அழைத்துவிட அவளால் முடியவில்லை. இப்போதுதான், தன் காதலை அறிந்த பின், பலமுறை மனதோடு அவனை அப்படி அழைத்துப் பேசியதில் அதே பழக்கமாக, அழைத்து விட்டாள்.

ஆனால் அவனுக்கு இவ்வளவு வெறுப்பாகி விட்டதே!

ஆனால் இதை எண்ணி வருந்துவதை விட, அவனது வெறுப்பைப் போக்குவது முக்கியம் என்று கருதி, ''மனோரஞ்சனோடு நான் போவதாக இல்லை, ஆனால் வர முடியாது என்று மறுத்துக் கொண்டு இருந்த போதுதான் நீங்கள் வந்தீர்கள்'' என்றாள்.

''முழுப்பொய்''

''நான் சொல்வது நிஜம்'' என்று விடாமல் மீண்டும் கூறினாள் திவ்யா.

''எப்படி நம்புவது? நான் இல்லாத நேரம் பார்த்து மனோரஞ்சனை வரவழைத்து விட்டு, அவனோடு போக மறுத்தாய் என்றால் இதை நம்புவதற்கு நான் ஓர் அடிமடையனாக இருந்தால் தான் சாத்தியம்'' என்றான் அவன் எகத்தாளமாக.

மேலே மேலே இவன் குற்றம் சாட்டிக் கொண்டே போகிறானே! ''மனோரஞ்சனை நான் வரச் சொல்லவில்லை'' என்றாள் அவள் வேதனையோடு.

''மீண்டும் பொய்யா?''

அலுப்புற்று, ''அப்படியானால் நீங்களேதான் சொல்லுங்களேன், அவரை நான் எப்படித் தருவித்திருக்க முடியும்? உங்கள் அம்மாவுக்கு நன்றி தெரிவித்து எழுதிய கடிதம் தவிர வேறு ஏதேனும் என் கடிதம் மெயிலுக்கு எடுத்துப் போனார்களா என்று உங்கள் ஆட்களைக் கேட்டுப் பாருங்களேன்'' என்றாள் அவள்.

''டெலிஃபோன் இருக்கையில் கடிதம் எழுதுவானேன்!''

''உங்கள் ஆஃபீஸ் அறைக்குள், அன்று நீங்கள் அழைத்துச் சென்ற போது தவிர நான் போனது கிடையாது'' என்று வெடுக்கெனப் பதில் கொடுத்தாள் திவ்யா. அவளுக்கும் கோபம் வரத் தொடங்கியிருந்தது. எவ்வளவு தான் பணிந்து போவது?

''சொன்னேனே. இனியும் உன் பேச்சுகளை நம்புவதற்கு நான் முட்டாளல்ல என்று. அதுவும் என்ன நடந்தது என்று தெளிவாகத் தெரிந்த பிறகு!''

''அப்படி என்னதான் நடந்தது என்கிறீர்கள்?''

''என்னையே கேட்கிறாயா? நீ செய்ததைக் கண்டுபிடித்திருக்க மாட்டேன். பதில் சொல்லத் திணறுவேன்



என்று நினைத்தாயா? சொல்கிறேன் கேட்டுக் கொள். பிரபாவின் கடிதம் இல்லை என்று ஆன உடன் உனக்குத் தைரியம் வந்து விட்டது. நான் அந்தப் பக்கம் போனதும் காதலனுக்கு ஃபோன் செய்திருக்கிறாய். அதிலும் என்ன மாய்மாலம்?! அவனைக் கொன்று விடுவதாக மிரட்டி உன்னைக் கொண்டு வந்தேனாமா? பின்னே? கடித விஷயத்தை எப்படி மறைப்பாய், பாவம்!''

''குத்தல்! ஏளனம்! எகத்தாளம்!''

பழைய கற்காலமாய் இருந்திருந்தால் கைகளாலேயே அவளது நெஞ்சைப் பிளந்து இதயத்தை எடுத்துக் கசக்கியிருப்பான். இப்போது அது முடியாததால் வார்த்தைகளால் குதறுகிறான்.

''மனோரஞ்சன் தானாகவே விசாரித்து வந்திருக்கக் கூடாதா என்று ஒருதரம் யோசித்துப் பார்க்கக் கூடாதா?'' என்றாள் மன்றாடுதலாக.

''சாத்தியமே இல்லை என்று தெரிந்த ஒன்றை ஏன் யோசிக்க வேண்டும். உன் பெரியப்பாவுக்கே திருவனந்தபுரத்து விலாசம் தான் தெரியும். அங்கே போய் வீடு எங்கே என்று கேட்கும் கண்ட மடையனுக்கெல்லாம் வழிகாட்டி அனுப்பி வைப்பார்கள் என்று நினைத்தாயா? பவித்ராவுக்குப் பிறகு என் அனுமதி இல்லாமல் வீட்டு விலாசம் யாருக்கும் தருவது இல்லை. இதற்கு மேல் என்ன யோசிப்பது?''

அவன் பேசப் பேச அவனது பிடிவாதம் தெரிந்த திவ்யா அடியோடு நம்பிக்கை இழந்தாள். சலித்தும் போயிற்று.

ஒரு வார்த்தை அவள் பேச்சை நம்பாமல், தானாகக் குற்றத்தின் மேல் குற்றமாக அடுக்கி அவள் குற்றவாளி என்று தீர்ப்பும் தந்து விட்டவனுக்கு அன்பாவது, பாசமாவது? அந்த மாதிரி வார்த்தைகளின் பொருள் கூட அறியாதவன்!

இருந்திருந்து இவன் மேல் நேசம் கொண்டது கூட தப்புத்தான். முட்டாள்த்தனம்தான்!

இது வேதனைதான். ஆனால் எதிர்காலமே இல்லாத இந்த அன்பை மனதிலிருந்து தூக்கி எறிந்து விட அவள் முயற்சித்துத் தான் ஆக வேண்டும். தைரியமாய், திடமாய்ச் செயல்பட வேண்டும்.

முதலில் அவன் குட்டக் குட்ட குனிந்து கொடுப்பதை விடுத்து நிமிர வேண்டும்!

நிமிர்ந்து கேட்டாள். "அப்படியே நீங்கள் சொல்வது போலவே எல்லாம் நடந்து, நான் மனோரஞ்சனை வரவழைத்திருந்தாலும் அது என் விருப்பம்; என் விஷயம். அதில் தலையிட உங்களுக்கு ஒரு உரிமையும் இல்லை" என்றாள் நிமிர்வுடன்.

ஆனால் அவளது பேச்சின் பிரதிபலிப்பு பயங்கரமாய் இருந்தது.

வினாடிக்குள் அவன் முகம் கன்றிச் சிவந்து போயிற்று. "எனக்கா உரிமை இல்லை? என் உரிமையைப் பற்றிக் குருவாயூரில் போய்க் கேள்" என்று உறுமினான். "எனக்கு... உரிமை இல்லையா? என் உரிமையின் அளவு தெரியுமா, உனக்கு?" என்று ஓர் எட்டில் அவள் அருகே வந்தான்.

அவள் அணிந்திருந்த சுரிதாரின் மேல் பட்டனை முரட்டுத் தனமாக இழுத்துப் பிய்த்தெறிந்தான். உள்ளே கிடந்த மாங்கல்யத்தை அதே முரட்டுத்தனத்துடன் இழுத்து வெளியே எடுத்துக் காட்டினான். இது நான் கட்டியது. இதன் அர்த்தம் தெரியுமா, உனக்கு? இந்த ஐந்தரை அடி மேனியின் ஒவ்வொரு அணுவும் எனக்குச் சொந்தம். இந்த மேனியை நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். என்..." என்றவன், சட்டென அவளைப் பிடித்து இழுத்து முரட்டுத்தனமாக முத்தமிட்டான்.



மதம் கொண்ட யானை போல அவன் சினமிகுந்து, அவளது சட்டையை பட்டன் தெறிக்க இழுத்த போதே திவ்யா நடுங்கி விட்டாள். உடைப்பெடுத்த அணைக்கட்டு நீரை வெறும் கையால் தடுக்க முயற்சிப்பது போல, அவனைத் தடுக்க அவள் செய்த முயற்சிகள் பயனற்றுப் போயின. அவளது முயற்சிகளைச் சதானந்தன் அணுவளவும் மதிப்பதாகவும் இல்லை.

அவளது உணர்ச்சிகளைப் பற்றிய அக்கறையே இல்லாமல்தான் அவன் அவளை முத்தமிட்டதும்.. எலும்புகள் நொறுங்கி விழும் போலான அவனது வலுவான அணைப்பில் அவளுக்கு வலிக்கக் கூடும் என்றோ, எதிர்பாராத அவன் முரட்டு முத்தத்தில் அவளுக்கு மூச்சு திணறக் கூடும் என்றோ அவன் எண்ணிக் கூடப் பார்க்கவில்லை.

கரை புரண்டு ஓடிவரும் காட்டாற்று வெள்ளத்தில் சிக்கினாற் போல, ஒரு பிடிப்பும் இல்லாமல் உருண்டு, புரண்டு, மொத்துண்டு, மூச்சுக்குத் திணறி, உயிர்ச்சக்தியே ஒடுங்கி விட்டாற் போல உணர்ந்தாள் திவ்யா.

## 24

எப்படி அவளைப் பற்றிய அக்கறை இல்லாமலே அணைத்தானோ, அதே அலட்சியத்துடனே அவளை விடுவித்தவன், அவள் நிற்க மாட்டாமல் தடுமாறவும், ஒரு கையால் பற்றி நிறுத்தினான், அதற்கு மேல் தொடப் பிடிக்காதவன் போல.

அவள் சமாளித்துக் கொண்டு நின்றதும், கையை விலக்கிக் கொண்டு, "கவனி.. என் உரிமை பற்றி ஒரு சின்ன

'சாம்பிள்' தான் இது. இதற்கு மேல் எந்தத் துன்பத்தையும் இழுத்துக் கொள்ள வேண்டாம் என்று நினைத்தால் வாய் பேசாமல் அடங்கி இருக்கக் கற்றுக் கொள். இன்னும் ஒன்று நினைவில் வை. ஒரு தரம் எனக்கென்று நிச்சயித்த பெண் ஓடிப் போய் என் குடும்பத்திற்கு அவமானம் தேடித் தந்தாள். ஆனால் இனி ஒரு பெண் என் முகத்தில் கரிபூச நான் விடமாட்டேன். எனவே உன் மனோரஞ்சன் சொன்னது போல, இந்த வீடு இனிமேல் உன் அசோக வனம் தான். அதையும் மறக்க வேண்டாம். பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ வாழ்நாள் முழுவதும் இப்படியேதான் இருந்தாக வேண்டும். இது உனக்கும் தண்டனை. உன்னை அந்தக் கண்ணன் சன்னிதியில் மணந்த எனக்கும் தண்டனை'' என்று கடினமான குரலில் கூறியவன் அதற்கு மேல் நில்லாமல் தன் அலுவலக அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

மூடிய கதவைச் சற்று நேரம் வெறித்தபடி நின்றாள் திவ்யா. கொஞ்ச நஞ்சமாய், லேசாகத் திறக்கத் தொடங்கிய மனக் கதவையும் இப்படித்தான் அழுந்த மூடி விட்டான் போலும்.

சோர்வுடன் நடந்து அவளது அறைக்கு சென்று கட்டிலில் விழுந்தாள். எதையும் யோசிக்கத் தோன்றாமல் வெள்ளமாய் கண்ணீர் பெருகியது.

சதானந்தனுக்கும் அறைக்கதவை அடைத்த வேகத்தில் மனதை அடைக்க முடியவில்லை. இவளுக்காக என்னென்ன செய்து கடைசியில்...

ஒருதரம் பயங்கரமாய்ச் சூடுபட்ட பிறகும் புத்தி பூனையை விடவும் மட்டமாய்ப் போனால் இப்படித்தான்.



கூண்டுப் புலி போலக் குறுக்கும் நெடுக்குமாய் அலைந்து கொண்டு இருந்தவன் கால் சோர்ந்து அமர்ந்த போது, டெலி∴போன் மணி அடித்தது.

வேண்டா வெறுப்பாய் எடுத்துப் பேசியவன், ''பயப்பட வேண்டாம். இதோ வருகிறேன். டாக்டர்... பார்த்து விட்டாரா? சரி. கிளம்பி விட்டேன்'' என்றவன் அவசரமாகப் பெரிய மோட்டார்ப் படகை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

அவன் சென்று சிறிது நேரத்திற்கெல்லாம் வினோதினி வந்து சேர்ந்தாள்.

படகுச்சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த மாயன், அவளைப் பார்த்ததும், தலையாட்டி விட்டுத் தன் போக்கில் தோட்டப் பணியில் ஈடுபட்டான்.

திவ்யாவின் அறை வாயிலில் நின்று, குப்புறக் கிடந்து குலுங்குகிறவளை விழியிடுங்கச் சற்று நேரம் பார்த்து விட்டு உள்ளே வந்தாள் வினோதினி.

திவ்யாவின் அருகே அமர்ந்து, ''அச்சச்சோ! என்ன நடந்தது, திவ்யா? அங்கே சதுவானால் அவ்வளவு கோபத்தில் குதிக்கிறார். மூக்கிலேயே பொறி பறக்கிறது. நீயானால் இப்படி அழுது கொண்டு கிடக்கிறாய்? என்னதான் ஆயிற்று?'' என்று அக்கறையோடு விசாரித்தாள்.

திவ்யா பேசாமலே கண்ணீர் உகுக்கவும், வினோதினியின் முகம் கடுத்தது. உடனேயே சீர்ப்படுத்திக் கொண்டு, திவ்யாவின் முதுகை வருடி, ''என்னம்மா, என்னிடம் சொல்வதற்கு என்ன? மனோரஞ்சன் வந்ததாகச் சது சொன்னார். எப்படி வந்தாராம்? வரச் சொல்லி நீ எழுதினாயா?'' என்று கனிவான குரலில் வினவினாள்.

திவ்யா மெல்ல வாய் திறந்தாள். "இல்லை.. ஆனால் நான் தான் மனோரஞ்சனை வரவழைத்திருக்க வேண்டும் என்று... ஆ..ஆனந்த்..." என்று மீண்டும் விசும்பினாள்.

"ஆனந்த்" என்ற வார்த்தையில் முதுகின் பின் வினோதினியின் முகம் கடுத்ததை அவள் அறியவில்லை.

எழுந்து அமர்ந்து, "ஆனால் மனோரஞ்சன் எப்படி இங்கே வந்திருக்கக் கூடும், வினோதினி!" என்று கேட்டாள் திவ்யா.

"அது எப்படியோ போகட்டும்" என்றாள் வினோதினி. "ஆனால் வந்த கோபத்தில் நீ மனைவி, இங்கேயே இருக்க வேண்டும் என்றெல்லாம் கத்தி விட்டாராமே! உன்னிடம் கூட..."

திவ்யாவின் முகத்தில் வீங்கியிருந்த உதடுகள் வினோதினியை ஏதேதோ எண்ண வைத்தன. ஆனால் ஒரு வேகமான அளவிடும் பார்வையில் சற்றே நிம்மதியுற்று மேலும் துருவினாள்.

இந்த அளவுக்கு எல்லாவற்றையும் வினோதினியிடம் சதானந்தன் சொன்னது வேறு திவ்யாவுக்கு வேதனையாக இருந்தது. அவமானமாகவும் இருந்தது. ஆனாலும் வேறுவழியின்றி, "ஆமாம்... என்னிடமும்.. என்னிடமும் அப்படித்தான்... சொன்னார். இது.. இது உன் அசோகவனம்... என்றார்" என்று ஒத்துக் கொள்ளும்படி ஆயிற்று.

"அப்படியானால் இனி என்ன செய்யப் போகிறாய்?"

"என்னால் என்ன செய்ய முடியும்?" என்றாள் திவ்யா சோர்வுடன்.

சற்றுநேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தாள் வினோதினி. பிறகு, "திவ்யா, நான் சொல்வதை நீ சற்று



கவனமாகக் கேட்க வேண்டும்." என்று தொடங்கினாள். "பார்.. திவ்யா, முன்னொரு தரம், ஆறு ஆண்டுகளுக்கு முன்பு பவித்ராவிடம் ஏமாந்து, உறவினர் முன் அவமானப்பட்டவர் சது. இன்னோர் அவமானம் அவரால் தாங்க முடியாது. அப்படி நேர்ந்து கொண்டிருக்கிறது என்ற எண்ணத்தால் தான் அவர் அப்படிக் கொதித்துப் போனதும். ஆனால் அந்த அளவில் நிற்காமல் ஆத்திர வேகத்தில் என்னென்னவோ சொல்லி விட்டார். இனி என்ன ஆனாலும் சொன்ன வார்த்தை மீற மாட்டார். விரைவிலேயே விடுதலை பெறுவதாக இருந்தவர், தன் வார்த்தையாலேயே வாழ்நாள் பூராவுமாகச் சிக்கலில் மாட்டிக் கொண்டார்; உன்னையும் மாட்டி வைத்து விட்டார்.

"யோசித்துப் பார். நீங்கள் இருவரும் ஒருவர் முகம் ஒருவர் பாராமல், ஒருவரோடு ஒருவர் பேசாமல், இந்தச் சின்ன இடத்தில் .... இந்த வீடு பெரிதுதான்... மாளிகை தான்.. வீட்டைச் சுற்றிலும் பெரியதோட்டமும், அதைச் சுற்றிலும் பெரிய மணல் பரப்புமாக, மிகவும் பெரிய இடம் தான். ஆனால் வாழ்நாள் முழுவதும், அசையாமல் இருந்து கழிப்பதற்கு என்றால் மிகவும் சின்ன இடம் தான் ... இரு தனிமரங்களாகவே ஐம்பது, அறுபது ஆண்டுகள் நிற்கப் போகிறீர்களா? அவரது குலமும், தொழிலும், சொத்துக்களும் சந்ததியற்று வீணாகப் போவது உனக்குச் சம்மதம் தானா?

"மேலும் சதுவை எனக்கு நன்றாகத் தெரியும். பிழையென்று எண்ணி விட்டால் கொட்டிக் கொட்டியே உயிரை வாங்கி விடுவார். அப்படி ஒரு நரக வாழ்வு உனக்குத் தேவைதானா?

"இன்னமும் கூட ஒன்று இருக்கிறது. உங்கள் இருவர் வாழ்வோடு, என் வாழ்வும் நாசமாகிப் போகும். எங்களுடைய ஆயிரம் ஆயிரம் ஆசைக் கனவுகளும் கூட அழிந்து வீணாக வேண்டியதுதான்.

"இதெல்லாம் நடப்பது உனக்கு விருப்பம்தானா?"

வினோதினி சித்தரித்த எதிர்காலம் மனக்கண் முன் படமாய் விரிய, "இல்லை, இல்லவே இல்லை" என்றாள் திவ்யா வேதனையோடு. "ஆனால் இதைத் தவிர்க்கவும் வழி இருப்பதாகத் தெரியவில்லையே. ஒருவேளை... மனோரஞ்சனை இங்கே வழிநடத்தியது யார் என்று அவரிடம் கேட்டால்..."

"கேட்டால், இவ்வளவு அவமானத்திற்குப் பிறகு சதானந்தன் நன்மைக்காக மனோரஞ்சன் ஓடிவந்து உண்மை சொல்லப் போகிறாராக்கும். கொஞ்சம் மூளையை உபயோகித்து, யோசித்துப் பேசு திவ்யா" என்றாள் வினோதினி எரிச்சலோடு. உடனே மாறி, "அதை விட, நடக்கக் கூடிய காரியமாய் ஒன்று இருக்கிறது. உனக்கும் சம்மதமானால் அந்த வழியில் முயற்சித்துப் பார்க்கலாம்" என்றாள் இதமான குரலில்.

"என்ன?" என்றாள் திவ்யா நம்பிக்கையற்று.

"முதலில் நீ இங்கிருந்து வெளியேறி விட வேண்டும். பொறு... முதலில் நான் சொல்லி முடித்து விடுகிறேன். அப்படி நீ சது அறியாமல் வெளியேறி அவரது கண் மறைவாக இருந்து கொண்டே விவாகரத்து மனுவை ஃபைல் பண்ணி விடலாம். உனக்குத்தான் 'டைவர்ஸ்' கிடைப்பதும் எளிதாயிற்றே. சட்டப்படி நீ பிரிந்து விட்டால் வாழ்நாள் முழுவதும் மனைவி என்பதும் பொருள் இழந்து போகும். அப்புறம் நான் அவரை மணப்பதற்கும் தடையிராது." என்று விவரித்தாள் வினோதினி.

அவள் பேச்சு மனதை ஏனோ வருத்த, "ஆனால், இதனால் பெண்களிடம் அவரது மதிப்பு இன்னமும் குறைந்து போகாதா?" பெண்களை மதிக்குமுன் மணக்க மாட்டேன் என்ற உங்கள் விரதம் என்ன ஆவது? என்று வாதிட்டாள் திவ்யா.

"விட்டுவிட வேண்டியதுதான்" என்றாள் வினோதினி தயங்காமல். "இந்த மாதிரி இன்னொரு சிக்கலில் மாட்டிக் கொள்வதை விட, அவரை மணந்து கொண்டே பெண்களை மதிக்கக் கற்றுக் கொடுப்பது மேலல்லவா?"

மறுக்க முடியாத கேள்வி தான். ஆனால் உடனே இன்னொன்று தோன்ற, நிமிர்ந்து, "சிவா கேஸ் என்ன ஆகும்?" என்றாள்.

"அந்த வழக்குத்தான் நேற்றே நம் பக்கம் தீர்ப்பாகி விட்டதே" என்று முடித்தாள் வினோதினி.

சோர்வுற்று, "ஆனாலும் இங்கிருந்து நான் வெளியேறுவது எப்படி, வினோதினி? வேலையாட்களிடம் என்ன உத்தரவிட்டிருக்கிறாரோ, தெரியவில்லை. அல்லது... நான் உங்களோடு வந்து விடட்டுமா? எப்படியும் வேலையாட்கள் உங்களைத் தடுக்க மாட்டார்கள் அல்லவா?" என்று கேட்டாள் திவ்யா.

கெட்டதே குடி! சற்றுத் திகைத்து விட்டு, "அப்புறம் சது என்னைத் திரும்பிப் பார்ப்பாரா, திவ்யா? யோசியாமலேயே பேசுகிறாயே! அவருடைய வார்த்தையை நானே முறித்ததாக ஆகாதா? அவருக்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்?" என்று குறைப்பட்டாள் வினோதினி. அதைவிட ஒரு நல்ல வழி இருக்கிறது. கவனமாகக் கேள்...

திவ்யாவிடம் தன் திட்டத்தை விவரித்து விட்டு, வினோதினி நேரே சதானந்தனின் அலுவல் அறைக்குள் சென்றாள். அங்கே ஒரு வேலை செய்து விட்டு வெளியே வந்து மாயனை அழைத்தாள். "தென்கிழக்குப் பக்கமாய் ஒரு கண் வைத்துக் கொள், மாயா. யாரோ ஒருவன் தலையில்

தொப்பியோடு அந்தப் பக்கம் சுற்றுவதை வரும்போது பார்த்தேன். கவனம்..'' என்று எச்சரித்து விட்டுப் படகில் ஏறிக் கிளம்பினாள்.

அவளது படகு மேற்காய்த் திரும்பி, தூரத்தில் இருந்த தென்னை மரத் திட்டைச் சுற்றிக் கொண்டு சென்று மறைந்தது.

வினோதினியின் கட்டளைக்குப் பணிவோடு தலையாட்டிய மாயன், மற்றவர்களைக் கூவி அழைத்து, தென்கிழக்குத் திசையைக் காட்டி, விவரம் சொல்ல, எல்லோரும் அந்தத் திசையில் கவனம் செலுத்தியபடியே வேலைகளைத் தொடர்ந்தனர்.

வினோதினி கூறியிருந்தபடி, ஒரு மணி நேரம் சென்றதும் திவ்யா எழுந்தாள். சதானந்தனின் படம் ஒன்றை எடுத்து, பத்திரமாய் ஒரு கண்ணாடித்தாளில் சுற்றி, ஒருதரம் நோக்கி, ''உங்களுக்காகத்தான் ஆனந்த்'' என்று முணுமுணுத்துவிட்டு சட்டைப் பைக்குள் வைத்தாள்.

வீட்டின் வடபுறமாய் அமைந்திருந்த குளிக்கும் பகுதிக்குச் சென்றாள்.

உடைமாற்றும் இடமாக அங்கே ஓர் அறை உண்டு. அதை அடுத்துக் குளிக்கும் பகுதி கூடச் சற்று மறைவாகவே இருக்கும்.

அங்கே, உடை மாற்றும் அறையை ஒட்டினாற் போல, வட்டமான சிறு பிளாஸ்டிக் படகில் காத்திருந்தாள் வினோதினி.

''இது....'' என்று திவ்யா தயங்கினாள்.

''வள்ளம்.. அந்தப் படகில் வந்தால் மோட்டார் சத்தம் கேட்கும் என்று இதில் துடுப்பு தள்ளி வந்தேன். வா.. சீக்கிரம் ஏறிக் கொள்'' என்று அவசரப்படுத்தினாள் வினோதினி.



திவ்யா ஏறியதும் துரிதமாகத் துடுப்புப் போடலானாள்.

வேகமாக விலகிக் கொண்டிருந்த வீட்டைப் பார்க்கையில், இதயத்தின் ஒரு பகுதியையே வெட்டி வைத்து விட்டுப் போவது போல வலித்தது திவ்யாவுக்கு. ஆனால் இந்த வலி அவள் அனுபவிக்கவில்லை என்றால், சதானந்தனின் வாழ்வு அஸ்தமித்துப் போகும்.

பிடிவாதமாய்த் தலையைப் படகு செல்லும் திசைக்குத் திருப்பினாள் திவ்யா.

சூரியன் சிவப்புக் கோளமாய் மேல்திசையில் இறங்கத் தொடங்கிக் கொண்டிருந்தான். சற்றுநேரம் அதை வெறித்துக் கொண்டு இருந்தவளுக்கு ஏதோ தவறாகப்பட்டது.

என்னவென்று புரிந்ததும், ''வினோதினி, நாம் திருவனந்தபுரம் செல்ல வேண்டுமானால் கிழக்கு திசையில் அல்லவா போக வேண்டும். நீங்கள் மேற்கில் போகிறீர்களே?'' என்று கேட்டாள்.

''நேரே திருவனந்தபுரம் சென்றால் யார் கண்ணிலாவது பட வேண்டி இருக்கும். அதனால் தான்'' என்றவள் அருகில் வந்து விட்ட தென்னை மரத்திட்டின் பின்புறம் அந்தச் சிறு படகைச் செலுத்தினாள்.

அங்கே கரையோடு அவளது மோட்டார்ப் படகு இருந்தது. கரையில் இறங்கி, அந்தப் பிளாஸ்டிக் வள்ளத்திலிருந்த காற்றைத் திறந்து விட்டு, மோட்டார்ப் படகினுள் வினோதினி வைப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றவள், ''பொதுவாக இந்த மாதிரி பிளாஸ்டிக்கில் காற்றடைத்த படகுகள் பளிச்சென்ற கலர்களில் - மஞ்சள், பச்சை, சிவப்பு மாதிரி நிறங்களில் தான் நான் படங்களில் பார்த்திருக்கிறேன்'' என்றாள் திவ்யா.

''கருநீல நிறம் எனக்குப் பிடித்தது. அதனால் வாங்கினேன். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?'' என்று வினோதினி சுள்ளென்று எரிந்து விழவும் சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது.

அவளுக்காகவும் தான் என்றாலும், சதானந்தனுக்கு ஒளித்து ஒரு காரியம் செய்வது உறுத்துகிறது போலும். பாவம் என்று நினைத்து, வினோதினியிடம் மன்னிப்புக் கேட்டாள் திவ்யா... ''தொண தொணத்திருந்தால்.. சாரி.. வினோதினி''

''அதில்லை. இன்னமும் தூரம் போக வேண்டும். அப்புறமாய் நான் வீடு போய்ச் சேர்ந்தால், அம்மா அப்பா கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். அதனால் தான்.. வா.. இதில் ஏறிக் கொள்'' என்று ஒரு முழுக்கைச் சட்டை எடுத்து அணிந்தாள் வினோதினி.

அவளது ஆண் தன்மையான உடம்புக்கு இந்தச் சட்டை தான் பொருத்தம் என்று எண்ணியபடி படகில் ஏறி அமர்ந்தாள் திவ்யா.

படகு இப்போதும் சரியான திசையான தென்கிழக்கு நோக்கிச் செல்லவில்லை என்று கண்ட போதும், வினோதினிக்கு ஏதாவது காரணம் இருக்கும் என்று எண்ணியவாறே இருந்தாள் திவ்யா.

வெகுதூரத்தில் ஒரு சின்னப் பொட்டாய் ஒரு படகு தெரிந்தது.

அதைக் கண்டதும், அவசரமாகப் படகுக்குள்ளிருந்து, ஆண்கள் அணியும் ஒரு பெரிய வட்டத் தொப்பியை எடுத்து அணிந்து கொண்டாள் வினோதினி.

திவ்யா ஆச்சரியமாய் நோக்கவும், ''அந்தப் படகில் யார் வருகிறார்களோ... இரண்டு பெண்களாகப் போவது



தெரிவதை விட, ஆணும் பெண்ணும் ஜோடியாகப் போவது போலத் தோன்றுவது மேல் என்று தான்...'' என்றாள் வினோதினி.

'தொப்பி அணிந்த ஒருவரோடு..!'

வினாடிக்குள் பளீரிட்ட வெளிச்சத்தில் திவ்யாவுக்கு எல்லாம் புரிந்து போயிற்று.

நம்ப மாட்டாத பிரமிப்பில் விழிகள் அகல, ''வினோதினி! நீ.. நீங்கள் தான் பவித்ராவை.. ஓ காட்! என்ன அநியாயம்! ஏன்? ஏன் அப்படிச் செய்தீர்கள்? பவித்ரா எங்கே?'' என்று கேள்விகளை அடுக்கினாள்.

சுக்கானிலிருந்து திரும்பிய வினோதினியின் கண்கள், முக்கால்வாசி மறைந்து கொண்டிருந்த செங்கதிரோன் ஒளியில் பயங்கரமாய்ப் பளபளத்தன. ''பரவாயில்லையே.. நீ பவித்ராவை விடக் கெட்டிக்காரி தான். அந்த முட்டாள், பாவம், கடைசி வரை கண்டு கொள்ளவே இல்லை'' என்றாள் குரோதமே குரலாக.

## 25

வினோதினியின் வாயாலேயே உண்மையைக் கேட்க திவ்யாவுக்கு மேலும் அதிர்ச்சியாக இருந்தது.

என்னவெல்லாம் சொல்லி ஏமாற்றி விட்டாள்! ஆனால் ஏன்? இதனால் இவளுக்கு என்ன லாபம்?

சட்டென இன்னொன்று தோன்றி திவ்யாவின் நெஞ்சுக்குள் குளிர் பரப்பியது.

'கடைசி வரை' என்றாளே. அதற்கு என்ன அர்த்தம்?

ஊகூம். இவள் கண்ணும் குரலும், பேச்சும் கூட ஒன்றும் சரியில்லை. இவளோடு போவதும் பிசகு. பெரிய பிழை.

''படகைத் திருப்புங்கள், வினோதினி. இதற்கு மேல் நான் உங்களோடு வருவதாயில்லை'' என்றாள் திவ்யா, முடிந்த அளவு கண்டிப்பான குரலில்.

''வரவில்லை என்றால் தண்ணீரில் குதி'' என்றாள் வினோதினி. அன்று வரை போட்ட வேடத்தை அடியோடு கைவிட்டு, ''இந்த இடம் கிட்டத்தட்ட இருபது மீட்டர் ஆழம் இருக்கும் என்று நினைக்கிறேன். குதித்து, அப்படியே காலாற நடந்து போவதானால் உன் இஷ்டம்'' என்றாள் எகத்தாளமாக.

''நான் கத்துவேன்''

''தாராளமாக. இந்த மோட்டாரின் சத்தத்தைத் தாண்டி உன் குரல் யாருக்காவது கேட்கும் என்று நம்பும்பட்சத்தில் தாராளமாகக் கத்தலாம்''

தூரத்தில் தெரிந்த படகைத் திரும்பிப் பார்த்தாள் திவ்யா. ஏற்கனவே நெற்றிப் பொட்டளவில் இருந்தது இப்போது சிறு புள்ளியாகி விட்டிருந்தது. எழுந்து, 'ஸ்கௌட்ஸ்' முறையில் கைகளை ஆட்டி உதவி கேட்கலாம் என்றாலோ, ஒன்று நிலை தவறித் தண்ணீரில் விழுந்து விடுவோமோ என்று பயமாயிருந்தது. அடுத்தது, அந்தப் படகில் ஆட்கள் இருப்பது இவள் கண்ணுக்குத் தெரியாத போது, அவர்களுக்கு மட்டும் இவள் கைகளை ஆட்டுவது எப்படித் தெரியும்?

ஊகூம். இதில் எதுவும் பிரயோசனம் இல்லை. பொறுத்துத்தான் பார்க்க வேண்டும். இவள் எங்கேயாவது நிறுத்தித்தானே ஆக வேண்டும். அவளும் ஒரு பெண். தானும் ஒருத்தி. ஒண்டிக்கு ஒண்டி பார்த்துக் கொள்ளலாம். அதற்குள்.. நடுக்கடலில் தள்ள வேண்டுமானாலும் பக்கத்தில் வந்துதானே



ஆக வேண்டும். பார்த்துக் கொள்ளலாம். இப்போது தைரியமாக இருப்பதுதான் முக்கியம்.

இடையில் அவள் சுக்கானைப் பற்றியபடி, செல்லும் திசை நோக்கியபடி படகை ஓட்டுகையில் பின்னோடு போய்த் தலையில் ஓங்கி அடித்து விடலாம் என்றாலும் அதன் பிறகு படகை ஓட்ட அவளுக்குத் தெரியாது.

நெஞ்சுத் திடத்தைக் கூட்டி வைத்துக் கொண்டு வினோதினி படகை நிறுத்துவதற்காகக் காத்திருந்தாள் திவ்யா.

படகோட்டும் விஷயத்தில் திவ்யாவின் அறியாமையை அறிந்திருந்ததாலோ என்னவோ, வினோதினியும் அவளைப் பற்றிய அக்கறை இல்லாமலேயே தான் படகை ஓட்டிச் சென்றாள்.

சுற்றுமுற்றும் ஒரு சிறு படகு கூட வராதபடி இது என்ன இடம் நோக்கி இவள் போகிறாள் என்று திவ்யா யோசிக்கும் போதே படகின் வேகம் மிகவும் குறைந்தது.

கடலின் பரப்புக்கடியிலும், சற்று மேலே நீட்டிக் கொண்டும், பெரிய கடல் ஆமைகள் போல அங்குமிங்கும் கிடந்த பெரிய பாறைகளைக் கண்டதும் மற்ற படகுகள் கண்ணில் படாத காரணம் புரிந்தது திவ்யாவுக்கு.

ஆனால் இந்தப் பாறைகளின் மேல் மோதிவிடக் கூடும் என்ற பயம் ஏதும் இவளுக்கு இருப்பதாகத் தெரியவில்லையே!

படகு ஓட்டுவதில் வினோதினியின் லாகவத்தைப் பார்த்து திவ்யா எத்தனையோ தரம் வியந்திருக்கிறாள். இன்று அந்த லாகவமே அவளை அஞ்ச வைத்தது.

பாறைகளினூடே சென்ற படகு, ஒரு சிறு மேடை மாதிரி இருந்த பாறையின் அருகில் வந்து நின்றது. முளைக்கயிற்றை இழுந்து ஒரு பெரிய கல்லின் முனைப்பகுதியில் கட்டினாள் வினோதினி. ''இறங்கி வா'' என்றாள் திவ்யாவிடம்.

சுற்றிலும் பார்வையை ஓட விட்ட திவ்யா, எல்லாத் திசையிலும், கடல் நீரைக் காணவும் மறுத்தாள். ''முடியாது'' என்றாள் படகு விளிம்பை இறுகப் பற்றியபடி.

''இதைப் பயன்படுத்தும்படி செய்ய மாட்டாய் என்று நினைக்கிறேன்'' என்ற போது வினோதினியின் கையில் ஒரு கத்தி, சற்றுநீளமான கத்தி இருந்தது.

வினோதினியின் வெறிகொண்ட பார்வையிலும் கையில் கத்தியைப் பிடித்திருந்த தினுசிலுமாகத் திவ்யா இறங்கி வந்தாள்.

''யோசி.. வினோதினி. அவர் என்னைத் தேட மாட்டாரா?''

''மனோரஞ்சனோடு ஓடிப்போனவளை எப்படித் தேடுவார்? இந்தப் பக்கம்.. இந்தப் பக்கமாக வா என்கிறேன்'' என்று குரலையும் கத்தியையும் உயர்த்தினாள் வினோதினி.

அவள் சொன்ன இடத்துக்குத் திவ்யா சென்று நிற்கவும், ''நீ பரவாயில்லை.. பவித்ராவை இழுத்துத்தான் போட வேண்டியிருந்தது'' என்று சிரித்தாள் வினோதினி. வெறிச்சிரிப்பு தான்.

'பாவம் அந்த பவித்ரா' என்று நெஞ்சக் கசிந்தது திவ்யாவுக்கு. ஓரளவு திட மனம் கொண்ட தனக்கே இந்தப் பாடு என்றால் சாதுவான பெண் என்று சொல்லப்பட்ட அவள் எப்படி நடுங்கியிருப்பாள்!



ஆனால் இந்த வினோதினி.. ஒரு பெண்ணால் இந்தக் கொடுமை செய்வது எப்படி சாத்தியம்?

''ஆனால் ஏன் வினோதினி?'' என்று பேச்சுக் கொடுத்தாள் திவ்யா. மெல்ல இவளை அமைதிப்படுத்தினால்... ஒருவேளை...

ஆனால், ''வந்தீர்களே, ஒருவர் மாற்றி ஒருவராய்ச் சதானந்தனைப் பிடித்துக் கொள்ள? அதற்குத்தான் இந்தத் தண்டனை..'' என்று ஆங்காரமாய்க் கத்தினாள் அடுத்தவள். ''எனக்கு முத்துத்தீவு மாளிகை வேண்டும். பச்சைமலை எஸ்டேட் வேண்டும். எறாத் தொழிலில் மிச்ச மூன்று பாகமும் வேண்டும். வெளிநாட்டு ஏற்றுமதியிலேயே பணம் கொழிக்கும் நார்க் கம்பளத் தொழில் வேண்டும். இத்தனையும் என்னுடையது. இதை எடுத்துக் கொள்ள வந்தால் விட்டு விடுவேனா? கொல்லு.. கழுதைகளை!

''அப்படியும் உனக்குத் தப்பிக்க இன்னொரு வாய்ப்பு தந்தேன். மதராஸ் வரை, போய், மனோரஞ்சனுக்கு எவ்வளவோ விதமாய் எடுத்துச் சொல்லி வரவழைத்து அவனோடு சென்று உயிர் பிழைக்க உனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தேன். முட்டாள் நீ, அதைப் பற்றிக் கொள்ளவில்லை என்றால் அது உன் தப்பு...''

ஆக இவள் வேலைதானா மனோரஞ்சன் வந்தது? ஆம்... அப்படித்தான் இருக்க வேண்டும் என்று இப்போதுதான் புரிகிறது. தன் பெயர் சொல்லக் கூடாது என்று கூட வாக்கு வாங்கியிருப்பாள். ஆமாம்.. அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால் அப்போது மூளைக்குப் பதில் களிமண் அடைத்துக் கொண்டு இருந்திருக்கிறது என்று எரிச்சலாய் எண்ணினாள் திவ்யா. அப்போது ஒன்றுமே புரியாமல் போயிற்றே! ஆனால் இப்போது அதுபற்றி நினைத்துப் பயன் இல்லை.

"ஒன்றை யோசித்துப் பார்த்தாயா, வினோதினி. அவருக்கு உன்னிடம் ஈடுபாடு இருந்திருந்தால் பவித்ராவை எட்டிக் கூடப் பார்த்திருக்க மாட்டாரே. சிவாவுக்காக ஒரு மனைவி வேண்டும் என்றபோது தானாக உன்னையல்லவா கேட்டிருப்பார்? அந்த ஈடுபாடு இல்லாத போது..."

"வரும்.. ஈடுபாடு வரும்!" என்று ஆத்திரமாகக் கத்தினாள் வினோதினி. முன்னே பின்னே அறியாத இரண்டு அழகு ராணிகள் முகத்தில் பட்டையாகக் கரியடித்து விட்டார்கள் என்று ஆன பிறகு, பக்கத்திலேயே பார்த்து வளர்ந்த இந்த வினோதினி கட்டாயம் கண்ணுக்குப் படுவாள்.. என்றாள் பிடிவாதத்துடன். "திருமணமான பிறகு நானும் சதுவுமாக இந்தப் பக்கம் ஒருதரம் வருவோம். அப்போது நீயும் பவித்ராவும் ஆவி உருவில் எங்களை ஆசீர்வதிக்கலாம்".

அதற்கு மேல் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல், வினோதினி மேல் பாய்ந்து விட்டாள் திவ்யா. கத்தியை தட்டி விட முடிந்த போதும் வினோதினியின் உடல் பலம் விரைவிலேயே திவ்யாவைக் கீழே தள்ளி விட்டது.

மூச்சிரைக்கக் கீழே கிடந்த திவ்யாவை அலட்சியமாகப் பார்த்தபடி, கத்தியை எடுத்தாள் வினோதினி. "பாதிநாளை 'ஜிம்'மில் கழிப்பவள் நான். என்னிடமா மோதிப் பார்க்கிறாய்?" என்றாள் கோபமும் ஏளனமுமாக. கத்தியையும் திவ்யாவையும் ஏதோ கணக்கிடுவது போலப் பார்த்தவள், "இல்லை.. என் கையில் ரத்தக்கறை படிவது எனக்குப் பிடிக்கவில்லை. முன்பு அந்தச் சனியன் சும்மா முழுகிச் செத்த போதே இரண்டு மாதம் என்னால் சரியாகத் தூங்க முடியவில்லை. சாப்பாடும் இறங்கவில்லை. அதனால் அதற்கு மேல் வேண்டாம்" என்று முணுமுணுத்தபடி கத்தியை மடக்கிப் பைக்குள் போட்டுக் கொண்டாள்.



திவ்யாவின் பார்வை சுற்றிலும் நீரை நோக்கிச் சுழல்வதைக் கண்டதும், "உயரத்தில் தானே இருக்கிறோம். எப்படி முழுகிச் சாவோம் என்று எண்ணுகிறாயா? இன்று பவுர்ணமி. கடலின் ஓதம் உச்சத்தில் இருக்கும் நாள். ஓத நீர்... அதுதான், கடலின் பெருக்குநீர் இந்த இடத்தில் கிட்டத்தட்ட ஆறு மீட்டர் உயரம் வரும். அதிலேயே முழுகி விடுவாய். அப்படி இல்லா விட்டாலும், அதை நீரோடு வரும் சுறாமீன்கள் உன்னைப் பீஸ் பீஸாக்கி விடும். ஸோ, குட்பை" என்று படகுக் கயிற்றை அவிழ்த்தாள் வினோதினி.

திவ்யா இப்போது மெய்யாகவே பயந்து போனாள். "வினோதினி, ப்ளீஸ்.. என்னை விட்டு விட்டுப் போகாதே. என்னை வழியில் எங்காவது கரையில் விட்டு விட்டுப் போனாலும் போதும். சதானந்தனின் பக்கமே வராமல் ஒதுங்கிப் போய் விடுகிறேன்.. ப்ளீஸ்" என்று கெஞ்சினாள்.

எப்படியும் சதானந்தனின் மனதில் அவள் இல்லை. சிவாவின் வழக்கும் முடிந்து போயிற்று. மனோரஞ்சன் விஷயத்தில் அவள் மேல் தப்பு இல்லை என்று தெரிந்தால் கூட அவளது தண்டனையை ஆனந்தன் ரத்து செய்யக்கூடுமே தவிர, விவாகரத்து நிச்சயமே. அப்படியிருக்க இங்கே தண்ணீரில் முழுகி பயங்கரமாகச் சாவதை விட, எங்கானும் போய்ச் சாதாரணமாகச் சாகலாமே!

ஆனால் வினோதினியின் மனம் சற்றும் இளகுவதாக இல்லை. படகில் அமர்ந்து மோட்டாரை ஓட விட்டவள், "ஒன்று சொல்ல மறந்து விட்டேனே. சதானந்தன் இப்போது உனனைக் காதலிக்கத் தொடங்கி விட்டானாம். அதனால் உன் வளர்ப்புப் பெற்றோரிடம் விஷயத்தைச் சொல்லி, அவர்களின் ஒப்புதலையும் பெற்று வரத்தான் மெட்ராசுக்குப் போனானாம். தண்ணீர் தலைக்கு மேல் போய் மூச்சுக்குத் தவிக்கும் போது, வர இருந்த சொர்க்க வாழ்வையும் நினைத்து

ஏங்கு...'' என்று அவள் முடிக்கும் போதே சீறிப் பாய்ந்து விட்டது படகு.

ஒருவாறு அப்போதுதான் எழுந்து நின்ற திவ்யா, ''வினோதினி.. நில்லுங்கள்'' என்று பின்னோடு ஓடினாள்.

ஆனால் பாறைப்பகுதியைத் தாண்டிக் காலை வைத்தவளுக்கு நீரின் ஆழத்தில் நிலை கொள்ளாமல் போய் விட, தவித்து, தன் அரைகுறை நீச்சலில் மீண்டும் பாறையையே அடைந்து அதில் ஏறி நின்றாள்.

மாலை வெளிச்சம் வேகமாக மறைந்து இருள் பரவத் தொடங்கியிருந்தது.

வினோதினியின் படகில் விளக்கொளி தெரிந்தது. அது புள்ளியாக மாறி மறைந்த போது கடலின் நீர் மட்டம் ஏறி அவள் பாதங்களின் மேல் நீர் அடிப்பதை அச்சத்துடன் கண்டாள் திவ்யா.

ஓதநீர் விஷயத்தில் வினோதினி பொய் சொல்லவில்லை. கொஞ்சம் கொஞ்சமாய் நீர்மட்டம் ஏறிக் கொண்டே போயிற்று. கடல் நீரின் அலைப்பு காலைத் தடுமாற வைத்தது. முடிந்த அளவு நிமிர்ந்து நின்று, தலையைத் தூக்கி, மூக்கை உயர்த்தி நின்றவளின் தலைக்கு மேலாக ஓர் அலை பரவிச் சென்ற போது, வினோதினி சொன்ன சுறாமீனும் வந்தது. அவளது இடது கரத்தில் அது பலமாக மோத, பயங்கர வலியுடன் அந்தக் கை செயலிழந்து போயிற்று. அந்தக் கை இருக்கிறதா, இல்லையா என்று கூடப் பார்க்க முடியாமல் மூச்சுக்காற்றுக்கு எம்பிக் குதிக்க வேண்டிய நிலை. குதித்து, தண்ணீருக்கு மேலே தலை வரும் போது மூச்செடுத்துக் கொண்டு மீண்டும் தண்ணீருக்கடியில் போக வேண்டிய நிலை. இது எவ்வளவு நேரம் நடக்கும்? தலைக்கு மேல் அரையடி உயரம் நீர் இருக்கும் போது இந்தப் பாடு.



இன்னமும் வினோதினி சொன்ன மாதிரி இதை விட மூன்று மடங்கு உயரத்துக்கு நீர் வரும் போது என்ன ஆகும்? எண்ணிப் பார்த்துப் பயப்படக்கூட முடியாத நிலை.

அடுத்து அப்படிக் குதித்த போது, அந்த மீனின் பருத்து உருண்ட உடல் அவளது வலது கைப்புறமாக வருவது நிலவின் ஒளியில் வரிவடிவாகத் தெரிந்தது.

ஒரு மூச்சுக் காற்றுக்குத் தவித்துச் சாவதை விட, இந்த மீன் ஒரேயடியாகக் கழுத்தைக் கடித்துக் கொன்று விடட்டும் என்று எண்ணியவளாக தாவி வலது கையால் அந்த மீனை முடிந்தமட்டிலும் பலமாகப் பற்றிப் பிடித்து இழுத்து 'இந்தா.. வா என்னைச் சாப்பிடு' என்றதோடு நினைவிழந்தாள் திவ்யா.

சதானந்தன் மீண்டும் தன் மாளிகைக்குத் திரும்பி வரும் போது இரவு வெகுநேரம் சென்று விட்டிருந்தது. ஆனால் அப்போதும் கூட வீட்டுக்கு வருவது வெறுப்பாகத் தான் இருந்தது. திவ்யா இந்த மாதிரிச் செய்யக்கூடும் என்று யாரால் எதிர்பார்க்க முடியும்?

மனோரஞ்சனை வரவழைத்தது கூடப் போனால் போகிறது என்று விட்டு விடக் கூடியதே. கடிதம் இல்லை, விடுதலை என்று ஆனதும் தன்னையே அறியாமல், தன்னை மீறிய ஓர் உற்சாகத்தில், மனோரஞ்சனுக்கு உண்மை தெரிவித்து விட வேண்டும் என்று வரவழைத்தாள் என்று ஒரு காரணம் சொல்லிக் கொள்ளலாம்.

ஆனால் தான் அவனை வரவழைக்கவே இல்லை என்று ஒரேயடியாய்ப் பொய் சொன்னதைத்தான் அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. படிப்படியாக ஏறிவந்து அவளது மனப்பீடத்தில் அமர்ந்து விட்டவள் ஒரு நொடியில் தலைகுப்புற விழுந்து விட்டாளே!

கஷ்டம் என்னவென்றால் அவன் மனதிலிருந்து அவளைத் தூக்கி எறிய முடியாமல் போனதுதான்.

வீடு வரப்பிடிக்காமல் சற்று நேரம் 'கிளப்'புக்குப் போய் அமர்ந்திருந்தான்.

குடித்துவிட்டு, நாவின் மேல் கட்டுப்பாடு தளர்ந்து, உளறுகிறவர்களைக் கண்டால் அவனுக்கு உள்ளூர எரிச்சல் வரும். அதனாலேயே அவன் லேசில் குடிப்பது இல்லை.

தொழில் ரீதியாக எங்கேனும், 'ஃபார் கம்பெனி ஸேக்' என்று தொட நேர்ந்தாலும் ஒரே 'பெக்'குடன் நிறுத்திக் கொள்வான். அந்த ஒரு 'பெக்' காலியாகி விடாமல் கையில் வைத்துக் கொண்டே இருந்து தீர்த்து விடுவான். அப்படிப்பட்டவன் அன்று இரண்டாவது 'பெக்' குடித்தான்.

ஆனால் அதற்கும் மனது கசந்தது.

அவன் மனவுறுதி மிக்கவன் என்று பெயரெடுத்த சதானந்தன். ஒரு பெண் பொய் சொன்னாள் என்று குடிப்பதா?

பெண்களின் புத்தியென்ன அவன் புதிதாக அறிவதா?

தன் மீதே சினம் கொண்டவனாக, எழுந்து, மடமடவென்று வீட்டுக்கு வந்தான்.

ஏதேதோ நினைத்து, சிவாவை அம்மாவிடம் விட்டு வந்தது வீண் என்று நினைத்தான். அவன் இருந்தாலாவது இந்த இறுக்கம் கொஞ்சம் தளரக் கூடும்.

வெறுப்புடனேயே வீட்டுக்குள் செல்லத் தொடங்கியபோது, மாயன் அவன் பின்னே ஓடிவந்தான்.

மாயனுடைய குடும்பம் மிகவும் விசுவாசம் மிகுந்தது. அறியாத மக்கள். கொத்தடிமைகளாக அரை வயிற்றுக்



கஞ்சிக்காக ஓடாக உழைத்துக் கொண்டிருந்த குடும்பத்தைக் காப்பாற்றி, தன் மாளிகைக்கே அழைத்து வந்தான். மூன்று வேளை வயிறார உணவும், கிழியாத துணிமணிகளும் தங்கும் நிழலுமே பெரும் சொர்க்கமாகத் தோன்றின. இவற்றை அளித்த சதானந்தன் சாட்சாத் அந்தப் பரமேசுவரனேதான்.

ஆனால் சதானந்தன் அத்தோடு நின்று விடாமல் மாயனின் குடும்பத்துப் பிள்ளைகளைப் படிக்க வைத்தான். சுத்தம், சுகாதாரம் கற்றுக் கொடுத்தான். சம்பளமாகப் பணம் கொடுத்து, ஓய்வு காலத்துக்காகச் சேமிக்க வைத்தான்.

இத்தகைய காரணங்களினால் அவனுக்காக, அவர்கள் உயிரை விடவும் தயாராய் இருந்தார்கள்.

சதானந்தன் எங்கேனும் சென்று திரும்பி வரும்போது பின்னோடு வந்து பெட்டியை வாங்கி வைப்பதில் மாயனுக்கு ஓர் ஆனந்தம்.

அன்றும், அந்த இரவிலும் அவன் பின்னோடு வரவும், 'பெட்டி இல்லை' என்று காட்டினான் சதானந்தன்.

ஆனால் அவன், திவ்யாவே இல்லை எனவும் பகீர் என்றது. திவ்யா உணவுக்கு வரவில்லை. தேடிப்பார்த்தால் மாளிகை, தோட்டம், கடற்கரை எங்கேயும் இல்லை.

சற்று நேரம் சதானந்தனுக்கு ஒன்றும் புரியவில்லை.

மோட்டார்ப் படகுதான் இவ்வளவு தூரம் வந்து போக முடியும். அப்படி ஒரு படகு வந்திருந்தால் இவர்களுக்குத் தெரியாமல் — கேளாமல் வர முடியாதே.

மாலையில் திவ்யா கடலில் குளிக்கும் இடம் நோக்கிச் சென்றதை அவர்களில் ஒரு சிறுவன் கண்டதாகச் சொன்னார்கள்.

அவளுக்குத் தெரிந்த நீச்சலைக் கொண்டு இருபது மீட்டர் தூரம் கடலில் அவளால் போக முடியாது. அப்படிப் போகிற எண்ணமே வரக் கூடாது என்று தானே, சதானந்தன் அவளுக்கு நீச்சலைக் கூட முழுமையாகக் கற்றுக் கொடுக்கவில்லை. முழுகாமல் சமாளிப்பதோடு சரி, படகிலோ, சுக்காளின் பக்கமே வரவிட்டதில்லை.

பின்னே! ஒரு கணம் அவனது நெஞ்சு நின்றது. ஒருவேளை, அவனது அந்த முரட்டு அணைப்பின் பின், இந்த வீட்டில் இருப்பதற்குப் பதிலாகச் சாவுகூட மேல் என்று தனக்குத் தெரிந்த நீச்சலில் கிளம்பியிருப்பாளோ?

ஆனால் அவள் அப்படிப் பொசுக்கென்று உயிர் விடுகிற ரகம் அல்ல. தற்கொலை கோழைத்தனம் என்று மற்றவரைச் சொல்கிறவள். அதையே அவள் செய்வாளா?

தென்கிழக்கில் மோட்டார் போட்டில் சுற்றியவன் பற்றி, வினோதினி எச்சரித்ததைச் சொன்னான் மாயன்.

நடந்த விஷயம் பற்றி ஒரு யூகம் வந்தது சதானந்தனுக்கு.

மோட்டார் படகு மூலம், வேலையாட்கள் கண்ணில்படாத அளவுக்குத் தூரத்திலேயே, மாளிகையைச் சுற்றி வந்து, மோட்டாரை நிறுத்தி, துடுப்பு துழாவி குளிக்கும் துறைக்கு வந்திருக்கிறான் மனோரஞ்சன். இவள் தயாராக இருந்திருக்கிறாள். படகில் ஏற்றிக் கொண்டு, மீண்டும் துடுப்பின் உதவியாலேயே வெகுதூரம் சென்று, பிறகு மோட்டார் போட்டுப் போயிருக்கிறார்கள்!

இது மனோரஞ்சனுக்கும் முடியாத காரியம்தான். ஆனால் கூடக் கொஞ்சம் பணம் கொடுத்தால் சொன்னதைச் செய்வதற்கு ஆளா இல்லை!



போகட்டும். அவ்வளவு ஆசையிருந்தால் போகட்டும். ஆனாலும் திவ்யாவுக்கு மனோரஞ்சனிடம் ஆசையிருக்கக் கூடும் என்றும் அவனால் சற்றும் நம்பமுடியவில்லை.

ஆனால் திவ்யாவின் மறைவுக்கு வேறு விளக்கமும் இல்லை.

திடீரென்று அவனுக்குப் பவித்திராவின் நினைவு வந்தது. அவள் பணத்தை எடுத்துக் கொண்டு இன்னொருவனோடு ஓடிப் போனாள். அவளும் கூட இதே வழியில்தான் சென்றிருக்க வேண்டும்.

இன்று திவ்யா பணம் எடுக்காமல் ஒருவனோடு ஓடியிருக்கிறாள்... அல்லது....

வேகமாகச் சென்று இரும்புப் பெட்டியைத் திறந்து பார்த்தவன் திகைத்தான். திவ்யாவுமா பணம் திருடினாள்? அம்மா தந்த பட்டுச் சேலையைத் தொடக்கூடத் தயங்கியவள்... இங்கே... ஊஹூம் இதில் ஏதோ தப்பு இருக்கிறது.

அது என்ன தப்பு என்று தெரியாததினாலேயே அந்த இரவு முழுவதும் சதானந்தன் நிம்மதியின்றித் தவித்தான்.

## 26

சிறுவயதில் பழைய காலக் கதைகளில் சொர்க்கத்தைப் படிக்கும் போது திவ்யா ஆவலாக அதைக் கற்பனை செய்து பார்த்ததுண்டு.

ஒளிமயமான தங்க சிம்மாசனத்தில் பளிச்சிடும் வைரம், வைடூர்யம் பதித்த நகைகள் அணிந்து, அந்த நகைகளை

மிஞ்சிய தேக ஒளியோடு தேவர்களும், தேவகன்னிகைகளும், பளபளக்கும் வெள்ளி வீதிகளில் ஆடிப் பாடிக் கொண்டு... எல்லாம் நன்றாய்த்தான் இருந்தது. ஆனால் பூவுலகத்திலிருந்து வந்த புதிது என்பதாலோ என்னவோ இந்த ஒளிமயத்தில் அவளுக்குக் கண் கூசியது. பிறந்த குழந்தைக்கு வெளிச்சத்தைப் பார்க்க முடியாமல் கண் கூசுவது போல...

சட்டென ஓர் ஐடியா கிடைத்தது அவளுக்கு. குழந்தை கண்களை மூடி மூடித் திறந்து வெளிச்சத்திற்குப் பழகிக் கொள்வது போல, அவளும் செய்யலாமே. எண்ணத்தைச் செயலாக்க முனைந்து கண்களை மூட முயன்றபோதுதான் அவளது கண்கள் ஏற்கனவே மூடி இருப்பது புரிந்தது.

மூடிய கண்களுக்குள்ளேயே இவ்வளவு ஒளி வெள்ளமா? திறந்து இந்த வெளிச்சத்தை எப்படிப் பார்க்க முடியும்? கண்ணில் இருக்கும் லென்ஸ், விழித்திரை எல்லாம் பழுதாகி விடாதா? பேசாமல் கொஞ்ச நேரம் இப்படியே படுத்துக் கொண்டிருக்கலாம் என்றால் காலில் இந்தக் குறுகுறுப்பு!

காலைச் சேலைக்குள் இழுத்துக் கொள்ள முயன்றால் ஈர மணல் நறநறத்தது.

ஈரமணல்? அது அவள் படித்த தேவலோகத்தில் கிடையாதே. அத்தோடு ஏதேதோ சத்தங்கள்... அலை ஓசை! கடல் பறவைகள் ஒலி.... இதெல்லாம்.....

சட்டென எழுந்து அமர்ந்தபடி கண்களைத் திறந்து பார்த்தாள். திவ்யா. எல்லையில்லாமல் விரிந்த பரந்த நீலக்கடல். உச்சி வெயிலைப் பிரதிபலித்தபடி சின்னஞ்சிறு அலைகளுடன் சாதுவாய்க் கிடந்தது.



அண்ணாந்து பார்த்தாள். உச்சிக்கு வந்து விட்ட கதிரவன் கண் கூச வைத்தான். இந்த வெளிச்சம் தான் மூடிய இமைகளின் வழியே கண்கூசச் செய்திருக்கிறது.

கால்வின் குறுகுறுப்பு நினைவு வர அங்கே நோக்கினாள். சின்னஞ்சிறு நண்டுகள்... அசைவற்று, கட்டைபோலக் கிடந்த அவளது கால்கள் மீது ஏறி ஓடியிருக்க வேண்டும்.

ஆக, அவள் சாகவில்லை.

சற்று நேரம் எல்லாம் மரத்துப் போனாற் போல, அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

இது எப்படி சாத்தியம்? இரவு அந்த... சட்டென்று அச்சத்துடன் இடது கைப்புறம் பார்வையைத் திருப்பினாள்.

அதிசயமாய் அங்கே கை இருந்தது. வலது கையால் தொட்டுப் பார்த்தாள். முழுமையாக அப்படியே இருந்தது.

இதுவும்தான் எப்படி சாத்தியம். அந்தச் சுறாமீனைப் பிடித்து, தன்னைச் சாப்பிடச் சொன்னது கூட நினைவு இருக்கிறதே... அவளைச் சாப்பிடாமல் அது எங்கே போயிற்று?

சுற்றுமுற்றும் பார்த்தாள்.

இரவு அவள் பற்றிப் பிடித்த பருத்து நீண்ட சுறாமீன் அருகிலேயே கிடந்தது.

அதைப் பார்த்ததும் அவளுக்குச் சிரிப்பு வந்தது. கலகலவென்று சிரித்தாள். அடக்க மாட்டாமல் விழுந்து விழுந்து சிரித்தாள். தான் சாகவில்லை என்று முழுமையாகப் புரிந்து, சாவின் எல்லை வரை வந்து மீண்டும் உயிர் பிழைத்த விந்தையை முழுமையாக உணர்ந்து பொங்கிப் பொங்கிச் சிரித்தாள்.

அங்காங்கே பறந்து கொண்டிருந்த கடல் பறவைகள் பழக்கமற்ற இந்தச் சிரிப்புச் சத்தத்தில் மிரண்டு போய்த் திரும்பிப் பார்த்து விட்டு விலகிப் பறந்தன.

அவளது காதுகளிலேயே அவளது சிரிப்பு விசித்திரமாய் ஒலிக்கத் தொடங்கிய பிறகுதான், தன்நிலையிழந்து சிரிப்பதைத் திவ்யா உணர்ந்தாள்.

பெருமுயற்சி செய்து சிரிப்பை அடக்கிக் கொண்டு எழுந்தாள். தாறுமாறாகக் கிடந்த சேலையை, உதறி ஒழுங்காகக் கட்டிக் கொண்டு கிளம்பினாள்.

நடையில் துள்ளலோடு, முதலில் அந்தச் 'சுறா மீனின் அருகே சென்று பார்த்தாள். மீண்டும் சிரிப்பு பீறிட்டது.

அது ஒரு பெரிய மரக்கட்டை. இரு கை கொண்டு சுற்றிப் பிடிக்க முடியாத அளவு பெரிய மரம். சுமார் மூன்று மீட்டர் நீளத்தில் அழகாக அறுக்கப்பட்டிருந்தது.

ஒருபுறம் மரத்தை வளருங்கள் என்று விட்டு இப்படியா என்று எண்ணியபடி அந்த மரத்தைத் தொட்டுத் தடவிப் பார்த்தாள் அவள். உயிர்காத்த கடவுள் அல்லவா?

மற்றபடி நடுக்கடலுக்கு இந்த மரக்கட்டை எப்படி வந்தது? நீரின் இழுப்பில் இந்த மரம் மோதியதைத்தான் சுறா மீன் கடித்ததாக எண்ணி விட்டாளோ என்னவோ? அதைப் பிடித்துக் கொள்ளும் புத்தியாவது வந்ததே!

திவ்யாவுக்கு மெல்ல மெல்ல உடம்பில் சுரணை வந்தது. மரம் மோதிய இடது கையில் வலி தெரிந்தது. முன்தினமும் சாப்பிடாத கிட்டத்தட்ட நான்கு நாட்களாகவே சரியாகச் சாப்பிடாத பசி, சோர்வு தெரிந்தது. எல்லாவற்றையும் விடத் தாகம் தொண்டையை, நாவை வறட்டியது.



திரும்பிப் பார்த்தாள். ஏதேதோ செடிகள், சிறு மரங்கள், அவற்றின் மேல் கொடிகள் என்று பசுமை தெரிந்தது. இத்தனை தாவரங்களில் அவள் பசி போக்க ஏதாவது இராதா? நம்பிக்கையுடனேயே சென்று தேடினாள்.

பெரிய குருவி மாதிரி ஒரு பறவை, ஒரு செடிமேல் அமர்ந்து எதையோ கொத்தித் தின்று கொண்டு இருந்தது. இந்தக் குருவி தின்பது அவளுக்கு ஆகாதா?

அவள் அருகில் செல்லவும், குருவி பயந்து பறந்தது. அது பாதி தின்றிருந்த பழத்தைக் கண்டதும் பாவம் குருவி, அதன் உணவைக் கெடுத்தோமே என்றிருந்தது அவளுக்கு. சின்னதாகச் சிவப்பு நிறத்தில் கோவம்பழம் போலப் பழம் அது. அதுபோன்ற பழங்களைத் தேடினாள். எண்ணி நாலு பழங்கள் கிடைத்தன. லேசான இனிப்புடன் கூடிய அந்தப் பழங்கள் தேவாமிர்தமாய் ருசித்தன.

ஆனால் தொண்டையளவு நனைந்ததே தவிர வயிற்றுப் பசி சற்றும் தணியுவில்லை. ஆனால் ஏதோ நாலு கிடைத்த நம்பிக்கையில் மேலும் தேடினாள்.

அது பூக்கத் தொடங்கும் காலம் போலும். செடிகளிலும், மரங்களிலும் மொட்டுகளும், பூக்களும் இருந்தனவே தவிர, பிஞ்சு கூட பிடிக்கவில்லை.

அவள் பழம் பறித்த அதே மாதிரிச் செடிகளைத் தேடிப் பார்த்தாள். இவைதான் முதல் பழங்கள் போல, மற்றபடி காய்கள்தான் காணப்பட்டன. பசி வேதனை தாங்க மாட்டாமல் ஒரு காயைப் பறித்து மென்றால், அதன் கசப்பில் முன்னே உண்டது கூட வெளியே வந்தது.

மேலும், மேலும் இரும்புத் தூணாய்க் கனத்த கால்களை இழுத்து இழுத்து, சென்று தேடினாள். நீருமில்லை. உணவும் இல்லை. ஒன்று தோன்றியது. இவ்வளவு தாவரங்கள்

இருக்கும் இடத்தில் தரைக்கு அடியிலேனும் நல்ல நீர் இல்லாமலா போகும்? அவசரமாக அங்கங்கே தோண்டிப் பார்த்தாள். மணல் குறைந்ததே தவிர நீரின் அறிகுறியே இல்லை. அலுத்து ஓய்ந்து போனாள் திவ்யா.

அன்றளவில் உயிர் பிழைத்த போதும், இந்த நிலை சாசுவதம் அல்ல என்று மெல்ல மெல்லப் புரியலாயிற்று.

தலைக்கு நேராக வந்து விட்ட சூரியன், வெங்கதிரோனாக மாறித் தன் பங்குக்கு தீயாய்க் காய்ந்து மேலும் தொண்டை வறளச் செய்தான்.

செய்கையற்றுச் சுற்றிலும் பார்த்தாள். கண் நோக்கிய இடமெல்லாம் தண்ணீர்! கோடி கோடி க்யூபிக் மீட்டர் தண்ணீர்! ஆனால் ஒரு வாய் ஒரே ஒரு வாய் அள்ளிக் குடிக்க வழியில்லை.

ஆகத் தண்ணீருக்குத் தப்பி, தாகத்தினால் சாகப் போகிறாளா?

உயிர் பிழைத்த சந்தோஷமெல்லாம் மறைந்தது.

உடல்களைப்பும், பசியும், தாகமுமாகச் சோர்ந்து விழுந்தாள் அவள்..

எவ்வளவோ முயன்றும் இரவில் சதானந்தனால் உறங்க முடியவில்லை.

வேண்டாம் என்று போனவளைப் பற்றி நினைக்கவே கூடாது என்று ஒதுக்கிவிட எவ்வளவோ முயன்றும் கூட மறைந்து போன பண விஷயம் அவன் மனதைக் குழப்பியது.

சர்வநிச்சயமாக திவ்யா உரிமையற்ற பணத்தைத் திருடக் கூடியவள் அல்ல... சொல்லப் போனால் மனோரஞ்சனும் அடுத்தவர் பணத்துக்கு ஆசைப்படுகிறவன் இல்லைதான்.



திவ்யாவின் மேல் உள்ள ஆசையில் வந்திருக்கலாம். ஆனால் பணத் திருட்டோடு அவனைச் சம்பந்தப்படுத்த முடியாது.

வேலையாட்கள் வெகு சுத்தம்.

பின்னே?

இயந்திரமாகக் காலை வேலைகளை முடித்தவன் வெளியே செல்ல மனம் இன்றி, அறையிலேயே அமர்ந்து மீண்டும் மீண்டும் மனதில் போட்டு உருட்டிக் கொண்டிருந்தான் அவன்.

திவ்யாவோடு சேர்ந்து பணமும் காணாமல் போனதினாலேயே அவளுக்கு ஏதோ ஆபத்து என்று அவனது உள்ளுணர்வு கூறியது.

போலீசுக்குப் போகலாமா என்று எண்ணியவன் அதற்கும் தயங்கினான். அவர்கள் உடனே திவ்யாவோடு பணத்தைச் சம்பந்தப்படுத்தித் திருடி என்று ட்டம் கட்டிப் பறையறைந்து விடுவார்களே!

அப்படி ஓர் அவப்பெயர் அவளுக்கு வருவதற்கு தான் காரணம் ஆவதா? ஊஹூம்.

தானாகச் சதானந்தனின் மனம் ஆறு ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றது. முன்பு பவித்ரா பணத்தோடு மறைந்த போதும், போலீசுக்குப் போகக் கூடாது என்றது முக்கியமாக அவன்தான். அவன் மணக்க இருந்த பெண் ஓடிவிட்டாள் என்று வெளியானால் அவனுக்கும், அவனுடைய குடும்பத்துக்கும் அது அவமானம் என்று எண்ணி மறுத்தான்.

ஆனால் இப்போது திவ்யாவை மட்டும் தானே நினைக்கத் தோன்றுகிறது.

யோசித்து, யோசித்துச் சலித்துப் போய், திவ்யா எங்கே இருந்தாலும், அவளுக்கு எந்தவித ஆபத்தும் நேராமல் காப்பாற்றும்படி பள்ளிகொண்ட பத்மநாபப் பெருமாளை வேண்டிக் கொண்டான் சதானந்தன்.

அப்போது குப்பென்று பழக்கமற்ற ஒரு நெடி அவனது நாசியைத் தாக்கியது. அளவு மீறித் தெளிக்கப்பட்ட சென்ட்!

மூக்கைச் சுளித்தபடி திரும்பிப் பார்த்தான்.

விநோதினி! 'பாலாவியன்ன நூலாவி' என்று சொல்வதற்கிணங்க, அடுக்கடுக்காய்ப் பறந்த மெல்லிய 'ஷிபான்' ஆடையில் ஒயிலாக நடந்து வந்து கொண்டிருந்தாள்.

வேறு யோசனையாக இருந்த சதானந்தனுக்குக் கூட அவளிடம் ஏதோ பெரிய வித்தியாசம், ஏதோ விசித்திரம் தெரிந்தது.

விசித்திரம்தான். அவளது உடை விசித்திரம், நடை விசித்திரம், சென்ட்டும் அப்படித்தான்.

முகத்தில் ஏதேதோ அலங்காரம் செய்து கொள்வாள் என்றாலும், பொதுவாக வினோதினி அணிவது ஜீன்சும், மேலே உள்ளாடை தெரிய ஒரு மெல்லிய சட்டையும்தான். படகில் சுற்ற அதுவே வசதி என்பாள்.

ஆனால் இன்று கிட்டத்தட்ட, ஸ்டார் டி.வி. கதாநாயகிகளின் பார்ட்டி உடை போல அணிந்து, அதை எடுத்துக்காட்டும் வண்ணம் அசைந்தாடி நடந்து வந்தாள்.

அவளது ஆண்பிள்ளைத் தனமான உடம்பில் இது எதுவும் பொருந்தவில்லை என்று அவள் தாயார் சொல்லியிருக்கக் கூடாதா என்று நினைத்தான் சதானந்தன்.



உடனே நினைவு வர, "உன் அம்மா எப்படி இருக்கிறார்கள்?" என்று விசாரித்தான்.

"ஆம்.... வந்து, அம்மாவுக்கு இப்போது நன்றாகி விட்டது, சது. அம்மா கூட இருந்ததற்கு ரொம்ப தாங்க்ஸ்..."

"சமயத்தில் இல்லாமல் எங்கே போனாய், வினு?" என்று கேட்டான் சதானந்தன்.

"பக்கத்தில்தான். ஒரு தோழிக்குப் புத்தி சொல்லப் போனேன். ஆனால் நான் இருந்தாலும், நீங்கள் இருந்தாலும் ஒன்று தானே சது? அம்மா கூட அப்படித்தான் சொல்லுகிறார்கள். சதுவை நம் குடும்பத்தில் ஒருவராகவே எண்ணத் தொடங்கி விட்டேன் என்கிறார்கள்..." என்றவள் அவன் அருகே வந்து வழக்கம் போலத் தோளை அணைக்கக் குனிந்தாள்.

முன்புறம் வெகுவாக இறங்கி தோள்புறம் இரண்டு சின்ன வண்ண நாடாக்களில் மட்டுமாய்த் தொங்கிய ஆடை அகன்ற விதம் அருவருப்பாய் உணர்ந்து, சட்டென விலகி எழுந்தான் சதானந்தன்.

மேசை மேல் இருந்த சிகரட் பாக்கெட்டிலிருந்து ஒன்றை உருவியபோது, பற்ற வைப்பதற்காக அருகில் இருந்த 'லைட்டரை' எடுத்துக் கொண்டு தயாராய் நின்றாள் வினோதினி.

உதவ வந்தது கூட வெறுப்பாய்த் தோன்ற, ஒரு கையால் தலையைக் கோதியவாறு ஒரு பெருமூச்சுடன் மீண்டும் அமர்ந்தான் அவன்.

கூடவே அமர்ந்து, அவன் கன்னத்தை வருடி, "போய்த் தொலைகிறாள், விடுங்கள் சது. முன்னே பின்னே அறியாத நாய்களை எல்லாம் கொண்டு வந்து நடு வீட்டில் வைத்தால்

இப்படித்தான். இங்கேயே இருந்து நாறடிக்காமல் போய்த் தொலைந்தாளே என்று சந்தோஷப்படுங்கள்'' என்றாள் வினோதினி தேறுதலாக.

''ஸ்... அப்படி இல்லை, வினோதினி... நான்.... நான் அவளிடம் கொஞ்சம் முரட்டுத்தனமாக நடந்தேன். அதில் பயந்து... என்னவாவது.... அதுதான் பயமாக இருக்கிறது'' என்றான் அவன். பண விஷயம் பற்றி வினோதினியிடம் சொல்லக் கூட அவனுக்கு விருப்பம் இல்லை.

பண விஷயம் அவன் மறைப்பது அவளுக்கும் புரிந்தது. அதை எடுத்து மறைத்ததே அவள் அல்லவா? இவ்வளவு இருக்கிறதா என்று உள்ளூர ஆங்காரமாய் எண்ணியவள், அப்படி இருப்பதை உடைத்துவிட எண்ணி, ''அவளா பயப்படுகிறவள்? திவ்யா எப்படிப்பட்டவள் என்று உங்களுக்குத்தான் தெரியவில்லை, சது. எல்லாம் முன்னேற்பாடு. கிளம்பும்போது இடையில் நீங்கள் வந்து விட்டால் இப்படி நடக்க வேண்டும் என்று கூட திட்டமிட்டு வைத்திருக்கிறாள். போகிற மாதிரிப் போய்ப் படகை மறைவாய் நிறுத்தி விட்டு, சத்தமில்லாமல் மனோரஞ்சன் வள்ளத்தில் வந்து பின்புறம் தயாராய் இருக்க வேண்டும் என்றும், இவள் நாய்களை அடக்கி, மற்றவர்களுக்குத் தெரியாமல் வள்ளத்தில் ஏறி ஓடிவிட வேண்டும் என்றும் பிளானாம்'' என்று அருகில் இருப்பவனிடம் மூச்சு விடும் அசைவு கூட இல்லாது போனதைக் கவனியாமல் சொல்லிக் கொண்டே போனாள்.

''உனக்கு எப்படித் தெரியும்?''

சொன்னதை உண்மையாக்கும் வேகத்தில், ''மனோரஞ்சனே சொன்னார், சது'' என்றாள் வினோதினி.



திரும்பி, அவள் முகத்தை நேராகப் பார்த்தான் சதானந்தன். ''மனோரஞ்சனை உனக்கு எப்படித் தெரியும்?''

தடுமாறிப் போனாள் வினோதினி. ''அ... அது திவ்யா சொல்லியிருக்கிறாள்... அதை வைத்துத் தெரிந்து கொண்டேன்...'' என்று சமாளித்தாள்.

''ஓகோ! அதை வைத்து அவனும் தங்கள் எதிர்காலத் திட்டத்தை எல்லாம் உன்னிடம் சொல்லி விட்டு வந்து திவ்யாவை அழைத்துச் சென்றானாக்கும். ஏய்....' என்று அவளை ஒரு கையால் முரட்டுத்தனமாய் எழுப்பி நிறுத்தியபடி, தானும் எழுந்தான். ''சொல்லு, மனோரஞ்சனை வரவழைத்தது நீதானே? அவனோடு திவ்யா வெளியேறாததால் நீயே.... காட்! உன் அம்மாவின் நெஞ்சு வலியே நாடகம்! உன் தாயும் உனக்குக் கூட்டு இல்லையா? அன்று பவித்ரா காணாமல் போன போதும் இதே நாடகம் போட்டு திருமண வீட்டிலிருந்து வீடு திரும்ப விடாமல் தடுத்தார்கள். அப்படித்தானே? அன்றும் நீ தேவைப்பட்ட நேரத்துக்கு என்னை வீட்டில் இருந்து அகற்றி.... பாவி! சொல்லு, திவ்யா எங்கே? அவளை என்ன செய்தாய்? சொல்லு...'' என்று அவளைப் பற்றி உலுக்கினான் சதானந்தன்.

''நா... நான்... இல்லை... சது. அய்யோ என்னென்னவோ பேசுகிறீர்களே... எனக்கு ஒன்றுமே தெரியாதே!'' என்று கண்களைக் கசக்க முயன்றாள் அவள்.

ஆனால் சதானந்தன் அவளது கழுத்தைப் பற்றி விட்டான். ''மரியாதையாக நடந்ததைச் சொல்லு. இல்லாவிட்டால் கொன்று விடுவேன்'' என்று அவளது காற்றுக் குழாயில் கட்டை விரலால் ஒருதரம் அழுத்திக் காட்டினான்.

அதற்குள் பலமாய் இருமல் வந்தது வினோதினிக்கு. நாடகம் முடிந்தது என்று உணர்ந்தாள். இருமியபடி, 'வி... விடுங்கள், சொல்கிறேன்' என்றாள். அவன் கை அகன்றதும், ஆங்காரமாய் நிமிர்ந்தாள்.... "பாறைக் கூட்டத்தின் நடுவே திட்டில் விட்டேன். நேற்றே பவுர்ணமிப் பெருக்கு தொடங்குவதற்கு முன்னால் விட்டேன். இந்நேரம் ஜலசமாதி ஆகியிருப்பாள். உனக்கு ஆசை யென்றால் அடுத்த பவுர்ணமிக்கு நீயும் அதே இடத்தில் போய் சமாதி ஆகி, உன் ஆசைக் காதலியுடன் சேர்ந்து கொள். என்ன? தைரியமாகச் சொல்கிறேனே என்று பார்க்கிறாயா? இதில் எதற்கும் சாட்சி கிடையாது. அதனால் என்னை நீ ஒன்றும் செய்ய முடியாது என்பதால்தான்" என்றவள் அதற்கு மேல் நில்லாமல் ஓடி மறைந்தாள்.

அவள் சென்ற திசையைப் பார்த்தபடி சற்று நேரம் சிலையாக நின்று விட்டான் சதானந்தன். மூச்சு விடக் கூட முடியாதது போல அவனால் ஒன்றுமே செய்ய முடியாமல் போயிற்று.

பாறைக் கூட்டம் அவனுக்குத் தெரியும். அவனுக்கு மட்டுமென்ன? அந்தப் பகுதியில் படகு செலுத்துகிறவர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். மேற்குமலைத் தொடரின் தொடர்ச்சியாகத் தண்ணீரினுள் அமிழ்ந்தும், லேசாகத் தலை நீட்டியும் கிடக்கும் பாறைகள், பாறைகளில் மோதிப் படகு சேதமாகி விடக் கூடாது என்று பொதுவாக யாருமே அந்தப் பக்கம் செல்வது இல்லை.

அந்த இடத்தில் இருபது அடி உயரத்தில் வரும் ஓத நீரின் நடுவே இரவு முழுவதும் அவனுடைய திவ்யா எப்படிப் பிழைத்திருக்க முடியும்? பெருக்கு நீரின் இழுப்பில் நீந்தத் தெரிந்தவர்கள் பிழைப்பதே அபூர்வம்!

முகத்தைப் பொத்திக் கொண்டு அழுது விட்டான் சதானந்தன்.



**சோ**ர்ந்து விழுந்த திவ்யா அப்படியே உறங்கி இருக்க வேண்டும். அல்லது மயங்கியும் கிடந்திருக்கலாம். மீண்டும் அவள் எழுந்தபோது செங்கதிரோன் மீண்டும் செங்கதிரோனாக மாறத் தொடங்கியிருந்தான்.

அவள் எழுந்து உட்கார முயன்றபோது, கைகால் அசைப்பதும் சிரமமாக இருந்தது. அப்படியே படுத்துக் கொண்டு விடலாமே என்று தோன்றியது. படுத்துக் கொண்டு, சதானந்தனைப் பற்றி நினைத்துக் கொண்டு.....

உடம்பு சோர்ந்து விட்ட போதும் மூளை வேலை செய்ததால் தனக்கு என்ன நேர்ந்திருக்கிறது என்பதை அவளால் உணர முடிந்தது. 'டி ஹைடிரேஷன்!' சீக்கிரமாக அவள் உடம்பில் தண்ணீர் ஏறவில்லை என்றால் விரைவிலேயே மரணம் நிச்சயம்.

அப்போதைய துன்பத்தில் சாவு மேல் என்று கூட அவளுக்குத் தோன்றி விட்டது.

இல்லை. சாகக் கூடாது. ஏன் சாகக் கூடாது என்பதற்குக் காரணங்களைத் தேடி தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

ஒன்று சதானந்தனைப் பார்த்து, தன்மேல் உள்ள பழியை நீக்காமல் சாகக் கூடாது.

அடுத்து, சதானந்தன் அவளைத் தேடி வரும்போது அவள் உயிரோடு இல்லை என்றால் அவன் வருத்தப்படக் கூடும். ஆனால் அவன் தேடி வருவானா? கவுரவம் கருதி அவன் பவித்ராவைத் தேடவில்லையே, இப்போது மட்டும் எப்படி வருவான்? .... இல்லை வருவான், நிச்சயம் வருவான். கடவுள் அவன் மனதுக்குள் புகுந்து அவனை நிச்சயம் வரச் செய்வார் என்று அழுது கொண்டே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டாள்.

கட்டாயம் அவன் வந்தே ஆக வேண்டும். வந்து, அவளைப் பற்றிய உண்மை மட்டுமில்லாமல் பவித்ராவின் குற்றமற்ற தன்மையையும் அவன் அறிந்தே ஆக வேண்டும். இல்லாவிட்டால் பவித்ராவின் ஆவி சாந்தி அடையாது.

நீர் தேடி, பெருமுயற்சி செய்து மீண்டும் நகரத் தொடங்கிய போது, மீண்டும் பவித்ராவின் நினைவு வந்தது. அவள் நீரிலேயே மூழ்கிச் செத்தாளோ, அல்லது இப்படிக் கரையில் ஒதுங்கித் தான் இறந்தாளோ? சொர்க்க வாழ்வை எதிர்பார்த்திருந்த பெண்ணை அநியாயமாய் அழித்து விட்டாளே இந்த வினோதினி!

இல்லை பவித்ரா விஷயம் இருக்கட்டும். இப்போது முதல் முக்கியத்துவம் குடிதண்ணீருக்குத்தான். அதைப் பற்றித்தான் யோசிக்க வேண்டும். இந்த மாதிரி தண்ணீர் கிடைக்காத நேரங்களில் என்ன செய்ய வேண்டும் என்று அவள் எதிலோ படித்திருக்கிறாளே...

மிகவும் முயன்று யோசித்தபோது ஒருவாறு நினைவு வந்தது.

"பப்பாளி போன்ற மரங்களின் தண்டை உடைத்து உறிஞ்சினால், கற்றாழை போன்ற தாவரங்களைத் தோல் முள் நீக்கித் தின்றால் உடலின் தண்ணீர்த் தேவை தீரும்"

புதிய தெம்புடன் மீண்டும் தேடத் தொடங்கினாள் திவ்யா. விரைவிலேயே இருள் பரவி விடும் என்ற பயத்தினால் வேகமாகவே தேடினாள். ஆனால் என்ன தேடியும் அந்த இருவகைத் தாவரங்களில் ஒன்று கூட அங்கே இல்லை.

அலைந்த மனது இன்னொரு வழி கண்டது. சில செடிகள், வேர்களில் நீரைச் சேமித்து வைப்பது உண்டு. 'காட்ஸ் மஸ்ட் பி கிரேசி' திரைப்படத்தில் கூட அப்படி ஒரு வேரை எடுத்துத்



தண்ணீர் குடிப்பது போல ஒரு காட்சியைப் பார்த்தது நினைவு வர, முன்பு போல வெளிகளில் தோண்டாமல் செடிகளின் அடியில் தோண்டத் தொடங்கினாள் திவ்யா.

கொஞ்சம் தோண்டுமுன் வெள்ளையாகப் பெரிதாக எதுவோ தென்பட்டது. வேர் உடைந்து போய் விடாமல் சுற்றிலும் தோண்டி அதைக் கையில் எடுத்துப் பார்த்தால்... பார்த்தால்.... அது ஒரு மண்டை ஓடு!

பவித்ராவின் மண்டை ஓடு!

தன்னை மீறி வீறிடலானாள் திவ்யா... சுயநினைவு இழந்து மயங்கி விழும் வரை அவளது அலறல் நிற்கவில்லை.

## 27

**ம**றுபடியும் கண்ணைத் திறப்பதற்கே திவ்யாவுக்குப் பயமாய் இருந்தது. அந்த மண்டை ஓடு இன்னமும் கையிலேயே இருக்கிறதோ!

விரல்களை மடக்கி, உள்ளங்கையோடு உரசிப் பார்த்தாள்.

கைகளில் ஒன்றும் இல்லாதபோதும் புறங்கையில் ஏதோ சுருக்கென்றது.

"ஊஹும் கையை அசைக்கக் கூடாதும்மா. 'டிரிப்ஸ்' இறங்குகிறதல்லவா!" என்று யாரோ ஆங்கிலத்தில் சொன்னார்கள்.

டிரிப்சா? ஏன்? யோசிக்க முயன்றவள் முடியாமல், அயர்வுடன் மீண்டும் கண்களை மூடிக் கொண்டாள்.

''பயம் ஒன்றும் இல்லையே'' என்று ரொம்பவும் பழகிய ஆண் குரல் கேட்டது. ''ஊஹூம்'' ஒன்றும் இல்லை. நீங்கள் உடனேயே 'எலக்ட்ரோஸ்' கலந்த தண்ணீரை உள்ளே செலுத்திக் கொண்டே வந்ததே பாதி குணமாகி விட்டதே'' என்றது பெண்குரல்.

உதடுகளைப் பிரித்து, எதையோ வாயில் வலுக்கட்டாயமாக ஊற்றி யாரோ தொந்திரவு செய்தது கனவுபோல நினைவு வந்தது அவளுக்கு.

யாரோ அருகில் வந்து நெற்றியை இதமாகத் தொட்டுப் பார்த்தார்கள். ''இனி நான் இருக்கிறேன்'' என்று அவளது கையைப் பற்றிக் கொண்டு அருகில் அமர்ந்தார்கள்.

நிம்மதியாய் உணர்ந்து தூங்கிப் போனாள் திவ்யா.

மீண்டும் அவள் கண்விழித்தபோது சதானந்தனின் இறுகிய முகத்தைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. ''என்னம்மா?'' என்று அருகில் வந்து 'பல்ஸ்' பார்த்த டாக்டர், நர்ஸ், மருத்துவமனையின் அறை எல்லாமே...

அவளை எப்படி, யார் காப்பாற்றினார்கள்?

அதை விட, சதானந்தன் ஏன் முகத்தை இப்படி வைத்திருக்கிறான்? ஓ! அவள் மேல் அவனுக்குக் கோபமல்லவா? ஷேவ் பண்ணாதது வேறு ஒரு மாதிரி இருக்கிறது!

'டிரிப்ஸ்' அவசியம் இல்லை என்று ஆளதுமே திவ்யாவை முத்துத் தீவுக்குக் கூட்டி வந்து விட்டான் சதானந்தன்.

பெரிய படகில் வெயில் படவிடாமல் அழைத்து வந்து, அவள் நடக்க முடியும் என்றதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் தானே அவளைத் தூக்கிச் சென்று படுக்கையில் கிடத்தினான்.



வினோதினி என்ன சொல்லியிருக்கிறாளோ?

என்ன பேசினால் எப்படி எடுத்துக் கொள்வானோ என்று வாய் பேசாமல் கிடந்த போதும், அவளது பார்வை அவனைப் பிரிய மறுத்து அவன் மீதே நிலைத்தது.

அவனும் சில கணங்கள் அவளையே பார்த்தபடி நின்றிருந்தவன், சட்டென அவள் அருகே அமர்ந்து, அவளை அள்ளி எடுத்து மார்பில் சாத்தி, ''என்னால் உனக்கு எவ்வளவு துன்பம்? என்னை மன்னிப்பாயா, கண்மணி!'' என்றான் கரகரத்த குரலில்.

விலுக்கென்று திவ்யாவின் தலை நிமிர்ந்தது. ''எ... என்னையா சொன்னீர்கள்?'' என்றாள் மெலிந்த குரலில் ஆச்சரியத்தோடு.

சதானந்தனின் பார்வை கனிந்தது. அவளது மூக்கைப் பிடித்து லேசாக ஆட்டி, ''நான் வேறு யாரைச் சொல்வேனாம்?'' என்று செல்லமாக அவன் கேட்கவும், திவ்யாவின் விழிகள், மேலும் விரிந்தன.

இது நிஜம்தானா? அல்லது மீண்டும் சொர்க்க லோகத்துக் கனவா?

தன்னையே அவள் கிள்ளிப் பார்க்கவும் சதானந்தன் வாய் விட்டுச் சிரித்தான்.

அவளது வியந்த விழிகள் இன்னமும் புரியாமலே நோக்கவும், தலையசைத்து, ''இப்போதே நான் இந்தப் பேச்சை எடுத்திருக்கக் கூடாது. கண்களை மூடிக் கொண்டு நன்றாக ஓய்வெடு. உடம்பு முழுமையாக நன்றாய் ஆன பிறகு மேலே பேசலாம்'' என்று எழுந்தான்.

ஆனால் அவன் விலகுவது தாங்காததுபோல அவளது கைகள் அவனைத் தவிப்புடன் பற்றின. ''ப்ளீஸ்...''

''என்னடா?''

அவன்தானா? சதானந்தனா இப்படிக் கனிந்து உருகுகிறான்? ஒருவேளை அவளுக்கு உடம்பு சரியில்லை என்று பரிவாய்ப் பேசுகிறானா?

அவளது முகத்தில் குழப்பத்தைக் காணவும், ''சொல்லு, உனக்கு என்ன தெரிய வேண்டும்?'' என்று கேட்டான் சதானந்தன்.

''எல்லாம் நீங்... நீங்கள் என்னை எப்படிக் காப்பாற்றினீர்கள்? வி...வினோதினி...'' என்று அவள் பெயரை உச்சரிக்கும்போதே அவளுக்கு உள்ளூர உதறியது. ஒரு கொலை கருணையற்றுச் செய்தவள். இன்னொரு கொலைக்கு இரக்கமற்று முயன்றவள். அவளைப் பற்றி நினைக்கும்போதே அவளுக்கு நெஞ்சு பதறியது.

உணர்ந்தாற்போல அவனது கைப்பிடி இறுகவும், திடமுற்று, ''அவள் என்ன சொன்னாள்?'' என்று வினவினாள் திவ்யா.

அவள் கையை வருடியபடி சற்று நேரம் பேசாதிருந்தான் சதானந்தன். பிறகு, 'இப்போதே தெரியவேண்டுமா, திவ்யா? நீ பலவீனமாய் இருக்கிறாய்... கொஞ்சம் ஓய்வு எடுத்த பிறகு சொல்கிறேனே'' என்றான்.

''தெரியாவிட்டால் எனக்கு ஓய்வு எடுக்கவே முடியாதே. ஏதேதோ மண்டைக்குள் குழப்புகிறதே ப்ளீஸ் சொல்லுங்களேன்!'' என்று அவள் மீண்டும் கேட்கவும் அவன் தொடங்கினான். ''முதலில் நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்; திவ்யா. மனோரஞ்சன் பற்றி நீ சொன்னதை நான் நம்பியிருக்க வேண்டும். உன் குணம் தெரிந்த பின்னும் நம்ப மறுத்தேனே. எவ்வளவு பெரிய பிழை. உன் பேச்சை நம்பியிருந்தால் அவனை வர வழைத்தது யார் என்று



ஊகித்துக் கண்டுபிடித்திருக்கலாம். இத்தனை துன்பங்களும் நேராமல் தடுத்திருக்கலாம். என்னை மன்னிப்பாயா, கண்மணி?''

மீண்டும் அந்தக் 'கண்மணி'யில் அவளுக்கு நெஞ்சு படபடத்தது.

ஆனால் முயற்சி செய்து பேசிக் கொண்டிருந்த விஷயத்தில் மனதைச் செலுத்தினாள். ''மெட்ராஸ் போய், மனோரஞ்சனிடம் பேசி வரவழைத்ததாக வினோதினி சொன்னாள்...'' என்றாள் திவ்யா. எப்பேர்ப்பட்ட நிலையில் நிற்க வைத்துச் சொன்னாள் பாவி!

''அதுசரியே'' என்றான் சதானந்தன். ''அதையேதான் என்னிடமும் சொன்னாள். ஆனால்... மனோரஞ்சனைப் பற்றி அவளுக்கு எப்படித் தெரியும்? நீ சொன்னாயா?''

''இல்லையே! எல்லாவற்றையும் சொல்லுகிற மாதிரி இதையும் நீங்கள்தான் சொல்லியிருப்பீர்கள் என்று நான் நினைத்தேன்'' என்றாள் திவ்யா.

லேசாக இமை இடுங்க, ''என்னவென்று சொல்லுவேன், திவ்யா? என் மனைவியை மணக்க இருந்தவன் என்றா? என் குணம் தெரியாதா? இல்லை நான் சொல்லவில்லை. ஆனால் அப்படி வேறு என்னவெல்லாம் அவளிடம் சொல்லியிருக்கிறேனாம்?'' என்று கேட்டான் அவன்.

''ஏன்? பெயரளவுத் திருமணம் சொல்லவில்லையா? உங்கள் அம்மா தவிர யாருக்கும் சொல்லாதது...''

''அதுவா... உனக்குத் தெரியுமா, அந்த ஐடியா தந்ததே அவள்தான். வேண்டுமானால் என்னை அப்படி மணந்து கொள்ள அவள் தயார் என்று பெருந்தன்மையோடு அறிவித்தாள்'' என்று அருவருப்பும் கசப்புமாக உரைத்தான்.

"ஓகோ! அதனாலேயே, இப்படித்தான் இருக்கும் என்று ஊகித்துச் சொல்லியிருக்கிறாள். எதற்கும் சது சொன்னார், சது சொன்னார் என்று அவள் கூறவும் அத்தோடு அவள் கூறுவது எல்லாம் சரியாகவே இருக்கவும், நீங்கள் தான் சொல்லியிருக்கிறீர்கள் என்றே எண்ணி விட்டேன்... சாரி" என்றாள் திவ்யா.

"ஊஹூம் எதையும் நான் சொல்வது இல்லை. அவளே ஊகமும் விசாரிப்புமாகத் தெரிந்து கொள்வாள் என்று நினைக்கிறேன். இதுகூட... நீ உன் பெரியப்பா, வீடு, வேலை என்று பேசியிருக்கிறாயா?"என்று சதானந்தன் கேட்க, ஆமெனத் தலையாட்டினாள் அவள்.

இப்போது புரிகிறது. இவள் சென்னைக்குப் போய், அங்கே அக்கம்பக்கம் விசாரித்து மனோரஞ்சனைப் பற்றி அறிந்திருக்கிறாள். எப்படியும் அவனை மணக்க இருந்தவள், அவனே நேரில் கண்டால் அவனோடு கிளம்பி விடுவாய் என்று எண்ணி அவனை வரவழைத்திருக்கிறாள்."

அப்படித்தான் இருக்க வேண்டும்.

"ஆனால் அதை எப்படி உங்களிடம் சொன்னாள்? அதனால் அவளது திட்டமே கெட்டு விடுமே?"

"சொல்ல வைத்தேன்" என்றான் சதானந்தன் இறுகிய குரலில். விவரம் கூறி, "தன் உயிருக்கு ஆபத்து என்றதும் ஒரு பதற்றத்தில் சொல்லி விட்டாள் என்று நினைக்கிறேன். அத்தோடு அவள் சொன்னதுபோல, சாட்சிதான் ஏது? உயிருள்ள சாட்சியாக நீ கிடைப்பாய் என்பது அப்போது தெரியாதல்லவா?" என்றவனின் உடல் சிலிர்த்தது.

மீண்டும் அவனது பிடி இறுகியது.



"அவள் விவரம் சொல்லிவிட்டு ஓடிவிட்டாள். என்னமாய் ஆடிப்போய் விட்டேன் தெரியுமா? பவித்ராவுக்கு நீச்சல், படகு ஓட்டுவது எல்லாமே அம்மா கற்பித்திருந்தார்கள். அதனால்தான் போகிற எண்ணம் வந்தது என்று உனக்கு நான் எதையுமே கற்றுக் கொடுக்கவில்லையே. நீச்சல் கூடத் தொடங்கியவன், பிறகு பவித்ரா நினைவில் விட்டு விட்டேனே. பிழைத்திருப்பாய் என்கிற நம்பிக்கையே இல்லைதான். ஆனாலும் தேடாமல் விடக் கூடாது என்று முடிவு செய்தேன்.

"நல்ல கெட்டிக்கார மீனவர்கள் ஐம்பது பேர் திரட்டி, இருபது படகுகளில் வந்து தேடினோம். பாறைத் திட்டிலிருந்து நாலாபக்கமும் தேடினோம். ஓதநீர் இழுத்துச் செல்லக் கூடிய திசைகளில் தனிக் கவனம். ஒரு சிறு மணல் மேட்டைக் கூட விடாமல் சல்லடை போட்டுச் சலித்தோம். ஒவ்வோர் இடத்திலும் இல்லை இல்லை இல்லை என்று... அப்பப்பா! அந்த அனுபவம் யாருக்கும் வரவேண்டாம் திவ்யா..."

சொல்வது அறியாமல், அவள் கையை லேசாக அழுத்தி விட்டாள் அவள்.

தொண்டையில் அடைத்ததைச் செருமி விழுங்கிக் கொண்டு மேலும் தொடர்ந்தான். "அதற்கு மேல் யாருக்கும் நம்பிக்கை இல்லை, திவ்யா. ஏதோ தூரத்தில் பச்சை தெரியவே எனக்கு அதுவரை வந்து தேடாமல் விட மனம் இல்லை. வந்தேன்... பாறைத் திட்டிலிருந்து இருபத்தைந்து கிலோ மீட்டர் தூரம்! அது வரை மூழ்காமல் எப்படித்தான் வந்தாயோ?"

"நானாக வரவில்லை, ஆனந்த். மரக்கட்டை ரூபத்தில் கடவுள் என்னைக் கூட்டி வந்தார்" என்று முறுவலித்தாள் திவ்யா.

"எது? நல்ல தேக்குமரம், கரை ஓரம் கிடந்தது என்று மீனவர்கள் எடுத்து வந்தார்களே, அந்த உருட்டுத் தடியா? அதைப் பிடித்துக் கொண்டு வந்தாயா?" என்று இறுக்கம் அகன்று சிரித்தான் சதானந்தன். "அது கடவுள் இல்லை, திவ்யா மலைமேல் மரம் வெட்டுகிறவர்கள் வெட்டிய மரத்தை அங்கிருந்து செலவில்லாமல் எளிதாக, கீழே கொண்டு வருவதற்காக ஆறுகளில் இழுத்து விட்டு விடுவார்கள். நீரோட்டத்தோடு சேர்ந்து மரத்துண்டுகள் கீழே வந்ததும் கரைப்பக்கம் இழுத்து எடுத்துக் கொள்வார்கள். ஆனால் அவைகளில் ஒன்று, யார் கையிலும் அகப்படாமல் ஒதுங்கி கடல் வரை வந்து உன் கையில் மாட்டியது தெய்வச் செயல்" என்று விளக்கம் தந்தான்.

'சுறா மீன்' நினைவு வர, அதை அவனிடம் சொல்லிச் சிரித்தாள் திவ்யா.

ஆனால் அவனால் சிரிக்க முடியவில்லை. அவளை மீண்டும் அணைத்து, "அப்போது எப்படிப் பயந்திருப்பாய், கண்மணி?" என்றான் வேதனையோடு.

இந்தக் 'கண்மணி'க்காகவும் அணைப்புக்காகவும் இன்னும் கஷ்டப்பட்டாலும் தகும் என்று அவளுக்குத் தோன்றியது.

தலையணையை வசதியாக வைத்து, அவளைச் சாய்ந்தாற்போல அமர வைத்து விட்டு அவன் மீண்டும் சொன்னான். "அந்தத் தீவுக்கு அருகே வரும்போதே நீ வீறிட்ட சத்தம் கேட்டு விட்டது. இந்த மாதிரிச் சிறு மணல் திட்டுத் தீவுகளில் பெரிய மிருகம் ஏதும் இருக்க வாய்ப்பில்லைதான். ஆனால் நீ கதறவும் அப்படி ஏதோ உன்னைப் பிடித்துக் கொண்டதோ என்று நீரில் பாய்ந்து, நீந்தி ஓடிவந்தோம். 'தாங்க் காட்!' நீ இருந்தாய்!... திவ்யா, கொஞ்ச நேரம் என் கைகளுக்குள்ளேயே இருந்தால் உனக்கு ஒன்றும் உடம்புக்குக் கஷ்டமாய் இராதே?"



ஆவலாகவே வசதியாகச் சாய்ந்து அவனோடு ஒட்டிக் கொண்டாள் திவ்யா. பழக்கமற்ற ஆண்கரம் ஏன் கூச்சமாய்த் தெரியவில்லை? காலம் காலமாக இதுதான் அவளது இடம் போல ஏன் தோன்றுகிறது என்று வியப்புடன் எண்ணினாள்.

ஒரு ஆசுவாசப் பெருமூச்சுடன், "என்னால் நம்பவே முடியவில்லை" என்றாள் வியந்த குரலில்.

"எதை?"

"இ...இதை" என்று லேசாக முகம் சிவந்தாள் திவ்யா. "நீங்கள் என்னை... என்னிடம் அன்பாக இருப்பதைத்தான்" என்று சமாளிக்கவும் அவன் சிரித்தான்.

லேசாக நெற்றியில் முத்தமிட்டு, "நீ தெரிந்து கொள்ளாதது தான் அதிசயம்" என்றான் அவன்.

"எப்படித் தெரிந்து கொள்வது எப்போதும் மிரட்டுவதும், திட்டுவதுமாகவே இருந்தீர்களே? நிஜமாக நீங்கள் என்னை வெறுக்கிறீர்கள் என்றுதான் நான் நினைத்திருந்தேன்".

தலையசைத்து, "முதலிலேயே என்னால் விட முடியவில்லை திவ்யா. அன்று சென்னையில் என் வீட்டுக் கதவைச் சாத்தியிருந்தால் அமுதன் வீட்டில் என்ன நடந்தாலும் எனக்குத் தெரிந்திராது. ஆனால் அந்த நேரத்திலும் வேண்டுமென்றே திறந்து வைத்துக் கொண்டு நின்றேன். காப்பாற்றவும் வந்தேன். ஆனால் அந்தக் கடிதம் படித்ததும் எல்லாம் மறந்து போயிற்று. என் நண்பன் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பது ஒன்றுதான்

மனதில் நின்றது. நான் வேறு என்ன செய்யட்டும் சொல்லு?'' என்றான் அவன்.

''கடிதம் நான் எழுதியது இல்லை என்று தெரிந்த பிறகும் மிரட்டினீர்களே!'' என்றாள் அவள் குறையோடு.

குறைப்படுகையில் லேசாகப் பிதுங்கிய உதடுகளை ஒரு விரலால் மென்மையாக அளந்தான் சதானந்தன்.

''எனக்கு வேறு வழியில்லை, கண்மணி. ஒழுங்கான முறையில் நெருங்கி, உன் மனம் கவர்ந்து காதல் புரிந்து உன்னை மணக்க எனக்கு அவகாசம் இல்லை. நீயானால் நெஞ்சு நிறைய வெறுப்பை அடைத்து வைத்திருந்தாய். அதை மாற்றவே, என்னதான் முயன்றாலும், மாதக் கணக்கில் ஆகும். அருகிலேயே இருக்கும் மனோரஞ்சனிடம் மீண்டும் சென்று விடக் கூடாது. கூடவே சிவா விஷயம் வேறு. ஒரு கல்லில் இரு மாங்காய் என்றுதான் மிரட்டி அழைத்து வந்தேன்.''

தலையை அவன் தோளிலிருந்து தூக்கி, அவன் முகத்தை யோசனையோடு பார்த்தாள் திவ்யா. ''ஆனால் அப்புறமும் நீங்கள் ஒன்றும் என் மனம் கவர முயற்சிக்கவில்லையே''.

''அப்போது, நான் அந்த மாதிரி ஏதேனும் செய்திருந்தால் பொறுத்திருப்பாயா, சொல்லு. அதுதான் உடம்பின் ஒவ்வோர் அணுவிலும் வெறுப்பை வளர்த்து வைத்திருந்தாயே! ஏதோ சிவா என் பிள்ளையா என்று கேட்ட விதம் ஒன்றுதான் எனக்கு ஆறுதல்!

''குருவாயூரில் கோயிலில் திருமணம் ஏன் செய்தேன் என்று நினைத்தாய்? உன்னைக் கட்டிப் போடத்தான். மஞ்சள்



கயிறு மாஜிக் என்பார்களே, அதே மாதிரி ஏதாவது நடந்து விடாதா என்று ஆசை. மற்றபடி சிவாவுக்காக மட்டும் என்றால் வெறும் 'ரிஜிஸ்டர்' திருமணம் போதாதா என்ன? கோவிலில் கடவுள் சந்நிதியில் நடக்கும் திருமணம் உன் மனதில் அழுத்தமாகப் பதிந்து விடும் என்று தான் அத்தனை சடங்குகளுடனேயே திருமணத்தை நடத்தினேன். என்னளவில் அது உண்மைத் திருமணம்தான் திவ்யா...''

''ஆனால்...''

''என்ன ஆனால்...?''

''பிறகும் நீங்கள் ஒன்றும் பிரியமாக....'' என்றவளின் முகம் லேசாகச் சிவக்க...

''காதல் மாதிரி காட்டிக் கொள்ளவே இல்லையே?'' என்று வினவினாள்.

அவளது கன்னங்களில் சிவந்த இடங்களை ஒருதரம் ஆசையாக வருடினான் சதானந்தன். சில வினாடிகள் கழிந்த பின் பதில் சொன்னான்: ''எனக்கு ஒரு பயம், திவ்யா. எனக்குள் என்னென்னவோ ஆசைகள். ஆனால் இதற்கெல்லாம் உன்னிடம் முழுமையான பிரதிபலிப்பு இருக்கும் என்று என்ன நிச்சயம்? ஒருவேளை... ஒருவேளை உனக்கு அடியோடு பிடிக்கவில்லை என்றால் சிக்கலின்றி விலகவும் வகை இருக்க வேண்டும் என்று நினைத்தேன். நீ வெறுப்பு காட்டும் போது, ஒரேயடியாக என் இதயத்தை, மறைப்பின்றி உள்ளங்கையில் வைத்து வெளிப்படையாகக் காட்ட அவமானமாக உணர்ந்ததும் ஒரு காரணம்... இந்தத்

திருமணம் உன் மனதில் பதிந்து விட்ட அறிகுறி கொஞ்சமேனும் தெரிந்தால், அதன்பின் மேற்கொண்டு முன்னேறலாம் என்று எண்ணியிருந்தேன்..."

"ஓகோ! அதனால்தான் ரயிலில், ஓட்டலில் எல்லாம் அப்படிக் கோபப்பட்டீர்களா?" அவளுக்கு எல்லாமே ஆச்சரியமாய்ப்பட்டது. இதமான ஆச்சரியம்!

'பின்னே? இவ்வளவு செய்தும் உன் மனதில் எதுவும் ஊறவே இல்லை என்றால் எனக்கு எப்படியிருக்கும்? ஆனால் வநத கோபமெல்லாம் விவாகரத்துக்கு மறுப்பேன் என்றதில் போய் விட்டது" என்று சிரித்தான் அவன். "அன்று அசடு வழிந்தாய் பார்!"

அவன் சிரிப்பில் அன்றைய பேச்சின் நினைவு வர மீண்டும் முகம் சிவந்தாள் திவ்யா.

ஓரக்கண்ணால் அவன் முகத்தைப் பார்த்தவள் மீண்டும் திகைத்தாள் 'ஓ!'

"என்ன?" என்றான் அவன் சற்றே மூச்சு வாங்க.

"இதுதான். இந்த மாதிரி அவ்வப்போது பார்ப்பீர்களா? அப்போது ஒன்றும் புரியவே இல்லை!"

மவுனச் சிரிப்பில் லேசாகக் குலுங்கி 'இப்போது?' என்று ரகசியம் பேசினான் சதானந்தன்.

"ஷ்... போங்கள்" என்று சலுகையாய் அவன் மடியில் குப்புறப் படுத்துக் கொண்டாள் திவ்யா. எல்லாம் எவ்வளவு



சுகமாக இருக்கிறது! அவன் அவள் முதுகை மென்மையாக வருடுகையில், அவளுக்கு வேறு நினைவு வந்தது.

எழுந்து அமர்ந்து, "சென்னையில் என் பெரியம்மா மடியில் அடிக்கடி இப்படித்தான் படுத்துக் கொள்வேன். பெரியப்பா கூட அம்மாவும் மகளுமாகப் 'போஸ்' கொடுக்கிறீர்களே என்பார்" என்றாள் சிறுவருத்தத்துடன்.

அவள் கைகளைப் பற்றி, 'இனியும் விரைவிலேயே அப்படிப் போஸ் கொடுக்கலாம்" என்று கனிவுடன் கூறினான் அவன்.

அவள் தலைதூக்கிக் கேள்வியாய் நோக்கவும், 'மெய்தான், திவ்யா" என்று முறுவலித்தான் சதானந்தன். பச்சைமலையிலிருந்து வந்ததும் வெளியூர் என்று எங்கே போனேன் என்று நினைத்தாய்? உன் பெரியப்பாவின் வீட்டுக்குத்தான். அங்கே பிரபாவும் வந்திருந்தாள்."

அவசரமாக எழுந்து அமர்ந்து, "நீங்கள் ஒன்றும் சொல்லி விடவில்லையே! பிரபா கணவர் ரொம்பவும் 'பொஸஸிவ்' என்றாளே!" என்று பதறினாள் திவ்யா.

"அப்பாடியோவ்! உன் பெரியப்பா மகளுக்கு ஒன்றும் ஆகிவிடவில்லை, தாயே.. பேசாமல் பழையபடி மடியில் படுத்துக் கொள்" என்று படுக்க வைத்தான். அதுவே அவனுக்கும் பிடித்திருக்கிறது என்று காட்டி.

"உன் பெரியப்பா வீட்டில் முதலில் பிரபாவிடம் பேசினேன். முதலில் அஞ்சினாள் என்றாலும், ஏற்கனவே

உள்ளூர இளகி இருந்திருப்பாள் போல. என் திட்டத்தைச் சொன்னவுடன் ஒத்துக் கொண்டாள்.

"அவள் கடிதத்தை மிகவும் சாதாரணமாக்கிக் காட்டி, ஆனால் அறியாத பெண்கள் என்பதால் நீங்கள் இருவருமே மிரண்டு விட்டதாக உன் பெரியப்பாவிடம் கூறினேன். மனோரஞ்சன் உனக்குச் சரியில்லை என்று காட்டினேன். என் அளவு மீறிய காதலில், கடிதத்தைக் காட்டி மிரட்டி உன்னை அழைத்துச் சென்றதையும் எப்படியோ மனம் ஒன்றாகியும் இருவருமே பெரியவர்களின் ஆசிக்காகக் காத்திருப்பதால் வரம்பு மீற வில்லை என்றும் கொஞ்சம் அளந்தேன். உன் வளர்ப்புப் பெற்றோர் இருவருக்கும் அப்படியே உருகி விட்டது. எப்போர்ப்பட்ட தியாக சிகரம் தங்கள் பெண் என்று திரும்பத் திரும்பச் சொல்லித் தீர்த்து விட்டார்கள். நாளை வருகிறார்கள். வந்து நம் இருவரையும் மணையில் அமர்த்தி சாந்தியாவது செய்து பார்க்க வேண்டுமாம்! ம்... நாளை வரை காத்திருக்க வேண்டுமாம்!" என்று சதானந்தன் புருவங்களை உயர்த்தித் தோளைக் குலுக்கினான்.

கன்னங்கள் அவன் பேச்சில் செம்மையுற்ற போதும், அவள் முகம் சற்றுக் கவலையைக் காட்டியது. "ஆனந்த், பெரியப்பா பெரியம்மா எப்போதும் பிரபாவை மட்டம் தட்டுவார்கள். இந்தக் கடித விஷயம் தெரிந்தால் அது அதிகமாகி விடுமே!" என்றாள் வருத்தமாக.

'போதும் போதும், ஒரேயடியாய் உருகிவிடாதே. பிரபா இப்போது இரண்டு மாதம். உன் பெரியப்பா என்ன சொன்னார் தெரியுமா? இதுபோலச் சின்ன



விஷயத்துக்கெல்லாம், வயிற்றுப் பிள்ளைக்காரி அலட்டிக் கொள்ளக் கூடாதாம். 'என்ன வேணும், சொல்லு கண்ணு, சாயந்திரம் வாங்கிட்டு வருகிறேன்' என்று கொஞ்சிக் கொண்டிருந்தார் என்று அவன் கூறவும் அப்பாடா என்று மூச்சு விட்டாள் அவள்.

"இந்தக் குட்டி மண்டைக்குள் இருந்த உறுத்தல், குழப்பம், கவலையெல்லாம் தீர்ந்ததா? இனிமேலாவது பேசாமல் படுத்து ஓய்வு எடுக்க முடியுமா?" என்று விளையாட்டாய்க் கேட்டான் சதானந்தன்.

சற்று நேரம் மவுனமாக இருந்தாள் திவ்யா.

பவித்ரா! அவளைப் பற்றிய விவரம் சொல்லித்தான் தீர வேண்டும். இல்லாவிட்டால் அவளுக்கு நியாயம் செய்ததாகாது.

பவித்ராவைக் காதலித்தானா என்ற கேள்விக்கு வந்து பதில் சொல்வதாகக் கூறிய அவன் எதுவும் சொல்லவே இல்லை. சொல்ல வாய்ப்பும் இதுவரை இல்லை.

காதலித்திருந்தால், இப்போது உண்மை தெரிந்ததும், இடைப்பட்ட வெறுப்பு மாறி, அவளைத் தவறாக நினைத்தோமே என்று கழிவிரக்கத்தில் தன்னை ஒதுக்குவானா?

ஒரு கணம் மருண்டபோதும், அமைதிப்படுத்திக் கொண்டு ஒரு பிடிவாதத்துடன் பவித்ரா பற்றி அவனிடம் சொல்லி முடித்தாள் திவ்யா. "தண்ணீர் நிரம்பிய வேர் என்று நான் எடுத்தது ஒரு மண்டை ஓடு, ஆனந்த். பவித்ராவும்

என்னைப் போலவே அந்தத் தீவில் வந்து ஒதுங்கி, பசி, தாகத்தினால் இறந்திருக்க வேண்டும். அது பவித்ராவின் தலை எலும்பு என்று நினைத்தேளா? அதுதான் அலறி விட்டேன்...! பா...வமில்லை... அவள்!''

''என்ன கற்பனையடா அப்பா! ஆனால் நீ அலறியது நல்லதாகப் போயிற்று'' உன் குரல் கேளாமல், நீ கிடந்த இடம் தேடி வந்து, உன்னைக் கண்டு பிடிப்பது சாத்தியம் இல்லை. ....எப்படியோ, கடவுளாகப் பார்த்து அந்த நேரத்தில் உன்னைக் கத்த வைத்திருக்கிறார் என்பதுதான் என் எண்ணம்.. என்றவன் மேலே சொன்னான். ''வினோதினியும் நீயும் நினைத்தது போலப் பவித்ரா சாகவில்லை டார்லிங்...''

'வாட்...''

'ஆமாம். உன் போலவே அவளும் பிழைத்து விட்டாள். வழி தவறிய மீனவன் ஒருவன் காப்பாற்றிக் கூட்டிப் போயிருக்கிறான். ஆனால் இந்த அளவுக்குத் துணிகிறவள் இங்கே இருக்கிறாள் என்றதும் அவள் பாவம், பயந்து விட்டாள். இந்தப் பக்கமே வராமல், அப்படியே ஒதுங்கிப் போய்விட்டாள். இப்போது எர்ணாகுளத்தில் இருக்கிறாள். சில தினங்களுக்கு முன்பாக, நண்பர் ஒருவருக்கு மொத்தமாக முந்திரிப்பருப்பு வாங்குவதற்காக நான் எர்ணாகுளம் சென்றிருந்தபோது, அங்கே அவளைக் கண்டேன்.''

''என்னது? என்னது? பார்த்தீர்களா? அவளேதானா? அவள் சாயலில் வேறு யாராவதா?'' என்று பரபரப்புடன் எழுந்து விசாரித்தாள் திவ்யா. 'நீங்களே பார்த்துப் பேசினீர்களா?''



அவளுக்கு என்னவோ, தானே இன்னொரு தரம் பிழைத்து வந்தது போல மகிழ்ச்சியாக இருந்தது.

அவளது பரபரப்பைப் பார்த்து அவனுக்குச் சிரிப்பு வந்தது. அவள் கையைப் பற்றி முத்தமிட்டுச் சொன்னான்.

''இல்லை பேசவில்லை. அங்கே முந்திரிப் பருப்பு விற்பனை அலுவலகத்தில் பருப்பு ரகம் காட்டிக் கொண்டிருந்தவர் தமிழர். நானும் தமிழ் எனவும், என்னைத் தன் வீட்டுக்கு அழைத்தார். தன் மனைவி கடலில் விழுந்து தப்பிப் பிழைத்த கதையெல்லாம் நிறையச் சொல்வதாகச் சொன்னார். ஆனால் எனக்கு அங்கே ஒரு பெரிய ஆ..ஃபீசரோடு மீட்டிங் ஒன்று இருந்ததால் போக நேரமில்லை. 'நேரம் இருந்தால் எப்படியும் வாருங்கள்' என்று விலாசம் கொடுத்தார்.

''என் மீட்டிங் சீக்கிரமாக முடிந்து போய்விட, வேறு வேலை எதுவும் இல்லாததால் அவர் வீட்டுக்குப் போனேன். போகிற வழியில்தான் பவித்ராவைப் பார்த்தேன். யாருடனோ சிரித்துப் பேசியபடி போய்க் கொண்டிருந்தாள். மூன்று லட்சம் எடுத்துக் கொண்டு ஓடியவளைப் பழிவாங்க வேண்டும் என்கிற வேகம் எனக்கு.

''அவள் அறியாமலே பின் தொடர்ந்தேன். ஆனால் அவளை எதிர்கொண்டு ஓடிவந்த இரு குழந்தைகளைக் கண்டதும் யோசனையாகி விட்டது. பிள்ளைகளை அணைத்துக் கொண்டு அவள் சென்ற இடம் அந்தத் தமிழர் வீடு! சரி போய்த் தொலைகிறது என்று வந்து விட்டேன். கடலில் விழுந்து தப்பிப் பிழைத்ததா/ அந்த நண்பரிடம் கதை

கட்டியிருப்பாள் போல என்று நினைத்தேன். ஆனால் அதுவே மெய்யாக இருந்திருக்கிறது'' என்று அவன் முடித்தபோது அவளுக்குப் பெரும் நிம்மதியாக இருந்தது.

பவித்ரா பிழைத்து, திருமணம், குழந்தைகள் என்று வாழ்வது ஒரு நிம்மதி. கூடவே, சதானந்தன் மனதில் அவள் இடம் பெற்றிருந்தால் அவனால் இப்படி ஒதுங்கி வந்திருக்க முடியாது என்பது இன்னொன்று.

அவள் முகத்திலேயே பார்வையைப் பதித்திருந்தவன் என்னவென்று கேட்க, விவரம் சொன்னாள்.

ஒப்புதலாய்த் தலையசைத்து, 'எனக்காக நீ உனக்காக நான் என்பதே விதி. உனக்கு அது தெரியாவிட்டாலும், அய்யா கெட்டிக்காரனில்லையா? கண்டுபிடித்துக்கொண்டு வந்து உனக்கும் புரிய வைத்தேன்' என்று சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுப் பெருமையடித்தான் அவன்.

அவனைச் சீண்டுவதற்காகவே 'பெரிய பெருமைதான். என் மனதில் மனோரஞ்சன் இருந்திருந்தால், நீங்கள் 'கொண்டுவந்தது' எல்லாம் எவ்வளவு தப்பாய்ப் போயிருக்கும்?'' என்றாள் திவ்யா.

''ம்கூம்.. அப்படி இல்லை என்று முதலிலேயே தெரிந்துதான்...''

'எப்படித் தெரியும்? இன்னாரைக் காதலிக்கிறேன் என்று நெற்றியில் எழுதி ஒட்டிக் கொண்டா நடமாடுவார்கள்?'' என்று மடக்கினாள் அவள்.



''மாட்டார்கள்தான். ஆனால் உன் திருமணத்தை நிறுத்த வேண்டும் என்று நான் நிபந்தனையிட்டபோது நீ என்ன சொன்னாய் என்று நினைவிருக்கிறதா? அலுவலக மானேஜர் அதனால் வேலை போய்விடும், நகை தொகை இல்லாத இடம் கிடைப்பது கஷ்டம். பெரியப்பா பெரியம்மா மனம் நோந்து விடும் என்று அடுக்கினாயே தவிர, அவனைக் காதலிப்பதாக ஒரு வார்த்தை கூட உன்னிடமிருந்து வரவில்லையே'' என்று சதானந்தன் அறிவுப்பூர்வமாய் விளக்கவும் அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

''அதை அப்போதே கவனித்தீர்களா?'' என்று வியப்புடன் வினவினாள்.

''கவனித்தேன். ஆனால் கொஞ்சமும் மன ஈடுபாடே இல்லாமல் வசதிக்காக மனோரஞ்சனை மயக்கி மணக்கிறாய் என்று நினைத்தேன். அதனாலேயே அப்போது உன் மேல் சற்றும் இளக்கம் தோன்றவில்லை''

இளகியிருந்தால்...

உள்ளூர யோசித்தவள், ''சேச்சே...'' என்றாள் வாய்விட்டு

''என்ன யோசனை?''

''நீங்கள் மட்டும் இளகியிருந்தால் என்ன மாதிரி ஒரு உப்பு சப்பற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருந்திருப்பேன் என்று நினைத்தேன்.''

"ம்கூம்! இதை எனக்கு ஒரு பாராட்டாக எடுத்துக் கொள்ளலாமா?" என்று கண்களில் சிரிப்புடன் கேட்டான் அவன்.

சட்டென முகத்தில் குறும்பு கூத்தாட, 'தாராளமாய்! பாவம். இந்த மாதிரி, கொக்காய்க் கவனித்துப் பற்றினால் தானே எப்போதாவது ஒன்றிரண்டாவது கிடைக்கும். அது தான் பாராட்டைச் சொன்னேன்'' என்று ராகத்துடன் கூறி, அவள் கலகலவென்று சிரிக்க, அந்தச் செவ்விதழ்களை ஆசையுடன் சிறை செய்தான் அவளுடைய ஆனந்தன்.